www.Padasalai.Net www.TrbTnpsc.com

GANGA GUIDE

சமூக அறிவியல்

2020-21 திருத்தப்பட்ட புதிய பதிப்பு

10

இலவசம்

இயல் வாரியாக பயிற்சி & வரைபடப் பயிற்சி புத்தகம்

உரையாசிரியர்கள்:

S. சுரேஷ்குமார், M.A., M.Ed., ஈரோடு.

S. சுப்பிரமணியன், M.A., B.Ed., M.Phil., புதுக்கோட்டை.

SRI GANGA PUBLICATIONS®

(A UNIT OF SHYAMALA GROUP)

Corporate Office :
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
Tirunelveli - 627001.
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

Registered Office :
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
Chennai - 600 083.
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

Website : www.suryapublications.in

விலை:

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

Published By
B. ARUMUGAM
SRI GANGA PUBLICATIONS
*(A unit of **Shyamala** Group)*

BANK DETAILS

TIRUNELVELI ACCOUNT

Account Name : **Surya Publications**
Account Number: **446971431**
Bank Name : **Indian Bank**
IFSC Code : **IDIB000T034**
Branch Name : **Tirunelveli Junction**

Account Name : **Surya Publications**
Account Number: **510909010051752**
Bank Name : **City Union Bank**
IFSC Code : **CIUB0000230**
Branch Name : **Palayamkottai**

CHENNAI ACCOUNT

Account Name : **Sri Ganga Publication**
Account Number: **928507483**
Bank Name : **Indian Bank**
IFSC Code : **IDIB000A031**
Branch Name : **Ashok Nagar**

Account Name : **Sri Ganga Publication**
Account Number : **512020010022514**
Bank Name : **City Union Bank**
IFSC Code : **CIUB0000230**
Branch Name : **Palayamkottai**

SRI GANGA PUBLICATIONS®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

Corporate Office :
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
Tirunelveli - 627001.
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

Registered Office :
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
Chennai - 600 083.
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

Website : www.suryapublications.in

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

முகவுரை

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

அன்பு மாணவச் செல்வங்களே!

திருத்திய புதிய பாடத்திட்டத்தின்படி, மாணவர்கள் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் **கங்கா - சமூக அறிவியல்** கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் பொதிந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்து மேம்படுத்திட உதவும் வகையில் இத்துணைவன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்துணைவனில் தரப்பட்டுள்ள விடைகளும், பயிற்சிகளும் மாணவ மாணவியர் எளிதாகப் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் அறிவுத் திறனை மேம்படுத்திட இத்துணைவன் உறுதுணை புரியும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு ஏற்ற வகையிலும் இத்துணைவன் வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் வினாக்களும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட ஆசிரியர்கள் இணைந்து உருவாக்கிய இத்துணைவனை வாங்கிப் பயன்படுத்தும் நீங்கள் அரிய சாதனைகள் படைத்திட வாழ்த்துகிறோம்.

அன்புடன்,

பதிப்பகத்தார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்கம்
	வரலாறு	
1	முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்	1
2	இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்	15
3	இரண்டாம் உலகப்போர்	27
4	இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்	40
5	19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்	52
6	ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்	64
7	காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்	76
8	தேசியம்: காந்திய காலகட்டம்	88
9	தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்	104
10	தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்	115
	புவியியல்	
1	இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு	133
2	இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்	155
3	இந்தியா - வேளாண்மை	173
4	இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள்	195
5	இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்	210
6	தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள்	228
7	தமிழ்நாடு - மானுடப் புவியியல்	253
	குடிமையியல்	
1	இந்திய அரசியலமைப்பு	275
2	நடுவண் அரசு	283
3	மாநில அரசு	303
4	இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை	315
5	இந்தியாவின் சர்வதேச உறவுகள்	325
	பொருளியல்	
1	மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்	339
2	உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்	351
3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து	361
4	அரசாங்கமும் வரிகளும்	371
5	தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்	382

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சமூக அறிவியல்

10

வரலாறு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

வரலாறு

அலகு 1

முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்
   ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
   ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி
   விடை: அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான்
   இ) கொரியா ஈ) மங்கோலியா
   விடை: ஆ) ஜப்பான்

3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ்
   இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
   விடை: அ) லெனின்

4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
   அ) ஆகாயப் போர்முறை
   ஆ) பதுங்குக் குழிப்போர்முறை
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை
   ஈ) கடற்படைப் போர்முறை
   விடை: ஆ) பதுங்குக் குழிப்போர்முறை

5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
   இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   விடை: அ) பிரிட்டன்

6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
   விடை: ஆ) ரஷ்யா

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
விடை: 1894

2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட _____ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது. **விடை: லண்டன்**

3. _____ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது. **விடை: 1902**

4. பால்கனில் _____ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
விடை: மாசிடோனியா

5. டானென்பர்க் போரில் _____ பேரிழப்புகளுக்கு உள்ளானது.
விடை: ரஷ்யா

6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் _____ ஆவார். **விடை: கிளமென்சோ**

7. _____ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
விடை: 1925

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி
இ) iv) சரி ஈ) i), ii), iv) ஆகியன சரி

விடை : ஈ) i), ii), iv) ஆகியன சரி

2. கூற்று : ஜெர்மனியும், அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
காரணம் : இரு நாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

விடை: அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

IV. பொருத்துக.

1.	பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை	-	அ) வெர்செய்ல்ஸ்
2.	ஜிங்கோயிசம்	-	ஆ) துருக்கி
3.	கமால் பாட்சா	-	இ) ரஷ்யாவும் ஜெர்மனியும்
4.	எம்டன்	-	ஈ) இங்கிலாந்து
5.	கண்ணாடி மாளிகை	-	உ) சென்னை

விடை: 1.இ 2.ஈ 3.ஆ 4.உ 5.அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. சீனா - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

- சீன - ஜப்பானிய போரில் (1894 - 1895) சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது.
- ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.
- இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா

3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

- இங்கிலாந்தின் - ஆரவாரமான நாட்டுப்பற்று
- பிரான்சின் - அதி தீவிரப்பற்று
- ஜெர்மனியின் - வெறிகொண்ட நாட்டுப்பற்று

4. பதுங்குக்குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக்குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.
- பிரதானப் பதுங்குக்குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.
- அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?

- துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கியப் பங்கு வகித்தார்.
- கமால் பாட்சா துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.

- சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
- பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.

ஐரோப்பிய நாடுகளின் அணிச் சேர்க்கைகளும் எதிர் அணிச் சேர்க்கைகளும்:

- 1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள் இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ஒரு முகாம் மைய நாடுகளான ஜெர்மனி ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது.
- இரண்டாவது முகாம் நேசநாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

வன்முறை சார்ந்த தேசியம்:

- தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.
- இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்சின் அதிதீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறி கொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக மாறியது.

ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனைப்பாங்கு:

- ஜெர்மன் பேரரசர் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.
- இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:

- பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர். 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டு அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.
- ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் மொராக்கோ சுல்தானின் சுதந்திரத்தை அங்கீகரித்ததோடு மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய பன்னாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கேட்டுக் கொண்டார்.

பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :

- 1908ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது. இது ஆஸ்திரியாவுக்கும், ரஷ்யாவிற்கும் பால்கன் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் வாய்ப்பினை வழங்கியது.
- ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும் போது அதன் விளைவாக செர்பியாவிற்கு ரஷ்யா உதவுமானால் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக நான் களமிறங்கும் என ஜெர்மனி அறிவித்தது.

பால்கன் போர்கள்:

- பால்கன் நாடுகள் 1912இல் துருக்கியைத் தாக்கி தோற்க்கடித்தது.
- 1913இல் இலண்டன்உடன்படிக்கையின்படி அல்பேனியாநாடுஉருவாக்கப்பட்டது.
- மாசிடோனியாவை பிரித்துக் கொள்வதில் பல்கேரியா, செர்பியாவையும், கிரீஸ்சையும் தாக்கியது.
- இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியா எளிதில் தோற்கடிக்கப்பட்டு புகாரேஸ்ட் உடன்படிக்கை உடன் முடிவடைந்தது.

உடனடிக் காரணம்:

- 1914 ஜூன் 28 ஆம் நாள் ஆஸ்திரிய பேரரசின் இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு செர்பியனால் படுகொலை செய்யப்பட்டார்.
- ஆஸ்திரியா இதனை செர்பியாவை கைப்பற்றுவதற்கான ஒரு வாய்ப்பாகக் கருதியது.
- செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்ற வதந்தியால் ஜெர்மனி ரஷ்யா மீது போர் தொடுத்தது.

2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.

- போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போரால் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும்.
- ஜெர்மன் படை 1,00,000 வீர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படை ஒன்றையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

- ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.
- ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
- அல்சேஸ் – லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.
- பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா லிதுவேனியா ஆகியன சுதந்திர நாடுகளாகச் செயல்படும்.
- போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.
- ரைன்லாந்து நேச நாடுகளின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும்.

3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.

- முதல் உலகப்போரில் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட தோல்வி ரஷ்ய பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்தது.
- இதனால் கோபமுற்ற ரஷ்ய மக்கள் மன்னருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- 1917 மார்ச் திங்கள் 15 ஆம் நாள் சார் இரண்டாம் நிக்கோலஸ் பதவி விலகினார்.

தற்காலிக அரசு:

- அரசு நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள இரண்டு அமைப்புகள் இருந்தன.
- ஒன்று பழைய டூமா சோவியத்.
- சோவியத் அமைப்பின் ஒப்புதலோடு டூமாவால் ஓர் தற்காலிக அரசு நிறுவ முடிந்தது.

தற்காலிக அரசின் தோல்வி :

- புரட்சி வெடித்த போது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமென அவர் விரும்பினார்.
- "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே" என்ற அவரது முழக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் வென்றெடுத்தது.
- போரினால் ஏற்பட்ட பெரும் துயரத்தால் மக்கள் "ரொட்டி, அமைதி, நிலம்" என்னும் முழக்கத்தால் கவரப்பட்டனர்.
- தற்காலிக அரசு எடுத்த தவறான முடிவுகளால் போல்ஷ்விக்குகள் தலைமையில் நடைபெற்ற எழுச்சி மேலும் வலுபெற்றது.
- அரசு 'பிரவ்தா'வை தடை செய்து போல்ஷ்விக்குகளைக் கைது செய்தது. டிராட்ஸ்கியும் கைதுசெய்யப்பட்டார்.

லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றல் :

- அக்டோபர் திங்களில் உடனடிப் புரட்சிக் குறித்து முடிவு செய்ய லெனின் கேட்டுக் கொண்டார். டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.
- நவம்பர் திங்கள் 7ஆம் நாள் முக்கியமான அரசுக் கட்டிடங்கள் குளிர்கால அரண்மனை, பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத் தொழிலாளர்களாலும் புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன. 1917 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் ரஷ்யாவில்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி என புதுப் பெயரிடப் பெற்றது.

4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள்:

- பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. சர்வதேச சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.
- போலந்திற்கும் ஜெர்மனியக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்ட போது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.
- எல்லைப் பிரச்சனையின் காரணமாக கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்திரவிட்டது.
- விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றம்சாட்டி, கிரீஸ் போர் இழப்பீடு வழங்க வேண்டும் எனத் தீர்மானித்தது.
- 1925 ஆம் ஆண்டு லொக்கார்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை சர்வதேச சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.
- லொக்கார்னோ உடன்படிக்கையின் படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து,இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.
- ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக்குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

VII. செயல்பாடுகள்.

1. முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

பார்க்க: வரைபடப் பயிற்சி புத்தகம் - பக்கம் எண்: 68

VIII. வரைபடப் பணி.

உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.

1. கிரேட் பிரிட்டன், 2. ஜெர்மனி, 3. பிரான்ஸ், 4. இத்தாலி, 5. மொராக்கோ, 6. துருக்கி, 7. செர்பியா, 8. பாஸ்னியா, 9. கிரீஸ், 10. ஆஸ்திரிய-ஹங்கேரி, 11. பல்கேரியா, 12. ருமேனியா



கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ஐரோப்பிய நாடுகளிடையே உயர்ந்த இடத்தை வகித்ததோடு உலக முதலாளித்துவத்துக்கு தலைமையாகவும் விளங்கிய நாடு _____.

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) ரஷ்யா ஈ) ஜப்பான் **விடை: அ) இங்கிலாந்து**

2. ஆசியாவில், மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றிப் பலதுறையில் அவற்றுக்கு நிகராக மாறிய நாடு _____.

அ) சீனா ஆ) ஜப்பான்
இ) இந்தியா ஈ) ரஷ்யா **விடை: ஆ) ஜப்பான்**

3. ஜப்பான் சீனாவின் மீது போர்த்தொடுத்த ஆண்டு _____.

அ) 1794 ஆ) 1884
இ) 1894 ஈ) 1784 **விடை: இ) 1894**

4. மூவர் உடன்படிக்கை மேற்க்கொள்ளப்பட்ட ஆண்டு _____.
அ) 1902 ஆ) 1894
இ) 1956 ஈ) 1882 **விடை: ஈ) 1882**

5. ரஷ்ய ஜப்பானியப் போர் நடைபெற்ற ஆண்டு _____.
அ) 1904 ஆ) 1902
இ) 1882 ஈ) 1894 **விடை: அ) 1904**

6. முதல் உலகப் போரின் போது ஜெர்மன் பேரரசர் _____.
அ) உட்ரோ வில்சன் ஆ) கெய்சர் இரண்டாம் வில்லியம்
இ) ஹிட்லர் ஈ) முசோலினி
விடை: ஆ) கெய்சர் இரண்டாம் வில்லியம்

7. இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்ற ஆண்டு _____.
அ) 1904 ஆ) 1902
இ) 1908 ஈ) 1910 **விடை: இ) 1908**

8. இலண்டன் உடன்படிக்கை கையெழுத்தான ஆண்டு _____.
அ) 1913 மே ஆ) 1912 மே
இ) 1914 மே ஈ) 1910 மே **விடை: அ) 1913 மே**

9. டானென்பர்க் போரில் பேரிழப்புகளைச் சந்தித்த நாடு _____.
அ) பிரான்ஸ் ஆ) துருக்கி
இ) ரஷ்யா ஈ) ஜெர்மனி **விடை: இ) ரஷ்யா**

10. _____ ஜீட்லாண்டு போரில் வெற்றி பெற்றது.
அ) பிரான்ஸ் ஆ) இங்கிலாந்து
இ) ஜெர்மனி ஈ) துருக்கி **விடை: ஆ) இங்கிலாந்து**

11. 1918இல் _____ நோயில் பல மில்லியன் மக்கள் மாண்டனர்.
அ) மலேரியா ஆ) டைபாய்டு
இ) பிளேக் ஈ) இன்ஃப்ளுயன்ஸா **விடை : ஈ) இன்ஃப்ளுயன்சா**

12. துருக்கியோடு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை _____.
அ) செவ்ரஸ் ஆ) வெர்செய்ல்ஸ்
இ) பிரெஸ்ட் - லிடோவஸ்க் ஈ) புகாரெஸ்ட் **விடை: அ) செவ்ரஸ்**

13. ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவியர் _____.
அ) காரல் மார்க்ஸ் ஆ) லெனின்
இ) இரண்டாம் நிக்கோலஸ் ஈ) உட்ரோ வில்சன் **விடை: ஆ) லெனின்**

14. பிராவ்த என்பது ஒரு _____ மொழிச் சொல்.
அ) ஸ்பானிய ஆ) இலத்தீன்
இ) ரஷ்ய ஈ) கிரேக்கம் **விடை: ஆ) ரஷ்ய**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 1789 ஆம் ஆண்டில் தொடங்கிய அரசியல் சமூக செயல்பாடுகள் _____ உச்சத்தை அடைந்தது.
விடை: முதல் உலகப்போரில்

2. இருபதாம் நூற்றாண்டினுடைய போக்கையே தீர்மானித்த போர் _____.
விடை: முதல் உலகப்போர்

3. ஒட்டு மொத்த உலகின் செல்வாதாரங்களின் மீது தொடுக்கப்பட்ட முதல் தொழிற்சாலைகள் சார்ந்த போர் _____.
விடை: முதல் உலகப் போர்

4. முதல் உலகப் போரின் முடிவில் சிதறுண்ட மூன்று பேரரசுகள் _____ ஆகியனவாகும்.
விடை: ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியப் பேரரசு

5. முதல் உலகப் போரின் மிகப்பெரும் விளைவு _____.
விடை: ரஷ்ய புரட்சியாகும்

6. முதன் முறையாக உலக நாடுகள் _____ மூலமாக உலக அமைதியை ஏற்படுத்த முயன்றன.
விடை: பன்னாட்டுச் சங்கத்தின்

7. ஜப்பான் வல்லரசுகளின் கவர்ச்சிமிகுந்த கூட்டணியில் நுழைய காரணமான போர் _____.
விடை: ரஷ்ய ஜப்பானியப் போர்

8. 1912 இல் சீனாவில் வீழ்ச்சியுற்ற வம்சம் _____. **விடை: மஞ்சு அரசு வம்சம்**

9. முதல் பால்கன் போர் நடைபெற்ற ஆண்டு _____. **விடை: 1912-1913**

10. முதல் பால்கன் போர் முடிவில் கையெழுத்தான உடன்படிக்கை _____.
விடை: லண்டன் உடன்படிக்கை

11. லண்டன் உடன்படிக்கையின்படி _____ எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
விடை: அல்பேனியா

12. 1917 இல் சார் மன்னருடைய ஆட்சி ரஷ்யாவில் _____ புரட்சியின் மூலமாக தூக்கி வீசப்பட்டது.
விடை: மாபெரும் அக்டோபர்

13. சென்னை மீது குண்டுகளை வீசிய புகழ் பெற்ற கப்பல் _____.
விடை: எம்டன் கப்பல்

14. துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முக்கிய காரணமானவர் _____.
விடை: முஸ்தபாகாமல் பாட்சா

15. 1917 இல் நவம்பரில் ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சியில் ஆட்சியைக் கைப்பற்றியவர் _____.
விடை: சார் இரண்டாம் அலெக்ஸாண்டர்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : மஞ்சூரியா பன்னாட்டுச் சங்கத்திலிருந்து விலகியது.
காரணம் : 1934 இல் ஜப்பான் மஞ்சூரியாவை தாக்கியது.

அ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

விடை: இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு

2. கூற்று : 1900 இல் ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவும் ஐரோப்பிய காலனியாக மாறியிருந்தது.
காரணம் : இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் கண்டத்தை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர்.

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

விடை: அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.

IV. பொருத்துக.

I

1.	லண்டன் உடன்படிக்கை	- அ) இரண்டாம் பால்கன் போர்
2.	பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை	- ஆ) இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ்
3.	வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை	- இ) முதல் பால்கன் போர்
4.	புகாரெஸ்ட் உடன்படிக்கை	- ஈ) ஜெர்மனி
5.	நட்புறவு ஒப்பந்தம்	- உ) ரஷ்யா

விடை: 1.இ 2.உ 3.ஈ 4.அ 5.ஆ

II.

1.	உட்ரோவில்சன்	- அ) இங்கிலாந்து
2.	லெனின்	- ஆ) பிரான்சு
3.	இரண்டாம் வில்லியம்	- இ) அமெரிக்கா
4.	லாயிட் ஜார்ஜ்	- ஈ) ஜெர்மனி
5.	கிளமென்சு	- உ) ரஷ்யா

விடை: 1.இ 2.உ 3.ஈ 4.அ 5ஆ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பிராவ்த என்றால் என்ன?

- பிராவ்தா என்பது ஒரு ரஷ்யமொழிச் சொல். அதன் பொருள் "உண்மை".
- இது 1918 முதல் 1991 வரை சோவியத் யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகாரப் பூர்வமான நாளேடாகும்.

2. சர்வதேச சங்கத்தின் குறிக்கோள்கள் யாவை?

- சர்வதேச சங்கத்தின் இரண்டு குறிக்கோள்களில் ஒன்று போர்களைத் தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது.
- மற்றொன்று சமூகப் பொருளாதார விசயங்களில் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது என்பனவாகும்.

3. வெர்செய்ல்ஸ் - உடன்படிக்கையின் இரண்டு சரத்துகளை கூறுக.

- ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.
- ஜெர்மனி கடல் கடந்த தனது காலனிகள் மீதான உரிமைகளையும் நேசநாடுகளுக்கு விட்டுக் கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது.
- அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.
- முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திர நாடுகளாகச் செயல்படும்.
- வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.

4. பன்னாட்டு சங்கத்தின் உறுப்புகள் யாவை?

- ஐந்து உறுப்புகளைக் கொண்டிருந்தன.
- அவை: பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு.

5. முதல் உலகப் போருக்கான உடனடி காரணம் யாது?

- 1914 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள் பேரரசரின் மகனும் ஆஸ்திரிய-பிரான்ஸ் பெர்டினாண்டு ஹங்கேரிப் பேரரசாக இருக்கும் பிரான்ஸ் ஜோசப்பின் மைத்துனரும் வாரிசுமான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பெயரைக் கொண்ட பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.
- ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.
- செர்பியாவிற்கு ஆதரவாக இவ்விசயத்தில் தலையிட ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்னும் வதந்தியால் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராக போர் அறிவிப்பு செய்தது.

6. கப்பற்படைப் போர் சிறுகுறிப்பு தருக.

- 1916 ஆம் ஆண்டு வட கடலில் கப்பற்படைப் போர் (ஜீட்லேண்டு போர்) நடைபெற்றது.
- இங்கிலாந்து இப்போரில் வெற்றி பெற்றது. இதன் பின்னர் ஜெர்மனியர் தங்களின் நீர்மூழ்கிக் கப்பற்போரைத் தொடங்கினர். அவை நேசநாடுகளின் கப்பல்களுக்கு இடையூறு செய்தன.
- அவற்றில் ஒன்றான புகழ்பெற்ற எம்டன் கப்பல்தான் சென்னை மீது குண்டுகளை வீசியது.

- லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியின் நீர்மூழ்கிக்கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. இதன் விளைவாகப் பல அமெரிக்கர்கள் உயிரிழந்தனர்.
- அதனால் குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917 ஆம் ஆண்டு ஒப்பல் நீங்களில் போர்ப்பிரகடனம் செய்தார்.

7. பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய தலைவர்கள் யார்?

- உட்ரோ வில்சன் (அமெரிக்க அதிபர்)
- லாயிட் ஜார்ஜ் (இங்கிலாந்துப் பிரதமர்)
- கிளமென்சோ (பிரான்சின் பிரதமர்)

8. லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதை சுருக்கமாகக் கூறுக.

- நவம்பர் திங்கள் 7 ஆம் நாள் முக்கியமான அரசுக்கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதமமந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத்தொழிலாளர்களாலும் புரட்சிப் படையினராலும் கைப்பற்றப்பட்டன.
- 1917 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.
- போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப் பெயரிடப் பெற்றது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. பாரிஸ் அமைதி உடன்படிக்கையின் சரத்துகளை விவரிக்க.

- போரைத் தொடங்கியது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும். இழப்பீடு தொகை 6600 மில்லியனை தவணையில் செலுத்த வேண்டும். மைய நாடுகளும், இழப்பீடு தொகையே செலுத்த வேண்டும்.
- ஜெர்மனி 1,00,000 வீரர்கள் மற்றும் சிறிய கப்பல் படைகளை வைத்துக்கொள்ள மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.
- ஜெர்மனி, ஆஸ்திரா ஒருங்கிணைப்புத் தடை செய்யப்பட்டது.
- ஜெர்மனி கடல் கடந்த தனது காலனிகள் மீதான உரிமைகளை நேசநாடுகளுக்கு விட்டுக்கொடுக்க வலியுறுத்தப்பட்டது. மேலும், இதை பன்னாட்டு சங்கத்தின் நாடுகளாக ஆக்கப்பட்டன.
- அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்கு திரும்பத் தரப்பட்டன.
- முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா போன்றவை சுதந்திர நாடுகளாக செயல்படும்.
- வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும், சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டது.
- நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும்.

2. ஜப்பானின் எழுச்சியை விரிவாக விடையளிக்க.

- ஜப்பானின் மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றி பலதுறைகளில் அவற்றுக்கு நிகராக மாறியது.
- ஜப்பான் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் அதே சமயத்தில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவும் மாறியது.
- ஜப்பான் மேலைநாட்டுக் கல்வியையும், இயந்திரத் தொழில்நுட்பத்தையும் ஏற்றுக்கொண்டார்.
- நவீன இராணுவம், கப்பற்படை ஆகியவற்றுடன் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் ஜப்பான் விளங்கியது.
- 1894 இல் ஜப்பான் சீனா மீது வலுக்கட்டாயமாகப் போரைத் தொடுத்தது. இப்போரில் ஜப்பான் வெற்றிப் பெற்றது.
- ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பகத்தை கொண்டது. இதன்மூலம் கிழக்கு ஆசியாவில் வலிமை மிகுந்த நாடாக மாறியது.
- 1904 இல் ரஷ்ய-ஜப்பானிய போரில் ஜப்பான் வெற்றிப் பெற்றது. அமெரிக்காவில் சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இப்போருக்குப் பின் ஜப்பான் வல்லரசுகளின் கவர்ச்சி மிகுந்த கூட்டணியில் நுழைந்தது.

வரலாறு

அலகு 2

இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) போப் ஈ) ஸ்பெயின் **விடை: இ) போப்**

2. யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?
   அ) ஹெர்மன் கோர்ட்ஸ்
   ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தெளசெயின்ட் லாவெர்ட்யூர்
   ஈ) முதலாம் பெட்ரோ **விடை: அ) ஹெர்மன் கோர்ட்ஸ்**

3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?
   அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர்
   இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர் **விடை: ஆ) ஸ்பானியர்**

4. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
   இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர் **விடை: அ) ரூஸ்வெல்ட்**

5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
   அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா
   இ) இந்தியா ஈ) சீனா **விடை: ஆ) லத்தீன் அமெரிக்கா**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் _____.
   விடை: பெர்டினண்ட் லாஸ்ஸல்லி

2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் _____.
   விடை: ஜோசப் கோயபெல்ஸ்

3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி _____ இல் நிறுவப்பட்டது.
விடை: கி.பி. 1927

4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை _____ என அழைக்கப்பட்டது.
விடை: கெஸ்டபோ

5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் _____ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
விடை: கி.பி 1910

6. ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா _____ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். **விடை: 27**

7. போயர்கள் _____ என்றும் அழைக்கப்பட்டனர். **விடை: ஆப்பிரிக்க நேர்கள்**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) முதல் உலகப்போரின்போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக் கடமையாக இருந்தது.

ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.

iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.

iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

அ) i), ii) ஆகியவை சரி ஆ) iii) சரி

இ) iii), iv) ஆகியவை சரி ஈ) i), ii), iii) ஆகியவை சரி

விடை: ஈ) i), ii), iii) ஆகியவை சரி

2. கூற்று : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.

காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.

அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

விடை: ஆ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

3. கூற்று : 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.

காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

விடை: அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

IV. பொருத்துக.

1.	டிரான்ஸ்வால்	-	அ) ஜெர்மனி
2.	டோங்கிங்	-	ஆ) ஹிட்லர்
3.	ஹின்டன்பர்க்	-	இ) இத்தாலி
4.	மூன்றாம் ரெய்க்	-	ஈ) தங்கம்
5.	மாட்டியோட்டி	-	உ) கொரில்லா நடவடிக்கைகள்

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.ஆ 5.இ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இந்தோ-சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- 1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப் புரட்சி செய்தனர்.
- பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சியிலும் தோல்வி அடைந்தது.
- இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது.
- இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளை பயங்கரவாதம் என்பது அரங்கேறியது.
- புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.

- இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
- இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டுப் பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக் கொண்டன.

3. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?

- 1922 அக்டோபரில் முசோலினி பாசிஸ்டுகளின் ரோமாபுரியை நோக்கிய மாபெரும் அணிவகுப்பு ஒன்றை நடத்தினார்.
- முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

4. 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.

- காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.
- ஆனால் ஆங்கிலேயருக்கும், தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்றப் போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

5. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

- பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும், உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.
- எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்தி பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.

6. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.

இச்சொல் தொலைதூர நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும் தக்கவைத்துக் கொள்ளவும் அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையாகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

- 1919ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, மியூனிச் நகரில் சந்தித்து தேசிய சோசலிஸ்ட்ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக நாசி கட்சியை நிறுவியது.
- ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
- முதல் உலகப்போரின்போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
- அவரின் ஆற்றல் மிக்க உரை வீரர்களைத் தட்டி எழுப்பியது. 1923இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சியை மேற்கொண்டார்.
- மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப் புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது. சிறையில் இருந்தபோது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான மெயின்காம்ப் (எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.
- நடைபெற்ற குடியரசுத்தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர்.
- முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்க தொடங்கினர்.
- இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

மாகாணங்களில் இரட்டையாட்சி:

- இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1905-இல் சுதேசி இயக்கத்தோடு தொடங்கியது.
- 1919-இல் இந்திய அரசுச்சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகப்படுத்தியது.

இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள்:

- ஆங்கில காலனியாதிக்க கொள்கையில் மாற்றம் இல்லை எனினும் தொழில் சார்ந்த நுட்பங்கள் இந்திய தொழில் நிறுவனங்களுக்கு கிட்டியது.
- புதிய துறைகள் தொடர்பாக முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது.
- ஆனால் ஆங்கிலேய நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

பொருளாதார பெருமந்தத்தின் போது இந்தியா:

- 1929 ஆம் ஆண்டு பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கில வணிக நடவடிக்கைக்கு பெரும் சேதத்தை உண்டு பண்ணியது.
- பெரும் இழப்பை சரிசெய்ய புதிய வரிகள் விதிக்கப்பட்டன. இதனை எதிர்த்து போராட்டங்களும் வெடித்தன.
- வரவு-செலவுக் கணக்குகளை சமன்படுத்தும் கொள்கையை கட்டாயப்படுத்த இந்தியாவிற்கு எச்சரிக்கை விடுத்தது.

இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம்:

- பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும், உள்நாட்டு உற்பத்தி தொழிலுக்கும் மரண அடியைக் கொடுத்தது.
- எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்தி பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
- இந்திய விவசாயிகளும், பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காக தங்களிடம் இருந்த தங்கம் வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.

1935-இந்திய அரசுச் சட்டம்:

- 1935 இந்திய அரசுச் சட்டம். இச்சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
- இச்சட்டத்தின் அடிப்படையில் 1937ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.

3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

- தென் ஆப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன. அவை ஆங்கிலேயர் அதிகம் கொண்ட யூனியனிஸ்ட் கட்சி, போயர்களை பெரும்பான்மை கொண்ட தென் ஆப்பிரிக்க கட்சி.
- இந்த இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியை நடத்தினர்.

- போராடும் குணம் கொண்ட ஒரு பிரிவினர் ஹெர்சாக் என்பவரின் தலைமையில் தேசியக்கட்சியை தொடங்கினர்.
- 1920-ஆம் ஆண்டு தேர்தலில் தேசியக்கட்சி 44 இடங்களையும் தென்னாப்பிரிக்க ஸ்மட்ஸ் என்பாரின் கட்சி 41 இடங்களிலும் வெற்றி பெற்றது.
- இத்தருவாயில் ஆங்கிலேயர் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்க கட்சியுடன் இணைந்தது.
- போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்க நேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக் கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றார்.

VII. செயல்பாடுகள்

1. 1929 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சி எவ்வாறு அமெரிக்காவின் ஒவ்வொரு துறையையும் ஒவ்வொரு மக்கள் பிரிவினரையும் பாதித்தது என்பதைக் குறித்து ஒவ்வொரு மாணவரையும் ஒரு ஒப்படைப்பு எழுதக் கூறலாம்.

பாதிக்கப்பட்ட துறைகள்:

- பங்கு வணிகத் துறை (ஊக வணிகம்)
- வேளாண் துறை
- வங்கித் துறை
- கார் தொழிற்சாலைகள்
- ரியல் எஸ்டேட் துறை
- நுகர்வு கலாச்சாரத்துறை

பாதிக்கப்பட்ட பிரிவினர்:

- பங்குகளில் முதலீடு செய்தவர்கள்
- வங்கிகளில் முதலீடு செய்தவர்கள்
- வேளாண் விவசாயிகள்
- தொழிற்சாலை பணியாளர்கள்
- புதிய பொருட்கள் நுகர்வோர்கள்
- வங்கிப் பணியாளர்கள்

2. வியட்நாம் போர் குறித்து ஒரு குழுச் செயல்பாட்டு முறை விரும்பத்தக்கதாகும். வியட்நாம் மீது அமெரிக்காவின் வான்வெளித் தாக்குதல்கள் வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த எதிர்த்தாக்குதல் ஆகியவற்றைச் சித்தரிக்கும் படங்களைச் சேகரித்து ஒரு செருகேடு (album) தயார் செய்யலாம்.

வகுப்பறை மாணவர் செயல்பாடுகள்.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதல் உலகப்போரின் முடிவில் _____ நாடு உலகத்துக்கு கடன் வழங்கும் நாடாக இருந்தது.

அ) இத்தாலி ஆ) பிரான்ஸ்
இ) அமெரிக்கா ஈ) இங்கிலாந்து

விடை: இ) அமெரிக்கா

2. உலக நாடுகளில் அமெரிக்க மூலதனம் பாய்ந்து செல்வதால் உலக நாடுகள் _____ மாறின.
அ) ஏழைகளாக ஆ) செல்வந்தர்களாக
இ) கடனாளர்களாக ஈ) கடனாளிகளாக **விடை: ஈ) கடனாளிகளாக**

3. இங்கிலாந்தில் 1931 ஆம் ஆண்டு பொது தேர்தலில் _____ கட்சி தோற்கடிக்கப் பட்டது.
அ) தொழிலாளர் ஆ) குடியரசு
இ) தேசிய ஈ) சோவியத் கட்சி **விடை: அ) தொழிலாளர்**

4. மேற்கு ஐரோப்பாவில் பழைய ஆட்சி அதிகாரத்திற்கு எதிராகத் திரும்பிய நாடுகளுள் முதல் நாடு _____.
அ) பிரான்ஸ் ஆ) இத்தாலி
இ) ஜெர்மனி ஈ) ஸ்பெயின் **விடை: ஆ) இத்தாலி**

5. ரோம் அணிவகுப்பை தலைமையேற்று நடத்தியவர் _____.
அ) ஹிட்லர் ஆ) முசோலினி
இ) ரூஸ்வெல்ட் ஈ) ஹோ சி மின் **விடை: ஆ) முசோலினி**

6. இத்தாலியில் தேர்தல் விதிமுறைக்கு உட்பட்டு நடைபெறவில்லை என கேள்வி எழுப்பியதால் கொலை செய்யப்பட்ட சோசலிஸ்டுகளின் தலைவர் _____.
அ) ஹோ சி மின் ஆ) ஹிட்லர்
இ) முசோலினி ஈ) மாட்டியோட்டி **விடை: ஈ) மாட்டியோட்டி**

7. லேட்டரன் உடன்படிக்கை _____ ஆம் ஆண்டு கையெழுத்து ஆயிற்று.
அ) 1928 ஆ) 1929
இ) 1930 ஈ) 1931 **விடை: ஆ) 1929**

8. ஹிட்லரை பின்பற்றியவர்கள் அணிந்த சட்டை _____.
அ) கருஞ்சட்டை ஆ) பழுப்புச்சட்டை
இ) காவிச்சட்டை ஈ) சிவப்புச்சட்டை **விடை: ஆ) பழுப்புச்சட்டை**

9. ஜெர்மனியில் பிஸ்மார்க்கால் தடைசெய்யப்பட்ட கட்சி _____.
அ) நாசிசக் கட்சி ஆ) பாசிசக் கட்சி
இ) தேசியக் கட்சி ஈ) சமூக ஜனநாயகக் கட்சி
விடை: ஈ) சமூக ஜனநாயகக் கட்சி

10. ஹிட்லரை எதிர்த்த கட்சி _____.
அ) நாசிசக் கட்சி ஆ) பாசிசக் கட்சி
இ) தேசியக் கட்சி ஈ) சமூக ஜனநாயகக் கட்சி
விடை: ஈ) சமூக ஜனநாயகக் கட்சி

11. தென்னாப்பிரிக்காவில் தவறான புரிதல்களும் கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும் ஸ்மட்ஸ் ஹெர்சாக் கூட்டணி _____ வரை நீடித்தது.

அ) 1925 ஆ) 1935
இ) 1929 ஈ) 1939 **விடை: ஈ) 1939**

12. தென்னாப்பிரிக்கா ஒன்றியம் உதயமான ஆண்டு _____.
அ) 1908 ஆ) 1910
இ) 1912 ஈ) 1914 **விடை: ஆ) 1910**

13. போயர் போர்கள் _____ ஆண்டுகள் நடந்தன.
அ) 4 ஆ) 3
இ) 5 ஈ) 8 **விடை: ஆ) 3**

14. ஒட்டாவா பொருளாதரர உச்சி மாநாடு நடைபெற்ற ஆண்டு _____.
அ) 1932 ஆ) 1942
இ) 1988 ஈ) 1973 **விடை: ஆ) 1932**

15. யூத படுகொலை நாஜிக்களால் _____ என்று அழைக்கப்பட்டது.
அ) இறுதித் தீர்வு ஆ) முதல் தீர்வு
இ) இறுதி விருந்து ஈ) முதல் விருந்து **விடை: அ) இறுதித்தீர்வு**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதல் உலக போரின் போது ஹிட்லர் _____ படையில் பணியாற்றினார்.
விடை: பவேரியா
2. 1923 ஆம் ஆண்டு ஹிட்லர் கைப்பற்ற முனைந்த நகரம் _____.
விடை: பவேரியா
3. ஹிட்லரின் சுயசரிதை நூல் _____. **விடை: மெயின் காம்ப் எனது போராட்டம்**
4. ஜெர்மனியின் குடியரசு தலைவர் (1933 இல்) _____.
விடை : வான் ஹீண்டன்பர்க்
5. எந்தப் பொய்யும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டால் இறுதியில் உண்மையாகிவிடும் என்று கூறியவர் _____. **விடை: கோயபெல்ஸ்**
6. ஹிட்லரின் இரகசியக் காவல்படை _____ என அழைக்கப்பட்டது.
விடை: கெஸ்டபோ
7. ஹிட்லரால் நடத்தப்பட்ட யூதப்படுகொலை நாஜிக்களால் _____ என்று அழைக்கப்படுகிறது. **விடை: இறுதித்தீர்வு**
8. ஹிட்லரின் தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்க்காப்பாளர்களை _____ என்பவர் நிர்வகித்தார். **விடை: ஹைட்ரிச் ஹிம்லர்**
9. ஹிட்லருக்கு அடுத்த நிலையில் இரண்டாம் நிலைத் தளபதியாகச் செயல்பட்டவர் _____ என்பவராவார். **விடை: ஹைட்ரிச் ஹிம்லர்**
10. கேப்டவுனில் ஒன்றியப் பாராளுமன்றத்தை அமைத்துக் கொடுத்தது _____.
விடை: 1909 இங்கிலாந்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தென்னாப்பிரிக்கச் சட்டம்

11. ஆப்பிரிக்க நேயர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் _____ ஆவர்.

விடை: போயர்கள்

12. இந்தியாவில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கி நேரடி தேர்தலை அறிமுகம் செய்த சட்டம் _____. **விடை: 1919 சட்டம்**

13. இரட்டை ஆட்சி முறையை அறிமுகம் செய்த சட்டம் _____.

விடை: 1919 சட்டம்

14. நாசிசக் கட்சிகளுக்கு பிரச்சாரங்களும் பொறுப்பேற்றவர் _____.

விடை: ஜோசப் கோயபெல்ஸ்

15. ஹிட்லரின் தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்க்காப்பாளர் _____ நிர்வகித்தவர் _____.

விடை : ஹைட்ரிச், ஹிம்லர்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : முதல் உலகப் போர் முடிவில் அமெரிக்கா நல்ல நிதி நிலைமை பெற்றிருந்தது.
   காரணம் : அமெரிக்கா உலகின் பணக்கார நாடாகவும் மற்ற நாடுகள் அதன் கடன் பெற்ற நாடாகவும் இருந்தன.

அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஆ) கூற்றும் காரணமும் தவறானவை.

இ) கூற்றும் காரணமும் சரி காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.

ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி.

விடை : அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

2. i) முதல் உலகப்போரின் ஹிட்லர் பவேரியா இராணுவத்தில் பணியாற்றினார்.
   ii) 1933 ஆம் ஆண்டில் பவேரியாவில் அதிகாரத்தை கைப்பற்ற ஹிட்லர் முயன்றார்.
   iii) இப்புரட்சி அவரை சிறைக்கு அனுப்பியது.
   iv) சிறைச்சாலையில் இருந்த காலத்தில் அவர் தனது சுயசரிதையை எழுதினார்.

அ) i) மற்றும் ii) சரியானவை ஆ) i) மற்றும் iii) சரியானவை

இ) iv) சரியானது ஈ) i), ii) மற்றும் iv) சரியானவை

விடை : ஆ) i) மற்றும் iii) சரியானவை

IV. பொருத்துக.

I.

1.	டியூஸ்	-	அ) ஒப்பந்தம்
2.	பழுப்புச்சட்டை	-	ஆ) முசோலினி
3.	யூதர்கள்	-	இ) முகாம்களில் படுகொலை
4.	ஹோசிமின்	-	ஈ) ஹிட்லரின் இராணுவம்
5.	வெர்செய்ல்ஸ்	-	உ) வியட்நாம்

விடை: 1.ஆ 2.ஈ 3.இ 4.உ 5.அ

II.

1.	போயர்கள்	-	அ) அமெரிக்கா
2.	நெல்சன் மண்டேலா	-	ஆ) டச்சு குடியேற்றம்
3.	பெட்ரோ I	-	இ) ப்ராங்கிளின் ரூஸ்வெல்ட்
4.	டாலர் ஏகாதிபத்தியம்	-	ஈ) தென் ஆப்பிரிக்கா
5.	நல்ல அயல் கொள்கை	-	உ) பிரேசில்

விடை: 1.அ 2.ஈ 3.உ 4.அ 5.இ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. தங்க மதிப்பீட்டு முறை என்றால் என்ன?

- தங்க மதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணய முறை. இதில் ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.
- தங்க மதிப்பீட்டளவை பின்பற்றும் நாடுகள் காகிதப்பணத்தை ஒரு குறிப்பிட்ட அளவு தங்கமாக மாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்திருப்பார்.

2. பாசிசம் வரையறு. பாசிசத்தின் பண்புகள் யாவை?

- பாசிசம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்.
- சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும்.

3. அமெரிக்காவில் ஏற்பட்ட பங்கு சந்தையின் வீழ்ச்சி குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- அமெரிக்க முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலான சூழலை 1929 இல் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சி மேலும் மோசமாக்கியது.
- முதல் பெரும் வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் 24 இல் அரங்கேறியது.
- அன்றைய தினம் நியூயார்க் நகரப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் செங்குத்தாக வீழ்ந்தன.
- நம்பிக்கை இழந்த முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் ஏனைய மக்களும் பங்குகளை விற்கத் துவங்கினர்.
- இருப்பில் இருந்தனவற்றையும் விற்றுத் தீர்க்கத் தலைப்பட்டனர். ஆனால் அதனை வாங்குவதற்கு யாருமில்லை.
- இப்பெருவீழ்ச்சியும், முதலீட்டில் ஏற்பட்ட சரிவும் அமெரிக்க வங்கிகளின் தோல்விக்கு வழிவகுத்தன.

4. லேட்டரன் உடன்படிக்கை விளக்குக.

- பாசிஸ்ட் கட்சிக்கென ஒரு மரியாதையைப் பெறுவதற்காக வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக அங்கீகரிப்பதின் மூலம் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவைப் பெறுவதில் முசோலினி வெற்றிபெற்றார்.
- இதற்குக் கைமாறாக திருச்சபை இத்தாலிய அரசை அங்கீகரித்தது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- ரோமன் கத்தோலிக்கச் சமய நம்பிக்கை இத்தாலியின் மதமாக அங்கீகரிக்கப்பட்டது.
- மேலும் பள்ளிகளில் மதபோதனைகள் செய்வதற்கு ஆணையிடப்பட்டது.
- மேற்சொல்லப்பட்டவற்றை சரத்துக்களாகக் கொண்ட லேட்டான் உடன்படிக்கை 1929 இல் கையெழுத்தாயிற்று.

5. சமூக ஜனநாயகக் கட்சி குறிப்பு வரைக.

- சமூக ஜனநாயகக் கட்சியானது ஜெர்மன் பொதுத் தொழிலாளர் கழகம் என்ற பெயரில் 1863 ஆம் ஆண்டு மே 23 இல் லிப்சிக் நகரத்தில் நிறுவப்பட்டது. அதனை நிறுவியவர் பெர்டினன்ட் லாஸ்ஸல்லி என்பவராவார்.
- பிஸ்மார்க் 1878 முதல் 1890 வரை இக்கட்சியைத் தடை செய்திருந்தார்.
- ஹிட்லரை எதிர்த்த கட்சி என்ற பெயருடன் வெய்மர் காலத்திலிருந்து செயல்படும் ஒரே கட்சி இதுவேயாகும்.

6. ஹோ சி மின்னின் வியட்நாமின் ஆற்றிய பங்கு யாது?

- ஹோ சி மின் 1890 இல் டோங்கிங்கில் பிறந்தார். பாரில் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார்.
- தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" என்னும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.
- 1925 இல் புரட்சிகர இளைஞர் இயக்கம் எனும் அமைப்பை நிறுவினார்.
- இந்தோ சீனா திரும்பி கம்யூனிஸ்டுகளை ஒருங்கிணைத்துத் தனது காலனிய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்.
- அமெரிக்காவிற்கு எதிராகப் போருக்கு தலைமை ஏற்று எழுச்சியூட்டும் பாத்திரத்தை வகித்தார்.

7. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை விளக்குக.

- ஆங்கிலேயர்களுக்கு இந்திய தேசிய வாதிகளைச் சமாதானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
- அதன் வெளிப்பாடே 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம்.
- இச்சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
- இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.

8. நாசிசக் கட்சியின் யூதக் கொள்கை யாவை?

- ஹிட்லருடைய அரசு ஒடுக்குமுறை நடவடிக்கைகளைப் பின்பற்றியதோடு யூத இனமக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றியது.
- யூதர்கள் அரசுப் பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர். பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு குடியுரிமையும் மறுக்கப்பட்டது. அவர்களின் வணிகங்கள் நிறுத்தப்பட்டன மேலும் தாக்கப்பட்டன.

- ஐரோப்பாவில் 6 மில்லியன் யூத இனத்தவர் கொல்லப்பட்டதாக மதிப்பீடு செய்யப்பட்டது.
- இப்படுகொலை நாஜிக்களால் இறுதித் தீர்வு என்றழைக்கப்பட்டது.

9. போயர்கள் என்பவர்கள் யார்?

தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக் குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கா நேர்கள் என்றும் அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. போயர் போர்கள் பற்றி விளக்கமாக விவரி.

- இங்கிலாந்தின் காலனிகளான நோட்டால், கேல் காலனி ஆகிய இரண்டிற்கும் சுதந்திர போயர் நாடுகளான டிரான்ஸ்வால் மற்றும் ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகியவற்றுக்கிடையே நீண்ட காலமாக நட்புறவு நிலவவில்லை.
- 1886 இல் டிரான்ஸ்வால் பகுதியில் தங்கம் இருப்பது கண்டறியப்பட்டது.
- இதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையில் ஆங்கிலேயச் சுரங்கத் தொழில் சார்ந்தோர் ஜோகன்னெஸ் பர்க்கிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறினர்.
- இவர்களை வெறுத்த பெயர்கள் இவர்களை யுட்லேண்டர்ஸ் என்றே குறிப்பிட்டனர். குடியேறியவர்கள் மீது அதிக வரிகளை விதித்த போயர்கள் அவர்களுக்கு அரசியல் உரிமைகளையும் மறுத்தனர்.
- யுட்லேண்டர்ஸின் அரசியல் உரிமைகள் குறித்த பேச்சு வார்த்தைகளில் உடன்பாடுகள் ஏதும் ஏற்படவில்லை.

2. தென் அமெரிக்காவில் பெருமந்தம் குறித்து விளக்குக.

- பொருளாதாரப் பெருமந்தத்தில் உருவான சூழ்நிலையில் சிலரின் அல்லது சில குடும்பங்களின் ஆட்சியால் பல உறுதியான குழுக்களின் எதிர்ப்பார்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
- மெக்சிகோவில் அதிருப்திக் குழுக்கள், நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள், வேளாண் சமூகங்கள் ஆகியோரை உள்ளடக்கிய வன்முறை சார்ந்த சமூக எதிர்ப்புகள் அரங்கேறின.
- வேறு இடங்களில் தேர்தல் சீர்திருத்தங்கள் புதிய சமூக குழுக்கள் வாக்குப் பெட்டிகள் வழியாக அரசியல் அதிகாரத்தை பெற உதவி செய்தன.
- இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்ததோடு, டாலர் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை.
- 1933-க்குப் பின்னர் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- F.D. ரூஸ்வெல்ட் தன்னுடைய "நல்ல அண்டை வீட்டுக்காரன்" கொள்கையில், அமெரிக்கா, வேறு எந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது.
- மேலும் இலத்தீன் அமெரிக்கா வேறு எந்த நாடுகளுக்குப் பொருளாதார தொழில்நுட்ப உதவிகளைச் செய்யவும் ஒத்துக்கொண்டார்.

வரலாறு

இரண்டாம் உலகப்போர்

அலகு 3

வரலாறு

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?**
   அ) செப்டம்பர் 2, 1945 ஆ) அக்டோபர் 2, 1945
   இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945
   விடை: அ) செப்டம்பர் 2, 1945

2. **பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?**
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின்
   இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின் **விடை: இ) உட்ரோ வில்சன்**

3. **ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?**
   அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்
   இ) லெனின்கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன் போர் **விடை: ஆ) மிட்வே போர்**

4. **அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?**
   அ) கவாசாகி ஆ) இன்னோசிமா
   இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி **விடை: இ) ஹிரோஷிமா**

5. **ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?**
   அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள்
   இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள் **விடை: ஈ) யூதர்கள்**

6. **ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?**
   அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்
   இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின் **விடை: அ) சேம்பர்லின்**

7. **எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?**
   அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945
   இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945 **விடை: ஆ) ஜூன் 26, 1945**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட _____ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.

விடை: ரைன்லாந்து

2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்பந்தம் _____ என அழைக்கப்பட்டது. **விடை: ரோம் பெர்லின் டோக்கியோ ஒப்பந்தம்**

3. _____ கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

விடை: ரூஸ்வெல்ட்

4. 1940 இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் _____ ஆவார்.

விடை: சேம்பர்பின்

5. _____ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி. **விடை: ரேடார்**

III. பொருத்துக.

1.	பிளிட்ஸ்கிரிக்	-	அ) ரூஸ்வெல்ட்
2.	ராயல் கப்பற்படை	-	ஆ) ஸ்டாலின் கிரேடு
3.	கடன் குத்தகை	-	இ) சாலமோன் தீவு
4.	வோல்கா	-	ஈ) பிரிட்டன்/இங்கிலாந்து
5.	க்வாடல்கெனால்	-	உ) மின்னல்வேகத் தாக்குதல்

விடை: 1.உ 2.ஈ 3.அ 4.ஆ 5.இ

IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

காரணம் : அவர் 1941 இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.

அ) கூற்றும், காரணமும் சரி.

ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.

இ) காரணம், கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.

ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

விடை : அ) கூற்றும், காரணமும் சரி

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?**

- முசோலினி (இத்தாலி)
- ஹிட்லர் (ஜெர்மனி)
- பிராங்கோ (ஸ்பெயின்)

2. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?

- ஜெர்மனி பெருமளவு அவமானப்படுத்தப்பட்டாக நிலவிய கருத்தைப் பயன்படுத்தி,
- தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும்,
- ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறி அடால்ப் ஹிட்லர் மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.

3. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.

- 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத்தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலைத் தொடுத்தன.
- இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன.
- அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.
- இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது.
- சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன.

4. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?

- பெவரிட்ஜ் அறிக்கையை 1942 ஆம் ஆண்டில் இங்கிலாந்து வெளியிட்டது.
- அவ்வறிக்கையில், பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிப்பது, உடல் நலப்பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

5. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- உலக வங்கி
- பன்னாட்டு நிதி அமைப்பு

6. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

- உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது.
- நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல்.
- பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது.
- வேலைவாய்ப்பினைப் பெருக்குவது.
- நீடித்தப் பொருளாதார வளர்ச்சி.
- உலகம் முழுவதும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

போரின் விளைவுகள்:

உலகம் இரு அணிகளாகப் பிரிதல்:

- வல்லரசுகள் தலைமையில் அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது.
- ஒரு அணிக்கு அமெரிக்காவும், மற்றொரு அணிக்கு சோவியத் யூனியனும் தலைமை தாங்கியது.
- கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

அணு ஆயுதப் பரவல்:

- அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.
- பலநாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

பன்னாட்டு முகமைகள்:

- பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

காலனி நீக்கச் செயல்பாடு :

- காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.
- அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

2. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு:

- 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் ஐ.நா. சபை தொடங்கப்பட்டு 51 நாடுகள் முதலில் கையெழுத்திட்டன.
- தற்போது ஐக்கியநாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு நாடும் சிறியதோ, பெரியதோ ஐ.நா. சபையில் சமமான வாக்குகளை பெற்றுள்ளன.

பொதுச்சபை:

- ஆண்டுக்கொரு முறை கூடும் இந்த அமைப்பில் நாடுகளின் நலன் சார்ந்த விசயங்களும் முரண்பாட்டிற்கான காரணங்கள் விவாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு அவை:

- பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக் கொண்டது.

- அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள்.

நிர்வாக அமைப்பு:

- ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்கிறது.
- பொதுச் செயலாளர் பொதுச்சபையில் பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பன்னாட்டு நீதிமன்றம்:

- ஐக்கிய நாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும்.
- இது நெதர்லாந்தில் உள்ள தி ஹேக் நகரில் அமைந்துள்ளது.

பொருளாதார சமூக மாமன்றம்:

- ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது அங்கம்.
- ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்து பொருளாதாரச் சமூகப் பணிகளை ஒருங்கிணைப்பது இதன் பணியாகும்.

ஐ.நா. துணை அமைப்புகள்:

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு.
- உலக சுகாதார நிறுவனம்
- ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு.
- யுனெஸ்கோ.
- யுனிசெப்.
- ஐ.நா. வளர்ச்சித் திட்டம்.

ஐ.நாவின் செயல்பாடுகள்:

- உலகம் எதிர்கொண்ட மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்ப தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
- 1960-களில் காலனியாதிக்க நீக்கம் இதன் செயல்பாடுகளில் முக்கியமானது.
- மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலின சமத்துவம் - போன்ற செயல்பாடுகள் ஐ.நா.சபை வளையத்தினுள் வந்துள்ளது.
- மிகச் சிறப்பாக கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியது ஐ.நாவின் அமைதிப்படை உலகம் முழுவதும் மோதல்கள் அரங்கேறிய பல்வேறு பணிகளில் சிறப்பான பணி செய்து அமைதியை நிலைநாட்டியுள்ளது.

VII. செயல்பாடுகள்

1. உலக வரைபடத்தில் அச்சு நாடுகள், நேசநாடுகள், இரண்டாம் உலகப்போரின் முக்கிய போர்க்களங்கள் ஆகியவற்றைக் குறிக்கவும்.

ஆசிரியர் மாணவர் செயல்பாடுகள்.

VIII. வரைபடப் பணி.

உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.

1. அச்சு நாடுகள் 2. நேச நாடுகள்
3. ஹிரோஷிமா, நாகசாகி, ஹவாய் தீவு, மாஸ்கோ, சான் பிரான்சிஸ்கோ

சமூக அறிவியல்

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. பன்னாட்டுச் சங்கம் உருவாக காரணமானவர் _____.
   அ) ஹிட்லர் ஆ) முசோலினி
   இ) உட்ரோவில்சன் ஈ) சேம்பர்லின் **விடை: இ) உட்ரோவில்சன்**

2. முதல் உலகப்போரின் முடிவில் கையெழுத்தான உடன்படிக்கை _____.
   அ) அலகாபாத் ஆ) லண்டன்
   இ) பாரிஸ் ஈ) வெர்செய்ல்ஸ் **விடை: ஈ) வெர்செய்ல்ஸ்**

3. பன்னாட்டுச் சங்கத்தில் உறுப்பினராகாத நாடு _____.
   அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து
   இ) ஜெர்மனி ஈ) இத்தாலி **விடை: அ) அமெரிக்கா**

4. ஐ.நா. சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _____.
   அ) 1942 ஆ) 1945
   இ) 1948 ஈ) 1943 **விடை: ஆ) 1945**

5. ஐ.நா சபையில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை _____.
   அ) 118 ஆ) 190
   இ) 193 ஈ) 197 **விடை: இ) 193**

6. ஐ.நா வின் செயல்பாட்டு அங்கம் _____.
   அ) பொதுச்சபை ஆ) பாதுகாப்பு சபை
   இ) பன்னாட்டு நிதி மன்றம் ஈ) செயலகம் **விடை: ஈ) செயலகம்**

7. அமெரிக்க முத்துத் துறைமுகத்தை தாக்கிய நாடு _____.
   அ) ஜப்பான் ஆ) ஜெர்மனி
   இ) இங்கிலாந்து ஈ) சீனா **விடை: அ) ஜப்பான்**

8. அமெரிக்காவில் கடன் குத்தகைத் திட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு _____.
   அ) 1942 ஆ) 1945
   இ) 1940 ஈ) 1941 **விடை: ஈ) 1941**

9. பெவரிட்ஜ் அறிக்கை வெளியிட்ட நாடு _____.
   அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து
   இ) ரஷ்யா ஈ) ஜப்பான் **விடை: ஆ) இங்கிலாந்து**

10. பொருளாதார பெருமந்தம் ஏற்பட்ட ஆண்டு _____.
    அ) 1941 ஆ) 1920
    இ) 1929 ஈ) 1923 **விடை: இ) 1929**

11. தேசிய சோசலிஸக்கட்சியை நிறுவியவர் _____

அ) முசோலினி ஆ) உட்ரோவில்சன்
இ) சேம்பர்லின் ஈ) ஹிட்லர் **விடை: ஈ) ஹிட்லர்**

12. மியூனிச் உடன்படிக்கையை இங்கிலாந்துடன் மேற்கொண்ட நாடு _____.

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
இ) அமெரிக்கா ஈ) சீனா **விடை: அ) ஜெர்மனி**

13. பிரெட்டன் உட்ஸ் மாநாடு நடைபெற்ற ஆண்டு

அ) 1945 ஆ) 1944
இ) 1948 ஈ) 1950 **விடை: ஆ) 1944**

14. உலக வங்கி அமைந்துள்ள நகரம்

அ) பெய்ஜிங் ஆ) லண்டன்
இ) வாஷிங்டன் ஈ) இத்தாலி **விடை: இ) வாஷிங்டன்**

15. மின்னல் வேகத் தாக்குதலைத் தொடுத்த நாடு _____.

அ) ரஷ்யா ஆ) ஜெர்மனி
இ) சீனா ஈ) பிரான்ஸ் **விடை: ஆ) ஜெர்மனி**

16. ஐ.நா. சபையில் உள்ள பாதுகாப்பு சபையானது _____ உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அ) 12 ஆ) 18
இ) 20 ஈ) 15 **விடை: ஈ) 15**

17. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் தலைமையகம் _____.

அ) ஜெனிவா ஆ) வாஷிங்டன்
இ) பெய்ஜிங் ஈ) லண்டன் **விடை: அ) ஜெனிவா**

18. யூத மக்களின் பூர்வீக நாடு _____.

அ) ஜெர்மனி ஆ) பாலஸ்தீனம்
இ) இஸ்ரேல் ஈ) இத்தாலி **விடை: இ) இஸ்ரேல்**

19. 1941 ஜூனில் ஜெர்மனி படைகள் _____ மீது படையெடுத்தன.

அ) பிரான்ஸ் ஆ) ஜப்பான்
இ) ரஷ்யா ஈ) சீனா **விடை: இ) ரஷ்யா**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இரண்டாம் உலகப் போரில் பங்குபெற்ற இரண்டு பகைமை அணிகள் _____, _____. **விடை: நேசநாடுகள், அச்சுநாடுகள்**
2. ஜெர்மன் படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்த ஆண்டு _____. **விடை: 1941**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் _____.
விடை: ஹாலந்திலுள்ள திஹேக்

4. இரண்டாம் உலகப்போர் _____ முதல் _____ வரை நடைபெற்றது.
விடை: 1939, 1945

5. தனிமைப்பட்டிருத்தல் கொள்கையிலிருந்து பின் வாங்கியவர் _____.
விடை: ரூஸ்வெல்ட்

6. இங்கிலாந்து விமானப்படையின் பெயர் _____. **விடை: ராயல் ஏர்போர்ஸ்**

7. இங்கிலாந்து பெவரிட்ஜ் அறிக்கையை _____ ஆம் ஆண்டு வெளியிட்டது.
விடை: 1942

8. மியூனிச் உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு _____. **விடை: 1938**

9. பன்னாட்டு நிதியமைப்பானது _____, _____ ஆகியோரின் மூளையில் உதித்த குழந்தையாகும். **விடை: ஹேரி டேக்ஸ்டர் ஒயிட், ஜான் மேனார்டு கெய்ன்ஸ்**

10. இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பிரிட்டனில் _____ ஆட்சி அமைத்தது.
விடை: தொழிலாளர் கட்சி

11. வளரும் நாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களுடன் செயல் அமைப்பு _____.
விடை: பன்னாட்டு நிதி வாரியம்

12. "பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" எனக் குறிக்கப்படுவது _____, _____.
விடை: உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு

13. மக்களிடையே யூதர்களின் மீதிருந்த வெறுப்பையும் அவ நம்பிக்கையையும் படம் பிடித்துக் காட்டிய நாடகம் _____. **விடை: வெனிஸ் நகர வணிகர்**

14. மனித உரிமைகள் கொண்டாடப்படும் நாள் _____. **விடை: டிசம்பர் 10**

15. நாஜிகள் யூதர்களை முற்றிலுமாகக் கொன்று குவிப்பதற்காக _____ எனும் கருத்தை முன்வைத்தனர். **விடை: இறுதித் தீர்வு**

15. ஐரோப்பிய நாடுகளில் முகாம்களில் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை _____. **விடை: 6 மில்லியன்**

16. மின்னல் என்ற இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு இலக்கான நகரம் _____.
விடை: லண்டன்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) நவீன அறிவியலின் வளர்ச்சியைப் பயன்படுத்தி இரகசியத் திட்டத்தின் மூலம் ரஷ்யா அணுகுண்டு தயாரித்தது.
ii) சீனப்படைத்தளபதிகள் சரணடைய மறுத்தனர்.
iii) இறுதியாக அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா நகர் மீது அணுகுண்டு வீசியது.
iv) மற்றொரு அணுகுண்டு நாகசாகி மீது வீசப்பட்டது.

அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி
இ) i), iv) சரி ஈ) iii), v) சரி **விடை: ஈ) iii), iv) சரி**

2. i) ஐ.நா.விற்கான முதல் முயற்சி அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இருந்து வந்தது.
ii) 1941-ஆம் ஆண்டில் அமெரிக்காவும் பிரிட்டனும் அட்லாண்டிக் சாசனத்தை வெளியிட்டனர்.
iii) ஐ.நா.வினை உலகின் அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டன.
iv) ஐ. நா. சபை ஜனவரி 1, 1941 இல் கையெழுத்திட்டன.

அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி
இ) i), iv) சரி ஈ) iii), v) சரி **விடை: அ) i), ii) சரி**

3. i) அமெரிக்கா உலக அரசியலிலோ, ஆசிய அரசியலிலோ பங்கெடுப்பதில் ஆர்வம் கொள்ளவில்லை.
ii) நேச நாடுகளும் தலையிடாக்கொள்கை மனநிலையில் உறுதியாக இருந்தன.
iii) அமெரிக்கா பன்னாட்டுச் சங்கத்தில் உறுப்பினர் ஆகவில்லை.
iv) பன்னாட்டுச் சங்கம் ஒரு பயனற்ற சங்கமாக இருந்தது.

அ) i), ii) சரி ஆ) i), ii), iii) சரி
இ) ii), iii), iv) சரி ஈ) i) சரி **விடை : இ) ii), iii), iv) சரி**

4. கூற்று : 1941 இல் டிசம்பரில் ஜப்பானிய கப்பல் படைத்தளத்தை அமெரிக்கா தாக்கியது.
காரணம் : பல ஜப்பானிய போர் கப்பல்களும், போர் விமானங்களும் அழிக்கப்பட்டன.

அ) கூற்று காரணம் இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று சரியாக பொருந்தவில்லை.

விடை: இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

IV. பொருத்துக.

I

1.	ஐ.நா சபை	-	அ) தி ஹேக்
2.	பாதுகாப்பு சபை	-	ஆ) நியூயார்க்
3.	ஐ.நா செயலகம்	-	இ) வாஷிங்டன்
4.	பன்னாட்டு நீதிமன்றம்	-	ஈ) எதிர்வாக்கு
5.	உலக வங்கி	-	உ) பொதுச்செயலாளர்

விடை: 1.ஆ 2.ஈ 3.உ 4.அ 5.இ

II

1.	லண்டன்	-	அ) ஜெர்மனி
2.	ஹிரோசிமா	-	ஆ) அமெரிக்கா
3.	ஸ்டாலின்கிரேடு போர்	-	இ) இங்கிலாந்து
4.	முத்துத் துறைமுகம்	-	ஈ) ஜப்பான்
5.	மியூனிச்	-	உ) ரஷ்யா

விடை: 1.இ 2.ஈ 3.உ 4.ஆ 5.அ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

- முதல் உலகப்போரில் பலியானோரின் எண்ணிக்கை 20 மில்லியன் என மதிப்பிட்டுள்ளது. மேலும் 21 மில்லியன் நபர்கள் காயமுற்றனர்.
- இரண்டாம் உலகப்போரில் ஏறத்தாழ 50 மில்லியன் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

2. பன்னாட்டு சங்கத்தின் தோல்வி இரண்டாம் உலகப் போருக்கு எவ்வாறு வழிவகுத்தது?

- அமெரிக்க அதிபர் உட்ரோவில்சனின் முயற்சியால் பன்னாட்டுச் சங்கம் உருவானது.
- அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் உட்ரோவில்சன் மேற்கொண்ட முயற்சியால் சர்வதேச சங்கம் எனும் அமைப்பினை உருவாக்கியது.
- ஆனால் அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்பு நாடாகச் சேரவில்லை. ஏனெனில் போருக்குப் பின்னர் அமெரிக்காவின் பொதுவான மனோநிலை மரபான தனித்திருக்கும் கொள்கைக்கு ஆதரவாக இருந்தது.
- எனவே அமெரிக்கா உலக அரசியலிலோ அல்லது ஐரோப்பிய அரசியலிலோ பங்கெடுப்பதில் ஆர்வம் கொள்ளவில்லை.
- ஏனைய நேசநாடுகளுக்கும் தலையிடாக் கொள்கை மனப்பாங்கில் உறுதியாய் இருந்தன.
- இதன் விளைவாக சர்வதேச சங்கம் ஒரு பயனற்ற பன்னாட்டுச் சங்கமாக இருந்தது.

3. மியூனிச் உடன்படிக்கை - குறிப்பு வரைக.

- 1938 இல் இங்கிலாந்தின் பிரதம மந்திரி சேம்பர்லின் ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையை மேற்கொண்டார்.
- இது செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்து அதன் ஜெர்மன் மொழி பேசும் பகுதியான சூட்டன்லாந்தை ஜெர்மனி இணைத்துக் கொண்டதை வெட்கமின்றி ஒத்துக்கொள்வதாக அமைந்தது.
- இருந்தபோதிலும் 1939 இல் சோவியத் யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர் மீது மற்றொருவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்து கொண்டது.

4. ரஷ்யாவின் மீதான ஜெர்மனி படையெடுப்பு நீவிர் அறிந்ததென்ன?

- 1941 ஜூன் திங்களில் ஜெர்மன் படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்தன.
- ஜெர்மன் மக்களைக் குடியேற்றுவதற்குத் தேவையான முக்கிய நிலப் பகுதிகளை பெறுதல், கம்யூனிச ஆட்சியை ஒழிப்பது, ரஷ்யாவின் இயற்கை வளங்களைக் குறிப்பாக எண்ணெய் வளங்களைக் கைக்கொள்வது போன்ற நீண்ட கால நோக்கங்களுடன் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- ஜெர்மன் படைகளின் தாக்குதல் தந்திரமான "மின்னல் வேகத் தாக்குதல்" தொடக்கத்தில் வெற்றிகளை நல்கியது. மிக விரைவில் ரஷ்யாவிற்குள் 1000 மைல்கள் வரை ஜெர்மன் படைகள் ஊடுருவின.
- பின்னர் ஜெர்மன் படைகள் மாஸ்கோவை நோக்கிப் புறப்பட்டன. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு ரஷ்யாவின் கொடூரமான குளிர் ஆகிய காரணங்களால் ஜெர்மன் படை தோல்வி உற்றது.

5. ஹிரோசிமா, நாகசாகி - நகரின் மீது அமெரிக்காவின் தாக்குதல் குறித்து எழுதுக.

- ஜப்பானியப் படைத்தளபதிகள் சரணடைய மறுத்தபோது அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா நகர் மீது ஒரு அணுகுண்டை வீசியது.
- இதன் பின்னரும் ஜப்பானியர் சரணடைய மறுத்ததால் மற்றொரு அணுகுண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது.

6. பன்னாட்டு முகமைகள் எவை?

- பல பன்னாட்டு ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
- இவை பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாகத் திகழ்ந்தது.

7. மனித உரிமைப் பிரகடனம் - குறிப்பு வரைக.

- மனித உரிமைகளைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனித உரிமைகளுக்கான மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இவ்வமைப்பால் உருவாக்கப்பட்ட குழு ஒன்றுக்கு குடியரசுத்தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் விதவை மனைவியார் தலைமை வகித்தார்.
- உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம், மனித உரிமைகள் குறித்து 30 உறுப்புகளைக் கொண்டிருந்தது.
- ஐக்கிய நாடுகள் சபை இச்சாசனத்தை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் ஏற்றுக்கொண்டது.
- இந்நாள் உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

8. ஐக்கிய நாட்டு சபையின் அங்கங்கள் யாவை?

- பொதுச்சபை
- பாதுகாப்பு அவை
- செயலகம்
- பன்னாட்டு நீதிமன்றம்
- பொருளாதார சமூக மாமன்றம்

9. ஐ.நா. வின் முக்கிய துணை அமைப்புகள் யாவை?

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு
- உலக சுகாதார நிறுவனம்
- யுனெஸ்கோ
- யுனிசெப்
- ஐ.நா வளர்ச்சி திட்டம்

10. பன்னாட்டு நிதியமைப்பு குறிப்பு வரைக.

- பன்னாட்டு நிதியமைப்பானது அடிப்படையில் ஹேரி டேக்ஸ்டர் ஒயிட், ஜான் மேனார்டு கெய்ன்ஸ் எனும் புகழ்பெற்றப் பொருளாதார நிபுணர்களின் மூளையில் உதித்த குழந்தை ஆகும்.
- தற்போது 189 நாடுகள் இவ்வமைப்பில் உறுப்பு நாடுகளாக உள்ளன. இதனுடைய அடிப்படை நோக்கம் உலகம் முழுவதிலும் நிதி மற்றும் வளர்ச்சியின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதாகும்.

- இதனுடைய முக்கிய நிகழ்ச்சி நிரல் பன்னாட்டு நிதி சார்ந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவது.
- பன்னாடு வணிகத்தையும் நாணயச் செலவாணியையும் உறுதியாக வைத்திருத்தல் ஆகியவையாகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. மனித உரிமைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சூழ்நிலைகளை விளக்குக.

- உலக அளவில் பேரழிவு நடைபெற்றபின், ஐக்கிய நாடுகள் சபை தன்னுடைய மனித உரிமை சாசனத்தின் இனம், பால், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளின்றி அடிப்படைச் சுதந்திரமும், மனித உரிமைகளும், உலகளாவிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதை ஊக்குவிக்கப் போவதாக உறுதிமொழி மேற்கொண்டது.
- உலகளாவிய முறையில் மனித உரிமைகளைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனித உரிமைகளுக்கான மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இவ்வமைப்பால் உருவாக்கப்பட்ட குழு ஒன்றுக்கு குடியரசுத் தலைவர் பிராங்கிகளின் ரூஸ்வெல்டின் விதவை மனைவியார் தலைமை வகித்தார்.
- உலகளாவிய மனித உரிமைகள், பிரகடனம், மனித உரிமைகள் குறித்த 30 உறுப்புகளைக் கொண்டிருந்தது.
- ஐக்கிய நாடுகள் சபை இச்சாசனத்தை 1948 டிசம்பர் 10 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நாள் (டிசம்பர் 10) உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

2. ஐக்கிய நாடுகள் சபை பற்றி விவரி.

- ஐக்கிய நாடுகள் சாலை நிறுவப்படுவதற்காக முன் முயற்சியை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இங்கிலாந்தும் 1941 இல் அட்லாண்டிக் சாசனத்தின் வழியே வெளியிட்டன.
- இதில் நாஜிகளின் கொடுங்கோண்மை ஒழிக்கப்பட்ட பின்னர் அனைத்து நாடுகளிலும் அமைதி நிலவுமென்றும் அதனால் மக்கள் தங்கள் வாழ்வை அச்சமில்லாமல் நிறைவேறாதத் தேவைகளென, எதுவுமின்றி சுதந்திரமாக வாழலாம் என உரைக்கப்பட்டிருந்தது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் 1942 இல் புத்தாண்டு தினத்தன்று அச்சு நாடுகளுக்கு எதிராக போர் செய்து வந்த 26 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 நாடுகள் 61 நாடுகள் கையெழுத்திட்டன.
- இந்தியா அப்போது சுதந்திர நாடாக இல்லை என்பதால் சாசனத்தில் கையெழுத்திடவில்லை.
- தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டது.
- ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ ஐக்கிய நாடுகள் சபையின் சமமான வாக்குகளை அவை பெற்றுள்ளன.

வரலாறு

அலகு 4

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?
அ) உட்ரோ வில்சன் ஆ) ட்ரூமென்
இ) தியோடர் ரூஸ்வெல்ட் ஈ) பிராங்களின் ரூஸ்வெல்ட்
விடை: ஆ) ட்ரூமென்

2. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949
இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944 **விடை: ஆ) செப்டம்பர் 1949**

3. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் _____ ஆகும்.
அ) சீட்டோ ஆ) நேட்டோ
இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம் **விடை: ஆ) நேட்டோ**

4. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969 இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?
அ) ஹபீஸ் ஆல்-ஆஸாத் ஆ) யாசர் அராபத்
இ) நாசர் ஈ) சதாம் உசேன் **விடை: ஆ) யாசர் அராபத்**

5. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
அ) 1975 ஆ) 1976
இ) 1973 ஈ) 1974 **விடை: ஆ) 1976**

6. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ) 1979 ஆ) 1989
இ) 1990 ஈ) 1991 **விடை: ஈ) 1991**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் _____ ஆவார்.
விடை: டாக்டர் சான்யாட் சென்

சமூக அறிவியல்

2. 1918 இல் _____ பல்கலைக்கழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது. **விடை: பீகிங்**

3. டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் _____ ஆவார். **விடை: ஷியாங்-கை-ஷேக்**

4. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபுநாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் _____ ஆகும். **விடை: சென்டோ/பாக்தாத் ஒப்பந்தம்**

5. துருக்கிய அரபுப்பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் _____ ஆகும். **விடை: வெர்செயில்ஸ்**

6. ஜெர்மனி நேட்டோவில் _____ ஆம் ஆண்டு இணைந்தது. **விடை: 1955**

7. ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் _____ நகரில் அமைந்துள்ளது. **விடை: ஸ்ட்ராஸ் பர்க்**

8. ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992 இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் _____ ஆகும். **விடை: மாஸ்டிரிக்ட் - நெதர்லாந்து**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) கற்றறிந்த சிறுபான்மையினரின் தாக்கத்தில் சீனாவின் (1898) இளம் பேரரசர் துவக்கிய சீர்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.

ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தியது.

iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி-கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.

iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.

அ) i) மற்றும் ii) சரி ஆ) ii) மற்றும் iii) சரி
இ) i) மற்றும் iii) சரி ஈ) i) மற்றும் iv) சரி **விடை: இ) i) மற்றும் iii) சரி**

2. i) கிழக்கு ஐரோப்பாவில் 1948 இல் சோவியத் நாடு நிறுவிய இடதுசாரி அரசுகளை சோவியத் இராணுவம் விடுதலை செய்தது.

ii) வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவே நேட்டோ உருவாக்கப்பட்டது.

iii) சீட்டோவின் உறுப்பு நாடுகள் அப்பகுதியில் மக்களாட்சி பரவுவதைத் தடுக்கும் நோக்கோடு செயல்பட்டார்கள்.

iv) ஜப்பானுக்கெதிராக பிரிட்டன் அணுகுண்டைப் பயன்படுத்தியதின் மூலம் அது ரஷ்யாவுக்கு தன்னுடைய அழிக்கும் திறனை எடுத்துக்காட்ட விரும்பியது.

அ) i), iii) மற்றும் iv) சரி ஆ) i) மற்றும் ii) சரி
இ) iii) மற்றும் iv) சரி ஈ) i), ii) மற்றும் iii) சரி **விடை: ஆ) i) மற்றும் ii) சரி**

3. கூற்று : அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறுநிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது.

காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டு வர நினைத்தது.

அ) கூற்றும், காரணமும் இரண்டுமே சரி. ஆனால் காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

ஆ) கூற்றும் காரணமும் தவறானவை.

இ) கூற்றும் காரணமும் சரி. காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

விடை: இ) கூற்றும் காரணமும் சரி. காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.

IV. பொருத்துக.

1.	டாக்டர் சன் யாட் சென்	-	அ) தெற்கு வியட்நாம்
2.	சிங்மென் ரீ	-	ஆ) கோமிங்டாங்
3.	அன்வர் சாதத்	-	இ) கொரியா
4.	ஹோ சி மின்	-	ஈ) எகிப்து
5.	நிகோ டின் டியம்	-	உ) வடக்கு வியட்நாம்

விடை: 1.ஆ 2.இ 3.ஈ 4.உ 5.அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. சீனாவில் 1911 ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு ஏதேனும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

- மஞ்சு வம்சத்தின் சிதைவு 1908 ஆம் ஆண்டு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேரரசியார் தாவேகரின் மரணத்தோடுத் துவங்கியது.
- புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர்.
- உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911 ஆம் ஆண்டு ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மட்டங்களில் பரவியது.

2. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.

- 1933 ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின் மீது முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
- ஒரு நீண்டப் பயணத்தை முன்னெடுத்து 100,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934 இல் கிளம்பினர்.
- இவ்வாறு கிளம்பிய 100,000 பேரில் வெறும் 20,000 பேர் மட்டும் 1935 இன் பிற்பகுதியில் 6000 மைல்களைக் கடந்து ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.

- துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955 இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது.
- அமெரிக்க ஐக்கிய நாடு இவ்வுடன்படிக்கையில் 1958 இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் மத்திய உடன்படிக்கை அமைப்பு என்று மாற்றியழைக்கப்பட்டது.

4. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

- மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக்கொள்ள ஐக்கிய அமெரிக்க நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.
- இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்தி கொள்ள வழிவகை செய்தது.

5. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

- ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகளை உலக அரசியலில் முதலாம் உலக நாடுகள் எனறும் சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகளை இரண்டாம் உலக நாடுகள் என்றும் வழங்கப்பட்டன.
- இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்டன..

6. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

- காஸ்ட் ரோவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர கியூபாவின் விமான தளங்களை அமெரிக்கா குண்டு வீசித் தாக்கியது.
- அமெரிக்காவின் போர் கப்பல்கள் கியூபாவை சுற்றி வளைத்தன.
- சோவியத் நாடு கியூபாவில் ஏவுகணைகளை ரகசியமாக நிறுவப் போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது.
- இறுதியாக சோவியத் குடியரசுத்தலைவர் குருசேவ் ஏவுகணைகளைத் திரும்பப்பெற்றதால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.

- தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஷனான் நகரில் மா சே துங் பிறந்தார்.
- தம் இளைய வயதில் புரட்சிப்படை ஒன்றை ஆரம்பித்தார்.
- நூலகர்-கல்லூரிப் பேராசிரியர் என அவரது வாழ்க்கை மலர்ந்தது.
- ஹனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையை தொடங்கிய அவர் முழு பொதுவுடைமைவாதியாக மாறியிருந்தார்.
- சீனா முழுவதும் நீடித்த சச்சரவுகள் முடிவிற்கு வந்த பின் 1949-இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது.

- பொதுவுடைமை மற்றும் இடதுசாரி அமைப்புகள் மா சே துங்கை தலைவராக தேர்ந்தெடுத்து நடுவண் அரசு ஆட்சி பொறுப்பேற்றது.
- மா சே துங் தலைமையில் ஐந்தாண்டுகள் ஆட்சி நடைபெற்றது.
- மா சே துங்கின் தலைமையில் உருவான சீன மக்கள் குடியரசு செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது.
- மா சே துங்கின் இளமைப்பருவ நீண்ட பயணம், இராணுவப்படை மற்றும் கொரில்லாப் போர் முறை அவரை சிறந்த தலைமைப் பண்பை தந்தது.
- இன்று உலகில் சீனா பெரும் சக்தியாய் உருவானதற்கு மா சே துங்கின் அரிய பணியே காரணமாகும்.

2. ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.

ஐரோப்பியக் குழுமம்:

- இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார ஒற்றுமை மேற்கு ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைக்க முடிந்தது.
- அதன் விளைவே 1949இல் மே மாதம் பத்து நாடுகள் இலண்டனில் கூடி ஐரோப்பிய சமூகத்தை முன்னெடுத்தது.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்:

- ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் (பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க்) கூடி ரோம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.

ஐரோப்பியப் பொருளாதார சமூகம்:

- சந்தைப் போட்டியைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்ற போது கொள்கைகளையும் தனியார் ஒப்பந்தங்களையும் புறக்கணித்தது.
- பொதுவான விவசாயக் கொள்கையையும் பொதுவான வெளிநாட்டு வணிகத்தையும் இவ்வமைப்பு உருவாக்கியது

ஒற்றை ஐரோப்பியச் சட்டம்:

- ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1 ஜூலை1987 இல் நடைமுறைக்கு வந்தது.
- அது ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி அதற்கு சட்டவடிவம் கொடுத்தது.

ஐரோப்பிய ஒன்றியம்:

- 1992 பிப்ரவரி 7 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை நெதர்லாந்து மாஸ்டிரிக்ட் ஒப்பந்தம் உறுதிப்படுத்தியது.
- இன்றளவில் ஐரோப்பிய இணைவில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன.
- பெல்ஜியத்தின் பிரெஸ்ஸல்ஸ் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

VII. செயல்பாடுகள்

1. வகுப்பை இருபிரிவுகளாகப் பிரிக்கவும். ஒரு பிரிவை அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவாளர்களாகவும் மற்றொரு பிரிவை சோவியத் நாட்டின் ஆதரவாளர்களாகவும் கொண்டு பனிப்போர் அரசியலை விளக்க விவாதமேடையமைக்க.

   வகுப்பறை மாணவர் செயல்பாடுகள்.

2. பேரழிவு, மக்கள் இறப்புப் போன்ற கருக்களைக் கொண்டு மொத்த வகுப்பையும் பயன்படுத்தி கொரியப்போர், அரபு-இஸ்ரேல் போர், வியட்நாம்போர் போன்றவற்றின் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பை உருவாக்கலாம்.

   மாணவர்கள் படத்தொகுப்பு சேகரிப்பு செயல்பாடுகள்.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. நீண்ட வரலாற்றைக் கொண்ட _____ நாகரீகம் ஐரோப்பாவைவிட மேம்பட்டதாகும்

   அ) எகிப்திய ஆ) சீன
   இ) சிந்து ஈ) அரேபிய **விடை: ஆ) சீன**

2. _____ கலகம் சீனாவில் ஏற்பட்ட ஒரு முக்கிய எழுச்சியாகும்.

   அ) தைபிங் கலகம் ஆ) மாபெரும் கலகம்
   இ) மஞ்சு கலகம் ஈ) பாக்சர் கலகம் **விடை: அ) தைபிங் கலகம்**

3. கோமிங்டாங் என்னும் தேசிய கட்சியை உருவாக்கியவர்

   அ) டாக்டர் சன் யாட் சென் ஆ) யுவான் ஷி-கே
   இ) மா சே - துங் ஈ) சூ-யென்-லாய

   விடை: அ) டாக்டர் சன் யாட் சென்

4. மாவேவின் நீண்ட பயணம் தொடங்கிய ஆண்டு

   அ) 1934 ஆ) 1935
   இ) 1937 ஈ) 1941 **விடை: அ) 1934**

6. சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்புப் போக்கை ஐரோப்பாவிற்குள் தடைசெய்த அமைப்பு

   அ) நேட்டோ ஆ) சீட்டோ
   இ) வார்சா ஈ) சென்டோ **விடை: அ) நேட்டோ**

7. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்திய ஒப்பந்தம்

   அ) வார்சா ஒப்பந்தம் ஆ) நேட்டோ
   இ) சிட்டோ ஈ) சென்டோ **விடை: இ) சீட்டோ**

8. நேட்டோவிற்கு எதிராக சோவியத் நாடு தன் ஆதரவு நாடுகளை கொண்டு உருவாக்கியதே _____ ஒப்பந்தம்.
அ) நேட்டோ ஆ) சீட்டோ
இ) வார்சா ஈ) சென்டோ **விடை: இ) வார்சா**

9. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரசியலில் _____ என்றும் அழைக்கப்பட்டன.
அ) இரண்டாம் உலக நாடுகள் ஆ) இவற்றில் எதுவுமில்லை
இ) மூன்றாம் உலக நாடுகள் ஈ) முதலாம் உலக நாடுகள்
விடை: ஈ) முதலாம் உலக நாடுகள்

10. சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் _____ என்றும் வழங்கப்பட்டன.
அ) முதலாம் உலக நாடுகள் ஆ) இரண்டாம் உலக நாடுகள்
இ) மூன்றாம் உலக நாடுகள் ஈ) இவற்றுள் எதுவுமில்லை
விடை: ஆ) இரண்டாம் உலக நாடுகள்

11. அமெரிக்கா, சோவியத் ஆகிய இரண்டு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகளை _____ என்றும் கூறினர்.
அ) மூன்றாம் உலக நாடுகள் ஆ) முதலாம் உலக நாடுகள்
இ) இரண்டாம் உலக நாடுகள் ஈ) இவற்றுள் எதுவுமில்லை
விடை: அ) மூன்றாம் உலக நாடுகள்

12. அரேபிய கூட்டமைப்பு உருவான இடம்
அ) எகிப்து ஆ) சௌதிஅரேபியா
இ) கெய்ரோ ஈ) இவற்றுள் எதுவுமில்லை
விடை: இ) கெய்ரோ

13. பாலஸ்தீன விடுதலை அமைப்பின் செயற்குழுவின் தலைவர்
அ) ஹீசைன் ஆ) ஜோர்டான்
இ) அஞ்வர் சாதத் ஈ) யாசர் **விடை: ஈ) யாசர்**

14. ஐரோப்பியக் குழுமம் உருவான இடம்
அ) கெய்ரோ ஆ) ஸ்ட்ராஸ் பர்க்
இ) வாஷிங்டன் ஈ) லண்டன் **விடை: ஆ) ஸ்ட்ராஸ் பர்க்**

15. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் _____ உறுப்பினர் உள்ளனர்.
அ) 28 ஆ) 25
இ) 35 ஈ) 23 **விடை: அ) 28**

16. ஒற்றை ஐரோப்பிய சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு
அ) 1998 ஆ) 1992
இ) 1973 ஈ) 1987 **விடை: ஈ) 1987**

17. _____ நாட்டின் வீழ்ச்சி பனிப்போர் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.
அ) அமெரிக்க ஆ) ஜெர்மன்
இ) சோவியத் ஈ) சீன **விடை: இ) சோவியத்**

18. ஜெர்மனி முறையாக இணைக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992
இ) 1993 ஈ) 1998 **விடை: அ) 1990**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் _____.
விடை: டாக்டர் சன்யாட் சென்
2. _____ போர்களில் ஏற்பட்ட தோல்வி சீனா தனது துறைமுகங்களை ஏகாதிபத்திய சக்திக்கு திறந்து விட்டது. **விடை: அபினிப் போர்**
3. நூறு நாட்கள் சீர்த்திருத்தம் தொடங்கப்பட்ட ஆண்டு _____.
விடை: 1998
4. _____ ஒப்பந்தம் வடக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட இராணுவக் கூட்டு ஒப்பந்தமாகும். **விடை: நோட்டா**
5. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு ஏற்பட்ட ஆண்டு _____.
விடை: 1949
6. சீட்டோ ஒப்பந்தம் _____ ஒப்பந்தமாக அழைக்கப்படுகிறது.
விடை: மணிலா ஒப்பந்தம்
7. சோவியத்தில் பிளவு ஏற்பட்ட ஆண்டு _____. **விடை: 1991**
8. துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955 இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே _____ என்றழைக்கப்படுகிறது. **விடை: பாக்தாத் ஒப்பந்தம்**
9. வடகொரிய அதிபரின் பெயர் _____. **விடை: இரண்டாம் கிம்**
10. தென்கொரிய அதிபரின் பெயர் _____. **விடை: சிங்மென் ரீ**
11. _____ வீழ்ச்சிக்குப் பிறகு அணிசேரா இயக்கத்தின் தேவை மங்கியது.
விடை: சோவியத்தின்
12. எகிப்தில் 1952 இல் நிகழ்ந்த ஒரு கிளர்ச்சியின் மூலமாக _____ குடியரசுத் தலைவராக ஆக்கப்பட்டார். **விடை: கர்னல் நாசர்**
13. இஸ்ரேல் என்ற தேசம் உருவான ஆண்டு _____. **விடை: 1948**
14. சூயஸ் கால்வாய் சிக்கல் பிரச்சனைக்கு முடிவுகட்ட சீரிய பங்காற்றிய நாடு _____.
விடை: இந்தியா
15. சூயஸ் கால்வாய் சிக்கல் பிரச்சனைக்கு முடிவுகட்ட சீரிய பங்காற்றிய தலைவர் _____.
விடை: நேரு
16. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட காலனியாதிக்க வெளியேற்றத்தின் பின்னணியில் _____ இயக்கம் உருப்பெற்றது. **விடை: அணிசேரா**

17. இரண்டாம் உலகப் போரின் முடிவில் _____ என்ற அமைப்பு வியட்நாமின் வடக்குப் பாதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. **விடை: வியட்மின்**

18. வியட்மின் என்ற அமைப்பின் தலைவர் _____. **விடை: ஹோசிமின்**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) டாக்டர் சன் யாட் சென் நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
   ii) உள்நாட்டில் வசித்தோரிடமும் தேசிய சிந்தனையை அவர் வளர்த்தெடுத்தார்.
   iii) 1905 ஆம் ஆண்டு டோக்கியாவில் வைத்து ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார்.
   iv) 1912 இல் கோமிங் டாங் என்னும் தேசிய மக்கள் கட்சி உருவெடுத்தது.

   அ) i), iii) மற்றும் iv) சரி ஆ) i) மற்றும் iv) சரி
   இ) iii), மற்றும் iv) சரி ஈ) i), iii) மற்றும் iv) சரி

   விடை: ஈ) i), iii) மற்றும் iv) சரி

2. கூற்று : உலக அரசியலில் 1976 களிலும் 1980 களின் முற்பகுதியிலும் சோவியத் நாடு மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தது.
   காரணம் : 1991 டிசம்பர் 31 அன்று நள்ளிரவில் சோவியத் முழுமையாகக் கலைக்கப்பட்டது.

   அ) கூற்றும் காரணமும் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   ஆ) கூற்றும் காரணமும் தவறானவை.
   இ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.
   ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி.

   விடை: அ) கூற்றும் காரணமும் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

IV. பொருத்துக.

I

1.	சீனப் புரட்சி	-	அ) 1956
2.	நீண்ட பயணம்	-	ஆ) 1991
3.	ரஷ்ய புரட்சி	-	இ) 1911
4.	சூயஸ் கால்வாய் பிரச்சனை	-	ஈ) 1917
5.	பெர்லின் சுவர் முடிவு	-	உ) 1934

விடை: 1.இ 2.உ 3.ஈ 4.அ 5.ஆ

II

1.	ஜார்ஜ் சிமார்சல்	-	அ) சீனா
2.	சிங்மென் ரீ	-	ஆ) பாலஸ்தீனம்
3.	பிடல் காஸ்ட்ரோ	-	இ) அமெரிக்கா

4. யாசர் அராபாத் - ஈ) தென்கொரியா
5. மாசே துங் - உ) கியூபா

விடை: 1.இ 2.ஈ 3.உ 4.ஆ 5.அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. டாக்டர் சன்யாட் சென் - நீவிர் அறிவது என்ன?

- ஒரு ஏழ்மையான குடும்பத்தில் கான்டன் நகரத்தின் அருகே பிறந்த டாக்டர் சன் யாட் சென் நவீன சீனாவின் தந்தை, ஒரு கிறித்துவப் பள்ளியில் கல்வி பெற்றதோடு கிறித்தவராகவும் மாறினார்.
- 1905 ஆம் ஆண்டு டோக்கியோவில் வைத்து ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார்.
- அதுவே 1915 இல் கோமிங்டாங் என்றும் தேசிய மக்கள் கட்சி என்றும் உருவெடுத்தது.
- தேசியம், ஜனநாயகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகிய மூன்று கூறுகளைக் கொண்ட அவர் தம் கொள்கை சோஷியலிஸச் சிந்தனையையே உச்சமாகக் கருத்தில் கொண்டது.

2. மா சே - துங் - குறிப்பு வரைக.

- தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஹனான் நகரில் மா சே துங் பிறந்தார். அவரது தந்தையார் செல்வச் செழிப்பான விவசாயிகளில் ஒருவர் என்பதோடு மஞ்சுக்களின் ஆட்சியை ஆதரித்தவராவார்.
- 1911 இல் சீனாவில் புரட்சி வெடித்தது.
- புரட்சிப்படை ஒன்றை உருவாக்கிய போதும் விரைவில் அதிலிருந்து விலகி சாங்ஸீயாவிலிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார்.
- பீகிங் பல்கலைக்கழக நூலகத்தில் உதவி நூலகராகப் பணியில் சேர்ந்தார்.
- ஹனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறியிருந்தார்.

3. பனிப்போர் - வரையறு.

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இந்நாடுகளின் நட்பு நாடுகளுக்கும் இடையே மூண்ட விரோதம், பரபரப்பையே பனிப்போர் என்கின்றனர்.
- அவை நேரடியாக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை மாறாக அவர்கள் அரசியல் பொருளாதார சிந்தனைத் தளங்களைத் தேர்வு செய்துகொண்டனர்.
- பனிப்போர் என்ற சொல்லாடலை முதன் முறையாக ஜார்ஜ் ஆர்வெல் (1945) என்ற ஆங்கில எழுத்தாளர் கையாண்டார்.

4. பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமைந்தது எது?

இரண்டாம் உலகப் போரின் பிற்பாடு ஏற்பட்ட வறுமை, வேலையில்லாத திண்டாட்டம், இடம்பெயர்வு போன்ற பிரச்சனைகளே மேற்கு ஐரோப்பாவிற்குள் பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமையும் என்று ஐக்கிய அமெரிக்க நாடு கருதியது.

5. நாட்டோ-ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் எது?

- நாட்டோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமானது வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாகும்.
- இவ்வொப்பந்தத்தின் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு உறுப்பு நாடு தாக்கப்பட்டால் அது தங்களையே தாக்கியது போன்றே கருதப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

6. மணிலா ஒப்பந்தத்தில் இடம் பெற்ற நாடுகள் எவை?

ஐக்கிய அமெரிக்க நாடு, பிரான்ஸ், இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான்.

7. வார்சா ஒப்பந்தம் பற்றி நீவிர் அறிவது என்ன?

- நாட்டோவிற்கு எதிராக சோவியத் நாடு 1955 இல் தன் ஆதரவு நாடுகளைக் கொண்டு உருவாக்கியதே வார்சா ஒப்பந்தமாகும்.
- ஐரோப்பாவை சேர்ந்த எட்டு முக்கிய நாடுகளான அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, ரஷ்யா ஆகியவை டிசம்பர் 1954 இல் டாஸ்கோவில் கூடி ஒரு கலந்துரையாடலை நடத்தின.

8. ஒற்றை ஐரோப்பியச் சட்டம் - குறிப்பு வரைக.

- ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1 ஜூலை 1987 இல் நடைமுறைக்கு வந்தது.
- அது ஐரோப்பியப் பொருளாதார சமூகதத்தின் எல்லைகளை நீட்டி அதற்கு சட்ட வடிவம் கொடுத்தது.
- மேலும் அது உறுப்பு நாடுகளை வெளியுறவுக் கொள்கையில் அதிகமான கூட்டுழைப்பை நாடியது.
- இச்சட்டம் உறுப்பு நாடுகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் அவற்றிற்கான ஓட்டுகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. கொரியப் போர் - பனிப்போரின் தாக்கம் - விளக்குக.

- பனிப்போரை மேலும் சூடுபிடிக்க வைத்தது. கொரிய நாடு வடக்கு தெற்கு என இரு பிரிவுகளாக 1945 இல் பிரிக்கப்பட்டபின் உருவான இரு தேசங்களும் மறு ஒருங்கிணைப்பை வலியுறுத்தினாலும் அவ்வாறு ஒருங்கிணைத்தபின் உருவாகக்கூடிய நாட்டிற்குத் தாமே சட்டப்பூர்வமாக ஆளும் உரிமை பெற்றவர் என்று வாதிட்டன.
- வடகொரிய அதிபரான இரண்டாம் கிம் தான் வைரியாகக் கருதிய சிங்மென் ரீக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் முன்பே செயல்பட முடிவெடுத்தார். ஸ்டாலினின் பின்புலத்தில், ஜூன் 1950 இல் அவர் படையெடுப்பைத் துவக்கினார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- கிம்மும் ஸ்டாலினும் இப்பிரச்சினையில் அமெரிக்க நாடு தலையிடும் என்று எதிர்பார்க்கவில்லை. இப்போர் மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது. இப்போரால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு எண்ணிக்கையில் அளவிட முடியாததாய் இருந்தது.
- இதனால் கொரிய மக்களுக்கு எந்த லாபமும் ஏற்படவில்லை.
- எல்லைகள் போருக்கு முன்பாக இருந்த அதே நிலையில் இருந்தது.
- பனிப்போரின் போக்கை, சுருக்கமாகச் சுட்டும் விதமாக கொரியப் போர் அமைத்தது.

2. கியூபாவின் புரட்சி குறித்து விளக்குக.

- அமெரிக்க ஐக்கிய நாடுகள் இராணுவ அதிகாரிகளாலும் பெரும் நிலசுவான்தாரர்களாலும் சில சூழலில் பெரும் முதலாளிகளாலும் ஆட்சி செய்யப்பட்டன.
- தம் பொருளாதாரத் தேவைகளுக்கேற்பவும் அரசியல் சூட்சும நிர்பந்தங்களை முன்னிறுத்தியும் அமெரிக்க ஐக்கிய நாடு அரசை மாற்றிக் கொண்டிருந்தது.
- கியூபாவில் பெடல் காஸ்ட்ரோவும், சேகுவேராவும் சேர்ந்து பட்டிஸ்டாவின் ஊழல் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தனர்.
- காஸ்ட்ரோ பதவியேற்ற பின் கியூபாவிலிருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு சொந்தமான எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்களைச் சுத்திகரிக்க மறுத்தன.
- காஸ்ட்ரோ எண்ணெய் ஆலைகளை தேசியமயமாக்கினார்.

வரலாறு

அலகு 5

19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?**
அ) 1827 ஆ) 1829
இ) 1826 ஈ) 1927 **விடை: ஆ) 1829**

2. **தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?**
அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம்
இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம் **விடை: அ) ஆரிய சமாஜம்**

3. **யாருடைய பணியும் இயக்கமும், 1856 ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது?**
அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் ஆ) இராஜா ராம்மோகன் ராய்
இ) அன்னிபெசன்ட் ஈ) ஜோதிபா பூலே
விடை: அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்

4. **'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?**
அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம்
இ) இராமகிருஷ்ணர் ஈ) திராவிட மகாஜன சபை
விடை: அ) பார்சி இயக்கம்

5. **நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?**
அ) பாபா தயாள் தாஸ் ஆ) பாபா ராம்சிங்
இ) குருநானக் ஈ) ஜோதிபா பூலே **விடை: ஆ) பாபா ராம்சிங்**

6. **விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?**
அ) M.G. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) ஜோதிபா பூலே ஈ) அய்யன்காளி **விடை: அ) M.G. ரானடே**

7. **'சத்யார்த்தபிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் யார்?**
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர்
இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா **விடை: அ) தயானந்த சரஸ்வதி**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____ சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். விடை: ராமலிங்க அடிகள்
2. புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் _____. விடை: ரானடே
3. குலாம்கிரி நூலை எழுதியவர் _____. விடை: ஜோதிபா பூலே
4. இராமகிருஷ்ணா மிஷன் _____ ஆல் நிறுவப்பட்டது. விடை: விவேகானந்தரால்
5. _____ அகாலி இயக்கத்தின் முன்னோடியாகும். விடை: சிங்சபா
6. 'ஒரு பைசா தமிழன்' பத்திரிகையைத் துவக்கியவர் _____ ஆவார். விடை: அயோத்தி தாசர்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) இராஜா ராம்மோகன் ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.
ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
iv) இராஜா ராம்மோகன் ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டார்.
அ) i) சரி ஆ) i), ii) ஆகியன சரி
இ) i), ii), iii) ஆகியன சரி ஈ) i), iii) ஆகியன சரி **விடை: ★ i), iv) ஆகியன சரி**

2. i) பிரார்த்தனை சமாஜம் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்கால் நிறுவப்பெற்றது.
ii) இந்த சமாஜம் அனைத்துச் சாதியினரும் பங்கேற்கும் சமபந்திகளையும் சாதிக்கலப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தது.
iii) ஜோதிபா பூலே ஆண்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார்.
iv) பிரார்த்தனை சமாஜம் பஞ்சாபைப் பிறப்பிடமாகக் கொண்டது.
அ) i) சரி ஆ) ii) சரி
இ) i), ii) ஆகியன சரி ஈ) iii), iv) ஆகியன சரி **விடை: இ) i), ii) சரி**

3. i) இராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல் நலம், பேரிடர்களின்போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப்பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.
ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
iii) இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணா மிஷனை ஏற்படுத்தினார்.
iv) இராமகிருஷ்ணர் வங்கப்பிரிவினையை எதிர்த்தார்.
அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி
இ) iii) சரி ஈ) i), iii) மற்றும் iv) சரி **விடை: ஆ) i) மற்றும் ii) சரி**

4. கூற்று : ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.

காரணம் : ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.

அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.

ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.

இ) இரண்டுமே தவறு.

ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

விடை: அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.

IV. பொருத்துக.

1.	ஒரு பைசா தமிழன்	-	அ) விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம்
2.	திருவருட்பா	-	ஆ) நிரங்கரி இயக்கம்
3.	பாபா தயாள்தாஸ்	-	இ) ஆதி பிரம்மசமாஜம்
4.	ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்	-	ஈ) பத்திரிகை
5.	தேவேந்திரநாத்	-	உ) ஜீவகாருண்யப் பாடல்கள்

விடை: 1.ஈ 2.உ 3.ஆ 4.அ 5.இ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.

- தொடக்கத்தில் எதுவுமில்லை, எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
- அவர் ஒருவர் மட்டுமே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின் சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர். எங்கும் நிறைந்திருப்பார்.
- நம்முடைய வீடு பேறு, இப்பிறவியிலும் அடுத்த பிறவியலும் அவரை நம்புவரையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
- அவரை நம்புவதானது அவரை நேசிப்பதிலும் அவர் விருப்பதைச் செயல்படுத்துவதிலும் அடங்கி உள்ளது.

2. சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக.

- சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- விதவை மறுமணச் சங்கம், புனே சர்வஜனிக் சபா, தக்காணக் கல்வி கழகம் ஆகிய அமைப்புகளை ரானடே நிறுவினார்.

3. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

- இராமலிங்க சுவாமிகள் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களின் மேலும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.
- 1865 இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1866இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடியப் பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை நிறுவினார்.

4. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?

- சதி ஒழிக்கப்பட்டது.
- பலதாரமணம், குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டது.
- விதவை மறுமணம் ஊக்குவிக்கப்பட்டது.
- பெண்ணடிமை தனத்தை எதிர்த்தார்.

5. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.

- 1852 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியைப் புனேயில் திறந்தார்.
- சத்திய சோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம்) எனும் அமைப்பை நிறுவினார்.
- பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார்.
- விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
- ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

- சமூகத்தில் நிலவி வந்த சதி எனும் உடன்கட்டை ஏறுதல்.
- குழந்தைத் திருமணம் மற்றும் பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கவழக்கங்கள்.
- விதவைப் பெண்கள் மறுமணம் செய்ய உரிமை மறுக்கப்பட்டது.
- பெண் அடிமைத்தனம், ஆணை விட பெண் கீழானவள் எனும் நடைமுறைகள் வரதட்சணைகள்.
- பெண் கல்வி மறுப்பு நடைமுறைகள்.
- எல்லையற்ற உபநிடதங்கள் போதனைகள்.
- பிராமணர் மேலாதிக்கம் செய்யும் சடங்கு முறைகள்.
- மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்களின் அதிக தாக்கங்கள்.

- பயங்கரமான சாதிக் கொடுமைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்கள்.
- மேலைநாட்டு பகுத்தறிவுச் சிந்தனைகளை ஏற்க மறுத்தது.

2. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.

இராமகிருஷ்ண பரமஹம்சர்:

- கல்கத்தாவுக்கு அருகேயிருந்த தட்சிணேசுவரம் என்னும் ஊரைச் சார்ந்த எளிய அர்ச்சகர்.
- புனிதத் தாயான கடவுள் காளியின் தீவிர பக்தர்.
- அவர் அக்கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார்.
- அவருடைய கருத்தின்படி அனைத்து மதங்களும் உலகளாவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவை வீடுபேற்றுக்கு இட்டுச் செல்லும்.
- மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.

சுவாமி விவேகானந்தர்:

- இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர். மனிதகுலத்திற்குத் தொண்டு செய்தல் எனும் கோட்பாட்டைப் பரிந்துரைத்தார்.
- இறைவனை அடைய வேண்டுமென்றால், எளிய மனிதனை நினை என்று கூறியவர்.
- பண்பாடு, தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.
- இந்து சமயத்திற்கு புத்துயிர் அளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தவர்.
- 1893-அமெரிகக் சிகாகோ உலக சமய மாநாட்டில் இந்து மதக்கருத்துக்களை உலகறியச் செய்தவர்.
- இந்து சமய பக்தி மார்க்கம் கொண்ட இவரது சொற்பொழிவுகள் மிகச்சிறப்பு வாய்ந்தது.
- சுவாமி விவேகானந்தரின் செயலூக்கம் மிக்க சித்தாந்தம் மேலைக்கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றத்தை உண்டு பண்ணியது.

3. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

19 ஆம் நூற்றாண்டில் பெண்களின் மேம்பாட்டிற்கு முன்னெடுத்துச் சென்றவர்களுள் மிக முக்கியமாணவர்கள் பின்வருமாறு:

1. இராஜா ராம்மோகன் ராய்
2. ஈஸ்வர சந்திர வித்யாசாகர்
3. சுவாமி தயானந்த சரஸ்வதி
4. சுவாமி விவேகானந்தர்
5. அன்னிபெசன்ட் அம்மையார்
6. பண்டித ரமாபாய்

- **சுவாமி விவேகானந்தர்** பெண்களை பூமிக்கு இணையாகக் கூறி பூமித்தாய், பாரதத்தாய் என்று வடிவம் கொடுத்தவர்.
- **இராஜா ராம்மோகன் ராய்** சமூகத்தில் நிலவிய உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கவழக்கங்களுக்கு எதிராக சட்டங்கள் இயற்றும் அரசை வலியுறுத்தி வெற்றி கொண்டவர். இவர் பெண்ணடிமைத்தனத்தையும், ஆணைவிட பெண் கீழானவள் எனும் நடைமுறையை எதிர்த்தவர்.
- ஈஸ்வர வித்யாசாகர் பெண் கல்வியை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றியவர்.
- **ஆத்மராம் பாண்டுரங்** என்வர் சாதி மறுப்பு திருமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.
- **சுவாமி தயானந்த சரஸ்வதி** விதவை மறுமணம் பெண்கள் வெளிநாடு சென்றால் தீட்டு என்று சொல்லப்படுவதை மறுத்தவர்.
- **அன்னிபெசன்ட் அம்மையார்** பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடுபட்டவர்.
- **பண்டித ரமாபாய்** பெண் விடுதலைக்கு பாடுபட்டவர்.
- **சர் சையது அகமதுகான்** இசுலாமிய பெண்கள் கல்வி கற்கவும் அவர்களின் மேம்பாட்டிற்கும் பாடுபட்டவர்.
- **ஜோதிபாபூலே** மனைவி சாவித்திரி பாய் என்பவரும் குழந்தைகள் விடுதி, விதவைப் பெண்கள் காப்பகத்தையும் நிறுவியவர்.

VII. செயல்பாடுகள்

1. **பத்தொன்பதாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் அவர்களின் சீர்திருத்தங்கள் குறித்து மாணவர்கள் நடித்துக் காண்பித்தல்.**
   வகுப்பறை மாணவர்கள் செயல்பாடுகள்.
2. **19 ஆம் நூற்றாண்டில் நிலவிய சமூகத் தீமைகள் இன்று நிலவும் சமூகத் தீமைகள் குறித்து பட்டிமன்றம் நடத்துதல்.**
   வகுப்பறை மாணவர்கள் செயல்பாடுகள்.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **மேலை நாட்டு கருத்துகளால் கவரப்பட்டு சீர்திருத்தப் பணிகளை முன்னெடுத்தவர் _____.**

அ) இராஜா ராம்மோகன்ராய் ஆ) காந்தியடிகள்
இ) குருநானக் ஈ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

விடை: அ) இராஜா ராம்மோகன் ராய்

2. **உடன்கட்டை ஏறும் பழக்கம் ஒழிக்கப்பட்ட ஆண்டு _____.**

அ) 1825 ஆ) 1829
இ) 1828 ஈ) 1830 **விடை: ஆ) 1829**

3. **உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்க உதவிய இந்தியர் _____.**

அ) தயானந்த சரஸ்வதி ஆ) விவேகானந்தர்
இ) இராஜா ராம்மோகன் ராய் ஈ) இராமகிருஷ்ணர்

விடை: இ) இராஜா ராம்மோகன் ராய்

4. **பிரம்ம சமாஜம் நிறுவப்பட்ட ஆண்டு _____.**

அ) 1810 ஆ) 1829
இ) 1818 ஈ) 1828 **விடை: ஈ) 1828**

5. **இரவீந்திரநாத் தாகூரின் தந்தை _____.**

அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) திபேந்திரநாத் தாகூர்
இ) வித்யாரண்யர் ஈ) முல்சங்கர் **விடை: அ) தேவேந்திரநாத் தாகூர்**

6. **பிரம்ம சமாஜத்திலிருந்து விலகிச் சென்றவர் _____.**

அ) தயானந்த சரஸ்வதி ஆ) கேசவ் சந்திர சென்
இ) தேவேந்தர நாத் தாகூர் ஈ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

விடை: ஆ) கேசவ் சந்திர சென்

7. **"ஆதி பிரம்ம சமாஜம்" என்ற அமைப்பை நடத்தியவர் _____.**

அ) ராஜாராம் மோகன்ராய் ஆ) கேசவ் சந்திர சென்
இ) தேவேந்தர நாத் தாகூர் ஈ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

விடை: இ) தேவேந்தர நாத் தாகூர்

8. **சுத்தி இயக்கத்தை நிறுவியவர் _____.**

அ) விவேகானந்தர் ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதி
இ) ஆரிய சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்

விடை: ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதி

9. **DAV ஆங்கிலப் பள்ளிகளை தொடங்கிய அமைப்பு _____.**

அ) பிரம்ம சமாஜம் ஆ) ராமகிருஷ்ண மடம்
இ) ஆரிய சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம் **விடை: இ) ஆரிய சமாஜம்**

10. **ராமகிருஷ்ணரையும் அவரின் போதனைகளையும் இந்தியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் பரப்பும் பெரும்பணியை மேற்கொண்டவர் _____.**

அ) ஜோதிபா பூலே ஆ) தயானந்த சரஸ்வதி
இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி விவேகானந்தர்

விடை: ஈ) சுவாமி விவேகானந்தர்

11. பிரம்மஞானசபை அமெரிக்காவில் நிறுவப்பட்ட ஆண்டு _____.
அ) 1875 ஆ) 1865
இ) 1868 ஈ) 1878 **விடை: அ) 1875**

12. அமெரிக்காவில் நிறுவப்பட்ட அமைப்பு _____.
அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம ஞானசபை
இ) பிரம்ம சமாஜம் ஈ) ராமகிருஷ்ண மடம் **விடை: ஆ) பிரம்ம ஞான சபை**

13. பிரம்மஞானசபை இந்தியாவில் நிறுவப்பட்ட இடம் _____.
அ) கொல்கத்தா ஆ) மும்பை
இ) சென்னை (அடையார்) ஈ) டெல்லி **விடை: இ) சென்னை (அடையார்)**

14. ஆரிய சமாஜம் இந்தியாவில் நிறுவப்பட்ட ஆண்டு _____.
அ) 1873 ஆ) 1865
இ) 1855 ஈ) 1875 **விடை: ஈ) 1875**

15. ஜீவன் என்பதே சிவன் என கூறியவர் _____.
அ) ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆ) விவேகானந்தர்
இ) தயானந்த சரஸ்வதி ஈ) ஜோதி பா பூலே
விடை: அ) ராமகிருஷ்ண பரமஹம்சர்

15. சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாடு நடைபெற்ற ஆண்டு _____.
அ) 1875 ஆ) 1893
இ) 1883 ஈ) 1873 **விடை: ஆ) 1893**

16. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் _____.
அ) மூல்சங்கர் ஆ) வித்யாரண்யர்
இ) நரேந்திரநாத்தத்தா ஈ) இவற்றில் எதுவும் இல்லை
விடை: இ) நரேந்திரநாத்தத்தா

17. ராமகிருஷ்ண பரமஹம்சருடைய முதன்மை சீடர் _____.
அ) ஜோதிபா பூலே ஆ) ராஜாராம் மோகன்ராய்
இ) தயானந்த சரஸ்வதி ஈ) சுவாமி விவேகானந்தர்
விடை: ஈ) சுவாமி விவேகானந்தர்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய இயக்கங்கள் _____, _____.
விடை: சீர்திருத்த இயக்கங்கள், சமய இயக்கங்கள்.

2. பிரம்ம சமாஜத்தை நிறுவியவர் _____. **விடை: இராஜா ராம்மோகன் ராய்**

3. உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்த கவர்னர் _____.
விடை: வில்லியம் பெண்டிங்

4. இராஜா ராம்மோகன் ராய் மறைவிற்கு பிறகு பிரம்ம சமாஜத்தின் பணிகளைத் தொடர்ந்தவர் _____. விடை: தேவேந்திரநாத் தாகூர்

5. இந்து திருமணச்சட்டம் (விதவை மறுமணச் சட்டம்) இயற்றப்பட முக்கியக் காரணமானவர் _____. விடை: ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

6. பிராத்தனை சமாஜம் தொடங்கப்பட்ட இடம் _____. விடை: பம்பாய்

7. பிராத்தனை சமாஜத்தை நிறுவியவர் _____. விடை: ஆத்மராம பாண்டுரங்

8. தக்காண கல்விக்கழகத்தை உருவாக்கியவர் _____. விடை: M.G. ரானடே

9. ஆரிய சமாஜத்தை நிறுவியவர் _____. விடை: சுவாமி தயானந்த சரஸ்வதி

10. சுவாமி தயானந்த சரஸ்வதியின் புத்தகம் _____. விடை: சத்யார்த்த பிரகாஷ்

11. சுவாமி தயானந்த சரஸ்வதியின் முழக்கம் _____.
விடை: வேதங்களுக்கு திரும்புவோம்

12. இஸ்லாம், கிறித்தவ மதத்திற்கு மாறிய இந்துக்கள் மீண்டும் இந்துக்களாக மாற்ற தொடங்கப்பட்ட இயக்கம் _____. விடை: சுத்தி இயக்கம்

13. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் _____. விடை: நரேந்திரநாத்தத்தா

14. ராமகிருஷ்ண பரமஹம்சருடைய முதன்மை சீடர் _____.
விடை: சுவாமி விவேகானந்தர்

15. மனித குலத்திற்குத் தொண்டு செய்தல் எனும் கோட்பாட்டைப் பரிந்துரைத்தவர் _____. விடை: சுவாமி விவேகானந்தர்

16. பிரம்ம ஞானசபையை நிறுவியவர்கள் _____ மற்றும் _____.
விடை: மேடம் H.P. பிளாவடஸ்கி, கர்னல் H.S. ஆல்காட்

17. ராமகிருஷ்ணா மிஷனை நிறுவியவர் _____. விடை: சுவாமி விவேகானந்தர்

18. கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பைப் பின்பற்றி விவேகானந்தர் _____ நிறுவினார். விடை: ராமகிருஷ்ணமிஷனை

19. தட்சிணேசுவரம் என்னும் ஊரைச் சார்ந்த எளிய அர்ச்சகர் _____.
விடை: ராமகிருஷ்ண பரமஹம்சர்

20. மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றவர் _____. விடை: ராமகிருஷ்ண பரமஹம்சர்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) பிரம்ம சமாஜமும், பிராத்தன சமாஜமும் ஒரே விதமான கருத்துகளைக் கொண்டிருந்தது.
ii) பிராத்தன சமாஜம் ஈஸ்வர சந்திர வித்யாசாகரால் நிறுவப்பட்டது.
iii) M.G, ரானடே விதவை மறுமணச் சங்கத்தை நிறுவினார்.
iv) ஜோதிபா பூலே உயர் ஜாதி மக்களின் மேம்பாட்டிற்கு பாடுபட்டார்.

அ) i) சரி ஆ) i), ii) சரி
இ) iii) சரி ஈ) iii), iv) சரி **விடை: ஆ) i), ii) சரி**

2. i) சுவாமி விவேகானந்தரால் இராமகிருஷ்ண மடம் தொடங்கப்பட்டது.
ii) இவர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் முக்கிய சீடர் ஆவார்.
iii) அவரது கருத்துகள் இந்தியர்களிடையே தன்னம்பிக்கையை வளர்த்தது.
iv) உலக சமய மாநாடு இலண்டனில் நடைபெற்றது.

அ) i), ii), iii) சரி ஆ) i), iv) சரி
இ) iii) மட்டும் சரி ஈ) iii), iv) சரி **விடை: அ) i), ii), iii) சரி**

5. கூற்று : சர் சையது அகமது கான் அலிகார் இயக்கத்தைத் தொடங்கினார்.
காரணம் : அவர் அலிகார் முகம்மதியின் ஆங்கிலோ - ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்.

அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.
இ) காரணம், கூற்று இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, அது கூற்றுடன் பொருந்தவில்லை.

விடை: அ) கூற்றும் காரணமும் சரி

IV. பொருத்துக.

I

1.	பிரம்ம சமாஜம்	-	அ) ஸ்ரீ நாராயண குரு
2.	பிரார்த்தனை சமாஜம்	-	ஆ) அன்னிபெசன்ட்
3.	ஆரிய சமாஜம்	-	இ) இராஜா ராம்மோகன் ராய்
4.	சத்ய சோதக் சமாஜம்	-	ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்
5.	பிரம்ம ஞான சபை	-	உ) சுவாமி தயானந்த சரஸ்வதி
		-	ஊ) Dr. ஆத்மராம் பாண்டுரங்
		-	எ) ஜோதிபா பூலே

விடை: 1.இ 2.ஊ 3.உ 4.ஈ 5-ஊ

II

1.	பிரம்ம சமாஜம்	-	அ) 1867
2.	பிரார்த்தனை சமாஜம்	-	ஆ) 1828
3.	ஆரிய சமாஜம்	-	இ) 1873
4.	சத்ய சோதக் சமாஜம்	-	ஈ) 1903
5.	இராமகிருஷ்ண மிஷன்	-	உ) 1875
		-	ஊ) 1897

விடை: 1.ஆ 2.அ 3.உ 4.இ 5.ஊ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பார்சி சீர்திருத்த தலைவர்கள் யாவர்?

பர்துனஜி நௌரோஜி, பெர்ரம்ஜி மல்பாரி, பெரோசா மேத்தா, தீன் சாவாச்சா போன்றோர் பார்சி சீர்திருத்த இயக்கத்தின் தலைவர்கள் ஆவார்கள்.

2. சிங்சபாலின் முக்கிய குறிக்கோள்களைக் கூறுக.

- சங்சபா அமிர்தசரசில் நிறுவப்பட்டது.
- சீக்கிய மதத்தின் புனிதத்தை மீட்டெடுப்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும்.
- சிங்சபாவே அகாலி இயக்கத்தின் முன்னோடி ஆகும்.

3. சுவாமி தயானந்த சரஸ்வதியின் சீர்திருத்த பணிகள் யாவை?

சுவாமி தயானந்த சரஸ்வதி குழந்தைத் திருமணம், விதவை மறுமணத்திற்கு மறுப்பு போன்ற பழக்கங்கள் மறை நூல்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவித்து பெண்கள் முன்னேற்றத்திற்காக வாதிட்டார்.

4. இராமகிருஷ்ணா மிஷன் குறிப்பு வரைக.

- இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரான விவேகானந்தர் இராமகிருஷ்ணா மிஷன்-ஐ நிறுவினார்.
- இராமகிருஷ்ண மிஷன் சமயச் செயல்பாடுகள், கல்வியறிவு வழங்குதல், மருத்துவ உதவி, இயற்கைச் சீற்றங்களின் போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வது போன்ற சமூகப் பணிகளிலும் செயலாக்கத்துடன் ஈடுபட்டது.

5. வைகுண்டசாமி - குறிப்பு வரைக.

- தென்னிந்தியாவின் தொடக்கக் காலச் சமூகத்தின் போராளிகளில் ஒருவரான வைகுண்ட சுவாமிகள், கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள சாமித்தோப்பு எனப்படும் சாஸ்தா கோவில் எனும் கிராமத்தில் பிறந்தார்.
- இவருடைய இயற்பெயர் முடிசூடும் பெருமாள் ஆகும்.
- காலம் 1809-1851 வரை ஆகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. நாராயணகுரு வாழ்க்கை முறை மற்றும் போதனைகளை விவரி.

- 1854 ஆம் ஆண்டில் கேரளாவில் ஏழைப் பெற்றோர்க்கு மகனான பிறந்த நாராயணகுரு (1854-1928) மலையாளம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் அறிஞராகவும், கவிஞராகவும் பரிணமித்தார்.
- அந்நாட்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் கோவில்களுக்குள் செல்ல முடியாது. மேல்சாதி மக்கள் தெருக்களுக்கும் நுழைய முடியாது. பொதுநீர்நிலைகள் மற்றும் கிணறுகளில் நீர் எடுக்கக் கூடாது.
- ஒடுக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் மேலாடை அணிய அனுமதியில்லை.
- பயங்கரமான சாதிக்கொடுமைகளையும் ஒடுக்கப்பட்ட மக்கள்படும் துயரங்களை கண்டு, அவர்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.
- அவர்களின் மேம்பாட்டிற்கு பணியாற்றுவதற்காக ஸ்ரீநாராயண தர்ம பரிபாலயோகம் எனும் அமைப்பை உருவாக்கினர்.
- அருவிபுரம் எனும் ஊரில் ஒரு பெரிய கோவிலைக் கட்டிய அவர் அதை அனைவருக்கும் அர்ப்பணித்தார்.

சமூக அறிவியல்

- அவருடைய இயக்கம் கேரள சமூகத்தில் குறிப்பாக ஈழவர்களுக்கிடையில் பெருமாற்றங்கள் நிகழ உந்து சக்தியாகத் திகழ்கிறது.

2. தியோபந்த் இயக்கத்தின் கல்வி, சமய சீர்த்திருத்தங்களை விவரி.

- தியோபந்த் இயக்கம் ஒரு மீட்பியக்கமாகும். இவ்வியக்கம் பழமைவாத முஸ்லீம் உலேமாக்களால், இரு முக்கியக் குறிக்கோள்களுடன் தொடங்கப்பெற்றது.
- அக்குறிக்கோள்கள், குரான் மற்றும் ஷரியத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புரை செய்தல், இஸ்லாமல்லாத அயன்கூறுகளுக்கு எதிராகப் புனிதப்போர் செய்யும் உணர்வுகளை ஊக்குவித்தல் என்பனவாகும்.
- இவ்வுலேமாக்கள் முகமது குவாசிம் நானோதவி ரஷித் அகமது கங்கோகி ஆகியோரின் தலைமையில் 1866-ல் உத்திரப்பிரதேசத்தின் சகரன்பூரில் ஒரு பள்ளியை நிறுவினார்.
- இப்பள்ளியின் பாடத்திட்டம் ஆங்கிலக் கல்வியையும் மேலைப்பண்பாட்டையும் புறக்கணித்தது. உண்மையான இஸ்லாமிய மதம் இப்பள்ளியில் கற்றுத்தரப்பட்டது.
- இதன் நோக்கம் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கத்தையும், மதத்தையும் மீட்டெடுப்பதாய் அமைந்தது.
- சர் சையத் அகமத் கானுடைய நடவடிக்கைகளை எதிர்ப்பது என்ற அவர்களின் உறுதிப்பாடே தியோபந்த் உலேமாக்களை இயக்கியது எனச்சொல்லப்பட்டது.
- மௌலானா முகமத்-உல்-ஹசன் திபோபந்தின் புதிய தலைவரானார்.
- அவரின் தலைமையில் இயங்கிய ஜமைத்-உல்-உலேமா (இறைபியலாளர்களின் அவை) ஹசனுடைய கருத்துகளான, இந்திய ஒற்றுமை எனும் ஒட்டுமொத்தச் சூழலில் முஸ்லீம்களின் அரசியல், சமய உரிமைகளின் பாதுகாப்பு என்பது குறித்த உறுதியான வடிவத்தை முன்வைத்தார்.

வரலாறு

அலகு 6

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?**
   அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
   இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   விடை: ஆ) பூலித்தேவர்

2. **சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?**
   அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன்
   இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை **விடை: இ) பூலித்தேவர்**

3. **சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?**
   அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம்
   இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலக்குறிச்சி **விடை: ஆ) நாகலாபுரம்**

4. **திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?**
   அ) மருது சகோதரர்கள்
   ஆ) பூலித்தேவர்
   இ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   ஈ) கோபால நாயக்கர் **விடை: அ) மருது சகோதரர்கள்**

5. **வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?**
   அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10
   இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10 **விடை: இ) 1806 ஜூலை 10**

6. **வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமைத் தளபதி யார்?**
   அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்க்
   இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ **விடை: இ) சர் ஜான் கிரடாக்**

சமூக அறிவியல்

7. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?

அ) கல்கத்தா ஆ) மும்பை
இ) டில்லி ஈ) மைசூர் **விடை: அ) கல்கத்தா**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பாளையக்காரர் முறை தமிழகத்தில் _____ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
விடை: விஸ்வநாத் நாயக்கர்

2. வேலுநாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக _____ பாதுகாப்பில் இருந்தனர்.
விடை: கோபால நாயக்கர்

3. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலைத் தெரிவிக்க பானெர்மென் _____ என்பவரை அனுப்பி வைத்தார்.
விடை: இராமலிங்கர்

4. கட்டபொம்மன் _____ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
விடை: கயத்தாறு

5. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் _____ என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. **விடை: இரண்டாவது பாளையக்காரர் போர்**

6. _____ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார். **விடை: பதேக் ஹைதர்**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) பாளையக்காரர் முறை காகத்தீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
ii) கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764இல் மீண்டும் கைப்பற்றினார்.
iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப் கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764 இல் தூக்கிலிடப்பட்டார்.
iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.

அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி
ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி
ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி **விடை: ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி**

2. i) கர்னல் கேம்ப்பெல் தலைமையின் கீழ் ஆங்கிலேயப் படைகள் மாபூஸ்கானின் படைகளோடு இணைந்து சென்றன.
ii) காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டப் பின் வேலுநாச்சியார் மீண்டும் அரியணையைப் பெறுவதற்கு மருது சகோதரர்கள் துணைபுரிந்தனர்.
iii) திண்டுக்கல் கூட்டமைப்புக்கு கோபால நாயக்கர் தலைமையேற்று வழி நடத்தினார்.

iv) காரன்வாலிஸ் மே 1799இல் கம்பெனிப் படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தவிட்டார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி

ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவை சரி

இ) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

ஈ) (i) மற்றும் (iv) ஆகியவை சரி

விடை: ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவை சரி

3. கூற்று : பூலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்.

காரணம் : மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.

இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. காரணம், கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.

ஈ) கூற்று தவறானது, காரணம் சரியானது.

விடை: அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

IV. பொருத்துக.

1.	தீர்த்தகிரி	-	அ) வேலூர் புரட்சி
2.	கோபால நாயக்கர்	-	ஆ) இராமலிங்கனார்
3.	பானெர்மென்	-	இ) திண்டுக்கல்
4.	சுபேதார் ஷேக் ஆதம்	-	ஈ) வேலூர் கோட்டை
5.	கர்னல் பேன்கோர்ட்	-	உ) ஓடாநிலை

விடை: 1.உ 2.இ 3.ஆ 4.அ 5.ஈ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

- வரி வசூலிப்பது.
- நிலப்பகுதிகளை நிர்வகிப்பது.
- வழக்குகளை விசாரிப்பது.
- சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது.
- இவர்களது காவல் காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது.

2. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.

- கிழக்கில் - சாத்தூர், நாகலாபுரம், எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி.
- மேற்கில் - ஊத்துமலை, தலைவன் கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?

- பூலித்தேவரை தாக்கும் பொருட்டு நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பினார்.
- மாபூஸ்கான் படையில் கம்பெனியின் சிப்பாய்கள் மற்றும் கர்நாடகப் பகுதி குதிரைப்படை, காலாட்படை, களக்காடு பகுதியில் நிலை நிறுத்தப்பட்டது.
- இதற்கு முன்பாகவே திருவிதாங்கூரின் 2000 படை வீரர்கள் பூலித்தேவருடன் இணைந்தனர்.
- களக்காட்டு போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டது.

4. கம்பெனியாருக்கும், கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?

- அனைத்து பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி ஆட்சியர்களை நியமித்தது.
- ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தி படைகள் மூலம் வரி வசூல் செய்தனர்.
- இதுவே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்கும் பெரும் பகை ஏற்பட காரணமாக விளங்கியது.

5. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.

- மருது சகோதரர்கள் ஜூன் 1801 இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர்.
- இதுவே 'திருச்சிராப்பள்ளி பேரறிக்கை' என்றழைக்கப்படுகிறது.
- பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801 ஆம் ஆண்டின் பேரறிக்கை ஆகும்.
- ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

- பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது 30 ஆம் வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார்.
- கம்பெனி நிர்வாகத்திற்கும், கட்டபொம்மனுக்கும் மோதல் போக்கு வளர்ந்து கொண்டே வந்தது.
- பாளையப் பகுதியில் வரி வசூல் செய்த கம்பெனி நிர்வாகம் படைபலத்துடன் வசூல் செய்தது கட்டபொம்மனுக்கு பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணியது.
- கட்டபொம்மனிடமிருந்து நிலவரி நிலுவைத் தொகை 1798 ஆம் ஆண்டு வரை 3310 பகோடாக்கள் இருந்தது.

- இதனை வசூல் செய்ய கம்பெனியால் நியமிக்கப்பட்ட ஜாக்சன் என்ற கர்வம் கொண்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- இவர் இராமநாதபுரத்தில் கட்டபொம்மனை வரவழைத்து, காக்க வைத்து அவமானப் படுத்தினார்.
- கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்ரமணியத்துடன் தப்பிச் செல்ல முயன்றபோது நடந்த மோதலில் சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார்.
- தனது பாஞ்சாலங்குறிச்சி வந்த கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை அவமானப்படுத்தியதைப் பற்றி கம்பெனி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தார்.
- சிவகங்கை மருது பாண்டியர்கள் ஏற்படுத்தியிருந்த தென்னிந்திய கூட்டமைப்பில் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என முடிவெடுத்தார்.
- 1799 மே மாதம் வெல்லெஸ்லி பிரபு கட்டளையின்படி கம்பெனி படையும், திருவிதாங்கூர் படையும் இணைந்து கட்டபொம்மனை சரணடையும்படி கோரின.
- கட்டபொம்மன் சரணடைய மறுத்து புதுக்கோட்டைக்கு தப்பியோடினார். புதுக்கோட்டைஅரசர்களால்கட்டபொம்மன்இறுதியில்பிடிபட்டுதிருநெல்வேலிக்கு அருகே கயத்தாறில் உள்ள புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டார்.

2. சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.

- சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு மருது சகோதரர்கள் ஆட்சி செய்து வந்தனர்.
- 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரை எதிர்க்க முற்பட்டனர்.
- சிவகங்கை சீமைக்கு முத்து வடுகநாதர் இறப்பிற்குப் பின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமை மீட்டெடுக்க அரும்பாடுபட்டனர்.
- கம்பெனி ஆட்சி எதிர்ப்பு மற்றும் கட்டபொம்மனுக்கு ஆதரவு என இவர்களது போக்கு சிவகங்கை வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது.
- 1800இல் மருது சகோதரர்களின் கலகம் திண்டுக்கல் கோபால நாயக்கர், மலபார் கேரளவர்மா, மைசூர் கிருஷ்ணப்பா ஆகியோர் அடங்கிய கூட்டமைப்பால் வழி நடத்தப்பட்டது.
- கட்டபொம்மனின் சகோதரர்கள் ஊமைத்துரை, செவத்தையா ஆகிய இருவருக்கும் மருது சகோதரர்கள் அடைக்கலம் கொடுத்து உதவியது கம்பெனி ஆட்சிக்கு பிடிக்கவில்லை.
- இவர்கள் இருவரையும் ஒப்படைக்கும்படி கம்பெனி நிர்வாகம் வற்புறுத்தவே அவர்கள் மறுத்து ஜூன் 1801 இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய திருச்சிராப்பள்ளி பேரரறிக்கை வெளியிட்டனர்.
- தமிழக பாளையக்காரர்கள் பலரும் ஒன்று சேர்ந்து மருது சகோதரர்களுடன் இணைந்து 20,0000 ஆட்கள் கொண்ட படைப்பிரிவை உருவாக்கினர்.
- ஆனால் கம்பெனி ஆட்சி தங்களுக்கு துணையாக புதுக்கோட்டை, தஞ்சாவூர், எட்டையபுரம் பாளையக்காரர்களை இணைத்து பாளையக்காரர்கள் படையில் பிரிவினையை உண்டாக்கியது.

- 1801 மே மாதம் மருது சகோதரர்கள் மீது கம்பெனி நிர்வாகம் தாக்குதல் தொடர்ந்தது. மருது சகோதரர்கள் படைகள் பிரான்மலையிலும் காளையார்கோவிலிலும் தஞ்சம் அடைந்தது.
- கம்பெனி படையினரிடம் அவர்கள் பிடிபட்டவுடன் சிவகங்கை பிரிட்டிஷ் கம்பெனியில் இணைக்கப்பட்டது.
- 1801 அக்டோபர் 24 இல் திருப்பத்தூரில் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டவுடன் சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சி முடிவடைந்தது.

3. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

- வேலூர் புரட்சிக்கு முன்பாகவே 1792 இல் திப்புவுடன் ஏற்பட்ட மோதலின் பின்பு சேலம், திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் கம்பெனி ஆட்சியுடன் இணைக்கப்பட்டது.
- மனமுடைந்த சிற்றரசர்கள், நிலச் சுவான்தார்கள் போன்றோர் சிந்தித்து நிதானமாகச் செயல்பட்டதே 1806ஆம் ஆண்டு வேலூர் புரட்சியாகும்.
- பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்பட்டது. பதவி உயர்வும் குறைவாக இருந்தது.
- சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்தனர்.
- அவர்களது வேளாண் கொள்கை சிக்கலாக இருந்தது.
- நிலக்குத்தகை முறையின் நிலையற்ற தன்மை, 1805ஆம் ஆண்டு கடும் பஞ்சம், நெருக்கடி போன்றவைகள், பிரிட்டிஷ் இராணுவத்தின் புதிய விதிமுறை அறிவுரைகள்.
- எ.கா: மத அடையாளங்கள்
- புதிய ரக துப்பாக்கிகளில் தடவப்பட்ட விலங்குகள் கொழுப்பு மற்றும் தோல் உறைகள்.
- இவ்வாறு எதிர்ப்பு தெரிவித்த அனைத்தையுமே கம்பெனி நிர்வாகம் கவனத்தில் கொள்ளாமல் இருந்தது.
- 1806 ஜூலை 10 அதிகாலையில் நடந்த புரட்சியில் ஆங்கில அதிகாரிகள் கொல்லப்பட்டது. இதற்கு பதிலடி கொடுத்த கர்னல் கில்லஸ்பியின் கொடுங்கோன்மை.
- இவ்வாறு பல கூறுகள் 1806 ஆம் ஆண்டு வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றன.

VII. செயல்பாடுகள்

1. ஆசிரியர் மாணாக்கர்களை ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்ட ஆரம்பகால தேசபக்த தலைவர்களின் படங்களை சேகரிக்கச் சொல்லலாம். அவர்களது கற்பனைத்திறனைக் கொண்டு அத்தலைவர்கள் உயிர்நீத்த போர்க்களத்தைப் படமாக வரையச் சொல்லலாம்.

மாணவர் செயல்பாடு.

2. மாணவர்கள் ஜாக்சனுக்கும், கட்டபொம்மனுக்குமிடையே நடந்த உரையாடலை நாடக வடிவில் ஆசிரியரின் வழிகாட்டுதலோடு அரங்கேற்றலாம்.

வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. கம்பெனியாரின் நாடு பிடிக்கும் கொள்கைக்கு எதிர்வினையாக முதலில் யாரிடமிருந்து எதிர்ப்பு வந்தது.

அ) தீரன் சின்னமலை ஆ) மருது சகோதரர்கள்
இ) பூலித்தேவர் ஈ) பாளையக்காரர்கள் **விடை: இ) பூலித்தேவர்**

2. பாளையக்காரர்களை ஆங்கிலேயர்கள் அழைத்த விதம்

அ) நிலச்சுவான்தார்கள் ஆ) நாயக்கர்கள்
இ) திவான்கள் ஈ) போலிகார் **விடை: ஈ) போலிகார்**

3. மதுரை நாயக்கராக கி.பி. 1529 இல் பதவியேற்றவர் _____.

அ) அச்சுத நாயக்கர் ஆ) விஸ்வநாத நாயக்கர்
இ) ஒண்டிவீரன் ஈ) ராணி மங்கம்மாள் **விடை: ஆ) விஸ்வநாத நாயக்கர்**

4. பாளையக்காரர்கள் _____ முறையை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவர்கள்.

அ) விஸ்வநாத நாயக்கர் - அரியநாதர்
ஆ) கட்டபொம்மன்
இ) பிரதாப் ருத்ரன்
ஈ) காகதீய அரசர் **விடை: அ) விஸ்வநாத நாயக்கர் - அரியநாதர்**

5. நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட பாளையங்களுள் முக்கியத்துவம் வாய்ந்தவைகள்

அ) மேற்கு & வடக்கு ஆ) கிழக்கு & மேற்கு
இ) வடக்கு & தெற்கு ஈ) கிழக்கு & தெற்கு **விடை: ஆ) கிழக்கு & மேற்கு**

6. _____ இல் நடைபெற்ற போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

அ) சிவகங்கை ஆ) பாஞ்சாலக்குறிச்சி
இ) தூத்துக்குடி ஈ) களக்காடு **விடை: ஈ) களக்காடு**

7. மே 1761 இல் பூலித்தேவரின் மூன்று முக்கிய கோட்டைகள் (நெற்கட்டும் சேவல், வாசுதேவநல்லூர், பனையூர்) _____ கட்டுப்பாட்டில் வந்தன.

அ) நவாப்கான் ஆ) யூசுப்கான்
இ) கான்சாகிப் ஈ) மாபூஸ்கான் **விடை: ஆ) யூசுப்கான்**

8. பூலித்தேவர் இறுதியாக 1767 இல் _____ என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.

அ) கர்னல் ஜாக்சன் ஆ) கேப்டன் கேம்ப்பெல்
இ) கான் சாகிப் ஈ) வில்லியம் பிரவுன் **விடை: ஆ) கேப்டன் கேம்ப்பெல்**

9. இராமநாதபுரத்தின் அரசர் _____ 1730 இல் அரச குடும்பத்தின் ஒரே பெண் வாரிசாக வேலுநாச்சியார் பிறந்தார்.
அ) இராமலிங்க சேதுபதி ஆ) விஜயரகுநாத சேதுபதி
இ) செல்லமுத்து சேதுபதி ஈ) உடையார் சேதுபதி
விடை: இ) செல்லமுத்து சேதுபதி

10. மறைந்து வாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் _____ உடன் கூட்டணியை வைத்துக் கொண்டார்.
அ) ஹைதர் அலி ஆ) ஆற்காடு நவாப்
இ) திப்பு சுல்தான் ஈ) மகஹப்கான் **விடை: அ) ஹைதர் அலி**

11. குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்துக் கொண்டு பிரிட்டிஷாரின் _____ அழித்தார்.
அ) அரண்மனையை ஆ) ஆயுதக் கிடங்கை
இ) கோட்டையை ஈ) படைப்பிரிவை **விடை: ஆ) ஆயுதக் கிடங்கை**

12. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் பெரும்பகை ஏற்படக் காரணம்
அ) வரி வசூலிப்பதற்கு படைகளை பயன்படுத்தியது
ஆ) அதிக வரி விதிப்பு
இ) வரி விதிப்பு தங்கம் மூலம் பெறுதல்
ஈ) மூன்றில் இரண்டு பங்கு வரி
விடை: அ) வரி வசூலிப்பதற்கு படைகளை பயன்படுத்தியது

13. கட்டபொம்மன் கோட்டை ரகசியங்களை கம்பெனிக்காக சேகரித்தவர்
அ) இராமலிங்கர் ஆ) சுப்பிரமணியர்
இ) இராமசாமி ஈ) பானர் மென் **விடை: அ) இராமலிங்கர்**

14. பானெர்மென் தாக்குதலில் சுப்பிரமணியனார் கைது செய்யபட்ட இடம்
அ) களக்காடு ஆ) கள்ளர்பட்டி
இ) திருநெல்வேலி ஈ) பாஞ்சாலங்குறிச்சி **விடை: ஆ) கள்ளர்பட்டி**

15. திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள _____ முன்பாக இருந்த புளியமரத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
அ) கயத்தாறு பழைய கோட்டை
ஆ) களக்காடு கோட்டை
இ) பாஞ்சாலங்குறிச்சி கோட்டை
இ) கள்ளர்பட்டி கோட்டை **விடை: அ) கயத்தாறு பழைய கோட்டை**

16. பெரிய மருதுவும் சின்ன மருதுவும் சிவகங்கை _____ திறமையான படைத்தளபதிகள்.
அ) இராமலிங்க சேதுபதியின் ஆ) வேலுநாச்சியாரின்
இ) ரகுநாத சேதுபதியின் ஈ) முத்து வடுகநாதரின்
விடை: ஈ) முத்து வடுகநாதரின்

17. மருது சகோதரர்களின் கலகம் பரவாமல் தடுக்க கம்பெனியார் _____, மீது போர் தொடுத்தனர்.
அ) மைசூர் - மலபார்
ஆ) சிவகங்கை - காளையார்கோவில்
இ) இராமநாதபுரம் - இராமேஸ்வரம்
ஈ) திண்டுக்கல் - மதுரை
விடை: அ) மைசூர் - மலபார்

18. ஆங்கிலேயர்களுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்ட 73 பேர் _____ நாடு கடத்தப் பட்டனர்.
அ) மலேயா பினாங்கு ஆ) பர்மா
இ) இந்தோனேசியா ஈ) இலங்கை
விடை: அ) மலேயா பினாங்கு

19. சிவமலைக்கும் சென்னிமலைக்கும் இடையே இருந்த பகுதி
அ) பச்சை மலை ஆ) பவள மலை
இ) பழனி மலை ஈ) சின்னமலை
விடை: ஈ) சின்னமலை

20. திவான் படைகளும் தீரன் சின்னமலையின் படைகளும் _____ ஆற்றங்கரையில் மோதிக் கொண்டன.
அ) காவேரி ஆ) அமராவதி
இ) நொய்யல் ஈ) பாலாறு
விடை: இ) நொய்யல்

21. தீரன் சின்னமலை மற்றும் அவரது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் _____.
அ) சிவமலை ஆ) சென்னிமலை
இ) சின்னமலை ஈ) சங்ககிரி கோட்டை
விடை: ஈ) சங்ககிரி கோட்டை

22. 1799 இல் நடந்த ஆங்கிலேய மைசூர் போரின் முடிவில் _____ இணைக்கப்பட்டது.
அ) கோயம்புத்தூர் ஆ) திண்டுக்கல்
இ) மைசூர் ஈ) ஆற்காடு
விடை: அ) கோயம்பத்தூர்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____ என்ற சொல் ஒரு பகுதியையோ ஒரு இராணுவ முகாமையோ அல்லது சிற்றரசையோ குறிப்பதாகும்.
விடை: பாளையம்

2. பாளையக்காரர் என்ற முறையை இந்தியாவில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் _____.
விடை: வாரங்கல் பிரதாப ருத்ரன்

3. _____ நிலத்தின் மீது கொண்டிருந்த உரிமையை முன்வைத்து பல பாளையக்காரர்கள் கம்பெனி அதிகாரிகளுக்கு வரி செலுத்த மறுத்தார்கள்.
விடை: அறுபது தலைமுறையாக

4. பூலித்தேவரின் ஆங்கிலேய எதிர்ப்பு பாளையக்காரர்கள் கூட்டமைப்பில் சேராத பாளையங்கள் _____, _____.
விடை: எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி

5. _____ பூலித்தேவரின் படைப்பிரிவுகளில் ஒன்றினுக்கு தலைமையேற்றிருந்தார்.
விடை: ஒண்டிவீரன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. வேலுநாச்சியார் _____, _____ , _____ போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்தார். **விடை: ஆங்கிலம், பிரெஞ்சு, உருது**

7. 1772 இல் ஆற்காடு நவாப்பும் லெப்டினென்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து _____ அரண்மனையைத் தாக்கியது. **விடை: காளையார் கோவில்**

8. இந்திய நாட்டில் பிரட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் _____. **விடை: சிவகங்கை சமஸ்தான வேலு நாச்சியார்**

9. வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழி _____. **விடை: குயிலி**

10. பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது _____ வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார். **விடை: முப்பதாவது**

11. கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலிஸ் ஜாக்சன் என்போர் _____ அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினர். **விடை: கட்டபொம்மனை**

12. கம்பெனி நிர்வாகத்தை எதிர்க்க சிவகங்கை மருது சகோதரர்கள் உருவாக்கிய அமைப்பு _____. **விடை: தென்னிந்திய கூட்டமைப்பு**

13. பிரிட்டிஷ் படைகள் கட்டபொம்மனை சரணடைய கோரிய நிபந்தனை _____ அன்று வழங்கப்பட்டது. **விடை: 1799 செப்டம்பர் 1**

14. _____ புனையப்பட்ட நாட்டுப்புற பாடல்கள் இன்றும் மக்களிடையே நீங்காத நினைவுகளாக உள்ளது. **விடை: கட்டபொம்மன் மீது**

15. கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிப்ரவரி 1801இல் பாளயங்கோட்டை சிறையிலிருந்து தப்பி _____ பதுங்கியிருந்தனர். **விடை: கமுதியில்**

16. மருது சகோதரர்கள் விடுதலையை முன்னிறுத்திய பிரகடனம் _____ என்று அழைக்கப்பட்டது. **விடை: திருச்சிராப்பள்ளி பேரரறிக்கை**

17. மருது சகோதரர்கள் திருச்சிராப்பள்ளி பேரரறிக்கை _____, _____ சுவர்களில் ஒட்டப்பட்டது. **விடை: திருச்சி நவாப் கோட்டை, ஸ்ரீரங்கம் கோவில்**

18. சிவகங்கை திருப்பத்தூர் கோட்டையில் _____ அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். **விடை: 1801 அக்டோபர் 24**

19. _____ இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் படி பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். **விடை: 1801 ஜூலை 31**

20. தீரன் சிலம்புவின் மதிப்புமிகு பட்டம் _____.

விடை: பழைய கோட்டை மன்றாடியார்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. (i) கட்டபொம்மன் தம்மை கம்பெனி ஆட்சியர் ஜாக்சன் எவ்வாறெல்லாம் அவமானப் படுத்தினார் என்பதை மதராஸ் ஆட்சிக் குழுவிடம் தெரியப்படுத்தினார்.
(ii) ஆளுநர் எட்வர்ட் கலெக்டர் ஜாக்ஸன் பணி நீக்கம் செய்யவில்லை.

(iii) சிவசுப்பிரமணியனார் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

(iv) கட்டபொம்மன் குற்றவாளி என்று குழு முடிவு செய்தது.

அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி

ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி

இ) (ii) மற்றும் (iv) ஆகியவை சரி

ஈ) (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

விடை: ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி

2. கீழ்கண்டவற்றுள் சரியான இணை யாது?

அ) உடையாள் என்பது குயிலி

ஆ) மருது சகோதரர்கள் - புதுக்கோட்டை

இ) விருப்பாட்சி பாளையம் -அச்சுத நாயக்கர்

ஈ) கட்டபொம்மன் உதவியாளர் - இராமலிங்கர்

விடை: அ) உடையாள் என்பது குயிலி

IV. பொருத்துக.

I	1.	மேற்கு பாளையம்	-	அ) பகோடா பாளையம்
	2.	மேய்த்தல்	-	ஆ) இராமலிங்கர்
	3.	கட்டபொம்மன்	-	இ) தொழில் புரிந்த பெண்
	4.	கம்பெனி தூதர்	-	ஈ) தீர்த்தகிரி
	5.	தீரன் சின்னமலை	-	உ) தலைவன் கோட்டை

விடை: 1.உ 2.இ 3.அ 4.ஆ 5. ஈ

II	1.	காகதீய அரசு	-	அ) வேலுநாச்சியார்
	2.	உருது மொழி வல்லமை	-	ஆ) புதிய இராணுவ முறை
	3.	ஓடாநிலை	-	இ) பிரதாப ருத்ரன்
	4.	சர் ஜான் கிரடாக்	-	ஈ) கடும் பஞ்சம்
	5.	1805	-	உ) தீரன் சின்னமலை கோட்டை

விடை: 1.இ 2.அ 3.உ 4.ஆ 5. ஈ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஒண்டிவீரன் - குறிப்பு வரைக.

- பூலித்தேவர் படைப்பிரிவின் ஒற்றன்.
- கம்பெனி படைகளுக்கு பெரும் சேதம் விளைவித்தவர்.
- போரில் கை துண்டிக்கப்பட்டதை எதிரிகள் பல பேரை கொன்றதற்கு எமக்கு கிடைத்த பரிசு எனக் கூறியவர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. குயிலி - குறிப்பு வரைக.

- வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்கு உரிய தோழி.
- உடையாள் என்ற பெண்கள் பிரிவிற்கு தலைமை தாங்கியவர்.
- குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்து பிரிட்டிஷார் ஆயுதக் கிடங்கை அழித்தவர்.

3. சங்ககிரி கோட்டையின் முக்கியத்துவம் யாது?

- தீரன் சின்னமலை மற்றும் அவரது சகோதரர்களை ஆங்கில அரசு சங்ககிரி கோட்டையில் சிறை வைத்தது.
- இவர்கள் இருவரும் ஆங்கில ஆட்சியை ஏற்க மறுத்தனர்.
- அதனால் 1805 ஜூலை 31இல் இருவரும் சங்ககிரி கோட்டையின் உச்சியில் ஆங்கில அரசால் தூக்கிலிடப்பட்டனர்.

4. ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை யாது?

- வேலூர் புரட்சியின் போது போர் விதிமுறை எதையும் பின்பற்றாதவர்.
- இந்திய வீரர்கள் 800 பேரை சுட்டுக் கொன்றவர்; 600 வீரர்களை சிறையில் அடைத்தவர்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. வேலூர் புரட்சியின் விளைவுகள் மற்றும் மதிப்பீடுகள் பற்றி விவரி.

விளைவுகள்:

- நீதிமன்ற விசாரணைக்குப் பின் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பீரங்கியில் கட்டி வைத்து சுடப்பட்டனர்.
- திப்புவின் மகன்கள் கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- கலவரத்தை அடக்கியவர்களுக்கு பரிசுத் தொகை, பதவி உயர்வு வழங்கப்பட்டது.
- புரட்சி நடக்க காரணமானவர்கள் என கருதப்பட்ட தளபதி அக்னீயூ - ஆளுநர் வில்லியம் பெண்டிங் நாடு திரும்ப அழைக்கப்பட்டனர்.

மதிப்பீடுகள்:

- இந்திய வீரர்களுக்கு வெளியில் இருந்து எந்த உதவியும் கிடைக்காததால் புரட்சி தோல்வியுற்றது.
- புரட்சிக்கான ஏற்பாடுகளை 23 படைப்பிரிவில் 2 ஆவது பட்டாளம் சிறப்பாக செய்திருந்தது.
- இப்புரட்சிக்குப்பின் தொடர்ந்து எந்தவித கிளர்ச்சியும் நடைபெறவில்லை.
- புரட்சி பெல்லாரி, வாலாஜாபாத், ஹைதராபாத், பெங்களூரு, நஸ்தி துர்க்கம், சங்கிரிதுர்க்கம் ஆகிய இடங்களில் எதிரொலித்தது.

வரலாறு

அலகு 7

காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. 1818 ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டறவற்றில் எதனைத் தொடங்கினார்?
   அ) வஹாபி கிளர்ச்சி ஆ) ஃபராசி இயக்கம்
   இ) பழங்குடியினர் எழுச்சி ஈ) கோல் கிளர்ச்சி **விடை: ஆ) ஃபராசி இயக்கம்**

2. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ, வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
   அ) டிடு மீர் ஆ) சித்து
   இ) டுடு மியான் ஈ) ஷரியத்துல்லா **விடை: இ) டுடு மியான்**

3. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?
   அ) சாந்தலர்கள் ஆ) டிடு மீர்
   இ) முண்டா ஈ) கோல் **விடை: அ) சாந்தலர்கள்**

4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
   அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
   இ) பிபின் சந்திர பால் ஈ) ரொமேஷ் சந்திரா **விடை: இ) பிபின் சந்திர பால்**

5. வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது?
   அ) 1905 ஜூன் 19 ஆ) 1906 ஜூலை 18
   இ) 1907 ஆகஸ்ட் 19 ஈ) 1905 அக்டோபர் 16 **விடை: ஆ) 1905 அக்டோபர் 16**

6. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
   அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
   இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள் **விடை: இ) முண்டா கிளர்ச்சி**

7. 1916 ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?
   அ) அன்னிபெசன்ட் அம்மையார்
   ஆ) பிபின் சந்திர பால்

இ) லாலா லஜபதி ராய்
ஈ) திலகர் **விடை: ஈ) திலகர்**

8. **நீல் தர்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?**
அ) தீன பந்து மித்ரா ஆ) ரொமேஷ் சந்திர தத்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) பிர்சா முண்டா **விடை: அ) தீன பந்து மித்ரா**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான _____ இயக்கம் 1827ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது. **விடை: வஹாபி கிளர்ச்சி**
2. சோட்டா நாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி _____. **விடை: கோல் கிளர்ச்சி**
3. _____ சட்டம் பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடை விதித்தது. **விடை: சோட்டா நாக்பூர்**
4. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு _____. **விடை: 1908**
5. W.C. பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு _____. **விடை: 1885**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) மீர் ஜாபரிடம் இருந்து 2 கோடியே 25 லட்ச ரூபாயை வாங்கிய கிழக்கு இந்திய கம்பெனி அதனை பிரிட்டனில் தொழிற்புரட்சி மேம்பட முதலீடு செய்தது.
ii) 1831 - 1832 ஆம் ஆண்டு அரசு அதிகாரிகள் மற்றும் கடன் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியைக் கோல் மக்கள் ஒருங்கிணைத்தனர்.
iii) 1855 ஆம் ஆண்டில் சாந்தலர் கிளர்ச்சிக்கு சித்து, கணு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் தலைமை ஏற்றனர்.
iv) 1879 ஆம் ஆண்டில் சாந்தலர்கள் வசம் இருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்த ஒரு சட்டம் இயற்றப்பட்டது.
அ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை
ஆ) (ii) மற்றும் (iii) சரியானவை
இ) (ii) மற்றும் (iv) சரியானவை
ஈ) (i) மற்றும் (iv) சரியானவை **விடை: அ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை**

2. i) காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தைச் செய்தது ஆரம்பகால இந்திய தேசியவாதிகளின் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும்.

ii) இந்தியாவில் வறுமை அதிகரிக்க சமய ரீதியிலான சுரண்டலே மிக முதன்மையான காரணம் என்று ஆரம்பகால காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்.

iii) சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியை எட்டுவதே மிததேசியவாத காங்கிரஸ் தலைவர்களின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது.

iv) வங்காளத்தின் ஆதிக்கத்தை குறைப்பதையும் தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வங்கப் பிரிவினை நடந்தது.

அ) (i) மற்றும் (iii) சரியானவை

ஆ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை

இ) (ii) மற்றும் (iii) சரியானவை

ஈ) (iii) மற்றும் (iv) சரியானவை

விடை: அ) (i) மற்றும் (iii) சரியானவை

3. கூற்று : இந்திய வரலாற்றில் முதன்முறையாக காலனி ஆட்சியின் கீழ் அரசு வனங்களின் மீது நேரடி தனியுரிமையைக் கோரியது.

காரணம் : இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திக்க தொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டனர்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

விடை: இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

4. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

ஆ) கூற்று தவறு காரணம் சரி.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

விடை: இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

IV. பொருத்துக.

1.	வஹாபி கிளர்ச்சி	-	அ) லக்னோ
2.	முண்டா கிளர்ச்சி	-	ஆ) பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ்
3.	பேகம் ஹஸ்ரத் மகால்	-	இ) டிடு மீர்
4.	கன்வர் சிங்	-	ஈ) ராஞ்சி
5.	நானாசாகிப்	-	உ) பீகார்

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

- மறு சீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்
- சமய இயக்கங்கள்
- சமூகக் கொள்ளை
- மக்களின் கிளர்ச்சி

2. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.

- சதாரா
- சம்பல்பூர்
- பஞ்சாபின் சில பகுதிகள்
- ஜான்சி
- நாக்பூர்

3. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?

- ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியா இங்கிலாந்து தொழிலகங்களுக்கு மூலப் பொருட்களை அனுப்பும் நாடாக இருந்தது.
- இந்த மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாக இந்தியா இருந்தது.
- இதன் மூலம் இந்திய செல்வ வளங்கள் சுரண்டப்பட்டது.

4. தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.

- அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷார் ஆட்சிப் பகுதியில் தன்னாட்சி பெறுவது.
- டொமினியன் அந்தஸ்து அடைவது. **எ.கா:** ஆஸ்திரேலியா, கனடா.
- இலக்குகளை அடைய வன்முறையில்லாத அரசியல் சாசன விதிமுறைகளைப் பின்பற்றுவது.

5. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.

- மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகள் ஒன்றுபட்டனர்.
- காங்கிரஸ் கட்சியும், முஸ்லீம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டது.
- முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:

மேலதிகாரக் கொள்கை

உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப் பகுதிகளை இணைத்துக் கொண்டனர்.

வாரிசு இழப்புக் கொள்கை

அரசுக் கட்டிலில் அரியணை ஏற நேரடி ஆண் வாரிசு இல்லையெனில் அவர்களின் இறப்புக்குப் பின் அப்பகுதி ஆங்கிலேய ஆட்சிப் பகுதியுடன் இணைக்கப்படும். இதன்மூலம் சதாரா, சம்பல்பூர், ஜான்சி, நாக்பூர் ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டன.

இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:

- மதக்குறியீடுகள் தடை செய்யப்பட்டது.
- புதிய தலைப்பாகை அணிய வற்புறுத்தப்பட்டது.
- ஆடைக் கட்டுப்பாடுகள் மதம் மாற்றுவதற்கான முயற்சியாக கருதப்பட்டது.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டியது.
- வீரர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டனர்.
- கலகம் என்பது புதிய ரக என்பீல்டு ரக துப்பாக்கியின் கீழ் வடிவில் வந்தது.
- பசு மற்றும் பன்றி கொழுப்பு தடவிய தோட்டாக்கள், விலங்குகள் தோலில் செய்யப்பட்ட உறைகளும் காரணமாக அமைந்தது.

2. 1905 ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

வங்காளிகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்ய 1905 ஆம் ஆண்டு கர்சன் பிரபு வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார்.

வங்காள மக்கள் நடந்து கொண்ட விதம்:

- மத அடிப்படையிலான உள் நோக்கத்தில் பிரித்த வங்கப் பிரிவினை மக்களை ஒன்றுபடச் செய்தது.
- போராட்டக் குழுக்கள் மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் என இரண்டாகப் பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- வேண்டுகோள்கள், செய்திப் பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக் கூட்டங்கள் மூலமாக மக்கள் எதிர்ப்பு நடந்தது.
- பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பது என மக்கள் முடிவு செய்தனர்.
- சுதேசி இயக்கக் கொள்கை வங்காள மக்களிடம் வேகமாக பரவியது.
- 1905 அக்டோபர் 16, பிரிவினை நாள் துக்க நாளாக மாறியது.
- ஆயிரக்கணக்கான மக்கள் கங்கை நதியில் புனித நீராடி வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தா சாலைகளில் அணிவகுத்து வந்தனர்.
- புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் இணைந்தே நடந்தது.
- சுதேசி இயக்கங்கள் நான்கு வழிகளில் மக்கள் வெளிப்படுத்தினர். அவைகள் முறையே: மிதவாதப் போக்கு, தீவிர தேசியவாதம், ஆக்கபூர்வ சுதேசி, புரட்சிகர தேசியவாதம்.

VII. செயல்பாடுகள்

1. 1858 முதல் 1919 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டங்களை அடையாளம் கண்டு, ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விவரிக்கவும்.

1858 - நவம்பர் இந்திய அரசுச்சட்டம் :

- 1857 பெரும் புரட்சியின் விளைவாக இயற்றப்பட்ட சட்டமாகும்.
- இந்திய அரசு கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்த நிலையில் விடுபட்டு பிரிட்டிஷ் நாடாளுமன்ற நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

1875 - நிலக் குத்தகை எடுப்பு கடன் வழங்கும் சட்டம் :

எந்த நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டதோ அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு ஏலம் விட்டு கடன் தொகையை எடுத்துக் கொள்ள கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.

1905 - வங்கப் பிரிவினைச் சட்டம் :

நிர்வாக வசதிக்காக வங்காளத்தை இரண்டாகப் பிரித்து மக்களிடையே பிரிவினையை உண்டு பண்ணியது.

1908 - சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் :

பழங்குடியினர் நிலத்தில் பழங்குடி அல்லாத மக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டது.

1916 - லக்னோ ஒப்பந்தம் :

- காங்கிரஸ் - முஸ்லீம் லீக் இணைந்து தன்னாட்சியை ஏற்றுக் கொண்டது.
- முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி வழங்க காங்கிரஸ் ஒப்புக் கொண்டது.

1919 - மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தக் கூட்டம் :

இந்திய தன்னாட்சி பெற படிப்படியாக உதவி செய்யப்படும் எனக் கூறியது.

1919 - ரௌலட் சட்டம் :

விசாரணையின்றி எவரையும் கைது செய்யலாம் என்று இச்சட்டம் கூறியது.

2. இந்திய வரைபடத்தில் 1857 ஆம் ஆண்டில் கிளர்ச்சி நடந்த முக்கிய இடங்களைக் குறிக்கவும்.



3. ஆங்கிலேயரின் காலனி ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்ற அனைத்து முன்னணி தலைவர்களின் படங்களை வைத்து ஒரு செருகேடு (ஆல்பம்) உருவாக்கவும்.

மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. 1757 ஜூன் 23இல் நடைபெற்ற _____ போரில் வங்காள நவாப்பான சிராஜ்-உத்-தௌலா ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் தோற்கடிக்கப்பட்டார்.
அ) பிளாசிப் ஆ) பாக்ஸர்
இ) ஆற்காடு ஈ) கல்கத்தா **விடை: அ) பிளாசிப்**

2. _____ போருக்குப் பின் எல்லையை விரிவாக்கும் பணியை ஆங்கிலேயர் மேற்கொண்டனர்.
அ) பாக்ஸர் ஆ) பிளாசிப்
இ) அந்தேரிப் ஈ) ரோஹில் கண்ட் **விடை: ஆ) பிளாசிப்**

3. _____ என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும், நிலப்பிரபுக்களுக்கும் எதிராக துவங்கப் பட்டது.
அ) வஹாபி இயக்கம் ஆ) கோல் கிளர்ச்சி
இ) முண்டா கிளர்ச்சி ஈ) சந்தேலர்கள் கிளர்ச்சி **விடை: அ) வஹாபி இயக்கம்**

4. வஹாபா கிளர்ச்சியின் விளைவாக 1831 நவம்பர் 6 இல் _____ நகரில் பெரும் தாக்குதல் நடைபெற்றது.
அ) கான்பூர் ஆ) இந்தூர்
இ) லக்னோ ஈ) புர்னியா **விடை: ஈ) புர்னியா**

5. பழங்குடியினர் இந்திய வேளாண்மைச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் _____ முறையை பின்பற்றினர்.
அ) படிக்கட்டு வேளாண்மை ஆ) தோட்ட வேளாண்மை
இ) இடப்பெயர்வு வேளாண்மை ஈ) மலைப்பிரதேச வேளாண்மை
விடை: இ) இடப்பெயர்வு வேளாண்மை

6. 1831-32ஆம் ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய பழங்குடியின கிளர்ச்சி _____ கிளர்ச்சியாகும்.
அ) கோல் ஆ) முண்டா
இ) சந்தேலர்கள் ஈ) மகாஜன்கள் கிளர்ச்சி **விடை: அ) கோல்**

7. ஜமீன்களை குடியமர்த்துவதற்காக சந்தேலர்கள் _____ சுற்றிலும் இருந்த வனப் பகுதியை விட்டு வெளியேற்றப்பட்டனர்.
அ) விந்திய மலை ஆ) சாத்பூரா மலை
இ) பீர்பாஞ்சல் மலை ஈ) ராஜ்மஹால் மலை **விடை: ஈ) ராஜ்மஹால் மலை**

8. _____ நடைபெற்ற உலுகுலன் கிளர்ச்சி மற்றும் பழங்குடியினர் கிளர்ச்சி மிக முக்கியமானது.
அ) ஜார்க்கண்டில் ஆ) தாமோதர் பள்ளத்தாக்கில்
இ) ராஞ்சியில் ஈ) சம்பலில் **விடை: இ) ராஞ்சியில்**

9. _____ தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்த உடன் இந்த இயக்கத்திற்கு ஊக்கம் கிடைத்தது.
அ) அர்ஜூன் முண்டா ஆ) சித்து
இ) மீணு ஈ) பிர்சா முண்டா **விடை: ஈ) பிர்சா முண்டா**

10. 1857 மே மாதம் 11ஆம் தேதி மீரட்டில் இருந்து தில்லி செங்கோட்டை வரை சிப்பாய்கள் அணி வகுத்து சென்று முகலாய மாமன்னர் _____ஐ தலைவராக்க கோரிக்கை எழுந்தது.
அ) இரண்டாம் அக்பர் ஆ) இரண்டாம் பகதூர் ஷா
இ) இரண்டாம் பாபர் ஈ) மகபூப்கான் **விடை: ஆ) இரண்டாம் பகதூர் ஷா**

11. 1857ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய நிகழ்வாக இருப்பது _____ முற்றுகையாகும்.
அ) நாக்பூர் ஆ) கான்பூர்
இ) கல்கத்தா ஈ) லக்னோ **விடை: ஆ) கான்பூர்**

12. 1858ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த இலண்டன் _____ செய்தியாளர் வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல் நீலின் ஆணையின் படி கிளர்ச்சியாளர்களை சந்தித்தார்.
அ) டெக்கான் ஹெரால்ட் ஆ) தி கார்டியன்
இ) டைம்ஸ் பத்திரிகை ஈ) தி வீக் **விடை: இ) டைம்ஸ் பத்திரிகை**

13. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா பிரிட்டனுக்கு அதிக அளவில் பெரும்பான்மையாக _____ அனுப்பி வைத்தது.
அ) நீலச் சாயம் ஆ) பச்சை சாயம்
இ) கறுநீல சாயம் ஈ) சிவப்பு சாயம் **விடை: அ) நீலச் சாயம்**

14. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் _____ பெற்ற இந்தியர்களின் மத்தியில் தேசிய அரசியல் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது.
அ) உருது மொழிக் கல்வி ஆ) சமஸ்கிருத மொழிக் கல்வி
இ) இந்தி மொழிக் கல்வி ஈ) ஆங்கிலக் கல்வி **விடை: ஈ) ஆங்கிலக் கல்வி**

15. _____ தொழிற்சாலைக்கு மூலப்பொருட்களை அனுப்பும் ஒரு நாடாக இந்தியா மாற்றம் பெற்றது.
அ) பிரெஞ்ச் நாட்டின் ஆ) டச்சு நாட்டின்
இ) பிரிட்டனின் ஈ) அமெரிக்காவின் **விடை: இ) பிரிட்டனின்**

16. இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க _____ தமது சேவைகளை வழங்கினார்.
அ) ஆங்கிலேயர்கள் ஆ) A.O. ஹியூம்
இ) W.C. பானர்ஜி ஈ) உமேஷ் சந்திர பானர்ஜி **விடை: ஆ) A.O. ஹியூம்**

17. வங்காள மக்களின் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது _____.
அ) 1905 அக்டோபர் 16 ஆ) 1905 ஜூலை 19
இ) 1905 செப்டம்பர் 16 ஈ) 1905 நவம்பர் 19 **விடை: அ) 1905 அக்டோபர் 16**

18. முஸ்லீம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கிய ஒப்பந்தம் _____.

அ) லக்னோ ஆ) அலகாபாத்

இ) அகமதாபாத் ஈ) கான்பூர் **விடை: அ) லக்னோ**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____ ஆம் ஆண்டில் கோல் இனத்தவர்கள் அரசு அதிகாரிகள் மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியை நடத்தினர். **விடை: கி.பி 1831-32**
2. சாந்தலர்கள் கிளர்ச்சி கூட்டத்தால் _____ கொல்லப்பட்டனர்.

விடை: இரண்டு தாரோக்கள்

3. 1855இல் சாந்தலர்கள் வசமிருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்தி உருவாக்கிய மண்டலம் _____. **விடை: சாந்தல் பர்கானா**
4. ஊழல்கள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் நாடுகளை இணைக்கும் ஆங்கில அரசு கொள்கை _____. **விடை: மேலதிகாரக் கொள்கை**
5. கான்பூர் புரட்சியின் மற்றொரு முக்கியப் பெண் தளபதியாக திகழ்ந்தவர் _____.

விடை: ஜான்சி ராணி

6. 1858 இந்திய அரசுச்சட்டம் _____ பெயரில் வெளியிடப்பட்டது.

விடை: விக்டோரியா மகாராணி பேரறிக்கை

7. ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திய கொள்கை _____.

விடை: பிரித்தாளும் கொள்கை

8. செயற்கை நீலச்சாயம் உருவாக்கப்படும் முன் _____ உலகம் முழுவதும் இருந்த ஆடை தயாரிப்பாளர்களால் பெரிதும் மதித்து போற்றப்பட்டது.

விடை: இயற்கையான கருநீலச் சாயம்

9. இண்டிகோ கிளர்ச்சி 1859ஆம் ஆண்டு _____ தொடங்கியது.

விடை: வேலை நிறுத்த வடிவில்

10. இண்டிகோ கிளர்ச்சியில் பொதுமக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் _____.

விடை: குடங்கள், ஆயுத தட்டுக்கள்

11. தக்காண கலவரத்தின் விளைவுகள் _____.

விடை: கடன் என்னும் மாய வலையில் விவசாயிகள் சிக்கியது

12. வங்கப் பிரிவினை மூலம் வங்காள மொழி பேசும் மக்களை ஒரு _____ என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார். **விடை: மொழி சிறுபான்மையினர்**
13. வங்கப் பிரிவினையை திரும்பப் பெறுவது இயலாது என்ற காரணத்தால் 1906இல் _____ மாற்றுப் பாதையில் செல்லத் துவங்கியது. **விடை: சுதேசி இயக்கம்**
14. பஞ்சாபின் லாலா லஜ்பதி ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர், வங்காளத்தின் பிபின் சந்திர பால் ஆகிய மூன்று தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

விடை: லால் - பால் - பால்

III. பொருத்துக.

I

1.	ஜகத் சேத்துகள்	-	அ) உலுகுலன் கிளர்ச்சி
2.	டுடு மியான்	-	ஆ) கடவுளின் தூதர்
3.	ராஞ்சி	-	இ) வட்டிக்கு பணம் கொடுப்போர்
4.	பிர்சா முண்டா	-	ஈ) விவசாய கூட்டணி
5.	தாலுக்தார்	-	உ) நிலம் கடவுளுக்குச் சொந்தம்

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஆ 5.ஈ

II

1.	பழங்குடியினர்	-	அ) கான் பகதூர்
2.	தாரோக்கள்	-	ஆ) இயற்கைச் சாயம்
3.	பரேலி	-	இ) இடம்பெயர்வு வேளாண்மை
4.	இண்டிகோ	-	ஈ) கேத் லீன் கௌ
5.	மானிடவியலாளர்	-	உ) காவல்துறை அதிகாரிகள்

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஆ 5.-ஈ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பிளாசிப் போர் விளைவு யாது?

- ஆங்கிலேயர் தங்களது எல்லையை விரிவாக்கம் செய்தனர்.
- நில வருவாய் நிர்வாகம், இராணுவம், காவல்துறை, நீதித்துறையில் ஆங்கிலேயர் முறையான மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

2. பழங்குடியினர் யார்?

- மலைவாழ் மற்றும் காட்டுப்பகுதி மக்கள்.
- இந்தியச் சமூகத்தின் ஒரு பகுதியாக வாழ்ந்தவர்கள்.
- இந்திய வேளாண்மைச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் இடம்பெயர்வு வேளாண்மை முறையைப் பின்பற்றினர்.

3. பிர்சா முண்டா - குறிப்பு வரைக.

- ராஞ்சி வட்டார பழங்குடி இன மக்கள்.
- குண்ட்கட்டி என்ற முறையில் விவசாயம் செய்வதில் முண்டா இன மக்கள் பெயர் பெற்றவர்கள்.
- இவர்களின் குழுத் தலைவனான பிர்சா முண்டா தம்மை கடவுளின் தூதர் என அறிவித்தார்.
- தமது மக்களுக்காக இறுதி வரை போராடி சிறையில் உயிர் நீத்தவர்.

4. இந்திய தேசிய காங்கிரஸின் இரண்டு குறிக்கோள்களைக் கூறுக.

- இராணுவச் செலவுகளைக் குறைப்பது.
- உள் நாட்டு வரிகளைக் குறைப்பது.
- நீதிபதி மூலம் விசாரணைகள் விரிவு செய்வது.
- நிர்வாகத் துறையில் இருந்து நீதித்துறையை பிரிப்பது.

5. சுதந்திரப் போராட்டத்தில் இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்தியது எது?

- சுரண்டல் விதம் - அடக்குமுறை.
- அரசுக்கு எதிரான பொதுக் கருத்துகளை உருவாக்கிய இந்திய தேசிய இயக்கம்.
- காலனியாதிக்கம்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. 1857ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் இந்திய நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாறுதல்கள் பற்றி விவரி.

- 1857ஆம் புரட்சிக்குப் பின் பிரிட்டிஷ் ஆட்சியும் அதன் கொள்கையும் பெரிய அளவில் மாற்றங்களை சந்தித்தன.
- சமூக சீர்திருத்தம் என்ற தொடர்பான விஷயங்களில் எச்சரிக்கையுடன் செயல்பட்டது.
- பாரம்பரிய நிறுவனங்களின் மதம் தொடர்பான விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்று உறுதிமொழி செய்தது.
- இந்திய இராணுவத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன.
- இராணுவத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
- முக்கிய பொறுப்பு மற்றும் பதவிகளில் விலக்கி வைக்கப்பட்டனர்.
- காலாட்படை கட்டுப்பாட்டை ஆங்கில அரசு முழுவதுமாக எடுத்துக் கொண்டது.
- கூர்க்காக்கள் மற்றும் சீக்கியர்கள், பதான்கள் போன்ற இந்துக்கள் அல்லாத குழுவினருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
- இந்திய ஆதிக்கத்தின் சாதி, மதம், மொழி மற்றும் மண்டலம் சார்ந்த வேறுபாடுகளை ஆங்கிலேயர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

2. இந்திய தேசிய காங்கிரஸின் குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள் யாவை?

- 1885 டிசம்பர் 28இல் இந்திய தேசிய காங்கிரஸின் முதல் அமர்வு நடைபெற்றது.
- தேசிய ஒற்றுமை குறித்த உணர்வுகளை ஒருங்கிணைப்பதே காங்கிரஸின் ஆரம்ப கால முக்கிய குறிக்கோளாக அமைந்தது.
- மேல் முறையீடுகள் செய்வது, மனுக்களைக் கொடுப்பது, அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை அரசியல் சாசன கட்டமைப்பிற்குள் செய்வது என முடிவு செய்தது.

முக்கிய குறிக்கோள்கள் :

- மாகாண மற்றும் மத்திய அளவில் சட்ட மேலவைகளை உருவாக்குவது.
- சட்ட மேலவை உறுப்பினர்களை அதிகரிப்பது.
- நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையை பிரிப்பது.
- இராணுவச் செலவுகளைக் குறைப்பது.
- உள்நாட்டு வரிகளைக் குறைப்பது.
- ஒரே நேரத்தில் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் ஆட்சிப்பணி தேர்வுகளை நடத்துவது.
- காவல்துறை சீர்திருத்தங்கள் செய்தது.
- இந்திய தொழிற்சாலைகளை மேம்படுத்துவது.

வரலாறு

அலகு 8

தேசியம்: காந்திய காலகட்டம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதீன் கிச்லு
இ) முகம்மது அலி ஈ) ராஜ் குமார் சுக்லா **விடை: ஆ) சைஃபுதீன் கிச்லு**

2. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ்
இ) கல்கத்தா ஈ) நாக்பூர் **விடை: இ) கல்கத்தா**

3. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?
அ) 1930 ஜனவரி 26 ஆ) 1929 டிசம்பர் 26
இ) 1946 ஜூன் 16 ஈ) 1947 ஜனவரி 15 **விடை: அ) 1930 ஜனவரி 26**

4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
அ) 1858 ஆ) 1911
இ) 1865 ஈ) 1936 **விடை: இ) 1865**

5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்
விடை: அ) கோவில் நுழைவு நாள்

6. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது?
அ) 1858 ஆம் ஆண்டு சட்டம்
ஆ) இந்திய கவுன்சில் சட்டம், 1909
இ) இந்திய அரசுச் சட்டம், 1919
ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935 **விடை: ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935**

சமூக அறிவியல்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காந்தியடிகளின் அரசியல் குரு _____ ஆவார்.

விடை: கோபால கிருஷ்ண கோகலே

2. கிலாபத் இயக்கத்துக்கு _____ தலைமை ஏற்றார்.

விடை: அலி சகோதரர்கள் (முகமது அலி மற்றும் சௌகத் அலி)

3. 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் _____ அறிமுகம் செய்தது.

விடை: இரட்டை ஆட்சியை

4. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் _____.

விடை: கான் அப்துல் கஃபார்கான்

5. சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகளை வழங்கும் _____ ஐ ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.

விடை: வகுப்புவாரி ஒதுக்கீட்டை

6. _____ என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.

விடை: உஷா மேத்தா

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) இந்திய பொதுவுடைமை கட்சி 1920 ஆம் ஆண்டு தாஷ்கண்டில் தொடங்கப்பட்டது.
   ii) M. சிங்காரவேலர் கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
   iii) ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினு மசானி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சமதர்ம கட்சி உருவானது.
   iv) வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சமதர்மவாதிகள் பங்கேற்கவில்லை.

   அ) (i) மற்றும் (ii) சரியானது
   ஆ) (ii) மற்றும் (iii) சரியானது
   இ) (iv) சரியானது
   ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானது

   விடை: ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானது

2. கூற்று : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது.
   காரணம் : காங்கிரஸ் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ள காந்தி-இர்வின் ஒப்பந்தம் வழிவகை செய்தது.

   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
   ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.
   இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

   விடை: இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது.

3. கூற்று : காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939 ஆம் ஆண்டு பதவி விலகின.
காரணம் : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

விடை: ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

IV. பொருத்துக.

1.	ரௌலட் சட்டம்	- அ) பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தல்
2.	ஒத்துழையாமை இயக்கம்	- ஆ) இரட்டை ஆட்சி
3.	1919 ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டம்	- இ) M.N. ராய்
4.	இந்திய பொதுவுடைமை கட்சி	- ஈ) நேரடி நடவடிக்கை நாள்
5.	16 ஆகஸ்ட் 1946	- உ) கருப்புச் சட்டம்

விடை: 1.உ 2.அ 3.ஆ 4.இ 5.ஈ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.

- பஞ்சாப் அமிர்தரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13 ஆம் நாள் சீக்கியர்களின் அறுவடைத் திருநாள் பைசாகி அன்று பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர்.
- இதனை அறிந்த ஜெனரல் டயர் ஆயுதமேந்திய வீரர்கள் மற்றும் பீரங்கியுடன் சுற்றி கண்மூடித்தனமாக சுட்டுப் படுகொலை செய்தார்.
- துப்பாக்கிச் சூட்டில் 379 பேர் உயிரிழந்தனர்; ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர்.

2. கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

- முதல் உலகப்போரின் முடிவில் துருக்கியின் காலிப் கடுமையாக நடத்தப்பட்டார்.
- துருக்கி மற்றும் காலிப்பிற்கு ஆதரவுக்கரம் நீட்டும் பொருட்டு 1919 நவம்பர் மாதம் தில்லியில் கிலாபத் இயக்கம் நடைபெற்றது.
- துருக்கிக்கு ஆதரவாக பெரும் போராட்டம் முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி சகோதரர்கள் தலைமையில் இந்த இயக்கம் நடைபெற்றது.

3. ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப் பெற்றார்?

- காந்தியடிகள் அறிவித்த ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவாக வரி கொடா இயக்கம் தீவிரமாக நடந்தது.
- இந்த நாடு தழுவிய போராட்டத்தில் வன்முறை பெரிதும் நிகழ்ந்தது.
- உத்திரப்பிரதேச சௌரி-சௌராவில் ஆங்கில காவல் நிலையம் தீயிட்டு கொளுத்தப்பட்டது.
- சௌரி-சௌரா சம்பவத்தைத் தொடர்ந்து காந்தியடிகள் இந்த இயக்கத்தைத் திரும்ப பெற்றார்.

4. சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

- சர் ஜான் சைமன் என்பவரால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர்.
- இந்தியர் எவரும் இக்குழுவில் இடம் பெறாமல் வெள்ளையர் மட்டுமே இருந்தனர்.
- இதனால் ஆத்திரமடைந்த இந்தியர்கள் 'சைமனே திரும்பப் போ' என்ற கோஷத்துடன் எதிர்ப்பு தெரிவித்தனர்.

5. முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?

- டொமினியன் எனப்படும் தன்னாட்சியில் திருப்தி அடையாத காங்கிரஸார் சிலர் முழுமையான சுதந்திரம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர்.
- 1929 டிசம்பர் மாதம் லாகூரில் ஜவஹர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது.
- இதில் முழுமையன சுயராஜ்ஜியம் என்ற சுதந்திரம் இலக்காக அறிவிக்கப்பட்டது.

6. பகத்சிங் பற்றி குறிப்பு வரைக.

- பொதுவுடைமை கருத்துகளால் ஈர்க்கப்பட்ட பஞ்சாப் பகத்சிங் இந்துஸ்தான் ராணுவ குடியரசை அமைத்தார்.
- 1929 மத்திய சட்டப்பேரவையில் வெடிகுண்டு மற்றும் துண்டுப் பிரசுரங்களை வீசி 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்ற முழக்கத்தை எழுப்பினார்.
- இதில் பகத்சிங் மற்றும் ராஜகுருவிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- பகத்சிங்கின் துணிச்சல் இந்திய இளைஞர்களைக் கவர்ந்து, பிரபலம் அடைந்தார்.

7. பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

- தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 இல் இருந்து 148 ஆக அதிகரிக்கப்பட்டது.
- மத்திய சட்டப்பேரவையில் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டன.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.

- தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக 20 ஆண்டுகள் போராடியது இந்திய விடுதலை போராட்டத்தில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.
- ஆங்கிலேய ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்க வன்முறை அல்லாத வழிகளைப் பின்பற்றியது.
- படிக்கும் காலங்களில் இலண்டனில் அவருக்கு கிடைத்த அனுபவங்கள்.
- தென்னாப்பிரிக்க இனவேறுபாடு கொண்ட டர்பன் ரயில் சம்பவங்கள்.
- டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின் படைப்புகள் காந்தியடிகளை மாற்றியது.
- உண்மையின் வடிவமாக சத்தியாக்கிரக வழியில் போராடியது.
- இந்திய மக்களை சந்தித்து பயணம் மேற்கொண்ட போது தமிழக பயணம் அவரை வேட்டி மற்றும் சிறிய துண்டுவிற்கு மாற்றியது.
- பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறையை அகற்ற போராடி பண்ணை விவசாயிகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.
- ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், வரி கொடா இயக்கம் என பல்வேறு இயக்கங்களை நடத்தி போராட்டத்தை தீவிரப்படுத்தியது.
- குஜராத் தண்டி உப்பு சத்தியாகிரக பாத யாத்திரை.
- தீண்டாமை - வகுப்புவாரி முறையை ஒழிக்க பாடுபட்ட நிகழ்ச்சிகள்.
- மதுப்பழக்கத்தை கைவிட போராட்டம் நடத்தியது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் மூலம் மாபெரும் மக்கள் தலைவராக தன்னை நிலை நிறுத்தினார்.
- இது போன்ற காரணிகள் காந்தியடிகளை 'இந்தியாவின் தேசத்தந்தை' என்ற நிலைக்கு கொண்டு வந்தது.

2. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.

- இந்தியாவிற்கு தன்னாட்சி பகுதி வழங்குவதில் திருப்தி அடையாத காங்கிரஸ் கட்சி 1930 ஜனவரி 26 ஆம் நாள் சுதந்திரநாளாக அடைவது என அறிவிக்கப்பட்டது.
- இதன்படி வரிகொடா இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் மூலமாகவும் வன்முறையற்ற முறையில் சுதந்திரம் அடைவது என குறித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.
- இந்த வரி கொடா இயக்கம் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அங்கீகாரம் அளித்தது.
- பல கோரிக்கைகள் அடங்கிய மனுவை காந்தியடிகள் அரசப் பிரதிநிதியிடம் அளித்தார்.
- பதில் அளிக்காத நிலையில் காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை தீவிரப்படுத்தினார்.

- உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுப்பூர்வமான முடிவாகும்.
- காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12 ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டியாத்திரையைத் தொடங்கினார்.
- காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- இந்த சட்ட மறுப்பு இயக்கம் மூலமாக நடந்த குஜராத் தண்டி யாத்திரை காந்தியடிகளை இந்திய அளவில் வெகுவாக உயர்த்தியது.

3. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.

- 1905 ஆம் ஆண்டு கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை இந்தியப் பிரிவினைக்கு முதல் காரணியாக அமைந்தது.
- முதல் உலகப் போருக்குப் பின் துருக்கி இசுலாமிய மதத் தலைவருக்கு ஆதரவாக இந்தியாவில் தனியே கிலாபத் இயக்கம் ஆரம்பித்து போராடியது.
- மத்திய சட்டப் பேரவையில் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என முஸ்லிம் லீக் கோரியது.
- இந்து - முஸ்லிம் ஒற்றுமையின் தூதராக கருதப்பட்ட முகமது அலி ஜின்னா தனது நிலைப்பாட்டை மாற்றி முஸ்லிம்களுக்கு தனி நாடு வலியுறுத்தியது.
- 1932 இல் வெளி வந்த ராம்சே மெக் டொனால்டு வகுப்பு வாத அறிக்கை.
- இங்கிலாந்தில் இருந்து நாடு திரும்பிய ஜின்னா 1934 இல் முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டி 1940களில் தனிநாடு கோரிக்கையை தீவிரப்படுத்தியது.
- இந்து மகா சபையும் முஸ்லிம் லீக்கும் நாட்டின் ஒற்றுமை தவிர்த்து ஒன்றுக்கொன்று எதிரான நடவடிக்கையில் இறங்கியது.
- இந்து - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி வந்த முகம்மது இக்பால் தனிநாடு கோரிக்கையை பிரச்சாரம் செய்தது.
- 1946 தேர்தல்களில் முஸ்லிம் லீக் தனது தனித் தொகுதியில் வெற்றி பெற்று தனது கோரிக்கைக்கு வலு சேர்த்தது.
- 1946 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 16 ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாக ஜின்னா அறிவித்தது.
- 1947 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றி இந்தியாவை, இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடாக பிரித்து விடுதலை அறிவித்தது.
- இதுபோன்ற காரணிகளே இந்தியாவின் பிரிவினைக்கு பின்னால் இருந்த காரணிகளாகும்.

VII. செயல்பாடுகள்

1. ஒரு வரைபடத்தில் காந்திய இயக்கத்துடன் தொடர்புடைய முக்கிய இடங்களைக் குறிப்பிடுமாறும் அங்கு என்ன நடந்தது என்று ஓரிரு வாக்கியங்கள் எழுதுமாறும் மாணவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

ஆசிரியர் - மாணவர் செயல்பாடு

2. மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு காந்தியடிகள், ஜின்னா, B.R. அம்பேத்கர். புரட்சிகர தேசியவாத தலைவர்கள், பொதுவுடைமைவாத தலைவர்கள் ஆகியோரின் கருத்துகள் பற்றி விவாதம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.

ஆசிரியர் - மாணவர் செயல்பாடு

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்காக காந்தியடிகள் போராடிய ஆண்டுகள் _____.

அ) 20 ஆ) 25
இ) 10 ஈ) 15

விடை: அ) 20 ஆண்டுகள்

2. காந்தியடிகள் சட்டக்கல்வி படிப்பதற்காக 1888-இல் பயணம் செய்த நாடு _____.

அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா
இ) இங்கிலாந்து ஈ) ஜெர்மனி

விடை: இ) இங்கிலாந்து

3. காந்தியடிகள் முதன் முதலில் இனவெறியைக் கண்ட முதல் நாடு _____.

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) தென்னாப்பிரிக்கா ஈ) இந்தியா

விடை: இ) தென்னாப்பிரிக்கா

4. காந்தியடிகள் இனவெறியைக் களைய இந்தியர்களை கூட்டி அறிவுறுத்த வேண்டும் என்று கூறிய இடம் _____.

அ) கேப்டவுன் ஆ) பிரிட்டோரியா
இ) டர்பன் ஈ) டிரான்ஸ்வாலா

விடை: ஈ) டிரான்ஸ்வாலா

5. _____ வெடித்த பிறகு காந்தியடிகள் இந்தியா திரும்பினார்.

அ) டர்பன் போர் ஆ) முதல் உலகப் போர்
இ) இரண்டாம் உலகப் போர் ஈ) கேப்டவுன் போர்

விடை: அ) டர்பன் போர்

6. காந்தியடிகள் இந்தியா வந்து _____ என்பவர் மீது மரியாதை கொண்டு தனது அரசியல் குருவாக ஏற்றார்.

அ) கோபால கிருஷ்ண கோகலே
ஆ) திலகர்
இ) நேரு
ஈ) மாளவயா

விடை: அ) கோபால கிருஷ்ண கோகலே

7. காந்தியடிகளின் வாழ்க்கையில் ஆடை உடுத்துவதில் மாற்றத்தை உண்டு பண்ணிய பயணம் _____.

அ) கேரளா ஆ) தமிழகம்
இ) ஆந்திரா ஈ) கர்நாடகம்

விடை: ஆ) தமிழகம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

8. _____ உள்ள சம்பரானல் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது.
அ) பீஹார் ஆ) வங்காளம்
இ) உத்திரப்பிரதேசம் ஈ) ஒடிசா **விடை: அ) பீஹார்**

9. ஜெர்மனிய செயற்கை சாயங்களால் இந்தியாவின் இண்டிகோ எனப்பட்ட _____ சந்தையில் விற்கப்படுவது குறைந்தது.
அ) வெளிர் சாயம் ஆ) பசுமை சாயம்
இ) நீலச் சாயம் ஈ) மஞ்சள் சாயம் **விடை: இ) நீலச் சாயம்**

10. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கியது _____.
அ) ஒத்துழையாமை இயக்கம் ஆ) சட்ட மறுப்பு இயக்கம்
இ) சம்பாரன் சத்தியாக்கிரகம் ஈ) தென்னாப்பிரிக்க சம்பவம்
விடை: இ) சம்பாரன் சத்தியாக்கிரகம்

11. பிடி உத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை, சிறையில் அடைப்பது போன்ற அதிகாரங்களை காவல் துறையினருக்கு வழங்கிய சட்டம் _____.
அ) பிட் இந்தியச் சட்டம் ஆ) ஒழுங்குமுறைச் சட்டம்
இ) விசாரணைச் சட்டம் ஈ) ரௌலட் சட்டம் **விடை: ஈ) ரௌலட் சட்டம்**

12. ஜாலியன் வாலாபாக் பொதுக்கூட்டம் _____ நாளில் ஏற்பாடு செய்யப்பட்டது.
அ) பைசாகி ஆ) குருநானக் பிறந்த
இ) தீபாவளி ஈ) விநாயகர் சதுர்த்தி **விடை: அ) பைசாகி**

13. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு முக்கிய காரணமாக விளங்கிய ஆங்கில தளபதி
அ) ஜெனரல் ஜாக்சன் ஆ) கர்சன் பிரபு
இ) ஜெனரல் டயர் ஈ) ராம்சே மெக் ஆர்தர் **விடை: இ) ஜெனரல் டயர்**

14. 1920 டிசம்பர் மாதம் _____ தலைமையில் நாக்பூரில் ஒத்துழையாமை இயக்க அமர்வு கூட்டம் நடைபெற்றது.
அ) சேலம் விஜயராகவாச்சாரியார்
ஆ) சேலம் ராமசாமி
இ) ஒமன்தூரார்
ஈ) காந்தியடிகள் **விடை: அ) சேலம் விஜயராகவாச்சாரியார்**

15. பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கிய நாள் _____.
அ) 1921 பிப்ரவரி ஆ) 1922 பிப்ரவரி
இ) 1923 பிப்ரவரி ஈ) 1922 மார்ச் **விடை: ஆ) 1922 பிப்ரவரி**

16. காங்கிரஸ் கட்சியில் வல்லபாய் படேல் மற்றும் ராஜகோபாலாச்சாரியார் _____ நபர்கள்.
அ) மாற்றத்தை விரும்பாதவர்கள்
ஆ) மாற்றத்தை விரும்புவர்கள்
இ) எதுவுமே வேண்டாம்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: அ) மாற்றத்தை விரும்பாதவர்கள்**

17. 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக _____ என்பது அறிமுகம் ஆனது.
அ) ஒற்றையாட்சி ஆ) மாகாண ஆட்சி
இ) இரட்டை ஆட்சி ஈ) மக்களாட்சி
விடை: இ) இரட்டை ஆட்சி

18. 'சைமனே திரும்பிப் போ' போராட்ட முழக்கத்தில் காயமடைந்து இறந்த தியாகி _____.
அ) கான் அப்துல் காபர் கான் ஆ) லாலா லஜபதிராள்
இ) பிபின் சந்திர பால் ஈ) பகத்சிங்
விடை: ஆ) லாலா லஜபதிராய்

19. டொமினியன் அந்தஸ்து வேண்டி _____ ஆண்டில் லாகூரில் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது.
அ) 1929 டிசம்பர் ஆ) 1930 டிசம்பர்
இ) 1928 டிசம்பர் ஈ) 1931 டிசம்பர்
விடை: அ) 1929 டிசம்பர்

20. 1930 மார் 12ஆம் நாள் 78 நபர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற _____ தொடங்கினார்.
அ) ஒற்றுமை யாத்திரை ஆ) தண்டி யாத்திரை
இ) சட்டமன்ற யாத்திரை ஈ) இந்து - முஸ்லீம் ஒற்றுமை
விடை: ஆ) தண்டி யாத்திரை

21. _____ மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் என்பவர் உப்பு சத்தியாக்கிரகத்திற்கு தலைமையேற்றார்.
அ) வடமேற்கு எல்லை ஆ) வங்காளம்
இ) வடகிழக்கு எல்லை ஈ) தென்மேற்கு
விடை: அ) வடமேற்கு எல்லை

22. ஆங்கிலேயர்கள் _____ முதலாவது வனச் சட்டத்தை நிறைவேற்றினார்கள்.
அ) 1865 ஆ) 1866
இ) 1867 ஈ) 1868
விடை: அ) 1865

23. பழங்குடி மக்களுக்கு போராடிய காந்தியடிகள் கைது செய்யப்பட்டு _____ சிறையில் அடைக்கப்பட்டார்.
அ) அலிகார் ஆ) கோரக்பூர்
இ) கொல்கத்தா ஈ) எரவாடா
விடை: ஈ) எரவாடா

24. காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட நாள் _____.
அ) 1931 மார்ச் 5 ஆ) 1930 மார்ச் 5
இ) 1932 மார்ச் 5 ஈ) 1934 மார்ச் 5
விடை: அ) 1931 மார்ச் 5

25. 1932 ஆகஸ்ட் 16ஆம் நாள் _____ ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
அ) மாகாண ஆட்சி ஆ) இரட்டையாட்சி
இ) வகுப்புவாரி ஈ) சுயாட்சி
விடை: இ) வகுப்புவாரி

26. 1929இல் மத்திய சட்டப் பேரவையில் _____ ஒன்றை பகத்சிங்கும் B.K. தத்தும் வீசினார்கள்.
அ) கல் ஆ) காலணி
இ) புகைக்குண்டு ஈ) மரக்கட்டை **விடை: இ) புகைக்குண்டு**

27. காந்தியடிகளின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி 1939இல் _____ காங்கிரஸ் தலைவரானார்.
ஆ) கோலகலே ஆ) திலகர்
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) வினோபாபாவே **விடை: இ) சுபாஷ் சந்திரபோஸ்**

28. _____ என்பவர் தனது நிலைப்பாட்டில் மாறி முஸ்லீம்களுக்கு தனி நாடு வேண்டும் என்றார்.
அ) அப்துல் கான் ஆ) முகம்மது இக்பால்
இ) முகம்மது கனி ஈ) அகமது கான் **விடை: ஆ) முகம்மது இக்பால்**

29. 1941 மார்ச்சில் சுபாஷ் சந்திரபோஸ் தனது இல்லத்தில் இருந்து மாறுவேடம் பூண்டு _____ சென்றடைந்தார்.
அ) பாகிஸ்தான் ஆ) நேபாளம்
இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா **விடை: இ) ஆப்கானிஸ்தான்**

30. சுபாஷ் சந்திரபோஸ் _____ சுதந்திர இந்தியாவின் தற்கால அரசாங்கத்தை அமைத்தார்.
அ) பர்மாவில் ஆ) இலங்கையில்
இ) மலேசியாவில் ஈ) சிங்கப்பூரில் **விடை: ஈ) சிங்கப்பூரில்**

31. பிரிட்டனில் தொழிற்கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று _____ பிரதம மந்திரியாக பொறுப்பேற்றார்.
அ) வின்ஸ்டன் சர்ச்சில் ஆ) கிளமண்ட் அட்லி
இ) ரூதர் போர்டு ஈ) மெக்டொனால்டு **விடை: ஆ) கிளமண்ட் அட்லி**

32. பாகிஸ்தான் தனி நாடு வேண்டி 1946 ஆகஸ்ட் 16ஆம் நாளை _____ ஜின்னா அறிவித்தார்.
அ) பாகிஸ்தான் சுதந்திர நாளாக ஆ) இசுலாமிய தேசமாக
இ) நேரடி நடவடிக்கை நாளாக ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: இ) நேரடி நடவடிக்கை நாளாக

33. ராட் கிளிஃப் பிரவுன் தலைமையில் _____ நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப் பட்டது.
அ) உரிமைகள் ஆ) விடுதலையை
இ) வாழ்வுரிமையை ஈ) எல்லைகளை **விடை: ஈ) எல்லைகளை**

34. _____ மூலம் இந்திய தேசம் இந்தியா - பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
அ) இந்திய விடுதலைச் சட்டம் ஆ) இந்திய மாகாணச் சட்டம்
இ) 1935 இந்திய அரசுச் சட்டம் ஈ) இடைக்காலச் சட்டம்
விடை: அ) இந்திய விடுதலைச் சட்டம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தென்னாப்பிரிக்காவில் அனைவரும் பின்பற்றத்தக்க முறையில் _____ என்ற புதிய வழிமுறையை காந்திஜி அறிமுகம் செய்தார். **விடை: சத்தியாக்கிரகம்**
2. காந்தியடிகளுக்கு _____, _____ ஆகியோரின் எழுத்தாளர்களுடன் அறிமுகம் கிடைத்தது. **விடை: டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின்**
3. ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் _____ குடியிருப்பையும், _____ பண்ணையையும் நிறுவினார். **விடை: பீனிக்ஸ், டால்ஸ்டாய்**
4. தென்னாப்பிரிக்காவில் ஒப்பந்த தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலை வரி _____ ஒப்பந்தத்தின் படி ரத்து செய்யப்பட்டது. **விடை: ஸ்மட்ஸ் - காந்தி**
5. பீகாரில் உள்ள சாம்பரானில் உள்ள விவசாயிகளை _____ சாம்பரானுக்கு வந்து விவசாயிகள் பிரச்சனைகளைக் கண்டறியுமாறு காந்தியடிகளைக் கேட்டுக் கொண்டார். **விடை: ராஜ்குமார் சுக்லா**
6. பீகார் சாம்பரான் பிரச்சனையில் காந்தியடிகளுக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டவர்கள், _____, _____. **விடை: ராஜேந்திர பிரசாத், பிரஜ் கிஷோர் பிரசாத்**
7. ரௌலட் சட்டத்தை காந்தியடிகள் _____ என்று வர்ணித்தார். **விடை: கருப்புச் சட்டம்**
8. ரௌலட் சட்டத்திற்கு எதிராக பஞ்சாபில் குறிப்பாக _____ மற்றும் _____ போராட்டங்கள் தீவிரமடைந்தது. **விடை: அமிர்தசரஸ், லாகூர்**
9. பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தை சுற்றி வளைத்து கண்மூடித்தனமாக சுட்டவர் _____. **விடை: ஜெனரல் ரெஜினால்டு டயர்**
10. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு பிறகு ஆங்கில அரசு _____ கொண்டு வந்து அமிர்தசரஸ் மக்களை கொடுமைப்படுத்தியது. **விடை: படைத்துறைச் சட்டம்**
11. 1919 கிலாபத் இயக்க மாநாட்டில் அல்லாஹு அக்பர், வந்தே மாதரம், இந்து-முஸ்லீம் வாழ்க என மூன்று தேசிய முழக்கங்களை முன் மொழிந்தவர் _____. **விடை: சௌகத் அலி**
12. 1920 ஜூன் 9 இல் _____ கூடிய கிலாபத் இயக்கம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக் கொண்டது. **விடை: அலகாபாத்தில்**
13. காந்தியடிகளின் நாடு தழுவிய சுற்றுப் பயணத்தின் போது அவரது பயணம் மேற்கொண்ட இடங்களில் _____ தீயிட்டு கொளுத்தப்பட்டன. **விடை: அந்நிய துணிகள்**
14. வரி கொடா இயக்க போராட்ட விளைவாக இந்திய பயணத்தை ரத்து செய்த ஆங்கில இளவரசர் _____. **விடை: வேல்ஸ்**
15. _____ நிகழ்வைத் தொடர்ந்து காந்தியடிகள் வரி கொடா இயக்கத்தைத் திரும்பப் பெற்றார். **விடை: சௌரி சௌரா**
16. _____ இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டு நாடு முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. **விடை: 1930 ஜனவரி 26 ஆம் நாள்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

17. 1878ஆம் ஆண்டின் இந்திய வளங்கள் சட்டத்தின்படி _____ அரசிடம் இருந்தது.
விடை: வனங்களின் உரிமை

18. பழங்குடியினர் நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு முக்கிய காரணமாக விளங்கியவர் _____.
விடை: அல்லூரி சீதாராம ராஜு

19. அல்லூரி சீதாராம ராஜு அவர்கள் செஞ்சட்டைகள் என்றழைக்கப்பட்ட _____ இயக்கத்தை நடத்தினார்.
விடை: குடை கிட்மட்கர்

20. 1932 செப்டம்பர் 30 நாள் காந்தியடிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு _____ பெற சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.
விடை: தனித் தொகுதிகள்

21. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக காந்தியடிகளுக்கும் அம்பேத்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் _____.
விடை: பூனா ஒப்பந்தம்

22. 1924 கான்பூர் சதித் திட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட தமிழர் _____.
விடை: வி. சிங்காரவேலர்

23. பகத்சிங், சுக்தேவ் மற்றும் அவர்களது தோழர்கள் இந்துஸ்தான் குடியரசு இராணுவத்தை அமைத்த இடம் _____.
விடை: பஞ்சாப்

24. லாலா லஜபதிராயின் உயிரிழப்பிற்குக் காரணமான ஆங்கில தளபதி _____.
விடை: சாண்டர்ஸ்

25. 1935 இந்திய அரசுச் சட்டத்தின்படி _____ நாடு இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டது.
விடை: பர்மா

26. வடமேற்கு எல்லை மாகாணங்களில் காங்கிரஸ் _____ இணைந்து கூட்டணி அரசை அமைத்தது.
விடை: அசாம் பள்ளத்தாக்கு முஸ்லீம் லீக்

27. நாஜிகள் சோவியத் யூனியன் மீது நடத்திய போரை இந்திய பொதுவுடைமைவாதிகள் வர்ணித்த விதம் _____.
விடை: மக்களின் போர்

28. 1940 அக்டோபர் 17 இல் _____ சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்தார்.
விடை: வினோபா பாவே

29. பர்மாவில் இருந்த ஜப்பானியர்களோடு இணைந்து இந்திய தேசிய இராணுவத்தை _____ உருவாக்கினார்.
விடை: ஜெனரல் மோகன் சிங்

30. 1947ஆம் ஆண்டு இந்தியாவில் அதிகாரம் மாற்றம் ஏற்படும் என்று கூறிய இங்கிலாந்து பிரதமர் _____.
விடை: கிளமண்ட் அட்லி

31. இந்தியாவின் மீதான ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை ரத்து செய்த சட்டம் _____.
விடை: 1947 பிரிட்டிஷ் நாடாளுமன்றச் சட்டம்

32. ஒன்றுபட்ட இந்தியாவை இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடுகளாக பிரித்த சட்டம் _____.
விடை: 1947 பிரிட்டிஷ் நாடாளுமன்றச் சட்டம்

III. பொருத்துக.

I	1.	சுரண்டல் முறை	-	அ) அவுரி
	2.	டிரான்ஸ்வால்	-	ஆ) காந்தியடிகள்
	3.	இண்டிகோ	-	இ) வல்லபாய் படேல்
	4.	கெய்சர்-இ-ஹின்த்	-	ஈ) தீன் காதியா
	5.	மாற்றத்தை விரும்பாதவர்கள்	-	உ) தென்னாப்பிரிக்கா

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.ஆ 5.இ

II	1.	1928 கமிட்டி	-	அ) சர். ஜான் சைமன்
	2.	இந்திய சட்டபூர்வ ஆணையம்	-	ஆ) ராம்பா
	3.	வடமேற்கு எல்லை மாகாணம்	-	இ) ரயில்வண்டி கொள்ளை
	4.	பழங்குடியினர் போராட்டம்	-	ஈ) நேரு அறிக்கை
	5.	ககோரி சதி வழக்கு	-	உ) கான் அப்துல் கபார்கான்

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.ஆ 5.இ

III	1.	இன்குலாப் ஜிந்தாபாத்	-	அ) சுபாஷ் சந்திரபோஸ்
	2.	செய் அல்லது செத்துமடி	-	ஆ) ராயல் இந்திய கடற்படை கிளர்ச்சி
	3.	தில்லிக்கு புறப்படு	-	இ) எல்லைகள் நிர்ணயிக்கும் ஆணையம்
	4.	1946 பிப்ரவரி பம்பாய்	-	ஈ) பகத்சிங் - சுக்தேவ்
	5.	ராட்கிளிஃப் பிரவுன்	-	உ) காந்தியடிகள்

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.ஆ 5.இ

IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : 1920 டிசம்பர் மாதம் சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

காரணம் : பட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான பதவிகள் அனைத்தும் திரும்ப ஒப்படைப்பது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் சரியான விளக்கம் ஆகும்.

விடை: ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் சரியான விளக்கம் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. (i) பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது.
(ii) இண்டிகோ எனப்படும் சிவப்புச் சாயம் சந்தையில் விற்கப்படுவது குறைந்தது.
(iii) சாம்பரான் விவசாயிகளுக்கு போராடியவர் ஆச்சார்யா வினோபா பாவே.
(iv) காந்தியடிகள் அயராது போராட்டம் நடத்தியதால் தீன் காதியா முறை ரத்து செய்யப் பட்டது.

அ) (i) மற்றும் (ii) சரியானது ஆ) (i) மற்றும் (iii) சரியானது
இ) (iv) தவறானது ஈ) (i) மற்றும் (iv) சரியானது

விடை: ஈ) (i) மற்றும் (iv) சரியானது

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. காந்தியடிகளுக்கு சத்தியாகிரக பயிற்சி களங்களாக அமைந்தது எது?

- பீனிக்ஸ் குடியிருப்பு, டால்ஸ்டாய் பண்ணை.
- சமத்துவம், சமூக வாழ்க்கை.
- தொழில் மீது மரியாதை, நற்பண்புகள்.

2. காந்தியடிகள் வர்ணித்த கருப்புச் சட்டம் பற்றி குறிப்பு வரைக.

- பிடி உத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை.
- விசாரணை இல்லாமல் சிறையில் அடைப்பது போன்ற அதிகாரங்கள் ஆங்கில அரசிற்கு வழங்கிய ரௌலட் சட்டமே கருப்புச் சட்டம் என வர்ணித்தார்.

3. 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் குறிப்பு வரைக.

- இரட்டை ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறைகள், நகர்த்தப்படாத துறைகள் என இரண்டாக பிரிக்கப்பட்டது.

4. நேரு அறிக்கை - குறிப்பு வரைக.

- 1928 ஆம் ஆண்டு அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது.
- இங்கு கொள்கை அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக மோதிலால் நேரு தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டது.
- இந்த கமிட்டியின் அறிக்கையே நேரு அறிக்கை எனப்பட்டது.

5. உப்புச் சத்தியாகிரகத்தின் கோரிக்கைகள் யாவை?

- உப்பு வரியை ரத்து செய்வது.
- நில வருவாயை 50 சதவிகிதமாகக் குறைப்பது.
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
- இராணுவச் செலவுகளை 50 சதவிகிதம் குறைப்பது.

6. பூனா ஒப்பந்தம் - குறிப்பு வரைக.

- ஒடுக்கப்பட்ட மக்களுக்காக காந்தியடிகள் மற்றும் அம்பேத்கார் இருவருக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

- இந்த பேச்சுவார்த்தை ஒப்பந்தம் பூனா ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் கூட்டுத் தொகுதி வரைவு ஏற்கப்பட்டது.

7. காகோரி சதி வழக்கு என்றால் என்ன?

- 1925 ஆம் ஆண்டு ராம் பிரசாத் பிஸ்மில் அஷ்ஃபா பாகுல்யாகான் மற்றும் பலர் லக்னோ அருகில் உள்ள காஜோரி என்ற கிராமத்தில் அரசு பணத்தை ஏற்றிச் சென்ற ஒரு ரயில் வண்டியை நிறுத்தி கொள்ளையடித்தனர்.
- இவர்கள் இருவருக்கும் காகோரி சதி வழக்கில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டது.

9. ராயல் இந்திய கடற்படை கிளர்ச்சி - குறிப்பு வரைக.

- 1946 பிப்ரவரி மாதம் பம்பாயில் ராயல் இந்திய கடற்படை மாலுமிகள் கிளர்ச்சி செய்தனர்.
- இக்கிளர்ச்சியில் சுமார் 20,000 மாலுமிகள் கலந்து கொண்டனர்.
- இந்திய விமானப்படை மற்றும் இந்திய சமிக்ஞை (சிக்னல்) படையிலும் கிளர்ச்சிகள் நடைபெற்றன.
- இக்கிளர்ச்சி ஆங்கிலேயர்களை வலு குறைந்தவர்களாக ஆக்கியது.

10. மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?

- இந்தியர்களுக்கு அதிகாரம் மாற்றம் ஏற்படும் வகையில் மவுண்ட் பேட்டன் பிரபு இந்திய அரசுப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார்.
- 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் நாள் மவுண்ட் பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இதன்படி இந்திய விடுதலையும், இந்தியா இரு நாடுகளாக (இந்தியா,- பாகிஸ்தான்) பிரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் போராட்டம் பற்றி விவரி.

- மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சம உரிமைகளுக்காக சுமார் 20 ஆண்டுகள் போராடியவர்.
- இங்கிலாந்தில் சட்டம் பயின்று வழங்கறிஞராக வேலை பார்க்க தென்னாப்பிரிக்கா சென்றார்.
- தென்னாப்பிரிக்காவில் இனவெறியானது தலைதூக்கி ஆடியது.
- காந்தியடிகள் டர்பனில் இருந்து பிரிட்டோரியாவிற்கு ரயிலில் பயணம் செய்த போது பீட்டர் மாரிட்ஸ்பெர்க் ரயில் நிலையத்தில் முதல் வகுப்பு பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டார்.
- கூலிகளைப் போன்று நடத்திய தென்னாப்பிரிக்கா இனவெறியை எதிர்த்து போர் செய்தார்.

- டிரானஸ்வாலில் பொதுக்கூட்டத்தைக் கூட்டி இனவெறியை எதிர்த்து போராட ஒரு அமைப்பு வேண்டும் என அறிவித்தார்.
- அந்த நாட்டின் சட்டங்களை எதிர்த்து தொடர்ந்து மனுக்கள் அளித்து வந்தார்.
- டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலைவரியாக 3 பவுண்ட் செலுத்த வேண்டி இருந்தது.
- டிரான்ஸ்வாலில் சொந்தமாக இந்தியர்களின் நிலங்கள் வைத்துக் கொள்ள முடியாத நிலை இருந்தது.
- இதனை எதிர்த்து அவர் போராடினார்.
- ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் பீனிக்ஸ் குடியிருப்பையும், டால்ஸ்டாய் பண்ணையையும் நிறுவினார்.
- இந்தக் குடியிருப்புகள் மூலம் காந்தியடிகள், சமத்துவம், சமூக வாழ்க்கை, தொழில் மீது பக்தி, அறவழி ஆகிய பண்புகளைப் பெற்றார்.
- தென்னாப்பிரிக்கா போராட்ட களங்கள் காந்தியடிகளை இந்திய போராட்டக் களங்களுக்கு தயார்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

2. சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவம் பற்றி விளக்குக.

- இந்திய தேசிய காங்கிரஸில் இருந்து விலகிய சுபாஷ் சந்திரபோஸ் பிரிட்டிஷாரின் எதிரிகளோடு கைகோர்த்து தாக்குதல் நடத்த விரும்பினார்.
- 1941 இல் தமது இல்லத்தில் இருந்து மாறுவேடத்தில் ஆப்கானிஸ்தான் சென்று சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற்றார்.
- 1943 இல் ஜப்பான் சென்று இந்திய தேசிய இராணுவத்தின் கட்டுப்பாட்டை கையில் எடுத்தார்.
- இந்திய போர்க்கைதிகளைக் கொண்டு பர்மாவில் ஜப்பானியர்கள் ஆதரவோடு இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார்.
- ஜெனரல் மோகன் சிங் மற்றும் கேப்டன் லட்சுமி செகல் என்பவர்களால் இந்திய தேசிய ராணுவம் நடத்தப்பட்டது.
- பெண்கள் பிரிவாக ராணி லட்சுமிபாய் பிரிகேட் என்றும், ஆண்களை பிரிவாக காந்தி பிரிகேட், நேரு பிரிகேட் என மறு சீரமைத்தார்.
- சிங்கப்பூரில் இந்திய தேசிய இராணுவ அரசாங்கத்தை நிறுவினார்.
- ஜப்பானிய படைகளின் நடு பிரிவாக இந்திய தேசிய இராணுவம் செயல்பட்டது.
- இவரது 'தில்லிக்கு புறப்படு', 'தில்லி சலோ' என்ற முழக்கம் எழுச்சியை உண்டு பண்ணியது.
- இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியடையவே இவரது இந்திய தேசிய இராணுவம் தடைபட்டது.
- விமான விபத்தில் இறந்த பின் இவரது தீவிரப்பணிகள் முடிவுக்கு வந்தது.

வரலாறு

தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

அலகு 9

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?**
   அ) T.M. நாயர் ஆ) P. ரங்கையா
   இ) G. சுப்ரமணியம் ஈ) G.A. நடேசன் **விடை: ஆ) P. ரங்கையா**

2. **இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?**
   அ) மெரினா ஆ) மைலாப்பூர்
   இ) புனித ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு **விடை: ஈ) ஆயிரம் விளக்கு**

3. **"அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?**
   அ) அன்னிபெசன்ட் ஆ) M. வீரராகவாச்சாரி
   இ) B.P. வாடியா ஈ) G.S. அருண்டேல் **விடை: அ) அன்னிபெசன்ட்**

4. **கீழ்க்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?**
   அ) S. சத்தியமூர்த்தி ஆ) கஸ்தூரிரங்கர்
   இ) P. சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா. **விடை: அ) S. சத்தியமூர்த்தி**

5. **சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?**
   அ) K. காமராஜ் ஆ) C. இராஜாஜி
   இ) K. சந்தானம் ஈ) T. பிரகாசம் **விடை: ஈ) T. பிரகாசம்**

6. **இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?**
   அ) ஈரோடு ஆ) சென்னை
   இ) சேலம் ஈ) மதுரை **விடை: இ) சேலம்**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய நீதிபதி _____ ஆவார்.
   விடை: T. முத்துசாமி

2. _____ எனும் ரகசிய அமைப்பை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்.
   விடை: பாரத மாதா சங்கம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. சென்னையில் தொழிற்சங்கங்களைத் தொடங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் _____ ஆவார்.
விடை: B.P. வாடியா

4. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் _____.
விடை: ராஜாஜி

5. _____ முஸ்லீம் லீக்கின் சென்னைக் கிளையை உருவாக்கியவராவார்.
விடை: யாகூப் ஹசன்

6. 1932 ஜனவரி 26 இல் _____ புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.
விடை: பாஷ்யம்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) சென்னைவாசிகள் சங்கம் 1852 இல் நிறுவப்பட்டது.
ii) தமிழில் வெளிவந்த தேசியப் பருவ இதழான சுதேசமித்திரன் 1891இல் தொடங்கப்பட்டது.
iii) குடிமைப்பணித் தேர்வுகள் இந்தியாவில் மட்டுமே நடத்தப்பட வேண்டுமென சென்னை மகாஜன சபை கோரியது.
iv) V.S. சீனிவாசனார் ஒரு தீவிர தேசியவாதியாவார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி ஆ) (iii) மட்டும் சரி
இ) (iv) மட்டும் சரி ஈ) அனைத்தும் சரி

விடை: அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி

2. i) ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் பங்கேற்கவில்லை.
ii) முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த யாகூப் ஹசனுடன் ராஜாஜி நெருக்கமாகப் பணியாற்றினார்.
iii) ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவில்லை.
iv) தமிழ்நாட்டில் கள்ளுக்கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யப்படவில்லை.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (ii) சரி
ஈ) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

விடை: இ) (ii) மட்டும் சரி

IV. பொருத்துக.

1. சென்னைவாசிகள் சங்கம்	-	அ) இந்தி எதிர்ப்புப் போராட்டம்
2. ஈ.வெ.ரா	-	ஆ) நீல் சிலையை அகற்றுதல்
3. S.N. சோமையாஜூலு	-	இ) உப்புச் சத்தியாகிரகம்
4. வேதாரண்யம்	-	ஈ) சித்தரவதை ஆணையம்
5. தாளமுத்து	-	உ) வைக்கம் வீரர்

விடை: 1.ஈ 2.உ 3.ஆ 4.இ 5.அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.

- அரசியலமைப்பு வழிமுறையில் நம்பிக்கை கொண்டிருத்தல்.
- அவைக் கூட்டங்களை நடத்துதல்.
- பிரச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுதல்.
- தங்கள் கண்ணோட்டங்களை மொழி நடையில் வேண்டுகோள் மூலம் மனுக்கள் அளித்தல்.
- குறிப்பாணை மூலம் அரசுக்கு சமர்ப்பித்தல்.
- ஆங்கிலேயர்களின் காலனியச் சுரண்டலை அம்பலப்படுத்துதல்.

2. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.

- திருநெல்வேலி தூத்துக்குடியில் நூற்பாலை தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதில் வ.உ. சிதம்பரனார் சுப்பிரமணிய சிவாவுடன் ஒத்துழைத்தார்.
- ஆங்கில அரசு இவர்கள் இருவரையும் தேச துரோக வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தது.
- இதனை எதிர்த்து திருநெல்வேலியில் கலகம் வெடித்தது.
- காவல்நிலையங்கள், நீதிமன்ற-நகராட்சி அலுவலங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டது.
- ஆங்கிலேய காவலர்கள் துப்பாக்கி சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.

3. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

- அன்னிபெசன்ட் அம்மையார் தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்ல நியூ இந்தியா, காமன் வீல் என இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.
- 1910 பத்திரிகை சட்டத்தின்படி பெருமளவு பிணைத்தொகையை செல்லுத்தியவர்.
- பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களை தமது இயக்கத்தில் சேர்த்தவர்.
- 'அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதை விட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது' எனக் கூறியவர்.
- இந்தியர்களுக்கு தன்னாட்சி கிடைக்க அரும்பாடுபட்டவர்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

- வங்க பிரிவினையின் விளைவாக சுதேசி இயக்கம் தோன்றியது.
- அந்நிய பண்டங்களை புறக்கணித்தல் போன்ற தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- சுப்பிரமணிய பாரதியாரின் தேசப்பற்று மிக்க பாடல்கள், பெருமளவு இளைஞர்களை சேர்த்தது.
- வ.உ. சிதம்பரனார் சுதேசி நீராவிக் கப்பல்களை தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இயக்கினார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- திருநெல்வேலி கலகம் இளைஞர்களிடையே போராட்ட குணத்தை அதிகரித்தது.
- பாண்டிச்சேரியில் புகலிடமாக இருந்து விடுதலை உணர்வை மேற்கொண்டனர்.
- ஆங்கிலேய அதிகாரி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆஷ் என்பவரை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்று மக்களிடையே தேசப்பற்றை தூண்டினார்.
- பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் செய்து பல சொற்பொழிவுகளை நடத்தி இளைஞர்களை கவர்ந்தார்.
- தென்னிந்தியா நலவுரிமைச் சங்கமும் காங்கிரசின் விடுதலை போராட்டத்தில் கலந்து கொண்டது.
- ஒத்துழையாமை இயக்கதின் போது சி. இராஜாஜியும், ஈ.வெ.ரா. பெரியாரும் துடிப்புடன் செயல்பட்டனர்.
- வரி கொடா இயக்கமும், அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பும் தமிழகம் முழுவதும் நடந்தேறின.

2. தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.

பிராமணர் அல்லாதோர் இயக்கம்:

- தங்கள் நலன்களைப் பாதுகாக்க பிராமணரல்லாதோர்கள் 1912 இல் சென்னை திராவிடர் கழகம் என்னும் அமைப்பைத் தொடங்கினர்.
- இக்கழகத்தின் செயலாளராக C. நடேசனார் பணியாற்றினார். அவர் 1916 இல் பிராமணர் அல்லாத மாணவர்க்கு திராவிடர் சங்க தங்கும் விடுதியை நிறுவினார்.
- இதில் T.M. நாயர், P. தியாகராயர் ஆகிய நபர்கள் முக்கிய பங்காற்றினர்.
- இதுவே பிராமணரல்லாதோர் நலன்களைப் பாதுகாக்க தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக மாறியது.
- ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா என்ற மூன்று செய்தித்தாள்களில் விழிப்புணர்வு மேற்கொண்டனர்.
- இதுவே பின்னர் நீதிக் கட்சியாக மாறி பிராமணர் அல்லாத பிற மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் எனப் போராடியது.
- இதன் விளைவாக 1919ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணல்லாதோர்க்கு தேர்தலில் இட ஒதுக்கீடு வழங்கியது.
- 1920 நீதிக்கட்சி சென்னை மாகாண தேர்தல்களில் வெற்றி பெற்று பிற மக்களுக்கும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்கியது.

3. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.

- 1927 இந்திய தேசிய காங்கிரசின் மாநாடு சுதந்திரமே தனது இலக்கு என தீர்மானித்தது.
- காந்தியடிகளின் தண்டி யாத்திரை தமிழகத்திலும் எதிரொலித்தது.
- ராஜாஜி அவர்கள் திருச்சியில் இருந்து கடற்கரை நகரமான வேதாரண்யம் சென்று உப்பு காய்ச்சி கால்நடையாக போராட்டத்தை தொடங்கினார்.
- ராஜாஜியுடன் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களின் தேசபக்தி வீரப் பாடல்கள் அணிவகுப்பில் எதிரொலித்தது.
- பயணித்த பாதை எங்கும் வரவேற்பு கிடைத்தது.
- ராஜாஜி தலைமையிலான 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பு காய்ச்சி எதிர்ப்பை தெரிவித்தனர்.
- ராஜாஜி மற்றும் T.S.S. ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம் போன்றோர் கைது செய்யப்பட்டனர்.
- இந்த சட்ட மறுப்பு இயக்கங்கள் சென்னை திருவல்லிக்கேணி, இராமேஸ்வரம், உவரி, வேப்பலோடை, தூத்துக்குடி, தருவைகுளம் போன்ற இடங்களில் நடந்தேறியது.
- தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் அந்நிய துணிகள் விற்கும் கடைகளை தடை செய்தார்.
- திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் போராட்டம் நடந்தது. போராட்டத்தில் திருப்பூர்குமரன் காவலர்கள் தடியடியில் இறந்தார்.
- மொத்தத்தில் சட்டமறுப்பு இயக்கம் மிகப்பெரிய இயக்கமாக தமிழ்நாட்டில் எழுச்சி பெற்றது.

VII. செயல்பாடுகள்

1. தமிழ்நாட்டிலுள்ள சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய இடங்கள் குறித்து மாணவர்களை ஓரிரு வாக்கியங்கள் எழுதச் சொல்லவும்.

ஆசிரியர் - மாணவர் செயல்பாடு.

2. விவாத மேடை: மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள், புரட்சிகர தேசியவாதிகள், அன்னிபெசன்ட்டின் ஆதரவாளர்கள், நீதிக்கட்சி, ஆங்கில அரசாங்கம் ஆகியோரின் கருத்துகள் குறித்து விவாதிக்கச் செய்யலாம்.

ஆசிரியர் - மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ புரட்சியானது தென்னிந்தியாவின் பல இராணுவ முகாம்களில் ஒலித்தது.

அ) வேலூர் ஆ) கான்பூர்
இ) லக்னோ ஈ) ஜான்சி

விடை: அ) வேலூர்

2. _____ 1891இல் சுதேச மித்திரன் என்ற பெயரில் தமிழில் தேசிய பருவ இதழை நடத்தினார்.

அ) V.S. சீனிவாசனார் ஆ) G.A. நடேசன்
இ) G. சுப்பிரமணியம் ஈ) T. முத்துசாமி

விடை: இ) G. சுப்பிரமணியம்

3. _____ முதலாம் தலைமுறையைச் சேர்ந்த தேசியவாதிகளுக்கு பயிற்சிக் களமாக விளங்கியது.
அ) சென்னை மாகாண சபை ஆ) நீதிக்கட்சி
இ) தேசியவாத இயக்கம் ஈ) சென்னைவாசிகள் சங்கம்
விடை: அ) சென்னை மாகாண சபை

4. _____ தனது எழுத்துகளின் மூலமாக சென்னை மக்களிடம் தேசியத்தை முன்னெடுத்தவர்.
அ) P.S. சுவாமி ஆ) G.A. நடேசன்
இ) G. சுப்பிரமணியம் ஈ) லட்சுமி நரசிம்மன் **விடை: இ) G. சுப்பிரமணியம்**

5. _____ கல்கத்தாவில் தாதாபாள் நௌரோஜி தலைமையில் நடைபெற்றது.
அ) 1896 ஆ) 1876
இ) 1866 ஈ) 1886 **விடை: ஈ) 1886**

6. வ.உ. சிதம்பரனாரின் சுதேசி நீராவி கப்பல் கம்பெனி _____, _____இடையே நடைபெற்றது.
அ) அந்தமான் - நிகோபார் தீவுகள்
ஆ) இலட்சத் தீவுகள்
இ) தூத்துக்குடி - கொழும்பு
ஈ) தூத்துக்குடி - மலேசியா **விடை: இ) தூத்தக்குடி - கொழும்பு**

7. திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உசி.யுடன் _____ தோளோடு தோள் நின்றார்.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) குழ காமராஜர் ஈ) சுப்பிரமணிய சிவா **விடை: ஈ) சுப்பிரமணிய சிவா**

8. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்ற நாள் _____.
அ) 1910 ஜூன் 17 ஆ) 1912 ஜூன் 17
இ) 1911 ஜூன் 17 ஈ) 1913 ஜூன் 17 **விடை: இ) 1911 ஜூன் 17**

9. பிராமணரல்லாதோர் இயக்கமாக 1912இல் _____ உருவாக்கப் பெற்றது.
அ) சென்னை திராவிடர் கழகம்
ஆ) தென்னிந்திய நல உரிமைக் கழகம்
இ) சென்னை வாசிகள் சங்கம்
ஈ) திராவிடர் கழகம் **விடை: அ) சென்னை திராவிடர் கழகம்**

10. _____ ஜூன் மாதத்தில் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக திராவிடர் சங்க தங்கும் விடுதியை நிறுவியது.
அ) 1917 ஆ) 1916
இ) 1918 ஈ) 1919 **விடை: ஆ) 1916**

11. 1923இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் நீதிக்கட்சியைச் சேர்ந்த _____ அமைச்சரவையை அமைத்தார்.
அ) கி. சுப்பராயுலு ஆ) ஜி.வி. நாயர்
இ) பனகல் அரசர் ஈ) செட்டி நாட்டரசர் **விடை: இ) பனகல் அரசர்**

12. 1919 மார்ச் 18இல் மெரினா கடற்கரையில் நடந்த கூட்டத்தில் _____ உரையாற்றினார்.
அ) நேரு ஆ) காமராஜர்
இ) காந்தியடிகள் ஈ) ராஜாஜி **விடை: இ) காந்தியடிகள்**

13. ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவாக _____ விவசாயிகள் வரி கொடா இயக்கம் ஆரம்பித்தனர்.
அ) வேதாரண்யம் ஆ) திருச்சி
இ) நாகப்பட்டினம் ஈ) தஞ்சாவூர் **விடை: ஈ) தஞ்சாவூர்**

14. கள் என்னும் மது உண்பதை எதிர்க்கும் விதமாக தனது தோட்டத்தில் இருந்த தென்னை மரங்களை வெட்டியவர் _____.
அ) அண்ணாதுரை ஆ) கு. காமராஜர்
இ) சத்தியமூர்த்தி ஈ) ஈ.வெ.ரா பெரியார் **விடை: ஈ) ஈ.வெ.ரா பெரியார்**

15. தேசியக் கல்வியை முன்னெடுக்கும் விதமாக குருகுலம் ஒன்றை V.V. சுப்ரமணியனார் _____ நிறுவினார்.
அ) திருநெல்வேலி ஆ) குற்றாலம்
இ) அம்பாசமுத்திரம் ஈ) சேரன்மகாதேவி **விடை: ஈ) சேரன்மகாதேவி**

16. _____ இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியம் கட்சி போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது.
அ) 1929 ஆ) 1930
இ) 1931 ஈ) 1932 **விடை: ஆ) 1930**

17. சென்னையில் _____ தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது.
அ) கு. காமராஜர் ஆ) தீரர் சத்தியமூர்த்தி
இ) P. சுப்பாராமன் ஈ) T.M. நாயர் **விடை: ஆ) தீரர் சத்தியமூர்த்தி**

18. 1929இல் _____ கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண ராஜ்ஜியம் என்பதே இலக்கு என தீர்மானிக்கப்பட்டது.
அ) லக்னோ ஆ) கான்பூர்
இ) லாகூர் ஈ) டில்லி **விடை: இ) லாகூர்**

19. தமிழக உப்புச் சத்தியாக்கிரக பாதயாத்திரை திருச்சியில் இருந்து _____ நோக்கிச் சென்றது.
அ) பட்டுக்கோட்டை ஆ) திருச்சி
இ) திருவாரூர் ஈ) வேதாரண்யம் **விடை: ஈ) வேதாரண்யம்**

20. _____ ஆட்சியில் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாய பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது.

அ) ரி. நாகேஸ்வர ராவ் ஆ) நேருஜி

இ) ராஜாஜி ஈ) நடேசனார் **விடை: இ) ராஜாஜி**

21. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது காவல்துறையினரின் கண்களில் படாமல் இருக்க காமராஜர் _____ ரயில் நிலையத்தில் இறங்கினார்.

அ) காஞ்சிபுரம் ஆ) விஜயவாடா

இ) அரக்கோணம் ஈ) செங்கல்பட்டு **விடை: இ) அரக்கோணம்**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காலனியாட்சியை எதிர்ப்பதில் _____ முன்னோடியாகத் திகழ்ந்தது.

விடை: தமிழ்நாடு

2. சென்னைவாசிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் சித்திரவதைக்கு உள்ளாவதைத் தடுக்க _____ நிறுவப்பட்டது. **விடை: சித்திரவதை ஆணையம்**

3. தமிழகத்தின் தேசிய பிரச்சார கருவியாக விளங்கிய பத்திரிகை _____.

விடை: தி இந்து

4. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு சென்னை ஆயிரம் விளக்கு _____ தோட்டத்தில் நடைபெற்றது. **விடை: மக்கிஸ்**

5. _____ இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

விடை: சுதேசி

6. 1908 இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான _____ நூற்பாலையில் வ.உ.சிதம்பரனார் வேலை நிறுத்தத்திற்கு தலைமையேற்றார். **விடை: கோரல்**

7. பாண்டிச்சேரி போராட்டம் 1910 இல் _____ வருகைக்குப்பின் தீவிரமடைந்தது.

விடை: அரவிந்த கோஷ்

8. அன்னிபெசன்ட் அம்மையார் _____, _____ என்னும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார். **விடை: நியூ இந்தியா, காமன் வீல்**

9. அன்னிபெசன்ட் அம்மையார் இயக்கத்தில் மாணவர்கள் _____ குழுக்களாக மாற்றப்பட்டனர். **விடை: சாரணர்**

10. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தமிழில் _____, தெலுங்கில் _____ எனும் செய்தித்தாள்களை தொடங்கியது. **விடை: திராவிடன், ஆந்திரபிரகாசிகா**

11. ரௌலட் சத்தியாகிரக எதிர்ப்பு கூட்ட ஊர்வலங்கள் சென்னையில் _____ என்ற இடத்தில் நடைபெற்றது. **விடை: மெரினா கடற்கரை**

12. 1920 ஏப்ரல் 17இல் _____ தலைமையேற்ற பொதுக்கூட்டம் கிலாபத் நாளாக கடைப்பிடிக்கப்பட்டது. **விடை: மௌலானா சௌகத் அலி**

13. _____ என்பவர் மெட்ராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட் படையைச் சேர்ந்தவர்.

விடை: ஜேம்ஸ் நெயில்

14. 1927 இல் இந்திய சட்டபூர்வ ஆணையம் _____ தலைமையில் அமைக்கப்பட்டது.

விடை: சர் ஜான்

15. 1932 ஜனவரி 26இல் பரவலாக _____ என்று அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றினார். **விடை: ஆரியா**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. (i) தமிழ்நாட்டின் தொடக்ககால தேசியவாதிகள் அரசியலமைப்பு முறைகளில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.
   (ii) இவர்களது பொதுக் கூட்டங்களில் வட்டார மொழிகளைப் பயன்படுத்தவில்லை.
   (iii) இவர்கள் அனைவரும் மிதவாதிகள் என அழைக்கப்பட்டனர்.
   (iv) இவர்கள் ஆங்கிலேயர் எவ்வாறு நம்மை சுரண்டினர் என அம்பலப்படுத்தவில்லை.

   அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
   ஆ) (i) மற்றும் (iv) ஆகியவை சரி
   இ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி
   ஈ) (iv) மட்டும் சரி

   விடை: இ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி

2. கூற்று : 1919ஆம் ஆண்டு ஆண்டுச் சட்டம் சீர்திருத்தங்கள் பரிந்துரை செய்ய 1927 இந்திய சட்டபூர்வ ஆணையம் சர் ஜான் தலைமையில் அமைக்கப்பட்டது.
   காரணம் : இந்த ஆணையத்தில் வெள்ளையர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இந்தியர்கள் எவரும் இல்லை.

   அ) காரணம், கூற்று இரண்டும் சரி. ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.
   ஆ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
   இ) கூற்று சரி. காரணம் தவறு.
   ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.

   விடை: ஆ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றக்கான சரியான விளக்கம்

IV. பொருத்துக.

I	1. தேசாபிமானி	-	அ) காங்கிரஸ் மூன்றாவது மாநாடு
	2. மக்கிஸ் தோட்டம்	-	ஆ) காலியா மற்றும் லாவோ
	3. வ.உ.சிதம்பரனார்	-	இ) உள்நாட்டுப் பத்திரிகை
	4. ஐரோப்பியர்	-	ஈ) பாரத மாதா சங்கம்
	5. 1904	-	உ) கோரல் நூற்பாலை

விடை: 1.இ 2.அ 3.ஆ 4.உ 5.ஈ

II

1.	சர் சிட்னி ரோலட்	-	அ) காங்கிரஸ் புறக்கணிப்பு
2.	1920 தேர்தல்	-	ஆ) நெயில் நீல் சிலை
3.	ரோசாப்பூ துரை	-	இ) ஜி. பிரகாசம்
4.	சென்னை அருங்காட்சியகம்	-	ஈ) 1919 புரட்சிகர குற்றச்சட்டம்
5.	உதயவனம்	-	உ) ஜார்ஜ் ஜோசப்

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.ஆ 5.இ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. சித்திரவதை ஆணையம் பற்றி குறிப்பு வரைக.

- வருவாய்த்துறை அதிகாரிகளால் விவசாயிகள் துன்புறுத்தப்பட்டனர்.
- இதனை எதிர்த்து சென்னைவாசிகள் சங்கம் போராட்டங்கள் பல நடத்தியது.
- அதன் விளைவாக சித்தரவதை ஆணையம் அமைக்கப்பட்டது.

2. அன்றைய சென்னை மாகாணம் பற்றி குறிப்பு வரைக.

- ஆந்திரத்தின் பெரும் பகுதிகள் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயல்சீமா)
- கர்நாடகா (பெங்களூரு பெல்லாரி)
- கேரளா (மலபார் பகுதிகள்)
- ஒரிஸா (கஞ்சம் பகுதிகள்) கொண்டது.

3. தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் பத்திரிகைகள் யாவை?

- ஆங்கிலத்தில் - ஜஸ்டிஸ்.
- தமிழில் - திராவிடன்.
- தெலுங்கில் - ஆந்திர பிரகாசிகா.

4. ரோசாப்பூ துரை என அழைக்கப்பட்டவர் யார்?

- மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞரும், நன்கு சொற்பொழிவு திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் என்பவரே ரோசாப்பூ துரை என அழைக்கப்பட்டார்.
- தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரை சமூகங்களின் பாதுகாவலராக விளங்கியதால் மதுரை மக்கள் இவரை இவ்வாறு அழைத்தனர்.

5. திருப்பூர் குமரன் தியாகம் பற்றி குறிப்பு வரைக.

- 1932 ஜனவரி 11இல் திருப்பூரில் தேசியக் கொடிகளை ஏந்திய ஊர்வலத்தில் திருப்பூர் குமரனும் பங்கேற்று ஊர்வலமாகச் சென்றார்.
- ஆங்கில அரசு தடியடி நடத்தியதில் திருப்பூர் குமரன் மரணமடைந்தாலும், அவர் கையில் தேசியக் கொடியை இறுகப் பிடித்துக் கொண்டார்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. நீதிக்கட்சி அமைச்சரவையின் சாதனைகளை விவரி.

- 1920களில் நடத்தப்பட்ட தேர்தல்களை காங்கிரஸ் புறக்கணிக்கவே நீதிக்கட்சி வெற்றி பெற்றது.
- நீதிக்கட்சியின் சுப்புராயலு முதலாவது முதலமைச்சரானார்.
- 1923 தேர்தலுக்குப் பின்னர் பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார்.
- பிராமணர் அல்லாதவர்க்கு பல நடவடிக்கைகளை எடுத்தது.
- உள்ளாட்சித் துறைகளில், கல்வி நிறுவனங்களில் வேலை வாய்ப்பில், இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டது.
- இந்து அறநிலையத் துறைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- சென்னை அரசு தொழில் உதவிச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- ஏழை எளிய மக்கள் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் கொள்ள இலவச மனைப் பட்டா வழங்கப்பட்டது.
- வசதியற்றவர்களுக்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கப்பட்டது.
- ஏழை மாணவர்கட்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.
- மதிய உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

வரலாறு

அலகு 10

தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. 1907இல் தரங்கம்பாடியில் _____ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ்
இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார் **விடை: இ) சீகன்பால்கு**

2. 1893இல் ஆதி திராவிட மகாஜன சபையை _____ நிறுவினார்.
அ) இரட்டைமலை சீனிவாசன் ஆ) B.R. அம்பேத்கார்
இ) ராஜாஜி ஈ) எம்.சி. ராஜா
விடை: அ) இரட்டைமலை சீனிவாசன்

3. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் _____ இல் உருவாக்கப்பட்டது.
அ) 1918 ஆ) 1917
இ) 1916 ஈ) 1914 **விடை: அ) 1918**

4. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய _____ நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது.
அ) பணியாளர் தேர்வு வாரியம்
ஆ) பொதுப் பணி ஆணையம்
இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம்
ஈ) பணியாளர் தேர்வாணயம் **விடை: அ) பணியாளர் தேர்வு வாரியம்**

5. சென்னை மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன்முறையாகச் சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்
அ) எம்.சி. ராஜா ஆ) இரட்டை மலை சீனிவாசன்
இ) டி.எம். நாயர் ஈ) பி. வரதராஜுலு **விடை: அ) எம்.சி. ராஜா**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதன்முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி _____ ஆகும்.
விடை: தமிழ்

2. புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கியவர் _____ ஆவார்.

விடை: F.W. எல்லீஸ்

3. _____ தமிழ்மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.

விடை: மறைமலை அடிகள்

4. தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதலில் அங்கீகரித்தது _____ ஆகும்.

விடை: நீதிக்கட்சி

5. சூரியநாராயண சாஸ்திரி எனும் பெயர் _____ என மாற்றம் பெற்றது.

விடை: பரிமாற் கலைஞர்

6. _____ தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். **விடை: ஆபிரகாம் பண்டிதர்**

7. இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் _____ ஆவார்.

விடை: முத்துலட்சுமி அம்மையார்

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812இல் வெளியிடப்பட்டது.

ii) பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்.

iii) இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்.

iv) திரு.வி. கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்.

அ) (i), (ii) ஆகியன சரி ஆ) (i), (iii) ஆகியன சரி
இ) (iv) சரி ஈ) (ii), (iii) ஆகியன சரி

விடை: ஆ) (i), (iii) ஆகியன சரி

2. கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

காரணம் : இக்காலகட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.

அ) காரணம், கூற்று ஆகியவை சரி.
ஆ) காரணம் சரி ஆனால் கூற்றின் சரியான விளக்கமல்ல.
இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

விடை: அ) காரணம், கூற்று ஆகியவை சரி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

IV. பொருத்துக.

1.	திராவிடர் இல்லம்	-	அ) மறைமலையடிகள்
2.	தொழிலாளன்	-	ஆ) இரட்டைமலை சீனிவாசன்
3.	தனித் தமிழ் இயக்கம்	-	இ) சிங்காரவேலர்
4.	ஜீவிய சரித சுருக்கம்	-	ஈ) நடேசனார்

விடை: 1.ஈ 2.இ 3.அ 4.ஆ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.

- தமிழ் மக்களுக்கு தங்களது பாரம்பரியம் குறித்து வியப்பைத் தந்தது.
- நவீன தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை பண்டைய தமிழ் செவ்விலக்கியங்கள் வாயிலாக அறிய முடிந்தது.
- ஐரோப்பிய மொழிகள் தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும்.
- பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறு, மரபு, மொழி, இலக்கியம் குறித்து அறிய முடிந்தது.

2. தென்னிந்திய மொழிகளுக்காக கால்டுவெல்லின் பங்களிப்பினை நன்குப் புலப்படுத்துக.

- இராபர்ட் கால்டுவெல் தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இந்தோ - ஆரியன் மொழி குடும்ப கோட்பாட்டை விரிவுபடுத்தினார்.
- திராவிட மொழிகளிடம் ஒப்புமை இருந்ததையும் அது மாதிரி சமஸ்கிருதத்தில் இல்லை எனக் கூறினார்.
- தமிழின் தொன்மையை நிலை நாட்டினார்.

3. தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.

- சி.வை. தாமோதரனார்
- பி. சுந்தரனார்
- உ.வே. சாமிநாதர்
- பரிதிமாற் கலைஞர்
- திரு.வி. கலியாண சுந்தரனார்
- மறைமலையடிகள்
- பாரதிதாசன்
- சீகன் பால்கு
- இராபர்ட் கால்டுவெல்

4. நீதிக்கட்சியால் நிறைவேறப்பட்ட இந்து சமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

- நீதிக்கட்சி 1926ல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது.
- எந்தவொரு தனி நபரும், சாதி வேறுபாடின்றி கோயில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகலாம்.
- கோவிலின் சொத்துகளை நிர்வகிக்க வழி வகை செய்யப்பட்டது.

5. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- தமிழில் - திராவிடன்
- ஆங்கிலத்தில் - ஜஸ்டிஸ்
- தெலுங்கில் - ஆந்திர பிரகாசிகா

6. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

- பெரியார் ஆணாதிக்க சமூகத்தை எதிர்த்தார்.
- குழந்தை திருமணத்தையும், தேவதாசி முறையையும் எதிர்த்தார்.
- பெண்களின் மோசமான நிலைக்கு குரல் கொடுத்து வந்தார்.
- திருமணம் செய்து கொடுப்பது எனும் வார்த்தையை மறுத்த அவர் அதற்கு மாற்றாக திருக்குறளில் இருந்து வாழ்க்கைத்துணை என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டினார்.
- பெண்கள் விவாகரத்து பெறவும், சொத்தில் பங்கு பெறவும் உரிமை உண்டு என்றார்.
- பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய நூல் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்பதாகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

- காலனியாதிக்கத்தின் போது இந்திய துணைக் கண்டத்தில் தமிழ் மறுமலர்ச்சியின் போது பண்பாடு, மனிதநேய, கலாச்சாரத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தது.
- நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாறு மாற்றத்தை அனுபவித்தது.
- இது தமிழ்மொழி கலாச்சாரம், அதன் அடையாளத்தை மாற்றி அமைத்தது.
- அச்சு இயந்திரத்தின் வருகையும், தமிழ்மொழி மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.
- ஐரோப்பிய மொழிகள் தவிர்த்து அச்சில் ஏறிய முதல்மொழி தமிழ்மொழியே என்ற சிறப்புக் கிடைத்தது.
- 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் நூல் கோவாவில் வெளியிடப்பட்டது. திருக்குறள் 1812இல் புத்தகமாக வெளிவந்தது.
- பண்டைய தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.
- எடுத்துக்காட்டாக, சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை அச்சு வடிவில் கொண்டு வர அரும்பாடு பட்டனர்.
- பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறு, மரபு, மொழி, இலக்கியம், சமயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- தமிழர்களின் அடையாளங்களை பண்டைய தமிழ் நூல்கள் அச்சு வடிவில் வெளிக் கொணர்ந்தது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- இராபர்ட் கால்டுவெல் தமிழின் தொன்மையை நிலை நாட்டினார்.
- பி.சுந்தரனார், திரு.வி.க., பாரதிதாசன், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் தமிழ் மறுமலர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பங்கெடுத்த தமிழ் அறிஞர்கள்.

2. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி, சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.

நீதிக்கட்சி தோற்றம் :

- தமிழக அரசியல் களங்களில் பிராமணர்களின் ஆதிக்கம் தொடரவே பிராமணரல்லாத டாக்டர் நடேசனார், சர்.பி.டி.தியாகரார், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை, தாயரம்மாள் ஆகியோர் பிராமணர் அல்லாத தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை 1916 நவம்பர் 20இல் உருவாக்கினார்கள்.
- தமது கொள்கைகளை பரப்ப தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிராகாசிகா என்ற பத்திரிகைகளை வெளியிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- ஜஸ்டிஸ் என்ற ஆங்கில பத்திரிகையின் பேரில் 1920இல் நீதிக்கட்சியாக பெயர் மாற்றம் பெற்றது.
- 1920இல் நடந்த சென்னை மாகாண தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்து சுப்பராயுலு முதல் அமைச்சராக பொறுப்பேற்றார்.

சமூக நீதி பங்களிப்பு :

- பிராமணர் அல்லாதவர்களுக்கு ஆதரவாக இறங்கியது நீதிக்கட்சி.
- மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளை வழங்கியது.
- சாதி மறுப்பு திருமணத்திற்கு தடையாக இருந்த சட்ட சிக்கல்களை .நீக்கியது.
- பொது இடங்களை ஒடுக்கப்பட்ட மக்கள் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தது.
- 1921இல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதன்முதலாகக் கொண்டு வந்தது.
- 1924இல் பணியாளர் தேர்வு வாரியத்தை அறிமுகப்படுத்தி இட ஒதுக்கீடு முறையை அமல்படுத்தியது.
- 1926இல் இந்து அறநிலையத்துறைச் சட்டத்தைக் கொண்டு வந்து கோவில் நிர்வாகத்தை நிர்வகிக்க வழி செய்தது
- ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்ட இலவச மனைப்பட்டாக்கள் வழங்கியது.
- மதிய உணவுத் திட்டம் சென்னையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- தேவதாசி முறையை ஒழித்தது.

3. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

அறிமுகம் :

- ஈரோட்டைச் சார்ந்தவர், சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.
- ஆரம்ப காலங்களில் இந்து மத பற்றாளராக இருந்து பின் வெறுத்து காங்கிரஸ் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டார்.

- காங்கிரஸ் கட்சியில் பிராமணர்களின் ஆதிக்கத்தை வெறுத்து 1925இல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்.

பெரியாரின் பங்களிப்பு :

- பகுத்திறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் முக்கிய பங்கு வகித்தவர்.
- இதற்கு இவர் குடியரசு, ரிவோல்ட், பகுத்தறிவு, விடுதலை போன்ற பத்திரிகைகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.
- பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயமாக்கப்படுவதை எதிர்த்து இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்தினார்.
- ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பல போராட்டங்களை நடத்தினார். எ.கா: கேரளா வைக்கம் கோவில் நுழைவு போராட்டம்.
- மது குடிப்பதை தவிர்க்க தனது தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களை வெட்டியவர்.
- பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்து குழந்தைத் திருமணத்தையும், தேவதாசி முறையையும் கண்டனம் செய்தவர்.
- பெண்களுக்கு சொத்துரிமை வழங்குதல், ஆண்-பெண் சம உரிமைக்கு போராடியவர்.
- கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர் முறையை எதிர்த்து அனைத்து நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என வாதிட்டவர்.
- சுய மரியாதை திருமணங்களை பரிந்துரைத்து செயல்படுத்தியவர்.
- சேரன்மகாதேவி குருகுலப் பள்ளியில் நடைபெற்ற சாதி வேறுபாடுகளை களைய முற்பட்டவர்.

VII. செயல்பாடுகள்

1. தொழிலாளர் இயக்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் வேறுபடுத்திப் பார்க்க மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். உள்ளூர் அளவிலான தொழில் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்து மாணவர்கள் ஒப்படைப்பு ஒன்றைச் செய்யலாம்.

மாணவர் செயல்பாடு.

2. உள்ளூர் அளவிலான எழுத்தாளர்கள் அமைப்புகளின் அல்லது பெண்கள் அமைப்புகளின் செயல்பாடுகளை மாணவர்கள் தொகுக்கலாம்.

மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் புத்தகம் _____ வெளியிடப்பட்டது.

அ) மதுரையில் ஆ) திருநெல்வேலியில்

இ) சென்னையில் ஈ) கோவாவில்

விடை: ஈ) கோவாவில்

2. _____ இல் முழுமையான அச்சகம் சீகன்பாகு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது.
அ) 1709 ஆ) 1710
இ) 1711 ஈ) 1712 **விடை: அ) 1709**

3. தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான _____ 1812 இல் வெளியிடப்பட்டது.
அ) பட்டினப்பாலை ஆ) திருக்குறள்
இ) சீவகசிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஆ) திருக்குறள்**

4. _____ பனையோலைகளில் கையால் எழுதப்பட்ட பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார்.
அ) உ.வே. சாமிநாதர் ஆ) சீகன்பாகு
இ) சி.வை. தாமோதரனார் ஈ) பி. சுந்தரனார் **விடை: இ) சி.வை. தாமோதரனார்**

5. _____ இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை எப்.டபிள்யூ. எல்லீஸ் நிறுவினார்.
அ) 1817 ஆ) 1818
இ) 1819 ஈ) 1816 **விடை: ஈ) 1816**

6. _____ என்பவரால் மனோன்மணியம் எனும் நாடக நூல் எழுதப்பட்டது.
அ) பி. சுந்தரனார் ஆ) உ.வே. சாமிநாதர்
இ) திரு.வி.க. ஈ) மறைமலை அடிகள் **விடை: அ) பி. சுந்தரனார்**

7. தமிழின் மீது _____ கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்கக் கால தமிழ் அறிஞர் பரிதிமாற் கலைஞர்.
அ) இந்தி ஆ) உருது
இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு **விடை: இ) சமஸ்கிருதம்**

8. தமக்கு _____ என தூய தமிழ்ப் பெயரை சூட்டிக் கொண்டவர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி.
அ) திரு.வி.க. ஆ) பாரதிதாசன்
இ) பாரதியார் ஈ) பரிதிமாற் கலைஞர் **விடை: ஈ) பரிதிமாற் கலைஞர்**

9. தமிழில் வரிச் செய்யுள் வடிவத்தை அறிமுகம் செய்தவர் _____.
அ) டாக்டர் நடேசனார் ஆ) மறைமலை அடிகள்
இ) பரிதிமாற் கலைஞர் ஈ) பூங்குன்றன் **விடை: இ) பரிதிமாற் கலைஞர்**

10. தமிழ் மொழியின் தூய்மை வாதத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் _____.
அ) உ.வே. சாமிநாதர் ஆ) சி.வை. தாமோதரனார்
இ) டாக்டர் நடேசனார் ஈ) மறைமலை அடிகள் **விடை: ஈ) மறைமலை அடிகள்**

11. 1912 இல் _____ எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார்.
அ) டாக்டர் செங்குட்டுவன் ஆ) டாக்டர் சி. நடேசனார்
இ) டாக்டர் அய்யனார் ஈ) டாக்டர் குமரேசன்
விடை: ஆ) டாக்டர் சி. நடேசனார்

12. மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்த அடிப்படையில் _____ இல் முதல் தேர்தல் நடைபெற்றது.
அ) 1919 ஆ) 1920
இ) 1921 ஈ) 1922 **விடை: ஆ) 1920**

13. _____ இல் நீதிக்கட்சியால் ஒதுக்கப்பட்ட பிரிவு மக்களுக்கான தங்கும் விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன.
அ) 1922 ஆ) 1923
இ) 1924 ஈ) 1925 **விடை: ஆ) 1923**

14. _____ இல் நீதிக்கட்சி பணியாளர் தேர்வு வாரியத்தை அமைத்தது.
அ) 1923 ஆ) 1924
இ) 1925 ஈ) 1926 **விடை: ஆ) 1924**

15. 1926 இல் _____ நீதிக்கட்சி இயற்றியது.
அ) பொதுப்பணிச் சட்டம் ஆ) வேலைவாய்ப்புச் சட்டம்
இ) இந்து அறநிலையச் சட்டம் ஈ) சாதி மறுப்புச் சட்டம்
விடை: இ) இந்து அறநிலைய சட்டம்

16. _____ பிராமணர் அல்லாதோர் மட்டுமின்றி இஸ்லாமியர்களின் நலன்களுக்கும் பாடுபட்டது.
அ) சுயமரியாதை இயக்கம் ஆ) திராவிடர் இயக்கம்
இ) நீதிக்கட்சி ஈ) காங்கிரஸ் இயக்கம்
விடை: அ) சுயமரியாதை இயக்கம்

17. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக _____ பதவி வகித்த போது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்து தீர்மானம் கொண்டு வந்தார்.
அ) காமராஜர் ஆ) சத்தியமூர்த்தி
இ) சுப்பிரமணியம் ஈ) பெரியார் **விடை: ஈ) பெரியார்**

18. தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி _____.
அ) பெரியார் ஆ) அறிஞர் அண்ணா
இ) நடேசனார் ஈ) சிங்காரவேலர் **விடை: ஈ) சிங்காரவேலர்**

19. இரட்டைமலை சீனிவாசன் சுயசரிதை நூல் _____.
அ) மலையப்ப வள்ளல் ஆ) சீனிவாச சாஸ்திரி
இ) தீண்டாமை நாயகர் ஈ) ஜீவிய சரித்திர சுருக்கம்
விடை: ஈ) ஜீவிய சரித்திர சுருக்கம்

20. இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1893இல் _____ அமைப்பை ஏற்படுத்தினார்.
அ) ஆதி திராவிட மகாஜன ஆ) வாரிசுரிமை மகாஜன
இ) அனைத்து மக்கள் அர்ச்சகர் ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: அ) ஆதி திராவிட மகாஜன

21. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளை சந்தித்து _____ அவருடன் நெருக்கமானார்.
அ) எம்.சி. ராஜா ஆ) சி.வை. தாமோதரன்
இ) சிங்காரவேலர் ஈ) இரட்டைமலை சீனிவாசன்
விடை: ஈ) இரட்டைமலை சீனிவாசன்

22. தென்னிந்திய நில உரிமைச் சட்டத்தை உருவாக்கியவர்களுள் முக்கியமானவர் _____.
அ) எம்.சி. ராஜா ஆ) இரட்டைமலை சீனிவாசன்
இ) சிங்காரவேலர் ஈ) நாராயணன் **விடை: அ) எம்.சி. ராஜா**

23. அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் _____ நடைபெற்றது.
அ) சென்னையில் ஆ) பம்பாயில்
இ) கல்கத்தாவில் ஈ) புனேவில் **விடை: ஆ) பம்பாயில்**

24. 1923இல் முதல் மே தின விழாவை சென்னையில் ஏற்பாடு செய்தவர் _____.
அ) எம்.சி. ராஜா ஆ) சிங்காரவேலர்
இ) சீனிவாசன் ஈ) நடேசனார் **விடை: ஆ) சிங்காரவேலர்**

25. _____ இல் அகில இந்திய பெண்கள் மாநாடு புனேயில் நடைபெற்றது.
அ) 1930 ஆ) 1927
இ) 1929 ஈ) 1931 **விடை: ஆ) 1927**

26. _____ நிலை குறித்து விவாதிக்க 1943இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.
அ) தமிழ் மொழியின் ஆ) தமிழிசையின்
இ) மொழி சீர்திருத்த ஈ) எதுவுமில்லை **விடை: ஆ) தமிழிசையின்**

27. இந்தியப் பெண்கள் சங்கம் 1917இல் அன்னிபெசன்ட் மற்றும் மார்கரெட் கசின்ஸ் ஆகியோரால் _____ தொடங்கப்பட்டது.
அ) புனே ஆ) திருவனந்தபுரம்
இ) சென்னை-அடையாறு ஈ) திருநெல்வேலி **விடை: சென்னை-அடையாறு**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 1709இல் முழுமையான அச்சகம் சீகன்பாகு என்பவரால் _____ நிறுவப்பட்டது.
விடை: தரங்கம்பாடியில்

2. தமிழ் செவ்வியல் இலக்கியங்களைக் கண்டறிய தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தவர்கள் _____, _____.
விடை: சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர்

3. பி. சுந்தரனாரால் எழுதப்பட்ட நாடக நூல் _____. **விடை: மனோன்மணியம்**

4. _____ தமிழ் இசைக்கு சிறப்பு செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்த நூல்களையும் வெளியிட்டார்.
விடை: ஆபிரகாம் பண்டிதர்

5. சென்னை பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டார மொழி என அழைக்கக் கூடாது என்று கூறியவர் _____.
விடை: பரிதிமாற் கலைஞர்

6. சங்க இலக்கிய நூல்களை பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியவர் _____.
விடை: மறைமலை அடிகள்

7. _____ ஞானசேகரம் எனும் பத்திரிகை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
விடை: மறைமலை அடிகள்

8. சென்னை மாகாண சபையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்த ஆண்டு _____.
விடை: 1911

9. டாக்டர் நடேசனார் சென்னை திருவல்லிக்கேணியில் _____ எனும் தங்கும் விடுதி ஆரம்பித்தார்.
விடை: திராவிடர் இல்லம்

10. _____ நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் நம்பிக்கையாக விளங்கியது.
விடை: நீதிக்கட்சி

11. பெரியார் இளைஞராக இருந்த போது வீட்டை விட்டு வெளியேறி அவர் பல மாதங்கள் _____ தங்கி இருந்தார்.
விடை: வாரணாசியில்

12. தேவதாசி ஒழிப்பில் சட்டம் இயற்ற முனைப்புடன் செயல்பட்டவர் _____.
விடை: Dr. முத்துலட்சுமி அம்மையார்

13. மது விலக்கிற்கு ஆதரவாக தன் தோப்பில் இருந்த தென்னை மரங்களை வெட்டியவர் _____.
விடை: பெரியார்

14. _____ சித்திர புத்திரன் எனும் புனைப்பெயரில் கட்டுரைகளை எழுதினார்.
விடை: பெரியார்

15. அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு நூலை மொழிபெயர்ப்பு செய்தவர் _____.
விடை: பெரியார்

16. இலண்டன் இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துகளுக்கு குரல் கொடுத்தவர் _____.
விடை: இரட்டைமலை சீனிவாசன்

17. 1928இல் அகில் இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியவர் _____.
விடை: மயிலை சின்னதம்பி ராஜா

18. சென்னை மாகாணத்தில் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்னோடியாக விளங்கியவர்கள் _____, _____.
விடை: சிங்காரவேலர், திரு.வி.க.

19. சிங்காரவேலர் தொழிலாளர்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்த _____ பத்திரிகை வெளியிட்டார்.
விடை: தொழிலாளன்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

20. கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை கோவில்களில் அர்ப்பணிக்கும் வழக்கமே _____ எனப்படும். **விடை: தேவதாசி**

21. 1930இல் சென்னை சட்டமன்றத்தில் _____ சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களில் பெண்களை அமர்த்துவதை தடுப்பது என்ற மசோதாவை அறிமுகப்படுத்தினார். **விடை: Dr. முத்துலட்சுமி அம்மையார்**

III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார்.
   காரணம் : 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில் பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் துவங்கினார்.

அ) காரணம், கூற்று ஆகியவை சரி.
ஆ) காரணம் சரி, ஆனால் கூற்று சரியான விளக்கமல்ல.
இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு.
ஈ) கூற்று சரி, ஆனால் காரணத்துடன் பொருந்தவில்லை.

விடை: அ) காரணம், கூற்று ஆகியவை சரி

IV. பொருத்துக.

I

1.	வேதாச்சலம்	-	அ) முதல் புத்தகம்
2.	வரி செய்யுள் வடிவம்	-	ஆ) ரிவோல்ட்
3.	தம்பிரான் வணக்கம்	-	இ) மறைமலை அடிகள்
4.	பகுத்தறிவு பத்திரிகை	-	ஈ) திவான் பகதூர்
5.	இரட்டைமலை சீனிவாசன்	-	உ) பரிதிமாற் கலைஞர்

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஆ 5.ஈ

II

1.	முதல் பொதுவுடைமைவாதி	-	அ) இரட்டைமலை சீனிவாசன்
2.	அம்பேத்காருடன் நெருக்கம்	-	ஆ) மார்கரெட் கசின்ஸ்
3.	மெரினா கடற்கரை	-	இ) சிங்காரவேலர்
4.	இந்திமொழி திணிப்பு	-	ஈ) உழைப்பாளர் சிலை
5.	1917 இந்திய பெண்கள் சங்கம்	-	உ) இராஜாஜி

விடை: 1.இ 2.அ 3.ஈ 4.உ 5.ஆ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மறுமலர்ச்சி என்பது யாது?

- மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும்.
- அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது.
- அதன் திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது.

2. தனித்தமிழ் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

- மறைமலை அடிகள் கொண்டு வந்த இயக்கம்.
- தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவது.
- சமஸ்கிருதத்தின் செல்வாக்கை தமிழ்மொழியிலிருந்து அகற்றுவது.
- தமிழ்மொழியின் மீது ஆதிக்கம் செலுத்தும் பிறமொழி செல்வாக்கை நீக்குவது.

3. மதராஸ் ஐக்கிய கழகம் - குறிப்பு வரைக.

- டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகத்தை ஆரம்பித்தார்.
- இது பின்னாளில் திராவிடர் சங்கம் எனப் பெயர் மாறியது.
- திராவிடர்களின் மேம்பாட்டிற்கு உதவிகள் செய்வது.
- பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது.
- திராவிட மாணவர்களை படிக்க வைப்பது.

4. சுயமரியாதை இயக்கம் - குறிப்பு வரைக.

- தந்தை பெரியாரால் ஆரம்பிக்கப்பட்டது.
- சமூக அரசியல், பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்து அகற்றுவது.
- பிராமணர் அல்லாதவர்களுக்கு மேம்பாட்டுத் திட்டம் அறிமுகம் செய்தது.
- சாதி மறுப்பு திருமணம் செய்வது.
- சமத்துவ சமூகத்தை உருவாக்குவது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

5. அம்பேத்கார் - இரட்டைமலை சீனிவாசன் உறவை விளக்குக.

- டாக்டர் அம்பேத்காருடன் நெருக்கமானவர் இரட்டைமலை சீனிவாசன்.
- இலண்டனில் இருவரும் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு சந்தித்துக் கொண்டனர்.
- சமூகத்தின் விளிம்புநிலை மக்களுக்காக குரல் கொடுத்தவர்கள்.
- 1932 பூனா ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்து இட்டவர்கள்.

6. இந்திய பெண்கள் சங்கம் - குறிப்பு வரைக.

- 1917இல் அன்னிபெசன்ட் அம்மையார் மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாரில் தொடங்கப்பட்டது.
- இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு, பொது வாழ்வில் பெண்களுக்கு பங்கு ஆகியவை குறித்து துண்டுப் பிரசுரங்கள், செய்தி, மடல்கள் மூலம் விழிப்புணர்வு செய்தது.

7. தேவதாசி முறை - விளக்குக.

- கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம்பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கமே தேவதாசி முறை. இது கடவுளுக்கு செய்யும் சேவை எனப்பட்டது.

சமூக அறிவியல்

- இந்த முறை Dr. முத்துலட்சுமி அம்மையாரின் கடும் போராட்டத்தால் நீதிக்கட்சி 1947இல் தேவதாசி தடுப்புச் சட்டம் கொண்டு வந்து நீக்கியது.

VI. விரிவாக விடையளிக்கவும்.

1. இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம் பற்றி விவரி.

- தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப் பகுதிகளில் இந்தி மொழி கட்டாய மொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இது தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக கருதப்பட்டது.
- சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் இந்தி மொழியை பள்ளிகளில் கட்டாயமாக்கினார்.
- இதனால் சென்னை மாகாணத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.
- இது திராவிடர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் செயலாகும் என பெரியார் எதிர்ப்பு தெரிவித்தார்.
- தமிழ்மொழி மிகுந்த பாதிப்பிற்குள்ளாகும் என மறைமலை அடிகள் எச்சரித்தார்.
- இது பிராமணர்களின் ஆதிக்கத்தையும், சமஸ்கிருத மொழியின் ஆதிக்கத்தையும் தோற்றுவிக்கும் என தமிழ் ஆர்வலர்கள் கண்டித்தனர்.
- நாடு முழுவதும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள், பேரணிகள், உண்ணாவிரதப் போராட்டங்கள் நடந்தன.
- இரயில் மறிப்பு போராட்டங்கள் அதிகமாக நடந்தன. கல்லூரி மாணவர்கள் பெருவாரியாக கலந்து கொண்டனர்.
- நீதிக்கட்சி A.T. பன்னீர்செல்வம், தாளமுத்து நடராசன், கி.ஆ.பெ. விசுவநாதம், மறைமலை அடிகள், பாரதிதாசன் ஆகியோரின் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் மிகவும் மகத்தானது.

காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900 - 1947)

1900

1905 வங்கப்பிரிவினை - சுதேசி இயக்கம்
1906 சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது

1910

1916 தன்னாட்சி இயக்கம்/லக்னோ ஒப்பந்தம்
1917 சம்பரான் சத்தியாகிரகம்
1918 கேதா சத்தியாகிரகம்
1919 ரௌலட் சட்டம்/ஜாலியன்வாலா பாக் படுகொலை
1920 கிலாபத் இயக்கம்/ஒத்துழையாமை இயக்கம்
1922 சௌரி சௌரா சம்பவம்
1923 சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்

1927 சைமன் குழு நியமனம்
1928 மோதிலால் நேரு அறிக்கை
1929 லாகூர் காங்கிரஸ் மாநாடு
1930 உப்புச்சத்தியாகிரகம்/முதல் வட்டமேசை மாநாடு
1931 காந்தி-இர்வின் ஒப்பந்தம்/இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932 வகுப்புவாரி பிரதிநித்துவம்/பூனா ஒப்பந்தம்/மூன்றாவது வட்டமேசை மாநாடு

1935 இந்திய அரசு சட்டம்

1937 மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்

1940

1940 ஆகஸ்ட் நன்கொடை/தனிநபர் சத்தியாகிரகம்

1942 கிரிப்ஸ் தூதுக்குழு/வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1945 வேவல் திட்டம்/சிம்லா மாநாடு
1946 ராயல் இந்திய கப்பற்படை புரட்சி/அமைச்சரவை தூதுக்குழு வருகை/இடைக்கால அரசு
1947 மௌண்ட்பேட்டன் திட்டம்/இந்தியா விடுதலை பெறுதல்

1950

1 அலகு = 10 ஆண்டுகள்

உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900 - 1950)

1900

1910 தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்

1912 முதல் பால்கன் போர்

1914 முதலாம் உலகப்போர் தொடக்கம்

1917 ரஷ்யப் புரட்சி

1918 முதல் உலகப் போர் முடிவு

1919 பாரிஸ் அமைதி மாநாடு/வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920 பன்னாட்டு சங்கம் தோற்றம்

1922 முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு

1927 வியட்நாம் தேசியக்கட்சி உதயம்

1929 பொருளாதாரப் பெருமந்தம்/லேட்டரன் உடன்படிக்கை

1930

1933 ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்

1934 நீண்ட பயணம்

1935 முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

1938 மியூனிச் உடன்படிக்கை

1939 இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940 பிரிட்டன் போர்

1941 முத்துத் துறைமுக நிகழ்வு

1942 ஸ்டாலின்கிரேடு போர்

1945 இரண்டாம் உலகப் போர் முடிவு/ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1950

காலக்கோடு வினாக்கள்

1. 1930 முதல்1950 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

1 அலகு = 10 ஆண்டுகள்



1931 காந்தி-இர்வின் ஒப்பந்தம்/இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932 வகுப்புவாரி பிரதிநித்துவம்/பூனா ஒப்பந்தம்/மூன்றாவது வட்டமேசை மாநாடு
1935 இந்திய அரசு சட்டம்
1942 கிரிப்ஸ் தூதுக்குழு/வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1947 மௌண்ட்பேட்டன் திட்டம்/இந்தியா விடுதலை பெறுதல்

2. 1900 முதல்1920 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

1 அலகு = 10 ஆண்டுகள்



1905 வங்கப்பிரிவினை - சுதேசி இயக்கம்
1906 சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது
1916 தன்னாட்சி இயக்கம்/லக்னோ ஒப்பந்தம்
1919 ரௌலட் சட்டம்/ஜாலியன்வாலா பாக் படுகொலை
1920 கிலாபத் இயக்கம்/ஒத்துழையாமை இயக்கம்

3. 1910 முதல்1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

1 அலகு = 10 ஆண்டுகள்



4. 1920 முதல்1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

1 அலகு = 10 ஆண்டுகள்



www.Padasalai.Net www.TrbTnpsc.com

சமூக அறிவியல்

10

புவியியல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

புவியியல்

இந்தியா-அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

அலகு 1

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ
இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ
விடை: இ) 3214 கி.மீ

2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி
இ) கோசி ஈ) தாமோதர்
விடை: இ) கோசி

3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி _____ என அழைக்கப்படுகிறது.
அ) கடற்கரை ஆ) தீபகற்பம்
இ) தீவு ஈ) நீர்ச்சந்தி
விடை: ஆ) தீபகற்பம்

4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா _____ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
அ) கோவா ஆ) மேற்கு வங்காளம்
இ) இலங்கை ஈ) மாலத்தீவு
விடை: இ) இலங்கை

5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்
அ) ஊட்டி ஆ) ஆனை முடி
இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா
விடை: ஆ) ஆனைமுடி

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி
அ) பாபர் ஆ) தராய்
இ) பாங்கர் ஈ) காதர்
விடை: இ) பாங்கர்

7. பழவேற்காடு ஏரி _____ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா
ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்
ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்
விடை: ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

II. பொருத்துக.

1.	சாங்போ	-	அ) கங்கை ஆற்றின் துணை ஆறு
2.	யமுனை	-	ஆ) இந்தியாவின் உயர்ந்த சிகரம்
3.	புதிய வண்டல் படிவுகள்	-	இ) பிரம்மபுத்திரா
4.	காட்வின் ஆஸ்டின் (K2)	-	ஈ) தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி
5.	சோழ மண்டலக் கடற்கரை	-	உ) காதர்

விடை: 1.இ 2.அ 3.உ 4.ஆ 5.ஈ

III. காரணம் கூறுக.

1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.

- இமயமலைகள் புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகளாக உருவாகின.
- எனவே இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.

2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.

கோடை காலத்தில் பனி உருகி நீராகவும் குளிர் காலத்தில் மழையினால் நீராகவும் இருப்பதால் வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள் ஆகும்.

3. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள்.

- தென்னிந்திய நதிகள் பெரும்பாலானவை மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தோன்றியவை.
- மேற்குப் பக்கத்தின் உயரம் கிழக்குப் பக்கத்தைவிட அதிகமாக உள்ளது.
- எனவே, தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப் பாயும் நதிகளாகும்.

4. மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை.

- மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் பீடபூமி பகுதியிலிருந்து தோன்றி கடலை நோக்கி பாய்கின்றன.
- மேற்கு கரையோர சமவெளிக்கு அருகில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் வழியாக அவை செல்கின்றன.
- எனவே மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை.

IV. வேறுபடுத்துக

1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்

எண்	இமயமலை ஆறுகள்	தீபகற்ப ஆறுகள்
1.	இமயமலையில் உற்பத்தியாகின்றன.	மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2,	நீளமானவை மற்றும் அகலமானவை.	குறுகலான மற்றும் நீளம் குறைந்தவை.
3.	வற்றாத நதிகள்.	வற்றும் ஆறுகள்.
4.	நீர்மின் உற்பத்தி செய்ய இயலாத நிலை.	நீர் (புனல்) மின்சாரம் உற்பத்திக்கு ஏற்றது.

2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

எண்	மேற்குத் தொடர்ச்சி மலைகள்	கிழக்கு தொடர்ச்சி மலைகள்
1.	தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது.	தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது.
2.	மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது.	கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது.
3.	தொடர்ச்சியான மலைகள்.	தொடர்ச்சியற்ற மலைகள்.
4.	இம்மலையின் வடபகுதி சயத்ரி என்று அழைக்கப்படுகிறது.	இம்மலைத்தொடர் பூர்வாதிரி என்றும் அழைக்கப்படுகிறது.

3. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி.

எண்	மேற்கு கடற்கரைச் சமவெளி	கிழக்கு கடற்கரை சமவெளி
1.	மேற்கு தொடர்ச்சி மலைக்கும், அரபிக்கடலுக்கும் இடையே அமைந்துள்ளது.	கிழக்கு தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது.
2.	வடக்கில் உள்ள ரானா ஆப் கட்ச் முதல் தெற்கில் உள்ள கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது.	மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது.
3.	மேற்கு கடற்கரையின் வடபகுதி கொங்கணக் கடற்கரை எனவும், மத்திய பகுதி கனரா கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.	மகாநதிக்கும், கிருஷ்ணாநதிக்கும் இடைப்பட்டப் பகுதி வடசர்க்கார் எனவும், கிருஷ்ணா மற்றும் காவிரி ஆற்றிற்கு இடைப்பட்டப் பகுதி சோழ மண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.
4.	வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.	கொல்லேறு ஏரி, பழவேற்காடு (புலிகாட்) ஏரி இப்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.

- ஆப்கானிஸ்தான்
- பர்மா
- பாகிஸ்தான்
- மியான்மர்
- வங்காளதேசம்
- நேபாளம்
- பூடான்
- இலங்கை

2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.

- இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
- இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82°30' கிழக்கு தீர்க்கரேகையின் தல நேரம், இந்திய திட்ட நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாக செல்கிறது.
- இந்திய திட்ட நேரமானது கிரீன்விச் சராசரி நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

3. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.

- தக்காண பீடபூமி, தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.
- வடமேற்கு திசையில் விந்திய சாத்பூரா மலை தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும், வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாக கொண்டது.
- சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500 மீ முதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.

நர்மதை, தபதி மற்றும் மாஹி.

5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.

- இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது.
- இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி ஆகும்.
- இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது.
- இலட்சத்தீவு மினிக்காய் மற்றும் அமினித் தீவு கூட்டங்கள் 1973 ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.

VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

இந்தியாவின் இயற்கை அரணாக உள்ள இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமயமலை)
2. இமயமலைகள்
3. பூர்வாஞ்சல் குன்றுகள் (கிழக்கு இமயமலை)

1. ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமயமலை)

- இம்மலைகள் ஜம்மு-காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இங்குள்ள முக்கியமான மலைத்தொடர்கள் சாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகும்.

2. இமயமலைகள்

- இது ஒரு இளம் மடிப்பு மலையாகும்.
- இது பல மலைத்தொடர்களை உள்ளடக்கியது. இவை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.
  - ★ உள் இமயமலைகள்/இமாத்ரி
  - ★ மத்திய இமயமலைகள்/இமாச்சல்
  - ★ வெளி இமயமலைகள்

3. பூர்வாஞ்சல் குன்றுகள் (கிழக்கு இமயமலை)

- இவை இமயமலைகளின் கிழக்கு கிளையாகும்.
- இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது.
- பெரும்பாலான குன்றுகள் மியான்மர் மற்றும் இந்திய எல்லைகளுக்கு இடையே காணப்படுகின்றன.

இமயமலையின் முக்கியத்துவம்:

- தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.
- இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. எ.கா: சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, மற்றும் பிற ஆறுகள்.
- இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
- பல கோடை வாழிடங்களும், புனிதத்தலங்களான அமர்நாத், கேதர்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவி தேவி கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
- வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.

- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.
- இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்குப் பெயர் பெற்றவை.

2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.

தீபகற்ப இந்திய ஆறுகள்:

தீபகற்ப ஆறுகளை அவைபாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்
2) மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:

அ) மகாநதி:

- இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்தில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக பாய்கிறது.
- மகாநதி பல கிளையாறுகளைப் பிரிந்து இந்தியாவின் மிகப்பெரிய டெல்டாக்களை உருவாக்கி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஆ) கோதாவரி:

- தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு (1465 கி.மீ).
- கோதாவரி, மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- இந்நதி விருத்தகங்கா எனவும் அழைக்கப்படுகிறது.
- இது ஆந்திரப்பிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- கோதாவரி டெல்டா பகுதியில் நன்னீர் ஏரியான கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.

இ) கிருஷ்ணா:

- மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் பாய்கிறது.
- இது தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதியாகும்.
- இந்நதி ஆந்திரப் பிரதேசத்தின் வழியாக பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஈ) காவேரி:

- காவேரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகி சுமார் 800 கி.மீ நீளத்துக்கு பாய்கிறது.
- இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் நுழைந்து தொடர்ச்சியான மற்றும் குறுகலான மலையிடுக்குகள் வழியாக ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியாக பாய்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்:

அ) நர்மதை:

- மத்திய பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.
- இது மேற்கு நோக்கி பாயும் ஆறுகளிலேயே நீளமானதாகும்.

ஆ) தபதி:

- இந்நதி மத்திய பிரதேசத்தில் உள்ள முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது.
- பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.

- கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாய்கிறது.
- இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டது.
- கங்கை சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளது.
- கங்கை ஆறு 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும்.
- வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டாக், கோசி மற்றும் தென்பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- வங்கதேசத்தில் கங்கை "பத்மா" என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப் பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

VII. வரைபடப் பணி.

கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. **மலைத்தொடர்கள்:**
   காரகோரம், லடாக், ஜாஸ்கர், ஆரவல்லி, மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை.

2. **ஆறுகள்:**
   சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா, நர்மதா, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி.

3. **பீடபூமிகள்:**
   மாளவ பீடபூமி, சோட்டா நாகபுரி பீடபூமி, தக்காண பீடபூமி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com


சிந்து
கங்கை
பிரம்மபுத்திரா
Tropic of Cancer
நர்மதா
தபதி
மகாநதி
கோதாவரி
கிருஷ்ணா
காவேரி
ஆறு
Not to Scale
N
W
E
S

VIII. செயல்பாடுகள்

1. நிலவரைப்படத்தில் தீபகற்ப பீடபூமியை உற்று நோக்கி முக்கிய பீடபூமி பகுதிகளைக் குறிக்கவும்.

மாணவர் செயல்பாடு.

2. தீபகற்ப இந்தியாவில் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளையும், மேற்கு நோக்கி பாயும் ஆறுகளையும் அட்டவணைப்படுத்தவும்.

கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்	மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்
மகாநதி - கோதாவரி கிருஷ்ணா - பெண்ணாறு காவேரி - வைகை தாமிரபரணி	சபர்மதி - மாஹி நர்மதா - தபதி
இந்த ஆறுகள் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.	இந்த ஆறுகள் அரபிக்கடலில் கலக்கிறது.

3. மேற்கு வங்கத்திலிருந்து கடற்கரை வழியாக குஜராத்திற்கு பயணம் செய்யும் போது நீங்கள் கடந்து சென்ற மாநிலங்களின் பெயர்களைக் கண்டுபிடிக்கவும்.

ஒடிசா - ஆந்திரா - தமிழ்நாடு - கேரளா - கர்நாடகம் - கோவா - மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களை பயணத்தின் போது நாம் கடந்து செல்ல முடியும்.

4. நில வரைபடப் புத்தகத்தைக் கொண்டு கங்கை ஆறு பாயும் மாநிலங்களை இந்திய நில வரைபடத்தில் குறிக்கவும்.

வரைபடத்தில் உள்ளது.

5. இந்தியாவில் உள்ள முக்கிய ஆறுகளின் பிறப்பிடம், நீளம், வடிநிலம், பரப்பளவு மற்றும் அவற்றின் துணையாறுகள் ஆகியவற்றை அட்டவணைப்படுத்தவும்.

ஆறுகள்	பிறப்பிடம்	நீளம்	வடிநிலம்	பரப்பளவு	துணை ஆறுகள்
சிந்து	கைலாஷ் மலைத் தொடர்	3100 கி.மீ	இந்தியா - பாகிஸ்தான்	3, 21, 290	ஜீலம், சினாப், ராவி, பியாங், சட்லெஜ்.
கங்கை	கங்கோத்ரி	2480 கி.மீ	உத்திரபிரதேசம் - பீகார் - மேற்கு வங்காளம்	3,37,000	கோமதி, காக்ரா, கோசி, கண்டாக், யமுனை, சாம்பல், சோன்.
காவிரி	குடகுமலை	800 கி.மீ	கர்நாடகம், தமிழ்நாடு	87,900	ஹேமாவதி, கபினி, பவானி, நொய்யல், அமராவதி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

மகாநதி	அமர்கண்டா பீடபூமி	858 கி.மீ	சட்டீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா	1,41,600	சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, நன்.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. பரப்பளவின் அடிப்படையில் இந்தியா உலகின் _____ பெரிய நாடு.
   அ) ஐந்தாவது ஆ) ஏழாவது
   இ) மூன்றாவது ஈ) நான்காவது
   விடை: ஆ) ஏழாவது

2. இந்தியாவை _____ என்று அழைக்கிறோம்.
   அ) கண்டம் ஆ) தீவு
   இ) துணைக்கண்டம் ஈ) தீபகற்பம்
   விடை: இ) துணைக்கண்டம்

3. அட்ச தீர்க்க பரவல்படி இந்தியா முழுமையும் _____ அரைக்கோளத்தில் அமைந்துள்ளது.
   அ) தென்மேற்கு ஆ) வடமேற்கு
   இ) தென்கிழக்கு ஈ) வடகிழக்கு
   விடை: ஈ) வடகிழக்கு

4. இந்தியாவை இரண்டாக பிரிக்கும் மையக்கோடு _____.
   அ) 63.300 வ ஆ) 63.300 தெ
   இ) 23.300 வ ஈ) 23.300 தெ
   விடை: இ) 23.300 வ

5. இந்தியாவின் நடுவே செல்லும் முக்கிய தீர்க்கக்கோடு _____ நடுவே செல்கிறது.
   அ) அகமதாபாத் ஆ) அலகாபாத்
   இ) ஹைதராபாத் ஈ) ஔரங்காபாத்
   விடை: ஆ) அலகாபாத்

6. இந்தியாவின் வடமுனை _____.
   அ) இந்திரா கோல் ஆ) குமரி
   இ) அந்தமான் ஈ) கவரத்தி
   விடை: அ) இந்திரா கோல்

7. இந்தியாவின் மிக உயரமான சிகரம் _____.
   அ) காட்வின் ஆஸ்டின் ஆ) எவரெஸ்ட் சிகரம்
   இ) ஆனைமுடி ஈ) தவளகிரி
   விடை: அ) காட்வின் ஆஸ்டின்

8. உலகின்/இமயமலையின் மிக உயரமான சிகரம் _____.
   அ) Mt.K2 ஆ) எவரெஸ்ட் சிகரம்
   இ) கஞ்சன்ஜங்கா ஈ) தவளகிரி
   விடை: ஆ) எவரெஸ்ட் சிகரம்

9. இந்தியாவின் திட்ட நேரமானது கிரீன்வீச் 0^0 நேரத்தை விட _____ முன்னதாக உள்ளது.
அ) 5மணி 30 நிமிடம் ஆ) 5 மணி 15 நிமிடம்
இ) 4 மணி 10 நிமிடம் ஈ) 3 மணி 30 நிமிடம் **விடை: அ) 5 மணி 30 நிமிடம்**

10. இந்தியாவின் மேற்கு கிழக்கு பரவல்
அ) 3214 கி.மீ ஆ) 2900 கி.மீ
இ) 2933 கி.மீ ஈ) 3100 கி.மீ **விடை: இ) 2933 கி.மீ**

11. இந்தியாவின் கிழக்கு மேற்கு பரவல் _____ தீர்க்கங்களைக் கொண்டுள்ளது.
அ) 30^0 ஆ) 40^0
இ) 50^0 ஈ) 60^0 **விடை: அ) 30^0**

12. இந்தியக் கடற்கரையின் நீளம் _____ கி.மீ.
அ) 6000 ஆ) 6100
இ) 5600 ஈ) 4500 **விடை: ஆ) 6100**

13. இமய மலைகள் _____ என அழைக்கப்படுகிறது.
அ) பனி உறைவிடம் ஆ) இமாச்சல்
இ) சிவலெக் ஈ) இமாத்திரி **விடை: அ) பனி உறைவிடம்**

14. _____ உலகின் கூரை என அழைக்கப்படுகிறது.
அ) கைலாஷ் ஆ) பாமீர் முடிச்சு
இ) லடாக் ஈ) Mt.K2 **விடை: ஆ) பாமீர் முடிச்சு**

15. ட்ரான்ஸ் இமயமலை (மேற்கு இமயமலை)கள் ஜம்மு காஷ்மீர் மற்றும் _____ யில் அமைந்துள்ளது.
அ) லடாக் பீடபூமி ஆ) கைலாஷ் மலை
இ) திபெத் பீடபூமி ஈ) பாமீர் முடிச்சு **விடை: இ) திபெத் பீடபூமி**

16. இந்தியாவின் இயற்கை அமைப்பு _____ பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.
அ) 3 ஆ) 4
இ) 6 ஈ) 5 **விடை: இ) 6**

17. இமயமலையில் பல மலைகள் கடல்மட்டத்திலிருந்து _____ மீட்டருக்கு மேல் உயரம் கொண்டவை.
அ) 6000 ஆ) 7000
இ) 8000 ஈ) 5000 **விடை: அ) 6000**

18. இந்தியாவில் பழமையான மலைத்தொடர் _____.
அ) விந்தியா ஆ) சாத்பூரா
இ) கைலாஷ் ஈ) ஆரவல்லி **விடை: ஈ) ஆரவல்லி**

19. நேபாளம் சிக்கிம் இடையே அமைந்த சிகரம் _____.
அ) தவளகிரி ஆ) கஞ்சன்ஜங்கா
இ) எவரெஸ்ட் ஈ) ஆனைமுடி **விடை: ஆ) கஞ்சன்ஜங்கா**

20. இமாசல பிரதேசத்தில் _____ கணவாய் உள்ளது.
அ) காரகோரம் ஆ) சிப்கிலா
இ) நாதுலா ஈ) ஜெலிப்லா **விடை: ஆ) சிப்கிலா**

21. வடபெரும் சமவெளிகள் _____ ச.கி.மீ நீளம் கொண்டது.
அ) 2400 ஆ) 2300
இ) 2200 ஈ) 2000 **விடை: அ) 2400**

22. _____ சமவெளி சிவாலிக் குன்றுகளின் தென்புறம் மேற்கிலிருந்து கிழக்காக அமைந்துள்ளது.
அ) பாபர் ஆ) காடர்
இ) கங்கை ஈ) இராஜ்தன் **விடை: அ) பாபர்**

23. இராஜஸ்தான் சமவெளியில் காணப்படும் முக்கிய ஆறு _____.
அ) சட்லெஜ் ஆ) பியாஸ்
இ) லூனி ஈ) ராவி **விடை: இ) லூனி**

24. இராஜஸ்தான் சமவெளியில் உள்ள மிகப்பெரிய ஏரி _____.
அ) உலார் ஆ) சில்கா
இ) கொல்லேறு ஈ) சாம்பார் **விடை: ஈ) சாம்பார்**

25. மேட்டு நில வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் _____.
அ) பாங்கர் ஆ) பாபர்
இ) தராய் ஈ) காதர் **விடை: அ) பாங்கர்**

26. புதிய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி
அ) காதர் ஆ) பாபர்
இ) தராய் ஈ) பாங்கர் **விடை: அ) காதர்**

27. வண்டல் சமவெளியின் உயர்நிலப்பகுதி _____.
அ) பில்ஸ் ஆ) ஷில்லாங்
இ) தராய் ஈ) சார்ஸ் **விடை: ஈ) சார்ஸ்**

28. வண்டல் சமவெளியின் சதுப்பு நிலப்பகுதி _____.
அ) பில்ஸ் ஆ) ஷில்லாங்
இ) தராய் ஈ) சார்ஸ் **விடை: அ) பில்ஸ்**

29. தீபகற்ப பீடபூமியின் உயரமான சிகரம் _____.
அ) தொட்டபெட்டா ஆ) ஆனைமுடி
இ) குருசிகார் ஈ) கிர் **விடை: ஆ) ஆனைமுடி**

30. ஆரவல்லி மலைத்தொடரின் உயரமான சிகரம் _____.
அ) ஆனைமுடி ஆ) தவளகிரி
இ) குருசிகார் ஈ) எவரெஸ்ட் **விடை: இ) குருசிகார்**

31. தக்காணபீடபூமி _____ இலட்சம் ச.கி.மீ பரப்பளவை கொண்டது.
அ) 6 ஆ) 7
இ) 8 ஈ) 5 **விடை: ஆ) 7**

32. மலை வாழிடமான _____ பழனி மலையின் தென்முனையில் அமைந்துள்ளது.
அ) கொடைக்கானல் ஆ) ஊட்டி
இ) நீலகிரி ஈ) ஏற்காடு **விடை: அ) கொடைக்கானல்**

33. கிழக்குத் தொடர்ச்சி மலை _____ என்றும் அழைக்கப்படுகிறது.
அ) கங்தோரி ஆ) யமுனோதிரி
இ) பூர்வாதிரி ஈ) தராய் **விடை: இ) பூர்வாதிரி**

34. இந்தியாவின் பெரிய பாலைவனம் _____.
அ) தார் ஆ) லடாக்
இ) லூ ஈ) சகாரா **விடை: ஆ) தார்**

35. மேற்கு கடற்கரைச் சமவெளியில் காணப்படும் முக்கிய ஏரி _____.
அ) கொல்லேறு ஆ) சில்கா
இ) வேம்பநாடு ஈ) சாம்பார் **விடை: இ) வேம்பநாடு**

36. மேற்கு கடற்கரைச் சமவெளியின் தென்பகுதி _____ கடற்கரை என அழைக்கப் படுகிறது.
அ) மலபார் ஆ) வடசர்க்கர்
இ) கனரா ஈ) கொங்கன் **விடை: அ) மலபார்**

37. மகாநதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட பகுதி _____ என அழைக்கப்படுகிறது.
அ) மலபார் ஆ) வடசர்க்கார்
இ) கனரா ஈ) சோழமண்டலக் கடற்கரை
விடை: ஆ) வடசர்க்கார்

38. கிருஷ்ணா நதிக்கும் காவேரி ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதி _____ கடற்கரை.
அ) மலபார் ஆ) கொங்கண்
இ) கனரா ஈ) சோழமண்டல **விடை: ஈ) சோழமண்டல**

39. இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரி _____.
அ) சில்கா ஆ) பழவேற்காடு
இ) வேம்பநாடு ஈ) சாம்பார் **விடை: அ) சில்கா**

40. உலகின் இரண்டாவது பெரிய நீண்ட கடற்கரை _____.
அ) மியாமி ஆ) சல்சர்
இ) மெரினா கடற்கரை ஈ) சோழ மண்டல கடற்கரை
விடை: இ) மெரினா கடற்கரை

41. அந்தமான் நிகோபார் தீவுகள் _____ தீவுகளைக் கொண்டது.
அ) 572 ஆ) 673
இ) 472 ஈ) 624 **விடை: அ) 572**

42. அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகள் _____ பாறைகளால் உருவானவை.
அ) அக்னி ஆ) படிவு
இ) முருகை ஈ) சுண்ணாம்பு **விடை: இ) முருகை**

43. அந்தமான் நிகோபாரின் தென்கோடி முனை _____ முனை என்று அழைக்கப்படுகிறது.
அ) இந்திரா ஆ) எந்திரா
இ) காந்தி ஈ) ஆந்திரா **விடை: அ) இந்திரா**

44. கங்கை ஆற்றின் பிறப்பிடம் _____ ஆகும்.
அ) ஏலகிரி மலை ஆ) அகத்தியர்
இ) கங்கோத்திரி ஈ) குடகுமலை **விடை: இ) கங்கோத்திரி**

45. ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிவிலான வண்டல் படிவுகள் _____ எனப்படும்.
ஆ) கயல்கள் ஆ) வடிகால் அமைப்பு
இ) டெல்டா ஈ) கழிகள் **விடை: இ) டெல்டா**

46. பிரம்மபுத்திரா ஆற்றின் பிறப்பிடம் _____ ஆகும்.
அ) மானசரோவர் ஏரி ஆ) சில்கா ஏரி
இ) சாம்பார் ஏரி ஈ) உலார் ஏரி **விடை: அ) மானசரோவர் ஏரி**

47. தென்னிந்திய ஆறுகளில் மிகப்பெரியது _____ ஆறு.
அ) காசேரி ஆ) கிருஷ்ணா
இ) கோதாவரி ஈ) மகாநதி **விடை: இ) கோதாவரி**

48. கோதாவரி டெல்டா பகுதியில் நன்னீர் ஏரியான _____ ஏரி அமைந்துள்ளது.
அ) கொல்லேறு ஆ) சில்கா
இ) பழவேற்காடு ஈ) வேம்பநாடு **விடை: அ) கொல்லேறு**

49. காவேரி ஆற்றின் பிறப்பிடம் _____ ஆகும்.
அ) ஏலகிரி மலை ஆ) அகத்தியர்
இ) குடகுமலை ஈ) பச்மாரி மலை **விடை: இ) குடகுமலை**

II. பொருத்துக.

1.	புனித தலம்	- அ) மாளவம்
2.	தராய்	- ஆ) சட்லஜ்
3.	லாவா பீடபூமி	- இ) ஆரவல்லி
4.	சிந்து நதியின் துணை நதி	- ஈ) கேதார்நாத்
5.	பழமையான மடிப்பு மலைத்தொடர்	- உ) சதுப்பு நிலம்
		ஊ) தக்காணம்

விடை: 1-ஈ 2-உ 3-ஊ 4-ஆ 5-இ

III. காரணம் கூறுக.

1. இந்தியா ஒரு துணைக்கண்டம்

இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்படக்கூடிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.

2. ட்ரான்ஸ் இமயமலை "திபெத்தியன் இமயமலை".

இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை "திபெத்தியன் இமயமலை" எனவும் அழைக்கப்படுகிறது.

3. இந்தியா வல்லமை பெற்ற நாடு

இந்தியா வடக்கில் உள்ள கம்பீரமான இமயமலை முகடுகளையும், தெற்கில் அழகான கடற்கரைகளையும், மேற்கில் இந்திய பாலைவனத்தையும் கிழக்கில் புகழ்பெற்ற இயற்கைப் பாரம்பரித்தையும் கொண்ட சிறந்த புவியியல் தோற்றங்களை கொண்ட ஒரு வல்லமைப் பெற்ற நாடாக அமைந்துள்ளது.

4. காவிரி ஆறு தென்னிந்தியாவின் கங்கை என அழைக்கப்படுகிறது.

கங்கை ஆற்றுக் கரையில் அமைந்த புண்ணிய தலங்களைப் போல் காவேரி ஆற்றுக் கரையிலும் பல புண்ணிய தலங்கள் அமைந்துள்ளதால் காவேரி ஆறு தென்னிந்தியாவின் கங்கை என அழைக்கப்படுகிறது.

5. ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்குகளை உருவாக்குகிறது.

ஆற்றின் மூப்பு நிலைக்காரணமாக ஆறுகள், அகலமான மற்றும் ஆழமற்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளது.

6. பெரிய இமயமலைகள் பனியாறுகள் காணப்படுகின்றன.

இம்மலையில் எப்போதும் நிரந்தரமாக பனி சூழ்ந்து காணப்படுவதால் கங்கோத்திரி சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

IV. வேறுபடுத்துக

1. கிரின்வீச் தீர்க்க நேரம் மற்றும் இந்தியத் திட்ட நேரம்

எண்.	கிரின்வீச் தீர்க்க நேரம்	இந்தியத் திட்ட நேரம்
1.	உலக நேரத்தை கணக்கிட உதவும்.	இந்திய திட்ட நேரத்தை கணக்கிட உதவும்.
2.	கிரின்வீச் வழியாகச் செல்கிறது.	அலகாபாத் வழியாகச் செல்கிறது.
3.	0° தீர்க்கம் தான் கிரின்வீச் தீர்க்க நேரம் எனப்படுகிறது.	82°80' கிழக்கு தீர்க்கம் தான் இந்தியாவின் திட்ட நேரம் எனப்படுகிறது.

2. இராஜஸ்தான் சமவெளி மற்றும் பஞ்சாப்-ஹரியானா சமவெளி

எண்.	இராஜஸ்தான் சமவெளி	பஞ்சாப்-ஹரியானா சமவெளி
1.	ஆரவல்லி மலைத் தொடருக்கு மேற்கில் பரவியுள்ளது.	இந்திய பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன.
2.	லூனி மற்றும் மறைந்து போன சரஸ்வதி ஆறுகளின் படிவுகளால் உருவாகியுள்ளது.	சட்லெஜ் பியாஸ் மற்றும் ராவி ஆறுகளினால் ஏற்படும் படிவுகளால் உருவானது.

3. கங்கைச் சமவெளி மற்றும் பிரம்மபுத்திரா சமவெளி

எண்.	கங்கைச் சமவெளி	பிரம்மபுத்திரா சமவெளி
1.	மேற்கிலுள்ள யமுனை ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்காளதேசம் வரை பரவியுள்ளது.	பெரும் பகுதி அஸ்ஸாமில் அமைந்துள்ளது.
2.	அதிக அளவில் வண்டல் படிவுகளைப் படிய வைத்து இந்தியாவின் மிகப்பெரிய சமவெளியை உருவாக்கியுள்ளன.	பிரம்மபுத்திரா ஆற்றினால் உருவாக்கப் பட்ட ஒரு தாழ்நில சமவெளியாக வடபெரும் சமவெளியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது.

4. பாங்கர் மற்றும் காதர்

எண்.	பாங்கர்	காதர்
1.	பெரும் சமவெளியில் காணப்படும் பாங்கர் என்பது மேட்டு நில வண்டல் படிவுகளை கொண்ட நிலத்தோற்றம் இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை.	ஆறுகளால் கொண்டுவரப்பட்டு படியவைக்கப்பட்டு புதிய வண்டல் மண்காதர் (அ) பெட்நிலம் என்று அழைக்கப்படுகிறது.

5. அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் இலட்சத் தீவுகள்

எண்.	அந்தமான் நிக்கோபார் தீவுகள்	இலட்சத் தீவுகள்
1.	இத்தீவுக் கூட்டங்கள் கடலடி மலைத்தொடரின் மேல் பகுதியாக அமைந்துள்ளன.	இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது.
2.	இத்தீவின் பரப்பளவு 8,249 ச.கி.மீ ஆகும்.	இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும். இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும்.
3.	இதன் நிர்வாகத் தலைநகரம் போர்ட் பிளேயர் ஆகும். நிகோபரின் தென்கோடி முனையை இந்திரா முனை என்று அழைக்கப்படுகிறது.	இலட்சத் தீவு மினிக்காய் மற்றும் அமினித் தீவுக் கூட்டங்களை 1973 ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இந்தியா ஒரு துணைக்கண்டம் என ஏன் அழைக்கப்படுகிறது?

இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்பட கூடிய வேறுபாடுகளை கொண்டுள்ளதால் இந்தியா ஒரு துணைக் கண்டம் என அழைக்கப்படுகிறது.

2. இந்தியாவில் அட்ச தீர்க்க பரவலை கூறு.

இந்தியா 8°4' வட அட்சம் முதல் 37°6' வட அட்சம் வரையிலும் 68°7' கிழக்கு தீர்க்கம் முதல் 97°25' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.

3. இந்தியாவில் எத்தனை மாநிலங்களும் எத்தனை யூனியன் பிரதேசங்களும் உள்ளன?

இந்தியா 29 மாநிலங்களாகவும், 7 யூனியன் பிரதேசங்களாகவும் நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டுள்ளது.

4. இந்தியாவின் இயற்கை அமைப்பு பிரிவுகள் யாவை?

இந்தியாவின் இயற்கை அமைப்பை 6 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

- இமயமலைகள்
- பெரிய இந்திய வட சமவெளிகள்
- தீபகற்ப பீடபூமிகள்
- இந்தியப் பாலைவனம்
- கடற்கரைச் சமவெளிகள்
- தீவுகள்

5. உலகின் கூரை எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

- பாமீர் முடிச்சு உலகின் கூரை என அழைக்கப்படுகிறது.
- இது மத்திய ஆசியாவின் உயரமான மலைத் தொடரையும் இமயமலையையும் இணைக்கும் பகுதியாக உள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. இமயமலையின் பெரும் உட்பிரிவுகள் யாவை?

இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாக பிரிக்கலாம்.

- ட்ரான்ஸ் இமய மலைகள்
- இமயமலைகள்
- கிழக்கு இமய மலை / பூர்வாஞ்சல் குன்றுகள்

7. ட்ரான்ஸ் இமயமலை குறிப்பு வரைக.

- இம்மலைகள் மேற்கு இமயமலைகள் என்றும் அழைக்கப்படுகிறது.
- இம்மலைகள் ஜம்மு-காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை "திபெத்தியன் இமயமலை" எனவும் அழைக்கப்படுகிறது.

8. சிவாலிக் இமயமலை குறிப்பு வரைக.

- இம்மலைத் தொடரானது ஜம்மு காஷ்மீரில் இருந்து அசாம் வரை நீண்டு உள்ளது.
- இதன் உயரம் 900 மீட்டரிலிருந்து 1100 மீட்டர் வரை வேறுபடுகிறது. இதன் சராசரி உயரம் 1000 மீ ஆகும்.

9. தார் பாலைவனம் குறிப்பு வரைக.

- பெரிய இந்திய பாலைவனம் தார் பாலைவனம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்திய துணைக்கண்டத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய வறண்ட நிலப்பகுதியாக உள்ளது.
- இது உலகின் 17 வது மிகப்பெரிய பாலைவனமாகவும் உள்ளது.

10. அந்தமான் நிக்கோபார் தீவு கூட்டங்களை விவரி.

- இத்தீவுக் கூட்டங்கள் கடலடி மலைத் தொடரின் மேல் பகுதியாக அமைந்துள்ளன.
- பூமத்திய ரேகைகள் அருகில் உள்ளதாலும் அதிக ஈரப்பதம் அதிக வெப்பம் கொண்ட காலநிலை நிலவுவதாலும் அடர்ந்த காடுகள் இங்கு காணப்படுகின்றன.
- இதன் நிர்வாகத் தலைநகரம் போர்ட் பிளேயர் ஆகும்.
- நிகோபாரின் தென்கோடி முனை, இந்திரா முனை என்று அழைக்கப்படுகிறது.

11. இமயமலையில் தோன்றும் ஆறுகளின் சிறப்பு இயல்புகள் யாவை?

இமயமலையில் தோன்றும் ஆறுகளின் சிறப்பு இயல்புகள்:

- இமயமலையில் உற்பத்தியாகின்றன.
- நீளமானவை மற்றும் அகலமானவை.
- வற்றாத நதிகள்
- நீர்மின் உற்பத்தி செய்ய இயலாத நிலை
- ஆற்றின் மத்திய மற்றும் கீழ்நிலை பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது.

12. இமயமலையின் முக்கிய கணவாய்கள் யாவை?

- காரகோரம் கணவாய் (ஜம்மு-காஷ்மீர்)
- ஜோஷிலா கணவாய்
- சிப்கிலா கணவாய் (இமாச்சல் பிரதேசம்)
- பொமிடிலா கணவாய் (அருணாச்சல பிரதேசம்)
- நாதுலா மற்றும் ஜெளப்லா கணவாய் (சிக்கிம்)

VII. விரிவாக விடையளிக்கவும்.

1. வட இந்திய பெரும் சமவெளியின் பிரிவுகளை விவரி.

அ) இராஜஸ்தான் சமவெளி:

- இராஜஸ்தான் சமவெளி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் ஏறத்தாழ 1,75,000 சதுர கி.மீ பரப்பளவில் பரவியுள்ளது.
- இச்சமவெளி லூனி மற்றும் மறைந்து போன சரஸ்வதி ஆறுகளின் படிவுகளால் உருவாகியுள்ளது. பல உப்பு ஏரிகள் இராஜஸ்தான் சமவெளியில் காணப்படுகின்றன.
- ஜெய்ப்பூருக்கு அருகில் உள்ள சாம்பார் ஏரி (புஷ்கர் ஏரி) அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆ) பஞ்சாப் - ஹரியானா சமவெளி:

- ஏறத்தாழ 1.75 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட பஞ்சாப் ஹரியானா சமவெளிகள் இந்திய பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன.
- இச்சமவெளி சட்லெஜ் பியாஸ் மற்றும் ராவி ஆறுகளினால் ஏற்படும் படிவுகளால் உருவானது.
- இச்சமவெளி நீர்பிரி மேடாகவும் கங்கை, யமுனை, யமுனை-சட்லெஜ் ஆற்றிடைச் சமவெளியாகவும் உள்ளது.

இ) கங்கைச் சமவெளி:

- கங்கைச் சமவெளி மேற்கிலுள்ள யமுனை ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்காளதேசம் வரை சுமார் 3.75 சதுர லட்சம் கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- கங்கையும் அதன் துணை ஆறுகளான காக்கரா, காண்டக், கோசி, யமுனை, சாம்பல், பெட்வா போன்றவைகளும் அதிக அளவில் வண்டல் படிவுகளைப் படிய வைத்து இந்தியாவின் மிகப்பெரிய சமவெளியை உருவாக்கியுள்ளன.
- கங்கைச் சமவெளி கிழக்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி மென் சரிவாக அமைந்துள்ளது.

ஈ) பிரம்மபுத்திரா சமவெளி:

- பிரம்மபுத்திரா சமவெளியின் பெரும்பகுதி அஸ்ஸாமில் அமைந்துள்ளது.

- பிரம்மபுத்திரா ஆற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்நில சமவெளியாக வடபெரும் சமவெளியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது.
- சுமார் 56.275 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வண்டல் விசிறிகளாகவும் தராய் எனப்படும் சதுப்பு நிலக் காடுகளாகவும் காணப்படுகிறது.

2. கடற்கரைச் சமவெளிகளை விரிவாக எழுதுக.

கடற்கரைச் சமவெளிகள்:

- இந்திய தீபகற்ப பீடபூமி குறுகலான வேறுபட்ட அகலத்தையுடைய வடக்கு தெற்காக அமைந்துள்ள கடற்கரைகளால் சூழப்பட்டுள்ளது.
- இக்கடற்கரைச் சமவெளிகள் மேற்கு கடற்கரைச் சமவெளிகள் என்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- இக்கடற்கரைச் சமவெளிகள் ஆறுகள், கடல் அலைகள் அரித்தல் மற்றும் படிய வைத்தல் செயல்களால் உருவானவை.
- இந்திய கடற்கரைச் சமவெளிகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை: மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி.

அ) மேற்கு கடற்கரைச் சமவெளி:

- மேற்கு கடற்கரைச் சமவெளி மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. இது வடக்கில் உள்ள ராணாப்கட்ச் முதல் தெற்கில் உள்ள கன்னியாகுமரி வரை நீண்டு 10 கி.மீ முதல் 80 கி.மீ வரை அகலம் கொண்டதாகவுள்ளது.
- மேற்கு கடற்கரையின் வடபகுதி கொங்கணக் கடற்கரை எனவும், மத்திய பகுதி கனரா கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.
- வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான ஏரியாகும்.

ஆ) கிழக்கு கடற்கரைச் சமவெளி:

- கிழக்கு கடற்கரைச் சமவெளி கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திராபிரதேசம் மற்றும் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது.
- இச்சமவெளியானது கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளால் வைக்கப்பட்ட வண்டல் படிவுகளால் உருவானது.
- மகாநதிக்கும், கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்டப் பகுதி வடசர்க்கார் எனவும் கிருஷ்ணா மற்றும் காவேரி ஆற்றிற்கு இடைப்பட்டப் பகுதி சோழமண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.
- சென்னையில் உள்ள மெரினா கடற்கரை மிக பிரபலமான உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையாகும்.
- கோதாவரி ஆற்றுக்கும், கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையே கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.
- தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச எல்லையில் பழவேற்காடு ஏரி அமைந்துள்ளது.

3. இமயமலையில் தோன்றும் ஆறுகளை பற்றி விவரி.

இமயமலையில் தோன்றும் ஆறுகள்:

- இமயமலையில் தோன்றும் ஆறுகள் வட இந்தியாவில் பாய்கின்றன.
- வடக்கே உள்ள இமயமலையில் இந்த ஆறுகள் உற்பத்தியாவதால் இமயமலை ஆறுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- இவை வற்றாத ஜீவ நதிகள் ஆகும்.

அ) சிந்து நதித் தொகுப்பு:

- உலகில் உள்ள நீளமான நதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. திபெத் பகுதியில் உள்ள கைலாஷ் மலைத் தொடரின் வடக்கு சரிவில் மானசரோவர் ஏரிக்கு அருகில் 5150 மீ உயரத்தில் உற்பத்தியாகிறது.
- இது லடாக் மற்றும் ஜாஸ்கர் மலைத்தொடர் வழியாகப் பாய்ந்து குறுகிய மலை இடுக்குகளை உருவாக்குகிறது.
- இதன் துணையாறுகள் ஜீலம், சினாப் ராவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் ஆகியனவாகும். சினாப் சிந்து நதியுடன் மிகப்பெரிய துணையாறு ஆகும்.

ஆ) கங்கை ஆற்றுத் தொகுப்பு:

- கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- வடபகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டாக், கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

இ) பிரம்மபுத்ரா ஆற்றுத் தொகுப்பு:

- திபெத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு கிழக்கே கைலாஷ் மலைத்தொடரில் உள்ள செம்மாயுங்டாங் என்ற பனியாற்றில் சுமார் 5150 மீ உயரத்திலிருந்து உற்பத்தியாகிறது.
- இவ்வாற்றின் நீளம் சுமார் 2900 கி.மீ இதில் 900 கி.மீ மட்டுமே இந்தியாவில் பாய்கிறது.
- பிரம்மபுத்ரா ஆறு அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள திகாங் என்ற மலை இடுக்கின் வழியாக இந்தியாவிற்குள் நுழைகிறது.
- கிஸ்டா, மனாஸ், பராக், சுபன் ஸ்ரீ ஆகியவை இவ்வாற்றின் சில முக்கிய துணையாறுகளாகும்.

புவியியல்

இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

அலகு 2

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி _____.
அ) தமிழ்நாடு ஆ) கேரளா
இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம் **விடை: இ) பஞ்சாப்**

2. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு _____ காற்றுகள் உதவுகின்றன.
அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ்
இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம் **விடை: இ) மாஞ்சாரல்**

3. ஒரே அளவுள்ள மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு _____ ஆகும்.
அ) சமவெப்ப கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள் **விடை: ஆ) சம மழைக்கோடுகள்**

4. இந்தியாவின் காலநிலை _____ ஆக பெயரிடப்பட்டுள்ளது.
அ) அயன மண்டல ஈரக் காலநிலை
ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
இ) அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை
ஈ) மித அயனமண்டலக் காலநிலை
விடை: இ) அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை

5. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
ஆ) இலையுதிர்க் காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள்
ஈ) மலைக் காடுகள் **விடை: ஆ) இலையுதிர்க் காடுகள்**

6. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் _____.
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம்
இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா **விடை: ஆ) ஆந்திரப் பிரதேசம்**

7. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது _____.

அ) நீலகிரி ஆ) அகத்திய மலை
இ) பெரிய நிக்கோபர் ஈ) கட்ச் **விடை: ஈ) கட்ச்**

II. பொருத்துக.

1.	சுந்தரவனம்	-	அ) பாலை மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள்
2.	உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள்	-	ஆ) அக்டோபர், டிசம்பர்
3.	வடகிழக்குப் பருவக்காற்று	-	இ) கடற்கரைக் காடுகள்
4.	அயன மண்டல முட்புதர் காடுகள்	-	ஈ) மேற்கு வங்களாம்
5.	கடலோரக் காடுகள்	-	உ) இமயமலைகள்

விடை: 1.ஈ 2.உ 3.ஆ 4.அ 5.இ

III. கீழ்க்காணும் வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **கூற்று : இமயமலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.**
காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாமக வைத்திருக்கிறது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு காரணம் சரி.

விடை : அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி

IV. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க.

1. **ஓதக்காடுகள் இதனைச் சுற்றி காணப்படுகிறது.**

அ) பாலைவனம் ஆ) கங்கை பிரம்மபுத்ரா டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) மகாநதி டெல்டா **விடை: அ) பாலைவனம்**

2. **இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்**

அ) அட்ச பரவல்
ஆ) உயரம்
இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்
ஈ) மண் **விடை: ஈ) மண்**

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.

- அட்சங்கள்
- கடல் மட்டத்திலிருந்து உயரம்
- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
- பருவக்காற்று
- நிலத்தோற்றம்
- ஜெட்காற்றுகள்

2. 'வெப்ப குறைவு விகிதம்' என்றால் என்ன?

புவிப்பரப்பிலிருந்து உயரேசெல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5° C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. இதற்கு 'வெப்பகுறைவு விகிதம்' என்று பெயர்.

3. 'ஜெட் காற்றோட்டங்கள்' என்றால் என்ன?

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" என்கிறோம்.

4. பருவக்காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.

பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் பருவக்காற்று என்கிறோம்.

5. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.

- குளிர்க்காலம்: ஜனவரி முதல் பிப்ரவரி வரை.
- கோடைக்காலம்: மார்ச் முதல் மே வரை.
- தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை.
- வடகிழக்கு பருவக்காற்று காலம்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

6. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?

- தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46° C வரை உயருகிறது.
- தென்மேற்கு பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) 'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது.

7. அதிக மழை பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.

- மேற்கு கடற்கரை
- அசாம் மேகாலயாவின் தென்பகுதி
- திரிபுரா
- நாகலாந்து
- அருணாச்சலப்பிரதேசம்

போன்ற பகுதிகள் 200 செ. மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவையும் பெறுகின்றன.

8. இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

- கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப் பெரிய சதுப்பு நிலக்காடுகள் உள்ளன.
- மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன.

9. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

- மன்னார் வளைகுடா
- நந்தாதேவி
- நீலகிரி
- சுந்தரவனம்
- அகத்திய மலை

VI. வேறுபடுத்துக.

1. வானிலை மற்றும் காலநிலை.

எண்	வானிலை	காலநிலை
1.	வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.	காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30-35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.
2.	மாறக்கூடியது.	மாறாதது.

2. அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் மற்றும் இலையுதிர்க் காடுகள்.

எண்	அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்	இலையுதிர்க் காடுகள்
1.	ஆண்டு மழைப் பொழிவு 200 செ.மீக்கு மேல்.	ஆண்டு மழைப்பொழிவு 100 செ.மீ - 200 செ.மீ.
2.	இப்பகுதியில் ஆண்டு வெப்பநிலை 22° C க்கு அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதத்திற்கு மேலும் உள்ளது.	இப்பகுதியில் ஆண்டு சராசரி வெப்பநிலை 27° C ஆகவும் மற்றும் சராசரி ஒப்பு ஈரப்பதம் 60 முதல் 70 சதவீதமாகவும் உள்ளது.
3.	இரப்பர், எபனி, தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.	இங்கு தேக்கு சால், சந்தனமரம், ரோஸ்மரம், மூங்கில், போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

3. வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று.

எண்	வடகிழக்கு பருவக் காற்று	தென்மேற்கு பருவக்காற்று
1.	காலம் - அக்டோபர் முதல் நவம்பர் வரை.	காலம் - ஜூன் முதல் செப்டம்பர் வரை.

2.	நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது.	கடலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது.
3.	குறைந்த மழைப்பொழிவு.	அதிக மழைப்பொழிவு.

VII. காரணம் கூறுக.

1. மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.

அரபிக்கடலுக்கும், மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் இடைப்பட்ட இடைவெளி குறைவாக உள்ளதால் மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.

2. இந்தியா அயன மண்டலப் பருவக்காற்றுக் காலைநிலையைப் பெற்றுள்ளது.

- இந்தியாவின் அமைவிடம் அயனமண்டல பகுதியாகும்.
- இந்தியா ஒரு பருவக்காற்று நாடாகும். ஆதலால் இந்தியா அயனமண்டலப் பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது.

3. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.

- மலைப்பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து உயரமானது.
- சமவெளிகள் கடல் மட்டத்திலிருந்து உயரம் குறைவானது.
- புவி பரப்பிலிருந்து மேலே செல்ல செல்ல வெப்பநிலை குறைகிறது.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

- பருவக்காற்று பொதுவாக ஜூன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென் பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரை பகுதிக்கு ஜூன் இரண்டாவது வாரத்திலும் ஜூலை 15, இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.
- எல்நினோ காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்ப நிலையானது 46° C வரை உயருகிறது.
- இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) "பருவமழை வெடிப்பு" எனப்படுகிறது.

இருபிரிவுகள்:

- இதன் ஒரு கிளை அரபிக்கடல் வழியாகவும்
- மற்றொரு கிளை வங்காள விரிகுடா வழியாகவும் வீசுகிறது.

அரபிக்கடல் கிளை:

- தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப்பொழிவைத் தருகிறது.
- இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைத் தோற்றுவிக்கிறது.

- ஆரவல்லி மலைத்தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

வங்காள விரிகுடா கிளை:

- வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.
- இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் மிக கனமழையைத் தருகிறது.
- பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும்போது மழைப்பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.
- இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவில் 75 சதவீத மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.

2. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

அயனமண்டல பசுமைமாறாக் காடுகள்:

- ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கு மேலும், ஆண்டு வெப்பநிலை 22° C க்கு அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதத்திற்கு மேலும் உள்ள பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகின்றன.
- இரப்பர், எபனி, ரோஸ் மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

அயனமண்டல இலையுதிர்க் காடுகள்:

- இவ்வகை காடுகள் ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.
- இப்பகுதியில் ஆண்டு சராசரி வெப்பநிலை 27° C ஆகவும் மற்றும் சராசரி ஒப்பு ஈரப்பதம் 60 முதல் 70 சதவீதமாகவும் உள்ளது.
- இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைக்காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன.
- இக்காடுகள் நறுமண திரவியங்கள் வார்னிஷ், சந்தன எண்ணெய் மற்றும் வாசைன திரவியங்களை அளிக்கின்றன.

அயனமண்டல வறண்ட காடுகள்:

- ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.
- அயனமண்டல வறண்ட காடுகள் ஒரு இடைநிலை வகைக் காடாகும்.

பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள்:

- இக்காடுகளை "முட்புதர்க் காடுகள்" என்றும் அழைப்பர். இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிக வெப்பமும் மற்றும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன

அல்பைன் காடுகள்:

- சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகள் உயரமான பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. இவ்வகைக்காடுகள் ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன.
- ஓக், சில்வர் பிர், பைன் மற்றும் ஜீனிபர் மரங்கள் இக்காட்டின் முக்கிய மரவகைகளாகும்.

அலையாத்திக் காடுகள்:

- இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்புநிலக் காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

IX. வரைபடப் பணி.

இந்திய நில வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை.
2. வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை.
3. அதிக மழை பெரும் பகுதிகள்.
4. மலைக் காடுகள்.
5. பன்னா உயிர்க்கோள பெட்டகம்.
6. அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்.





கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ இந்திய நாட்டை இருசமபாகங்களாக பிரிக்கிறது.
   அ) வடதுருவம் ஆ) பூமத்திய ரேகை
   இ) கடக ரேகை ஈ) மகர ரேகை **விடை: இ) கடக ரேகை**

2. வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.50 வெப்பநிலை _____.
   அ) சமம் ஆ) அதிகரிக்கும்
   இ) குறையும் ஈ) சாதாரணமாக **விடை: இ) குறையும்**

3. இமயமலைகள் _____ லிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுக்கிறது.
   அ) மத்திய ஆசியா ஆ) சீனா
   இ) ஆப்கானிஸ்தான் ஈ) ஆர்க்டிக் பகுதி **விடை: அ) மத்திய ஆசியா**

4. அரபு வார்த்தையான 'மௌசிம்' என்பதன் பொருள் _____.
   அ) காற்று ஆ) பருவகாலம்
   இ) மழை ஈ) சூரியன் **விடை: ஆ) பருவகாலம்**

5. மான்சூன் என்ற சொல் "மௌசிம்" என்ற _____ சொல்லிருந்து பெறப்பட்டது.
   அ) சான்ஸ்கிரிட் ஆ) பிரெஞ்சு
   இ) அரபு ஈ) கீரிக் **விடை: இ) அரபு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் _____ என்கிறோம்.
அ) உறைபனி ஆ) ஜெட் காற்றுகள்
இ) பருவக்காற்றுகள் ஈ) மகரரேகை **விடை: ஆ) ஜெட் காற்றுகள்**

7. கோடை காலத்தில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக _____ மீது விழுகிறது.
அ) கடக ரேகை ஆ) பூமத்திய ரேகை
இ) துருவப் பகுதி ஈ) மகர ரேகை **விடை: அ) கடக ரேகை**

8. _____ காலத்தில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக மகரரேகை மீது விழுகிறது.
அ) கோடைக் ஆ) குளிர்
இ) மழைக் ஈ) வசந்தக் **விடை: ஆ) குளிர்**

9. _____ காலத்தில் சூரியனின் கதிர்கள் செங்குத்தாக தீபகற்ப இந்தியாவின் மீது விழுகிறது.
அ) கோடைக் ஆ) குளிர்
இ) மழைக் ஈ) வசந்த **விடை: அ) கோடைக்**

10. மாஞ்சரால் _____ கடற்கரை பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.
அ) கேரளா மற்றும் கர்நாடகம்
ஆ) கேரளா மற்றும் தமிழ்நாடு
இ) கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு
ஈ) ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு **விடை: அ) கேரளா மற்றும் கர்நாடகம்**

11. தென் இந்தியாவில் தென் மேற்கு பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் _____.
அ) முன் பருவக்காலம் ஆ) பருவ மழை வெடிப்பு
இ) கல்பாய்ஷாகி ஈ) மாஞ்சரால் **விடை: ஆ) பருவமழை வெடிப்பு**

12. உலகிலேயே அதிக மழைபெறும் பகுதி _____.
அ) சிரபுஞ்சி ஆ) ஜெய்ப்பூர்
இ) மௌசின்ராம் ஈ) தொட்டபெட்டா **விடை: இ) மௌசின்ராம்**

13. மௌசின்ராம் அமைந்துள்ள இடம் _____ மாநிலம்.
அ) அஸ்ஸாம் ஆ) மிசோரம்
இ) நாகலாந்து ஈ) மேகலாயா **விடை: ஈ) மேகலாயா**

14. இந்தியாவின் சராசரி மழையளவு _____.
அ) 1000 செ.மீ ஆ) 118 செ.மீ
இ) 125 செ.மீ ஈ) 150 செ.மீ **விடை: ஆ) 118 செ.மீ**

15. போக்குவரத்து வசதியின்மை காரணமாக _____ வியாபார ரீதியாக பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை.
அ) அயன மண்டல வறண்டகாடுகள்
ஆ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
இ) மலைக்காடுகள்
ஈ) அயனமண்டல இலையுதிர்க் காடுகள்
விடை: ஆ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்

16. அயன மண்டல இலையுதிர்க் காடுகளை _____ என்று அழைக்கலாம்.
அ) முட்புதர்க் காடுகள் ஆ) பருவக்காற்றுக் காடுகள்
இ) மலைக்காடுகள் ஈ) இமயமலைகள்
விடை: ஆ) பருவக்காற்று காடுகள்

17. _____ காடுகளின் ஆண்டு சராசரி மழையளவு 50 செ.மீ குறைவாகும்.
அ) முட்புதர்க் ஆ) இலையுதிர்க்
இ) பருவக்காற்றுக் ஈ) மலைக் **விடை: அ) முட்புதர்க்**

18. _____ இந்திய மாநிலங்களில் உள்ள கிழக்கு இமயமலைச் சரிவுகளில் கிழக்கு இமயமலைக் காடுகள் காணப்படுகிறது.
அ) வடகிழக்கு ஆ) வடமேற்கு
இ) தென்கிழக்கு ஈ) தென்மேற்கு **விடை: அ) வடகிழக்கு**

19. கங்கை-பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப் பெரிய _____ உள்ளன.
அ) முட்புதர்க் காடுகள் ஆ) சதுப்புநிலக் காடுகள்
இ) பசுமைமாறாக் காடுகள் ஈ) இலையுதிர்க் காடுகள்
விடை: ஆ) சதுப்புநிலக் காடுகள்

20. சதுப்புநிலக் காடுகள் _____ என்று அழைக்கப்படுகிறது.
அ) முட்புதர்க் காடுகள் ஆ) பருவக்காற்றுக் காடுகள்
இ) இலையுதிர்க் காடுகள் ஈ) மாங்குரோவ் காடுகள்
விடை: ஈ) மாங்குரோவ் காடுகள்

21. கேரளா, கோவா பகுதிகளில் _____ காடுகள் அதிகமாக உள்ளன.
அ) முட்புதர்க் ஆ) பருவக்காற்றுக்
இ) கடற்கரையோரக் ஈ) மாங்குரோவ் **விடை: இ) கடற்கரையோரக்**

22. _____ ஆந்திரப்பிரதேசத்திற்கும், ஹரியானாவிற்கும், பஞ்சாபிற்கும் மாநில விலங்காகத் திகழ்கிறது.
அ) சிங்கம் ஆ) கலைமான்
இ) யானை ஈ) புலி **விடை: ஆ) கலைமான்**

23. _____ ஆம் ஆண்டு இந்திய வனவிலங்கு வாரியம் நிறுவப்பட்டது.
அ) 1948 ஆ) 1950
இ) 1952 ஈ) 1955 **விடை: இ) 1952**

24. இந்திய அரசு _____ இல் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.
அ) 1958 ஆ) 1972
இ) 1952 ஈ) 1975 **விடை: ஆ) 1972**

25. புலிகளை பாதுகாக்கவும், எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தோடும் 1973 இல் _____ தொடங்கப்பட்டது.
அ) புலிகள் காப்பகங்கள் ஆ) புலிகளை கவனித்தல்
இ) புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஈ) புலிகள் முன்னெச்சரிக்கை
விடை: இ) புலிகள் பாதுகாப்புத் திட்டம்

26. இந்தியாவில் வனவிலங்கு ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம் _____.
அ) நாக்பூர் ஆ) டேராடூன்
இ) டார்ஜிலிங் ஈ) பாட்டியலா **விடை: ஆ) டேராடூன்**

27. இந்தியாவில் _____ உயிர்க்கோள காப்பகங்கள் உள்ளன.
அ) 10 ஆ) 15
இ) 18 ஈ) 20 **விடை: இ) 18**

II. பொருத்துக.

I

1.	மன்னார் வளைகுடா	-	அ) குறைவான மழைபெறும் பகுதி
2.	புலிகள் பாதுகாப்புத் திட்டம்	-	ஆ) உயிர்க்கோளம்
3.	முட்புதர் காடுகள்	-	இ) வறண்ட இடம்
4.	மௌசின்ராம்	-	ஈ) புலிகள் பாதுகாப்பகங்கள்
5.	அட்டகாமா பாலைவனம்	-	உ) அதிகமான மழைபெறும் பகுதி

விடை: 1.ஆ 2.ஈ 3.இ 4.உ 5.அ

II

1.	சமமான காலநிலை	-	அ) கால்பைசாகி
2.	கடக ரேகை	-	ஆ) பிரிட்டிய காலநிலை
3.	காற்று மோதா பக்கம்	-	இ) காலங்கள்
4.	மௌசிம்	-	ஈ) மழை மறைவு பிரதேசம்
5.	நார்வெஸ்டர்ஸ்	-	உ) இந்தியாவை இரு சமபாகங்களாகப் பிரித்தல்

விடை: 1.ஆ 2.உ 3.ஈ 4.இ 5.அ

III

1.	மாஞ்சாரல்	-	அ) ஒவ்வொரு 1000 மீட்டரும் 6.5° C
2.	காற்று மோதா பக்கம்	-	ஆ) பஞ்சாப்
3.	இயல்பு வெப்ப வீழ்ச்சி	-	இ) கர்நாடகம்
4.	கலைமான்	-	ஈ) தமிழ்நாடு
5.	நீலகிரி வரையாடு	-	உ) கேரளா

விடை: 1.உ 2.இ 3.அ 4.ஆ 5.ஈ

III. கீழ்க்காணும் வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று (A) : ஆற்றங்கரைக் காடுகள் காதர் பகுதிகளில் காணப்படுகிறது.
காரணம் (R) : வடபெரும் சமவெளி பகுதிகளிலுள்ள ஆற்றுப் பகுதிகளில் இவ்வகைத் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று சரி, காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி.

IV. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. கடல் அமைந்துள்ள தொலைவின் அடிப்படையில் ஓர் இடத்தின் காலநிலை எவ்வாறு மாறுபடுகிறது?

- கொச்சி கடற்கரைப் பகுதியில் அமைந்திருப்பதால் இதன் வருடாந்திர சராசரி வெப்பம் 30° C அளவுக்கு மிகாமல் உள்ளது.
- மாறாக கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள புதுடில்லியின் வருடாந்திர சராசரி வெப்பம் 40° C க்கும் அதிகமாக உள்ளது.
- கடற்கரைப் பகுதியில் காற்றில் ஈரப்பதம் மிகுந்து இருப்பதால் இவை அதிக மழை தரும் திறனைக் கொண்டுள்ளது.
- இதனால் கடற்கரைக்கு அருகிலுள்ள கொல்கத்தாவில் மழைப்பொழவு 119 செ.மீ ஆகவும், உள் பகுதியில் அமைந்திருக்கும் பீகாரில் (இராஜஸ்தான்) 24 செ.மீக்கு குறைவான மழைப்பொழிவே பதிவாகின்றது.

2. வானிலை மற்றும் காலநிலையை வரையறு.

வானிலை:

வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.

காலநிலை:

காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30-35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

3. கால்பைசாகி காற்று குறிப்பு தருக.

- ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று நார்வெஸ்டர் அல்லது கால்பைசாகி என்று அழைக்கப்படுகிறது.
- இக்காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளான பீகார், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்களுக்கு இடியுடன் கூடிய குறுகிய கால மழையைத் தருகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

4. மாங்காய்கள் முதிர்வதற்கு உதவும் மழையைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன?

- வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென் மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது.
- இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரை பகுதிகளுக்கு முன் பருவகால மழையைத் தருகின்றன.
- மாஞ்சாரல் என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் "மாங்காய்கள்" விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.

5. இயற்கைத் தாவரங்கள் என்றால் என்ன?

இயற்கைத் தாவரம் என்பது நேரடியாகவோ, மறைமுகமாகவோ மனித உதவியில்லாமல் இயற்கையாக வளர்ந்துள்ள தாவர இனத்தைக் குறிக்கிறது.

6. 100 செ.மீ கீழ் மழை பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.

- ராஜஸ்தான் மாநிலம் முழுவதும், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேச மாநிலத்தின் மேற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகள், மத்தியப் பிரதேசத்தின் மேற்கு பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதி மற்றும் தக்காணப் பீடபூமி பகுதி மற்றும் தமிழக கடற்கரையின் ஒரு குறுகியப்பகுதி போன்றவை 100 செ.மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவைப் பெறுகின்றன.
- மற்ற பகுதிகள் 100 முதல் 200 செ.மீ வரையிலான மழைப்பொழிவைப் பெறுகின்றன.

7. இயற்கை தாவர வளர்ச்சியை கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?

இற்கை தாவர வளர்ச்சியை கட்டுப்படுத்தும் காரணிகள்:

- காலநிலை
- மண்வகைகள்
- மழைப்பொழிவு
- நிலத்தோற்றங்கள்

8. ஓத அலைக்காடுகள் எங்கு காணப்படுகிறது? அதன் மறுபெயர் என்ன?

- இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்புநிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப்பெரிய சதுப்பு நிலக் காடுகள் உள்ளன.
- மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நகதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன.
- இவை "மாங்குரோவ் காடுகள்" என்றும் அழைக்கப்படுகிறது.

9. வன உயிரினங்கள் என்பவை எவை? அதன் பிரிவுகள் யாவை?

- இயற்கைச் சூழ்நிலை அல்லது காடுகளை வாழிடமாகக் கொண்டு வாழும் விலங்குகள் வன உயிரினங்கள் எனப்படுகின்றன.

- வன உயிரினங்கள் இருபிரிவுகளை உள்ளடக்கியது. அவை: முதுகெலும்புள்ளவை (மீன், இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள்) மற்றும் முதுகெலும்பில்லாதவை (தேனீ, பட்டாம்பூச்சி, அந்திப்பூச்சி போன்றவை)

10. இந்தியாவின் உயிர்க்கோளக் காப்பகங்கள் - குறிப்பு வரைக.

இந்தியாவில் உள்ள 18 உயிர்க்கோள காப்பகங்களில், 11 காப்பகங்கள் (மன்னார் வளைகுடா, நந்தா தேவி, நீலகிரி, நாக்ரேஜ், பச்மாரி, சிம்லிபால், சுந்தரவனம், அகத்திய மலை, பெரிய நிக்கோபார், கஞ்சன்ஜங்கா மற்றும் அமர்கன்டாக்) யுனெஸ்கோவின் மனித மற்றும் உயிர்க்கோள காப்பக திட்டத்தின் கீழ் செயல்படுகிறது.

11. வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் ஏன்? எப்பொழுது இயற்றப்பட்டது?

வனவிலங்குகளைப் பாதுகாக்கவும், வேட்டையாடுதல், கடத்துதல் மற்றும் சட்டவிரோத வணிகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் இந்திய அரசு 1972 இல் வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.

V. வேறுபடுத்துக

1. பின்னடையும் பருவக்காற்று மற்றும் பருவமழை வெடிப்பு.

எண்.	பின்னடையும் பருவக்காற்று	பருவமழை வெடிப்பு
1.	செப்டம்பர் மாத இறுதியில் அழுத்த மண்டலமானது புவியில் தெற்கு நோக்கி நகர ஆரம்பிப்பதால் தென் மேற்கு பருவகாற்று பின்னடையும் பருவக்காற்றாக நிலப்பகுதியிலிருந்து வங்காள விரிகுடா நோக்கி வீசுகிறது.	இப்பருவக் காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் பருவமழை வெடிப்பு எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.

2. அல்பைன் காடுகள் மற்றும் ஓத அலை காடுகள்

எண்.	அல்பைன் காடுகள்	ஓத அலை காடுகள்
1.	சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகை காடுகள் காணப்படுகின்றன.	இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற் கழிமுகப்பகுதிகளில் காணப்படுகின்றன.
2.	ஓக், சில்வர்பிர், பைன் மற்றும் ஜூனிபர் மரங்கள் இக்காட்டின் முக்கிய மர வகைகளாகும்.	மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளில் இவ்வகை ஓதக் காடுகள் காணப்படுகின்றன.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. அதிக மழைபெறும் பகுதிகள் மற்றும் குறைவான மழைபெறும் பகுதிகள்

எண்.	அதிக மழைபெறும் பகுதிகள்	குறைவான மழைபெறும் பகுதிகள்
1.	200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவையும் பெறுகின்றன.	100 ச.செ.மீட்டருக்குக் குறைவான மழைப்பொழிவைப் பெறுகின்றது.
2.	அதிகமாக மழைபெறும் பகுதிகள் திரிபுரா தென்பகுதி, நாகலாந்து, அசாம் போன்றவை ஆகும்.	குறைவாக மழை பெறும் பகுதிகள் பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மேற்கு போன்றவை ஆகும்.

VI. காரணம் கூறுக.

1. இந்தியா அதிக வெப்பநிலையைப் பெறுகிறது.

- இந்தியா 8°4' வட அட்சம் முதல் 37°6' வட அட்சம் வரை அமைந்துள்ளது. 23°30' வட அட்சமான கடகரேகை நாட்டை இரு சம பாகங்களாகப் பிரிக்கிறது.
- கடகரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிக வெப்பமும், மிகக் குளிரற்ற சூழலும் நிலவுகிறது.

2. இந்திய அரசு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம்.

வனவிலங்குகளைப் பாதுகாக்கவும், வேட்டையாடுதல், கடத்துதல், மற்றும் சட்டவிரோத வணிகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் இந்திய அரசு 1972 இல் வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.

3. ஆண்டு வெப்பநிலை கொச்சியை விட டெல்லியில் அதிகம்.

- கொச்சி கடற்கரைப் பகுதியில் அமைந்திருப்பதால் இதன் வருடாந்திர சராசரி வெப்பம் 30° C அளவுக்கு மிகாமல் உள்ளது.
- மாறாக கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைந்தள்ள புதுடில்லியின் வருடாந்திர சராசரி வெப்பம் 40° C க்கும் அதிகமாக உள்ளது.

4. ஆண்டு மழைப்பொழிவு ராஜஸ்தானை விட கொல்கத்தாவில் அதிகம்.

- கடற்கரைப் பகுதியில் காற்றில் ஈரப்பதம் மிகுந்து இருப்பதால் இவை அதிக மழைதரும் திறனைக் கொண்டுள்ளது.
- இதனால் கடற்கரைக்கு அருகிலுள்ள கொல்கத்தாவில் மழைப்பொழிவு 119 செ.மீ ஆகவும், உள் பகுதியில் அமைந்திருக்கும் பீகானிரில் (இராஜஸ்தான்) 24 செ.மீ க்கு குறைவான மழைப்பொழிவே பதிவாகின்றது.

VII. விரிவாக விடையளிக்கவும்.

1. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளை விவரி.

அட்சங்கள்:

- இந்தியா 8°4’ வட அட்சம் முதல் 37°6’ வட அட்சம் வரை அமைந்துள்ளது.
- 23°30' வட அட்சமான கடகரேகை நாட்டை இரு சமபாகங்களாகப் பிரிக்கிறது.
- கடகரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிக வெப்பமும் மிக குளிரற்ற சூழலும் நிலவுகிறது.
- கடகரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகள் மித வெப்ப காலநிலையைக் கொண்டுள்ளது.

உயரம்:

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலமத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5° C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது.
- இதற்கு “இயல்பு வெப்ப வீழ்ச்சி” என்று பெயர்.

கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு:

- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, வெப்பம் மற்றும் அழுத்த வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம் மழைப்பொழிவையும் பாதிக்கின்றன.
- கடல்களின் ஆதிக்கமின்மை காரணமாக மத்திய மற்றும் வட இந்திய பகுதிகள் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகளைக் கொண்டுள்ளன.
- இங்கு கோடையில் கடும் வெப்பமும் மற்றும் குளிர் காலத்தில் கடும் குளிரும் நிலவுகிறது.

பருவகாலக் காற்று:

- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் முக்கிய காரணி பருவக்காற்றாகும்.
- இவை பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளாகும்.
- இந்தியாவில் சூரியனின் செங்குத்து கதிர்கள் ஜுன் மாத மத்தியில் விழுகின்ற பொழுதிலும் கோடைக்காலம் மே மாத இறுதியில் முடிவடைகிறது.
- ஏனெனில் தென்மேற்குப் பருவக்காற்று தொடக்கத்தின் காரணமாக வெப்பநிலை குறைந்து இந்தியாவின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமழை வரை பொழிகிறது.

நிலத்தோற்றம்:

- இமயமலைகள் மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றைத் தடுத்து, இந்திய துணைக் கண்டத்தை வெப்பப் பகுதியாக வைத்திருக்கிறது.
- இதனால் குளிர் காலத்திலும் வட இந்தியா வெப்ப மண்டல காலநிலையைக் கொண்டுள்ளது.
- தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவுப்பகுதி கன மழையைப் பெறுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

ஜெட் காற்றோட்டங்கள்:

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" என்கிறோம்.

2. இந்திய பருவக் காலங்களை விவரி.

பருவக்காலங்கள்:

வானிலை நிபுணர்கள் இந்திய காலநிலையில் நான்கு பருவங்களை அடையாளம் கண்டுள்ளனர். அவை:

- குளர்காலம்: ஜனவரி முதல் பிப்ரவரி வரை
- கோடைக்காலம்: மார்ச் முதல் மே வரை
- தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை
- வடகிழக்கு பருவக்காற்று காலம்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை

குளிர்காலம் (அ) குளிர் பருவம்:

- இக்காலத்தில் சூரியனின் செங்குத்து கதிர்கள் இந்தியாவிலிருந்து வெகுதொலைவிலுள்ள மகரரேகையின் மீது செங்குத்தாக விழுகிறது. இதனால் இந்திய பகுதி சாய்வான சூரியக்திர்கள் பெறுகிறது.
- இதுவே குறைந்த வெப்பத்திற்கு காரணமாக உள்ளது.
- தெளிவான வானம், சிறந்த வானிலை மென்மையான வடக்கு காற்றுகள், குறைந்த ஈரப்பதம் மற்றும் மிகுந்த தினசரி பகல்நேர வெப்ப வேறுபாடுகள் ஆகியன இப்பருவத்தின் குணாதிசயங்கள் ஆகும்.
- மேற்கு இமயமலை, தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகள் இப்பருவத்தில் மழையைப் பெறுகின்றன.

முன் பருவக்காற்றுக்காலம் அல்லது கோடைக்காலம்:

- இப்பருவத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் இந்திய தீபகற்பத்தின் மீது விழுகிறது.
- எனவே வெப்பநிலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகரிக்கிறது.
- கோடைக்காலத்தின் முற்பகுதியில் நாடு முழுவதும் வெப்பமான வறண்ட வானிலை நிலவுகிறது.
- கோடைக் காலத்தின் மத்தியிலும் இறுதியிலும் நிலப்பகுதி இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழையின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.
- இப்பருவத்தில் இந்தியா முழுவதும் வெப்பம் அதிகரிக்கின்றது.
- ஏப்ரல் மாதத்தில் தென் இந்திய உட்பகுதிகளில் தின சராசரி வெப்பநிலை 30°C - 35°C ஆக பதிவாகிறது.
- மத்திய இந்திய நிலப்பகுதியின் பல பகுதிகளில் பகல் நேர உச்ச வெப்பநிலை 40° C ஆக உள்ளது.

தென்மேற்கு பருவக்காற்றுக் காலம் அல்லது மழைக்காலம்:

- பருவக்காற்று பொதுவாக ஜூன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென் பகுதியின் தொடங்கி கொங்கணக் கடற்கரை பகுதிக்கு ஜூன் இரண்டாவது வாரத்திலும் ஜூலை 15 இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.
- இந்தியாவின் ஒட்டு மொத்த மழைப்பொழிவில் 75 சதவீத மழைப் பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது. தமிழ்நாடு மலை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழையைப் பெறுகிறது.

வடகிழக்கு பருவக்காற்று காலம் அல்லது பின்னடையும் பருவக்காற்றுக் காலம்:

- பூமி சுழல்வதால் ஏற்படும் விசையின் (கொரியாலிஸ் விசை) காரணமாக காற்றின் திசை மாற்றப்பட்டு வடகிழக்கிலிருந்து வீசுகிறது.
- எனவே இக்காற்று வடகிழக்கு பருவக்காற்று என அழைக்கப்படுகிறது.
- வங்கக்கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாட்டின் பல பகுதிகளும் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளும் மழையைப் பெறுகின்றன.
- கடற்கரைப் பிரதேசங்களில் கனமழையுடன் கூடிய பலத்த புயல் காற்று, பெரும் உயிர் சேதத்தையும், பொருட் சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

புவியியல்

அலகு 3

இந்தியா - வேளாண்மை

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
அ) வண்டல் ஆ) கரிசல்
இ) செம்மண் ஈ) உவர் மண்
விடை: இ) செம்மண்

2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?
அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்
ஆ) இந்திய வானியல் துறை
இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம்
ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்
விடை: அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

3. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
அ) செம்மண் ஆ) கரிசல் மண்
இ) பாலை மண் ஈ) வண்டல் மண்
விடை: ஈ) வண்டல் மண்

4. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை
இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜூனா சாகர் அணை
விடை: ஆ) பக்ராநங்கல் அணை

5. _____ என்பது ஒரு வாணிபப் பயிர்.
அ) பருத்தி ஆ) கோதுமை
இ) அரிசி ஈ) மக்காச் சோளம்
விடை: அ) பருத்தி

6. கரிசல் மண் _____ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) வறண்ட மண் ஆ) உவர் மண்
இ) மலை மண் ஈ) பருத்தி மண்
விடை: ஈ) பருத்தி மண்

7. **உலகிலேலே மிக நீளமான அணை _____.**

அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை

இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை **விடை: இ) ஹிராகுட் அணை**

8. **இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது _____.**

அ) பருத்தி ஆ) கோதுமை

இ) சணல் ஈ) புகையிலை **விடை: இ) சணல்**

II. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.

காரணம் : உலகளவில் இந்தியா, மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி. **விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு.**

2. கூற்று : வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.

காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

விடை : ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கமல்ல.

III. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) கோதுமை ஆ) நெல்

இ) திணை வகைகள் ஈ) காபி **விடை: ஈ) காபி**

2. அ) காதர் ஆ) பாங்கர்

இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண் **விடை: ஈ) கரிசல் மண்**

3. அ) வெள்ளப் பெருக்கு கால்வாய்

ஆ) வற்றாத கால்வாய்

இ) ஏரிப்பாசனம்

ஈ) கால்வாய் **விடை: இ) ஏரிப்பாசனம்**

IV. பொருத்துக.

1.	இந்தியாவின் சர்க்கரை கிண்ணம்	-	அ) மகாநதி
2.	காபி	-	ஆ) தங்கப் புரட்சி
3.	டெகிரி அணை	-	இ) கர்நாடகா
4.	ஹிராகுட்	-	ஈ) உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார்
5.	தோட்டக் கலை	-	உ) இந்தியாவின் உயரமான அணை

விடை: 1.ஈ 2.இ 3.உ 4.அ 5.ஆ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. 'மண்' - வரையறு.

- மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருட்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருட்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

2. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் இந்தியாவில் காணப்படும் மண் வகைகளை 8 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது.

- வண்டல் மண்
- கரிசல் மண்
- செம்மண்
- சரளை மண்
- காடு மற்றும் மலை மண்
- வறண்ட பாலை மண்
- உப்பு மற்றும் காரமண்
- களிமண் மற்றும் சதுப்பு நில மண்

3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

- ஈரமாக இருக்கும் போது சேறாகவும்,
- ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக்கொள்ளும் தன்மையும் உடையது.

4. 'வேளாண்மை' - வரையறு.

வேளாண்மை என்பது குறிப்பிட்ட பயிர்களை உற்பத்தி செய்தும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கும் உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும் நார் மற்றும் தேவையான இதர பொருட்களையும் வழங்குகிறது.

5. இந்தியவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

- தன்னிறைவு வேளாண்மை
- இடப்பெயர்வு வேளாண்மை
- தீவிர வேளாண்மை
- வறண்ட நில வேளாண்மை
- கலப்பு வேளாண்மை
- படிக்கட்டு முறை வேளாண்மை

6. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.

- காரிஃப் பருவம் (ஜூன் - செப்டம்பர்)
- ராபி பருவம் (அக்டோபர் - மார்ச்)
- சையத் பருவம் (ஏப்ரல் - ஜூன்)

7. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.

- தோட்டப் பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகிறது.
- தேயிலை, காபி, இரப்பர், வாசனைப்பொருட்கள் ஆகியவை இந்தியாவின் முக்கியத் தோட்டப் பயிர்களாகும்.

8. கால்நடைகள் என்றால் என்ன?

- கால்நடைகள் இந்தியாவின் விவசயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும்.
- கால்நடைகளின் பல்வேறு வகைப் பயன்பாடுகள் காரணமாக இவை சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.
- வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலைவாய்ப்பும், வருவாயையும் அளிக்கின்றன.
- நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவையாகவும் இவை விளங்குகின்றன.

9. இந்தியாவில் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.

இந்தியாவில் மீன் பிடி தொழில் இருவகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. கடல் மீன் பிடிப்பு
2. உள்நாட்டு (அ) நன்னீர் மீன்பிடிப்பு

கடல் மீன் பிடிப்பு:

- கடற்கரைப்பகுதி, கடற்கரையை ஒட்டியபகுதி மற்றும் ஆழ்கடல் போன்ற முக்கியமாக கண்டத்திட்டு பகுதிகளில் மீன் பிடித்தல் நடைபெறுகிறது.
- கேரளா கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாக உள்ளது.

உள்நாட்டு மீன் பிடிப்பு:

- நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர் நிலைகளில் நடைபெறும் நன்னீர் மீன்பிடிப்பு இவற்றில் அடங்கும்.
- இந்தியாவில் ஆந்திரப்பிரதேசம் உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

VI. காரணம் கூறுக.

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

வேளாண்மை மூலம் 50 சதவீதத்திற்கும் மேலான மக்களுக்கு வேலைவாய்ப்பையும், நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதத்தையும் நாட்டிற்கு அளிக்கின்றது.

2. மழைநீர் சேமிப்பு அவசியம்.

- இந்தியா, வெப்பமண்ட பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவகாலங்களில் மழையைத் தருகிறது. இம்மழை சீரற்ற, நிலையற்ற முறையில் பொழிகிறது.
- இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரை சேமிப்பது மிகவும் அவசியமானது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

VII. வேறுபடுத்துக.

1. ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்.

எண்	ராபி பருவம்	காரிப் பருவம்
1.	விதைக்கும் பருவம் அக்டோபர்.	விதைக்கும் பருவம் ஜூன்.
2.	அறுவடை காலம் மார்ச்.	அறுவடை காலம் செப்டம்பர்.
3.	விளையும் பயிர்கள்: கோதுமை, பருப்பு, நிலக்கடலை, பார்லி.	விளையும் பயிர்கள்: நெல், பருத்தி, மக்காச்சோளம், கம்பு.
4.	குளிர்காலப் பயிர்.	கோடைகாலப் பயிர்.

2. வெள்ளப் பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்.

எண்	வெள்ளப் பெருக்கு கால்வாய்	வற்றாத கால்வாய்
1.	ஆற்றிலிருந்து நேரடியாக எவ்வித தடுப்பணைகளும் இன்றி தண்ணீர் கால்வாய் மூலம் எடுக்கப்படுகிறது.	இவ்வகை கால்வாய்கள் வற்றாத நதிகளின் குறுக்கே அணைகளை கட்டி நீரின் போக்கை சீர்படுத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வருதலாகும்.
2.	இவ்வகை கால்வாய்கள் வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்பப் பயன்படுவதோடு மழைக்காலங்களில் மட்டுமே பயன்பாட்டில் இருக்கும்.	இவ்வகை கால்வாய்கள் நீர்ப்பாசனத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறது.

3. கடல் மீன்பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு

எண்	கடல் மீன் பிடிப்பு	உள்நாட்டு மீன் பிடிப்பு
1.	கடற்கரைப் பகுதி கடற்கரையை ஒட்டிய பகுதி மற்றும் ஆழ்கடல் முக்கியமானப் பகுதிகளில் 200 மீட்டர் ஆழம் வரை உள்ள கண்டத்திட்டு பகுதிகளில் மீன் பிடித்தல் நடைபெறுகிறது.	நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர் நிலைகளில் நடைபெறும்.
2.	இது கடற்கரை மாநிலங்களில் கேரளா கடல் மீன் உற்பத்தியில் முதன்மையானதாக உள்ளது.	இந்தியாவில் ஆந்திரப் பிரதேசம் உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

4. வண்டல் மண் மற்றும் கரிசல் மண்.

எண்	வண்டல் மண்	கரிசல் மண்
1.	சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைத்ததினால் உருவாகின்றன.	தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.
2.	பொட்டாசியம், பாஸ்பேரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாக காணப்படுகின்றன. நைட்ரஜன் குறைவாக உள்ளது.	கால்சியம், மக்னீசியம், கார்பனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப் படுகின்றன. நைட்ரஜன் பாஸ்பேரிக் அமிலம், இலை மக்குகள் குறைவாக உள்ளன.
3.	காணப்படும் பகுதிகள்: பஞ்சாப், ஹரியானா, கங்கை, உத்திரப்பிரதேசம்	காணப்படும் பகுதிகள்: மகராஷ்டிரா, மாளவப் பீடபூமி, தெலுங்கானா, கத்தியவார் தீபகற்பம்.
4.	வளரும் பயிர்கள்: நெல், கோதுமை, கரும்பு.	வளரும் பயிர்கள்: பருத்தி, திணை, கரும்பு.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. இந்திய மண்வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

வண்டல் மண் - வேதியியல் பண்புகள்:

பொட்டாசியம், பாஸ்பேரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாக காணப்படுகின்றன.

மண்ணின் தன்மைகள்:

வண்டல் மண் மண்டி, களிமண் போன்ற கலவைகளுடன் மண்ணடுக்கு காணப்படுகிறது.

பரவல் : கங்கை, உத்ரகாண்ட் உத்திரப்பிரதேசம்.

வளரும் பயிர்கள் : நெல், கோதுமை.

கரிசல் மண் - தன்மைகள்:

ஈராமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

பரவல் : மகாராஷ்டிரா, மாளவப் பீடபூமி, கத்தியவார் தீபகற்பம்.

வளரும் பயிர்கள் : திணை, பருத்தி, கரும்பு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

செம்மண் - வேதியியல் பண்புகள்:

- இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாக காணப்படுகிறது.
- நைட்ரஜன், இலைமக்குகள், பாஸ்பேரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்பு சத்துகள் குறைவாக காணப்படுகின்றன.

மண்ணின் தன்மைகள்:

மென் துகள்கள் இடையளவு குறிப்பிடப்பட்டுள்ள உப்புக் கரைசல், வெண்களிப் பாறைத்துகள்கள், சிற வெடிப்புகளுடன் கூடிய செம்மண் படிவு.

பரவல் : தக்காண பீடபூமியின் கிழக்குப் பகுதி, தென் மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு.

வளரும் பயிர்கள் : கோதுமை, நெல், பருத்தி.

சரளை மண் - வேதியியல் பண்புகள்:

இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.

மண்ணின் தன்மைகள்:

உயரமான மலைப்பகுதிகளில் அதிகமான அமிலத்தன்மையுடன் தாழ்வான பகுதிகளில் குறைந்த அளவும் உள்ளது. பொதுவாக இது ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்வதில்லை.

பரவல் : அசாம் குன்றுகள், கேரளா மற்றும் கர்நாடகா.

வளரும் பயிர்கள் : காபி, இரப்பர், முந்திரி.

காடு மற்றும் மலை மண் - வேதியியல் பண்புகள்:

பொட்டாஷ், பாஸ்பரஸ், சுண்ணாம்புச் சத்துகள் குறைவாகக் காணப்படுகிறது.

மண்ணின் தன்மைகள்:

- மென்மையான மணல் மற்றும் பாறை துகள்கள் கலந்து காணப்படுகிறது.
- இம் மண்ணின் தன்மை தாய்பாறைக்கேட்ப மாறுபடுகிறது.
- அதிக இலை மக்குச் சத்துகள் உடையது.
- மெதுவாக மக்குகளால் சிதைவுறுதலால் காரத்தன்மை கொண்டதாக உள்ளது.

பரவல் : ஜம்மு காஷ்மீர், உத்தரகாண்ட், சிக்கிம்.

வளரும் பயிர்கள் : காபி, நெல், தேயிலை.

2. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.

இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும். ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது.

பக்ரா நங்கல் அணை:

- சட்லெஜ் ஆற்றின் மீது கட்டப்பட்ட மிகப்பெரிய பல்நோக்கு இந்திய திட்டங்களில் ஒன்று.
- பக்ரா நங்கல் அணை உலகின் மிக உயர்ந்த அணைகளில் ஒன்று.

- பக்ரா அணை 10,000 மில்லியனுக்கும் அதிகமான தண்ணீரை சேமிக்கும் திறன் கொண்டது.
- இந்த ஏரி கோவிந்த் சாகர் ஏரி என்று பிரபலமாக அறியப்படுகிறது.
- பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் பகுதிகள் பயனடைகின்றன.

ஹிராகுட் திட்டம்:

- மகாநதி ஆற்றின் மீது கட்டப்பட்ட மிகப்பெரிய பல்நோக்கு இந்திய திட்டங்களில் ஒன்று.
- இது உலகின் மிக நீளமான அணை.

அதன் நோக்கங்கள்:

- நீரின் விரைவான ஓட்டத்திலிருந்து ஏராளமான நீர் மின் சக்தியைப் பயன்படுத்துதல்.
- வெள்ளம் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்துதல்.
- பூரி மற்றும் கட்டாக் மாவட்டங்களுக்கு கால்வாய்கள் வழியாக நீர்ப்பாசனம்.
- நீர் போக்குவரத்தை மேம்படுத்துதல்.
- வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி.
- நிலையான மற்றும் உறுதியான மின்சாரம் மூலம் விரைவான தொழில்மயமாக்கல்.

3. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க.

தீவிர வேளாண்மை:

- தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுகத்தின் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும்.
- சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.

தோட்ட வேளாண்மை:

- தோட்டப்பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகிறது.
- இவை மலைச்சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளில் பயிரிடப்படுகிறது.
- தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருள்கள் ஆகியவை இந்தியாவின் முக்கியத் தோட்டப்பயிர்களாகும்.

4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.

நெல்:

- நெல் இந்தியாவின் பூர்வீகப் பயிராகும்.
- உலகளவில் நெல் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தப்படியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.
- இது அயனமண்டலப் பயிராகும்.
- 24° C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது. நெல் பயிரிட அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

கோதுமை:

- நெல் பயிருக்கு அடுத்தாற் போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும்.
- இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10 – 15° C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20 - 25° C வெப்பநிலையும் தேவைப்படுகிறது.
- சுமார் 85 சதவீதத்திற்கும் மேலான கோதுமை உற்பத்தி உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது.

IX. உயர் சிந்தனை வினாக்கள்:

1. வேளாண்மை இல்லாத உலகை கற்பனை செய்து பார்க்க முடியுமா?

ஆசிரியர் மாணவர் செயல்பாடு.

2. தென்னிந்தியாவில் நிலவும நீர் பங்கீட்டு பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வை உங்களால் கொடுக்க முடியுமா?

ஆசிரியர் மாணவர் செயல்பாடு.

X. வரைபடப் பணி.

1. வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக.
2. கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
3. ஹிராகுட் அணை, மேட்டூர் அணை மற்றும் தாமோதர் அணைகளின் அமைவிடங்களைக் குறிக்கவும்.
4. சணல் விளையும் பகுதிகளைக் குறிக்கவும்.
5. காபி மற்றும் தேயிலை விளையும் பகுதிகள் ஏதேனும் மூன்றை குறிக்கவும்.
6. பாலை மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.
7. தூத்துக்குடி, சென்னை, கொச்சின், மும்பை மற்றும் மசூலிப்பட்டினம் மீன் பிடித்தல் மையங்களைக் கண்டறிக.
8. காவேரி மற்றும் கோதாவரி டெல்டா பகுதிகளைக் குறிக்கவும்.


இந்தியா
பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு திட்டம்
மேட்டூர்
அந்தமான் நிக்கோபார் தீவுகள்
இலங்கை
இந்தியா பெருங்கடல்
அரபிய கடல்
இலட்சத்தீவுகள்
வங்காள விரிகுடா


இந்தியா: முக்கிய மண் வகைகள்
மண் வகைகள்
வண்டல் மண்
செம்மண்
கரிசல் மண்
சரளை மண்
காடு மற்றும் மலை மண்
வறண்ட பாலை மண்
உப்பு மற்றும் கார மண்
களிமண் மற்றும் சதுப்பு மண்



கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.
   அ) நீர் ஆ) லாவா
   இ) மண் ஈ) கருவம் **விடை: இ) மண்**

2. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு _____.
   அ) 1950 ஆ) 1951
   இ) 1952 ஈ) 1953 **விடை: ஈ) 1953**

3. இந்தியாவில் காணப்படும் மண்வகைகள் _____ பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.
   அ) 8 ஆ) 10
   இ) 12 ஈ) 15 **விடை: அ) 8**

4. இந்தியாவின் இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரம் _____ பாசனம்.
அ) கிணறு ஆ) கால்வாய்
இ) ஏரி ஈ) சொட்டு நீர் **விடை: ஈ) சொட்டு நீர்**

5. நிலத்தடி நீர் போதுமான அளவிற்கு இருக்ககூடிய பகுதிகளில் _____ பாசனம் காணப்படுகின்றது.
அ) கால்வாய் ஆ) ஏரி
இ) திறந்தவெளி கிணறு ஈ) சொட்டு நீர் **விடை: இ) திறந்தவெளி கிணறு**

6. இந்தியாவில் மிக பழமையான பாசன முறை _____.
அ) கால்வாய் பாசனம்
ஆ) ஏரி பாசனம்
இ) திறந்தவெளி கிணறு பாசனம்
ஈ) சொட்டுநீர்ப் பாசனம் **விடை: ஆ) ஏரி பாசனம்**

7. _____ இந்தியாவில் ஏரி பாசனம் சிறந்து விளங்குகிறது.
அ) தீபகற்ப ஆ) வட
இ) கிழக்கு ஈ) மேற்கு **விடை: அ) தீபகற்ப**

8. சொட்டுநீர்ப் பாசனம் என்பது தாவரங்களின் _____ பகுதிகளுக்கு சொட்டு நீராக பாய்ச்சுவதாகும்.
அ) வேர் ஆ) தண்டு
இ) இலை ஈ) பூக்கள் **விடை: அ) வேர்**

9. பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்குத்திட்டம் ஒரு அறிவியல் முறையிலான _____ வள மேலாண்மைத் திட்டமாகும்.
அ) மண் ஆ) வெப்ப
இ) இயற்கை ஈ) நீர் **விடை: ஈ) நீர்**

10. _____ ஆறு 'பீகாரின் துயரம்' என அழைக்கப்படுகிறது.
அ) கங்கை ஆ) கோசி
இ) ரவி ஈ) சட்லஜ் **விடை: ஆ) கோசி**

11. இந்தியாவில் _____ மூலம் 50% க்கு மேலான மக்கள் வேலைவாய்ப்பை பெறுகின்றனர்.
அ) இரயில்வே துறை ஆ) தபால் துறை
இ) வங்கித் துறை ஈ) வேளாண்மை துறை **விடை: ஈ) வேளாண்மை துறை**

12. தன்னிறைவு வேளாண்மையில் _____ பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.
அ) உணவு ஆ) வணிக
இ) தோட்ட ஈ) ஆடம்பர **விடை: அ) உணவு**

13. _____ வேளாண்மை "வெட்டுதல்" மற்றும் "எரித்தல்" வேளாண்மை என்றும் அழைக்கப்படுகிறது.
அ) கலப்பு ஆ) படிக்கட்டு முறை
இ) வறண்ட நில ஈ) இடப்பெயர்வு **விடை: ஈ) இடப்பெயர்வு**

14. படிக்கட்டு முறை வேளாண்மை முறையானது _____ பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது.
அ) பாலைவன ஆ) டெல்டா
இ) மலை ஈ) காட்டு **விடை: இ) மலை**

15. மலைச் சரிவுகளில் உள்ள படிக்கட்டு முறை அமைப்பு _____ அரிப்பைத் தடுக்கிறது.
அ) காற்று ஆ) மண்
இ) கனிமம் ஈ) தாவரம் **விடை: ஆ) மண்**

16. உலகளவில் _____ உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.
அ) நெல் ஆ) பருத்தி
இ) கம்பு ஈ) கோதுமை **விடை: அ) நெல்**

17. நெல் உற்பத்தியில் _____ அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.
அ) வங்காளதேசம் ஆ) சீனா
இ) மியான்மர் ஈ) பாகிஸ்தான் **விடை: ஆ) சீனா**

18. _____ ஏழை மக்களின் முக்கிய உணவுப் பயிராகும்.
அ) நெல் ஆ) பருத்தி
இ) கம்பு ஈ) கோதுமை **விடை: இ) கம்பு**

19. உலகில் சர்க்கரை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு _____.
அ) இந்தியா ஆ) பிரேசில்
இ) கியூபா ஈ) தென் ஆப்பிரிக்கா **விடை: இ) கியூபா**

20. இந்தியாவில் சணல் பயிரிடுவதிலும் உற்பத்தியிலும் _____ மாநிலம் முதலிடம் வகிக்கிறது.
அ) பீகார் ஆ) மேற்கு வங்கம்
இ) அஸ்ஸாம் ஈ) உத்திரப்பிரதேசம் **விடை: ஆ) மேற்கு வங்கம்**

21. இந்தியாவில் காப்பி உற்பத்தியில் _____ முதன்மையான உற்பத்தியாளராக திகழ்கிறது.
அ) கர்நாடகம் ஆ) கேரளா
இ) அஸ்ஸாம் ஈ) பஞ்சாப் **விடை: அ) கர்நாடகம்**

22. _____ பயிர்கள் என்பது பழங்கள், மலர்கள் மற்றும் காய்வகை பயிர்களைக் குறிக்கிறது.
அ) தோட்டக்கலை ஆ) வேளாண்மை
இ) பட்டுபுழு ஈ) மீன்வளர்ப்பு **விடை: அ) தோட்டக்கலை**

23. ஏழைமக்களின் பசு என்றழைக்கப்படும் _____ பால் இறைச்சி, தோல் மற்றும் உரோமம் போன்றவற்றை அளிக்கின்றன.

அ) வெள்ளாடுகள் ஆ) ஒட்டகம்
இ) எருமைகள் ஈ) கழுதைக்குட்டி **விடை: அ) வெள்ளாடுகள்**

24. நம்நாட்டில் _____ மாநிலம் ரோம உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது.

அ) ஹிமாசல பிரதேசம் ஆ) ஜம்மு காஷ்மீர்
இ) இராஜஸ்தான் ஈ) மேகாலயா **விடை: இ) இராஜஸ்தான்**

II. சரியான கூற்றைத் தெரிவு செய்யவும்.

1. கூற்று (A) : வெள்ளாடுகள் "ஏழை மக்களின் பசு".
காரணம் (R) : பசுவை போல், பால், இறைச்சி, தோல், ரோமம் ஆகிவற்றைக் கொடுக்கிறது.

அ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
ஆ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு காரணம் சரி.

விடை: அ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

2. கூற்று (A) : அராபிகா மற்றும் ரொபஸ்டா காப்பியின் இரு வகைகள்
காரணம் (R) : உலக காப்பி உற்பத்தியில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கிறது.

அ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
ஆ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு காரணம் சரி.

விடை: அ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

3. கூற்று (A) : படிக்கட்டுமுறை வேளாண்மை மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது.
காரணம் (R) : கோதுமை முக்கிய பயிராக இங்கு பயிரிடப்படுகிறது.

அ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
ஆ) கூற்று (A) மற்றும் (R) இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு காரணம் சரி. **விடை: இ) கூற்று சரி காரணம் தவறு**

III. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) கோதுமை ஆ) பருத்தி
   இ) சணல் ஈ) தேயிலை
   விடை : அ) கோதுமை

2. அ) ஜிம் ஆ) பூனம்
   இ) பொடு ஈ) ஜெய்டு
   விடை : ஈ) ஜெய்டு

3. அ) வெள்ளாடுகள் ஆ) யானைகள்
   இ) எருமைகள் ஈ) செம்மறியாடுகள்
   விடை : ஆ) யானைகள்

4. அ) காட் மீன் ஆ) எல்ஸ் மீன்
   இ) பூனை ஈ) முல்லட்ஸ் மீன்
   விடை : இ) பூனை

IV. பொருத்துக.

I

1.	வெள்ளைப் புரட்சி	- அ) உரங்கள்
2.	வட்டப் புரட்சி	- ஆ) பால் உற்பத்தி
3.	பசுமைப் புரட்சி	- இ) உருளைக்கிழங்கு
4.	சாம்பல் புரட்சி	- ஈ) மீன்கள் உற்பத்தி
5.	நீலப்புரட்சி	- உ) அனைத்து வேளாண் உற்பத்தி

விடை: 1.ஆ 2.இ 3.உ 4.அ 5.ஈ

II

1.	மேட்டூர் அணை	- அ) மகாநதி
2.	நாக அர்ஜுன் சாகர் அணை	- ஆ) கிருஷ்ணா
3.	பக்ரா-நங்கல் அணை	- இ) காவேரி
4.	சர்தார் சரோவர் அணை	- ஈ) சட்லெஜ்
5.	ஹீராகுட் அணை	- உ) நர்மதை

விடை: 1.இ 2.ஆ 3.ஈ 4.உ 5.அ

III

1.	எண்ணெய் வித்துகள்	- அ) தங்க நூலிழைப் புரட்சி
2.	பழங்கள் தேன் மற்றும் தோட்டக்கலை பயிர்	- ஆ) மஞ்சள் புரட்சி
3.	முட்டை மற்றும் கோழிகள்	- இ) சிவப்புப்புரட்சி
4.	இறைச்சி மற்றும் தக்காளி உற்பத்தி	- ஈ) வெள்ளி இழைப்புரட்சி
5.	சணல் உற்பத்தி	- உ) பொன் புரட்சி

விடை: 1.ஆ 2.உ 3.ஈ 4.இ 5.அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மண்ணின் பிரிவுகள் யாவை? மண் எவ்வாறு உருவாகிறது?

- மண் துகள்கள், களிமண், மணல் மற்றும் மண் படிவு என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

- பல்வேறு காலநிலை சூழலில் பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகிறது. சில மண்வகைகள் தேயுறுதல் காரணிகளால் அரிக்கப்பட்டு பின் படியவைக்கப்பட்டு உருவாகின்றன. மண்ணானது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும்.

2. மண் எவ்வகைப் பொருட்களை உள்ளடக்கி உள்ளது?

மண் என்பது

- கனிமங்களின் கூட்டுப்பொருள்கள்
- மக்கிய தாவரங்கள்
- விலங்கினப் பொருட்கள்
- காற்று
- நீர்

3. நீர்ப்பாசனம் என்றால் என்ன? அது ஏன் இந்தியாவிற்கு அத்தியாவசியமானது?

- வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக் கொண்டு செல்லும் முறைக்கு நீர்ப்பாசனம் என்று அழைக்கப்படுகிறது.
- அதிக வெப்பநிலை, வருடம் முழுவதும் பயிர்ச்சாகுபடி, அதிக நீர்த்தேவையுள்ள பயிர்ச்சாகுபடி, வணிக வேளாண்மை, மண்ணின் நீர் புகும் தன்மை ஆகியவற்றால் வேளாண் நாடான இந்தியாவிற்கு நீர்ப்பாசனம் இன்றியமையாததாகிறது.

4. கால்வாய்ப்பாசனத்தின் வகைகள் யாவை?

- வெள்ளப் பெருக்கு கால்வாய்
- வற்றாத கால்வாய்

5. கால்வாய்ப் பாசனத்தின் முக்கிய ஆதாரங்கள் யாவை?

- கால்வாய்ப்பாசனம் இந்தியாவின் இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரமாகும்.
- தாழ்வான மற்றும் சமமான நிலப்பகுதி
- பருமன் மிகுந்த வளமான மண்
- வற்றாத நீர் மூலங்கள்
- நீர்பிடிப்புக் கொண்ட பகுதி ஆகியவைகள் கால்வாய்ப்பாசனம் முக்கிய ஆதாரமாக உள்ளது.

6. கிணற்றுப் பாசனம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

- கிணறு என்பது புவியில் செங்குத்தாக தோண்டப்பட்ட பள்ளம் அல்லது ஆழ்துளை மூலம் நிலத்தடி நீரை புவியின் மேற்பரப்பிற்குக் கொண்டு வருதல் ஆகும்.
- திறந்த வெளிக் கிணறுகள்
- ஆழ்துளைக் கிணறுகள்

7. தீபகற்ப இந்தியாவில் ஏரிப்பாசனம் சிறந்து விளங்குவதற்கான காரணிகள் யாவை?

- கடினமானப் பாறைகளும் சமமற்ற நிலத்தோற்றம் உள்ள பகுதிகளில் கால்வாய்கள் மற்றும் கிணறுகள் தோண்டுவதற்கு கடினமாக உள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- இயற்கையாக உருவான பள்ளங்கள் நீர்தேக்கங்களாக பயன்படுகின்றன.
- இப்பகுதியில் வற்றாத ஆறுகள் இல்லாமை.
- நீர்புகாப் பாறைகளில் நீர் கசிவு ஏற்படாது.
- குறைவான மக்கள் தொகைப் பரவலும் குறைவான வேளாண் நிலங்களும் உள்ளது.

8. நவீன நீர்ப்பாசன முறைகள் யாவை?

- சொட்டு நீர்ப்பாசனம்
- தெளிப்பு முறை பாசனம்
- மையச்சூழல் நீர்ப்பாசனம்

9. இந்திய வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

- இயற்கைக் காரணிகள்: நிலத்தோற்றம் காலநிலை மற்றும் மண்.
- அமைப்பு சார் காரணிகள்: வேளாண் நிலத்தின் அளவு, நில வாரம் முறை மற்றும் நிலச் சீர்திருத்தங்கள்
- உட்கட்டமைப்பு காரணிகள்: நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, வரவு, சந்தை, காப்பீடு மற்றும் சேமிப்பு வசதிகள்
- தொழில்நுட்பக் காரணிகள்: வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், இயந்திரங்கள்

10. படிக்கட்டு முறை வேளாண்மை என்றால் என்ன?

- இவ்வேளாண்மை முறையானது மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது.
- இப்பகுதி நிலங்கள் இயற்கையாகவே சரிவு அமைப்பை கொண்டவை மலைச்சரிவுப் பகுதிகள் சமப்படுத்தப்பட்டு நிலத்தை நிலையான வேளாண் பகுதிகள் போலவே பயன்படுத்தப்படுகிறது.
- ஏனெனில் சமமான நிலப்பகுதி குறைவான இப்பகுதிகளில் உள்ளது. படிக்கட்டு நிலங்கள் சிறிய சமமான நிலப்பகுதிகளாக உருவாக்கப்படுகின்றன.
- மலைச் சரிவுகளில் உள்ள படிக்கட்டு முறை அமைப்பு மண் அரிப்பைத் தடுக்கிறது.

11. நீர்ப்பாசனத்தின் மூலங்கள் யாவை?

- நிலத்தோற்றங்கள், மண், மழைப்பொழிவு, நிலநீர்.
- நிலத்தடி நீர் இருப்பு, ஆற்றின் இயல்பு, பயிர்களின் தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு வகையான நீர்ப்பாசன வகைகள் பயன்பாட்டில் உள்ளன.
- கால்வாய்ப் பாசனம், கிணற்றுப்பாசனம், ஏரிப்பாசனம்.

12. இந்தியாவின் முக்கிய பயிர்களின் பிரிவுகள் யாவை?

உணவுப் பயிர்கள்:

கோதுமை, மக்காச்சோளம், திணைப்பயிர்கள், பருப்பு.

வாணிபப் பயிர்கள்:

கரும்பு, புகையிலை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள்.

தோட்டப் பயிர்கள்:
தேயிலை, இரப்பர், காபி.

தோட்டக்கலைப் பயிர்கள்:
பழங்கள், மலர்கள், காய்கறிகள்.

VI. காரணம் கூறுக.

1. கரிசல் மண் கோதுமை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

- இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10 - 15° C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20 - 25° C வெப்பநிலையும் தேவைப்படுகிறது.
- கரிசல் மண் பிரதேசமும் கோதுமை உற்பத்தியில் ஒரு முக்கிய பங்களிப்பினை அளிக்கிறது.

2. வேளாண் உற்பத்தி பொருட்கள் சந்தையில் விற்கும் கட்டாய நிலை.

- கிராமப்புற பகுதிகள் விவசாய சேமிப்பு கிடங்கு வசதியற்றோ அல்லது முழுமை பெறா நிலையிலோ காணப்படுகிறது.
- இத்தகைய சூழலில் விவசாயிகள் அறுவடை முடிந்தவுடன் வேளாண் உற்பத்தி பொருட்கள் சந்தையில் விற்கும் கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

VII. வேறுபடுத்துக.

1. நெல் மற்றும் கோதுமை

எண்.	நெல்	கோதுமை
1.	தென்னிந்தியாவின் முக்கிய உணவு.	வடஇந்தியாவின் முக்கிய உணவு.
2.	24° C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழைப் பொழிவும் தேவைப்படுகிறது.	விதைக்கும் பருவத்தில் 10 முதல் 15° C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20 முதல் 25° C வெப்பமும் தேவைப்படுகிறது.

2. கரும்பு மற்றும் பருத்தி

எண்.	கரும்பு	பருத்தி
1.	கரும்பு பயிர் விளைய அதிக வெப்பநிலை தேவை.	பருத்தி நன்கு விளைய வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல காலநிலை தேவை.
2.	இந்தியா கரும்பில் உலகில் இரண்டாவது பெரிய தொழிற்சாலை.	பருத்தி உற்பத்தியில் இந்தியா சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3.	அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலங்கள்: உத்திரப்பிரதேசம், 2. மஹாராஷ்டிரா, கர்நாடகம், தமிழ்நாடு.	அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலங்கள்: குஜராத், மஹாராஷ்டிரா, ஆந்திரா, பஞ்சாப்.

3. தன்னிறைவு வேளாண்மை மற்றும் இடப்பெயர்வு வேளாண்மை

எண்.	தன்னிறைவு வேளாண்மை	இடப்பெயர்வு வேளாண்மை
1.	இந்தியாவில் கனிசமான விவசாயிகள் இவ்வேளாண்மையை பின்பற்றுகின்றனர்.	பழங்குடி இன மக்களால் காடுகளில் மரங்களை அகற்றி செய்யப்படுகிறது.
2.	ஒருங்கிணைந்த பாரம்பரிய விவசாய முறை தம் தேவைக்கு போக மீதியை சந்தையில் விற்பனை செய்தல்.	இடம்பெயரும் விவசாய முறை தொடர்ச்சியாக சில உணவு பயிர்கள், காய்வகை பயிர்கள் மனித உழைப்பின் மூலம் பயிரிடப்படுகிறது.

4. செம்மண் மற்றும் கரிசல் மண்

எண்.	செம்மண்	கரிசல் மண்
1.	பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள், சிதவடைவதால் உருவாகின்றன.	தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.
2.	இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாக காணப்படுகிறது. நைட்ரஜன், இலைமக்குகள் பாஸ்போரிக் அமிலம் சுண்ணாம்பு சத்துகள் குறைவாக காணப்படுகினறது.	கால்சியம், மக்னீசியம் கார்பனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றது. நைட்ரஜன் பாஸ்பேரிக் அமிலம், இலைமக்குகள் குறைவாக காணப்படுகின்றது.
3.	காணப்படும் பகுதிகள்: கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஜார்கண்ட்.	காணப்படும் பகுதிகள்: மகாராஷ்டிரா, தெலுங்கானா, மாளவப் பீடபூமி, கத்தியவார் தீபகற்பம்.
4.	வளரும் பயிர்கள்: கோதுமை, நெல், பருத்தி, கரும்பு.	வளரும் பயிர்கள்: பருத்தி, புகையிலை, கரும்பு, திணை.

VII. விரிவாக விடையளிக்கவும்.

1. நீர்ப்பாசனம் என்றால் என்ன? அதன் மூலங்களை விவரி.

வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக் கொண்டு செல்லும் முறைக்கு நீர்ப்பாசனம் என்று அழைக்கப்படுகிறது.

- அதிக வெப்பநிலை
- வருடம் முழுவதும் பயிர்ச்சாகுபடி
- அதிக நீர்த் தேவையுள்ள பயிர்ச்சாகுபடி
- வணிக வேளாண்மை
- மண்ணின் நீர் புகும் தன்மை ஆகியவற்றால் வேளாண் நாடான இந்தியாவிற்கு நீர்ப்பாசனம் இன்றியமையாததாகிறது.
- நிலத்தோற்றம், மண், மழைப்பொழிவு, நிலநீர், நிலத்தடி நீர் இருப்பு, ஆற்றின் இயல்பு, பயிர்களின் தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு வகையான நீர்ப்பாசன வகைகள் பயன்பாட்டில் உள்ளன.
- கால்வாய் நீர்ப் பாசனம், கிணற்றுப் பாசனம், ஏரிப்பாசனம்.

பாசன மூலங்கள்:

கால்வாய் பாசனம் இந்தியாவில் இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரமாகும். தாழ்வான சமமான நிலப்பகுதி, பருமன் மிகுந்த வளமான மண்.

வற்றாத நீர் மூலங்கள்:

அதிக நீர்பிடிப்புக் கொண்ட பகுதிகள் கால்வாய்ப் பாசனம் முக்கிய ஆதாரமாக உள்ளது. கால்வாய்ப்பாசனத்தை 2 வகையாகப் பிரிக்கலாம். வெள்ளப் பெருக்கு கால்வாய், வற்றாத கால்வாய்.

கிணற்றுப் பாசனம்:

கிணறு என்பது புவியில் செங்குத்தாக தோண்டப்பட்ட பள்ளம் அல்லது ஆழ்துளை மூலம் நிலத்தடி நீரை புவியின் மேற்பரப்பிற்கு கொண்டுவருதல் ஆகும். கிணறுகள் 2 வகைப்படும். திறந்தவெளிக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள்.

ஏரிப்பாசனம்:

- ஏரி என்பது புவியின் மேற்பகுதியில் இயற்கையாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்வான நீர் தேங்கும் பகுதியாகும்.
- பொதுவாக இவை ஆற்றின் குறுக்கே ஏற்படுத்தப்பட்டு ஏரியைச் சுற்றிலும் கரைகள் கட்டப்படுகின்றன.
- இங்கு நீரைச் சேகரித்து வேளாண்மை மற்றும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஏரிப்பாசனம் இந்தியாவின் மிகப் பழமையான பாசன முறையாகும்.

2. வாணிபப் பயிர்கள் எவை? அவற்றை விவரி.

வாணிபப் பயிர்கள்:

வணிக நோக்கத்திற்காக பயிரிடப்படும் பயிர்களை வாணிபப் பயிர்கள் என அழைக்கிறோம். கரும்பு, புகையிலை, இழைப்பயிர்கள், எண்ணெய் வித்துகள்.

கரும்பு:

- கரும்பு இந்தியாவின் மிக முக்கியமான வாணிபப்பயிராகும். இந்தியா கரும்பில் உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தியில் உள்ளது.
- நம் நாட்டின் இரண்டாவது பெரிய தொழிற்சாலை பிரிவாகும்.
- சர்க்கரை உற்பத்தியை தவிர வெல்லம், நாட்டுச் சர்க்கரை, சாராய தொழிற்சாலைகளுக்கான கரும்புச்சாறு மற்றும் காகித தொழிற்சாலைக்கு தேவையான கரும்புச் சக்கைகளையும் அளிக்கிறது.
- சர்க்கரை உற்பத்தியில் நம் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் உத்திரப்பிரதேசம் இதன் முதன்மை உற்பத்தியாளராகும். மேலும் மகாராஷ்ட்ரா, கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத் கரும்பு அதிகம் உற்பத்தி செய்யும் பிற மாநிலங்களாகும்.

பருத்தி:

- பருத்தி இந்தியாவின் முக்கியமான வாணிபப் பயிர்களுள் ஒன்றாகும்.
- பருத்தி உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- குஜராத், மகாராஷ்ட்ரா, ஆந்தரப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்கள் மொத்த பருத்தி உற்பத்தியில் 79 சதவீதம் பங்களிப்பை வழங்குகின்றன.

சணல்:

- சணல் ஒரு வெப்பமண்டல இழைப்பயிராகும். இது வண்டல் மண்ணில் நன்கு வளரும்.
- கோனிப்பைகள், கம்பளங்கள், கயிறு, நூலிழைகள், போர்வைகள், துணிகள், தார்பாலின், திரைச்சீலைகள் போன்ற பொருட்கள் தயாரிக்க சணல் நார் பயன்படுத்தப்படுகிறது.
- சணல் பயிரிடுவதிலும் உற்பத்தியிலும் மேற்கு வங்க மாநிலம் முதலிடத்தில் வகிக்கிறது. பீகார், அசாம், மேகாலயா போன்றவை சணல் பயிரிடும் மற்ற மாநிலங்களாகும்.

எண்ணெய் வித்துகள்:

- இந்தியர்களின் உணவில் கொழுப்பு சத்தை அதிகம் அளிப்பது எண்ணெய் வித்து ஆகும்.
- நிலக்கடலை, கடுகு, எள், ஆளி விதை, சூரியகாந்தி, ஆமணக்கு, பருத்தி விதைகள், நைஜர் விதைகள் போன்றவை முக்கியமான எண்ணெய் வித்துக்கள் ஆகும்.

- இந்தியாவில் குஜராத் மாநிலம் மிகப்பெரிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் பிற முக்கிய மாநிலங்களாகும்.
- நிலக்கடலை உற்பத்தியில் உலகில் இரண்டாவது இடத்தை இந்தியா வகிக்கிறது.

3. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை விவரி.

சிறிய மற்றும் குறுநில உடமை:

- இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிர பயிர் சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறிய மற்றும் துண்டாக்கப்பட்ட நில உடைமையாளர்கள் அதிகம் உள்ளனர்.
- இந்தியாவில் 67 சதவீத நில உடைமையாளர்கள் (1 ஹெக்டேருக்கும் குறைவு) குறு விவசாயிகளாக உள்ளனர்.

அதிக செலவின உள்ளீடுகள்:

- அதிக விளைச்சலுக்கும் தொடர் வேளாண் உற்பத்திக்கும் விதைகள் அடிப்படையான ஒரு உள்ளீடாகும்.
- அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள் சிறு-குறு விவசாயிகளுக்கு எட்டா கனியாக உள்ளது.

வளமற்ற மண்:

இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடின்றி வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன பற்றாக்குறை:

- இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியை பெற்றிருக்கிறது.
- வேளாண்மையின் நம்பகத்தன்மைக்கு நீர்ப்பாசன வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

புவியியல்

அலகு 4

இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
அ) சேமிப்பு மின்கலன்கள் ஆ) எஃகு தயாரிப்பு
இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு
விடை: ஆ) எஃகு தயாரிப்பு

2. ஆந்த்ரசைட் நிலக்கரி _____ கார்பன் அளவை கொண்டுள்ளது.
அ) 80% - 95% ஆ) 70% க்கு மேல்
இ) 60% - 70% ஈ) 50% க்கும் குறைவு **விடை: அ) 80% - 95%**

3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் _____.
அ) ஆக்ஸிஜன் ஆ) நீர்
இ) கார்பன் ஈ) நைட்ரஜன் **விடை: இ) கார்பன்**

4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம் _____.
அ) சேலம் ஆ) சென்னை
இ) மதுரை ஈ) கோயம்புத்தூர் **விடை: ஈ) கோயம்புத்தூர்**

5. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான்
இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு **விடை: இ) மகாராஷ்டிரம்**

6. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்
அ) உயிரி சக்தி ஆ) சூரியன்
இ) நிலக்கரி ஈ) எண்ணெய் **விடை: ஆ) சூரியன்**

7. புகழ்பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்
அ) ஜார்கண்ட் ஆ) பீகார்
இ) இராஜஸ்தான் ஈ) அசாம் **விடை: அ) ஜார்கண்ட்**

8. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது
அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள்
இ) பெரும் தேவை ஈ) மின்சக்தி சக்தி கிடைப்பது
விடை: ஆ) கனிமப் படிவுகள்

II. பொருத்துக.

1.	பாக்சைட்	-	அ) சிமெண்ட்
2.	ஜிப்சம்	-	ஆ) வானூர்தி
3.	கருப்பு தங்கம்	-	இ) மின்சாதனப் பொருட்கள்
4.	இரும்பு தாது	-	ஈ) நிலக்கரி
5.	மைக்கா	-	உ) மேக்னடைட்

விடை: 1.ஆ 2.அ 3.ஈ 4.உ 5.இ

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.

- இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளம் என்று அழைக்கப்படுகிறது. **எ.கா:** காற்று, நீர் மண்
- வளங்களின் வகைகள்: புதுப்பிக்கக்கூடிய வளங்கள், புதுப்பிக்க இயலாத வளங்கள்.

2. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?

- ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும்.
- வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளின் அடிப்படையில் கனிமங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை: உலோகக் கனிமங்கள், அலோகக் கனிமங்கள்.

3. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக.

- இரும்பு எஃகு மற்றும் உலோகக் கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.
- வெளுக்கும் தூள் பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவைத் தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகின்றது.

4. இயற்கை எரிவாயு என்றால் என்ன?

இயற்கை எரிவாயு என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மக்குவதன் மூலம் உண்டாகக்கூடிய ஒரு வாயு ஆகும்.

5. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.

கரிம அளவின் அடிப்படையில் நிலக்கரி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகிறது.

- ஆந்தரசைட் : 80 முதல் 90%
- பிட்டுமினஸ் : 60 முதல் 80%
- பழுப்பு நிலக்கரி : 40 முதல் 60%
- மரக்கரி : 40% திற்கும் குறைவு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.

- மேற்கு வங்காளத்தில் உள்ள ஹூக்ளி ஆற்றங்கரை
- ஆந்திரப் பிரதேசம்
- பீகார்
- அசாம்
- உத்தரப் பிரதேசம்
- சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா.

7. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.

மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள்:

- மும்பை ஹை எண்ணெய் வயல்
- குஜராத் கடற்கரை
- அங்கலேஸ்வர்
- காம்பே - லூனி பகுதிகள்

கிழக்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள்:

- பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு
- திக்பாய் எண்ணெய் வயல்
- ருத்ரசாகர் - லாவா எண்ணெய் வயல்கள்
- அந்தமான் நிகோபாரின் உட்பகுதிகள்

IV. வேறுபடுத்துக.

1. புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

எண்	புதுப்பிக்க இயலும் வளங்கள்	புதுப்பிக்க இயலா வளங்கள்
1.	பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுவாக்கம் செய்து கொள்ளும் வளங்கள்.	பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் மீட்டுவாக்கம் செய்ய இயலாத வளங்கள்.
2.	சுற்றுச்சூழலைப் பாதிக்காது.	சுற்றுச்சூழலைப் பாதிக்கும்.
3.	சூரிய ஆற்றல், காற்று சக்தி உயிரிவளம்.	நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு.

2. உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்.

எண்	உலோக கனிமங்கள்	அலோக கனிமங்கள்
1.	ஒன்று (அ) அதற்கு மேற்பட்ட உலோகங்களை கொண்டிருக்கும்.	இவ்வகை கனிமங்களில் உலோக தன்மை இருப்பதில்லை.

2.	அரிதாகவும் இயற்கையான அடர்ந்த தாது படிவங்களையும் காணப்படுகின்றன.	இரும்பு தாது படிவங்கள் இல்லாமல் காணப்படுகின்றன.
3.	இரும்பு, மாங்கனீசு, தாமிரம், தங்கம்.	மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம், நைட்ரேட், நிலக்கரி, பெட்ரோலியம்.

3. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.

எண்	வேளாண் சார்ந்த தொழிலகங்கள்	கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
1.	வேளாண் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்துவது.	கனிமப் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்துவது.
2.	தொழிலாளர்களை சார்ந்தது.	இயந்திரங்களை சார்ந்தது.
3.	கரும்பு, பருத்தி, சணல் ஆலைகள்.	இரும்பு, எஃகு தொழிற்சாலைகள்.

4. சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்.

எண்	சணல் ஆலைகள்	சர்க்கரை ஆலைகள்
1.	சணல் என்பது குறைவான விலையில் கிடைக்கக்கூடிய இழைநார்.	இந்தியாவில் சர்க்கரை பெரும்பாலும் கரும்பில் இருந்து எடுக்கப்படுகிறது.
2.	இது சிப்பங்கள் மற்றும் சாக்கு பைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.	கரும்பு சக்கை பேட்டரி தயரிக்கப் பயன்படுகிறது.
3.	பருத்தி நெசவாலைகளுக்கு அடுத்தாற்போல் சணல் ஆலைகள் இந்தியாவின் இரண்டாவது பெரிய நெசவாலைத் துறையாக உள்ளது.	பருத்தி நெசவுக்கு அடுத்து இரண்டாவது பெரிய வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்.
4.	மேற்கு வங்கம், பீகார், ஆந்திரப்பிரதேசம் சணல் உற்பத்தி செய்யும் மாநிலங்கள்.	உத்திரப்பிரதேசம்,மகாராஷ்டிரா,கர்நாடகா, தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளை உற்பத்தி செய்யும் மாநிலங்கள்.

5. மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி.

எண்	மேற்கு கடற்கரைச் சமவெளி	கிழக்கு கடற்கரை சமவெளி
1.	மரபு சார் எரிசக்தி புதுப்பிக்க இயலாத வளங்களாகும்.	மரபு சாரா எரிசக்தி புதுப்பிக்கக் கூடிய வளங்களாகும்.
2.	பெரும்பாலான வளங்கள் பயன்பாட்டின்போது மாசுக்கள் ஏற்படக் காரணமாகின்றன.	பயன்பாட்டின்போது மாசுகள் ஏற்பட வாய்ப்புகளில்லை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3.	அனல் மின்சக்தி, அணுமின்சக்தி.	நீர்மின் சக்தி, சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரி சக்தி.

V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

- மும்பைமற்றும்அதன்புறநகர்பகுதியில்பருத்தியாலைகள்செரிந்துகாணப்படுவதால் மும்பை, இந்தியாவின் "மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன.
- இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப் படுகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதிகளில் அமைந்துள்ளன.
- ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம் ஆகியன முக்கிய நெசவாலை நகரங்கள் ஆகும்.

2. இந்தியத் தொழிலகங்கள் எதிர்க்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

- மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்.
- தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை.
- கடன் பெருவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்.
- கடனுக்கானஅதிக வட்டி விகிதம்.
- மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
- ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை பயிற்சிகள் இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

VI. வரைபடப் பணி.

இந்திய வரைபடத்தில் கீழ்க்காண்பவற்றை குறிக்கவும்.

1. இரும்பு தாது உற்பத்தி மையங்கள்.
2. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மையங்கள்.
3. நிலக்கரி சுரங்கங்கள்.
4. பருத்தி விளையும் பகுதிகள்.
5. இரும்பு எஃகு தொழிலகங்கள்.



கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் _____ ஆகும்.

அ) இரும்பு ஆ) கனிமங்கள்
இ) நிலக்கரி ஈ) பெட்ரோலியம் **விடை: ஆ) கனிமங்கள்**

2. _____ புவியின் மேலோட்டில் அதிகம் பரவி காணப்படுகிறது.

அ) பாறை ஆ) நிலக்கரி
இ) இரும்புத்தாது ஈ) சுண்ணாம்பு **விடை: இ) இரும்புத்தாது**

3. இந்தியாவில் _____ மாநிலம் இரும்புதாது உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது.

அ) தமிழ்நாடு ஆ) உத்திரப்பிரசேம்
இ) ஜார்கண்ட் ஈ) மத்தியப்பிரதேசம் **விடை: இ) ஜார்கண்ட்**

4. இந்திய மாங்கனீசு தாது நிறுவனம் _____ தலைமையிடமாகக் கொண்டுள்ளது.
அ) நாக்பூர் ஆ) புதுடெல்லி
இ) கொல்கத்தா ஈ) ராஞ்சி **விடை: அ) நாக்பூர்**

5. உலகளவில் இந்தியா மாங்கனீசு தாது உற்பத்தியில் _____ பெரிய நாடு.
அ) முதல் ஆ) மூன்றாவது
இ) ஐந்தாவது ஈ) ஏழாவது **விடை: இ) ஐந்தாவது**

6. _____ வரலாற்றிற்கு முந்தைய காலத்திலேயே மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் உலோகமாகும்.
அ) இரும்பு ஆ) தங்கம்
இ) தாமிரம் ஈ) அலுமினியம் **விடை: இ) தாமிரம்**

7. தாமிரம் _____ தன்மையுடையதால் பல்வேறு வடிவமுடைய பொருட்களாக உருவாக்க முடியும்.
அ) கடின ஆ) குறைந்த எடை
இ) மாறும் ஈ) நெகிழும் **விடை: ஈ) நெகிழும்**

8. தாமிரப் படிவு அதிகமுள்ள மாநிலம் _____ ஆகும்.
அ) இராஜஸ்தான் ஆ) ஹரியானா
இ) குஜராத் ஈ) உத்தர்காண்ட் **விடை: அ) இராஜஸ்தான்**

9. _____ பாக்சைட் தாதுவிலிருந்து பெறப்படுகிறது.
அ) இரும்பு ஆ) மைக்கா
இ) தாமிரம் ஈ) அலுமினியம் **விடை: ஈ) அலுமினியம்**

10. அலுமினியமானது _____ கட்டுமானங்களில் அதிகம் பயன்படுகிறது.
அ) விமான ஆ) இரயில் எஞ்சின்
இ) பொருட்கள் ஈ) எழுதுபொருட்கள் **விடை: அ) விமான**

11. மைக்கா _____ தயாரிப்பில் பெரிதும் பயன்படுகிறது.
அ) இரும்பு சாதனங்கள் ஆ) நெசவாலை
இ) இரசாயனம் ஈ) மின் சாதனங்கள் **விடை: ஈ) மின் சாதனங்கள்**

12. _____ மின் கடத்தா தன்மையுடையவை.
அ) இரும்பு ஆ) மைக்கா
இ) தாமிரம் ஈ) அலுமினியம் **விடை: ஆ) மைக்கா**

13. நிலக்கரி தொழிற்சாலை வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக இருப்பதால் _____ என அழைக்கப்படுகிறது.
அ) திரவத் தங்கம் ஆ) வெள்ளைத் தங்கம்
இ) கருப்புத் தங்கம் ஈ) பிரவுன் தங்கம் **விடை: இ) கருப்புத் தங்கம்**

14. இந்திய நிலக்கரி நிறுவனம் மேற்கு வங்களத்திலுள்ள _____ தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது.
அ) டாகா ஆ) பராக்பூர்
இ) கொல்கத்தா ஈ) துர்காபூர் **விடை: இ) கொல்கத்தா**

15. பெட்ரோலியம் என்ற சொல் _____ என்ற இரு இலத்தீன் சொற்களிலிருந்து பெறப்பட்டது.
அ) பெட்ரோ மற்றும் ஒலியம்
ஆ) பெட்ரோ மற்றும் லியம்
இ) பெட்ரோ மற்றும் எண்ணெய்
ஈ) பெட்ரோ மற்றும் நிலியம் **விடை: அ) பெட்ரோ மற்றும் ஒலியம்**

16. பெட்ரோலியம் _____ என்று அழைக்கப்படுகிறது.
அ) கச்சா எண்ணெய் ஆ) தாது எண்ணெய்
இ) புவி எண்ணெய் ஈ) இந்தியன் எண்ணெய் **விடை: ஆ) தாது எண்ணெய்**

17. சூரிய ஒளியை நேரடியாகவோ மின் அழுத்தி கொண்டோ சூரிய ஆற்றல் மூலம் _____ ஆற்றலாக மாற்றலாம்.
அ) வெப்ப ஆ) மின்
இ) காற்று ஈ) நீர் **விடை: ஆ) மின்**

18. இந்தியாவின் முதல் நீர் மின் நிலையம் 1897 ஆம் ஆண்டு _____ இல் நிறுவப்பட்டது.
அ) புதுடெல்லி ஆ) டார்ஜிலிங்
இ) காஷ்மீர் ஈ) மும்பை **விடை: ஆ) டார்ஜிலிங்**

19. இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலம் _____.
அ) குஜராத் ஆ) மகாராஷ்டிரம்
இ) தமிழ்நாடு ஈ) கோவா **விடை: இ) தமிழ்நாடு**

20. _____ தொழில்கள் வேளாண் துறையிலிருந்து மூலப்பொருட்களைப் பெறுகின்றன.
அ) காடு சார்ந்த ஆ) வேளாண் சார்ந்த
இ) கனிமம் சார்ந்த ஈ) இரசாயனம் சார்ந்த **விடை: ஆ) வேளாண் சார்ந்த**

21. இந்தியாவின் முதல் பருத்தி நெசவாலை 1818 ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள _____ என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது.
அ) போர்ட் சென்ட் ஜார்ஜ் ஆ) போன்ட் சென்ட் வில்லியம்
இ) போர்ட் க்ளாஸ்டர் ஈ) போர்ட் சென்ட் ஜான் **விடை: இ) போர்ட் க்ளாஸ்டர்**

22. பருத்தி இழையிலிருந்து விதைகளை பிரித்தெடுக்கும் முறை _____.
அ) ஜின்னிங் ஆ) திருகுதல்
இ) ஸ்பின்னிங் ஈ) பதப்படுத்துதல் **விடை: அ) ஜின்னிங்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

23. பருத்தி ஆலைகளுக்கு அடுத்தாற்போல் _____ ஆலைகள் இந்தியாவின் இரண்டாவது பெரிய நெசவாலை.

அ) கம்பளி ஆ) கைத்தரி
இ) சணல் ஈ) பட்டு

விடை: இ) சணல்

24. தமிழ்நாட்டில் முதன் முதலில் 1830 இல் இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி தொழிற்சாலை _____ இல் அமைக்கப்பட்டது.

அ) தஞ்சாவூர் ஆ) சென்னை
இ) போர்ட்டோநாவா ஈ) மதுரை

விடை: இ) போர்ட்டோ நாவா

25. பருத்தி நெசவாலைக்கு அடுத்து இரண்டாவது பெரிய வேளாண் சார்ந்த தொழிற்சாலை _____ தொழிற்சாலை ஆகும்.

அ) சணல் ஆ) பட்டு
இ) சர்க்கரை ஈ) பேப்பர்

விடை: இ) சர்க்கரை

26. காகிதத்தாள் உற்பத்திக்கு _____ மூலப்பொருட்களாகப் பயன்படுகிறது.

அ) மூங்கில் ஆ) மென்மரங்கள்
இ) தேக்கு ஈ) ஓக்

விடை: ஆ) மென்மரங்கள்

27. இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை 1812 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் உள்ள _____ என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.

அ) செராம்பூர் ஆ) பகரம்பூர்
இ) கொல்கத்தா ஈ) துர்க்காபூர்

விடை: அ) செராம்பூர்

28. _____ தொழிற்சாலை மற்ற தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளை அளிப்பதனால் உலோக தொழிற்சாலை என அழைக்கப்படுகிறது.

அ) வாகன ஆ) இரும்பு எஃகு
இ) நெசவாலை ஈ) காகித

விடை: ஆ) இரும்பு எஃகு

29. இந்தியாவில் முதல் வாகன தொழிலகம் தொடங்கப்பட்ட ஆண்டு _____.

அ) 1947 ஆ) 1950
இ) 1951 ஈ) 1948

விடை: அ) 1947

30. _____ இந்தியாவின் மின்னியல் தலைநகரம்.

அ) ஹைதராபாத் ஆ) சென்னை
இ) பெங்களூரு ஈ) புதுடெல்லி

விடை: இ) பெங்களூரு

31. 1970 ஆம் ஆண்டு இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் மென்பொருள் தொழிலகம் _____.

அ) டாடா கன்சல்டன்சி சர்வீஸ் ஆ) L & T இன்போடெக்
இ) அசன்டியூர் ஈ) கோகினெட்

விடை: அ) டாடா கன்சல்டன்சி சர்வீஸ்

31. பிரதான வாகனத் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த தொழிற்சாலைகளும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருப்பதால் _____ "ஆசியாவின் டெட்ரோய்ட்" என்று அழைக்கப்படுகிறது.

அ) மும்பை ஆ) கொல்கத்தா
இ) ஹைதராபாத் ஈ) சென்னை **விடை: ஈ) சென்னை**

32. புவியிலிருந்து கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் முறைக்கு _____ என்று பெயர்.

அ) வெட்டி எடுத்தல் ஆ) துளை இடுதல்
இ) சுரங்கத் தொழில் ஈ) பறித்தெடுத்தல் **விடை: இ) சுரங்கத் தொழில்**

II. பொருத்துக.

I	1.	மின்னியல் தலைநகரம்	- அ) பருத்தி நெசவு ஆலை
	2.	இந்தியாவின் மான்செஸ்டர்	- ஆ) கோயம்புத்தூர்
	3.	ஆசியாவின் டெட்ராய்ட்	- இ) பெங்களூரு
	4.	பழுப்பு நுரையீரல் நோய்	- ஈ) சென்னை
	5.	தென்னிந்தியாவின் மான்செஸ்டர்	- உ) மும்பை

விடை: 1.இ 2.உ 3.ஈ 4.அ 5.ஆ

II	1.	திக்பாய் எண்ணெய் வயல்	- அ) கர்நாடகம்
	2.	அலோக/உலோகமற்ற கனிமங்கள்	- ஆ) பழமையான ஒன்று
	3.	காற்று சக்தி	- இ) நெசவாலை
	4.	அதிகமான பட்டு உற்பத்தி	- ஈ) சுண்ணாம்புக்கல்
	5.	பழுப்பு நுரையீரல் நோய்	- உ) கன்னியாகுமரி

விடை: 6.ஆ 7.ஈ 8.உ 9.அ 10.இ

III	1.	இரும்புத்தாது	- அ) ஆந்திரப்பிரதேசம்
	2.	பாக்சைட்	- ஆ) ஒடிசா
	3.	நிலக்கரி	- இ) லிமோனைட்
	4.	ஜிப்சம்	- ஈ) ஜார்கண்ட்
	5.	மைக்கா	- உ) இராஜஸ்தான்

விடை: 1.ஈ 2.ஆ 3.இ 4.உ 15.அ

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. உலோகக் கனிமங்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

- உலோகக் கனிமங்கள் என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும். உலோகக் கனிமங்கள் அரிதாகவும் இயற்கையான அடர்ந்த தாது படிவங்களாகவும் காணப்படுகின்றன.
- எ.கா: இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்சைட், நிக்கல், துத்தநாகம், காரியம், தங்கம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. மாங்கனீசு காணப்படும் மாநிலங்கள் எவை?

அதிக மாங்கனீசு படிவுகள் ஒடிசா (44%) கர்நாடகா (22%), மத்தியப்பிரதேசம் (12%), மகாராஷ்டிரா, கோவா (7%), ஆந்திரப்பிரதேசம் (4%) மற்றும் ஜார்கண்ட் (2%) போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது.

3. பாக்சைட் பயன்படும் இடங்கள் யாவை?

- குறைந்த எடை மற்றும் கடினத்தன்மை கொண்ட பண்புகளால் அலுமினியமானது விமானக் கட்டுமானங்களிலும், தானியங்கி இயந்திரங்களிலும் அதிகம் பயன்படுத்தப் படுகிறது.
- சிமெண்ட் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

4. அலோகக் கனிமங்கள் என்பவை யாவை?

- மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம் நைட்ரேட், பொட்டாஷ் போலமைட், நிலக்கரி, பெட்ரோலியம் முதலியன அலோகக் கனிமங்களாகும்.
- இவ்வகைக் கனிமங்களில் உலோகத்தன்மை இருப்பதில்லை.

5. மைக்கா பயன்பாடுகள் யாவை?

- ஒளி புகும் தன்மையுடையது, எளிதில் மிக மெல்லிய பட்டைகளாக பிரித்தெடுக்கக் கூடியவை.
- நிறமற்றவை, நெகிழும் தன்மையுடையவை.
- மேலும் குறைந்த மின் இழப்பையும், அதிக மின் அழுத்தத்தை தாங்கக்கூடிய திறன் பெற்றதால் மின் காப்பான்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- இவை மின் கடத்தாத் தன்மையுடையவை. ஆதலால் மின் சாதனங்கள் தயாரிப்பில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.
- மேலும் மதகு எண்ணெய், மருந்துகள், வர்ணம்பூசுதல் மற்றும் மெழுகு எண்ணெய் போன்ற தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

6. தாது எண்ணெய் பற்றி நீவிர் அறிவது என்ன?

- பெட்ரோலியம் என்பது புவியிலுள்ள பாறைப் படிவுகளில் பெறப்படும் எண்ணெய் ஆகும். இது தாது எண்ணெய் என்றும் அழைக்கப்படுகிறது.
- 90-95 சதவீதம் நீரக காமமும் மீதமுள்ள 5-10 சதவீதம் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், கந்தகம் மற்றும் கரிம உலோகங்களையும் கொண்ட எளிதில் எரியக்கூடிய ஒரு திரவமாகும்.

7. கெயில் நிறுவனம் குறிப்பு வரைக.

- கெயில் நிறுவனம் இந்திய இயற்கை எரிவாயு நிறுவனமானது மாநில அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நிறுவனமாகும்.
- இது இயற்கை எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் நிறுவனங்களுள் ஒரு மிகப்பெரிய நிறுவனமாகும்.
- இதன் தலைமையகம் புது டெல்லியில் உள்ளது. இந்நிறுவனம் இயற்கை எரிவாயு, திரவ நீர்க்கரிமம், திரவ பெட்ரோலிய எரிவாயு, பெட்ரோலிய வேதிப்பொருட்கள்,

நகர எரிவாயு விநியோகம், அகழாய்வு மற்றும் மின் உற்பத்தி ஆகிய பிரிவுகளைக் கையாளுகிறது.

8. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

- கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதியில் அமைந்துள்ளன.

9. இந்தியாவின் ''மான்செஸ்டர்'' என்று அழைக்கப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

- மும்பைமற்றும்அதன்புறநகர்பகுதியில்பருத்தியாலைகள்செரிந்துகாணப்படுவதால் மும்பை இந்தியாவின் "மான்செஸ்டர்'' என்று அழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பத காலநிலை மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின் சக்தி, சந்தை வசதி, சிறந்த போக்குவரத்து வசதி ஆகியன மும்பையில் அதிக அளவு பருத்தி நெசவாலைகள் இருப்பதற்கு காரணங்களாக அமைகிறது.

10. இந்தியாவில் உள்ள முக்கிய ஆலைகளைக் குறிப்பிடுக.

- பருத்தி நெசவாலைகள்
- சணல் ஆலைகள்
- பட்டு நெசவாலைகள்
- சர்க்கரை தொழிற்சாலை

11. இந்தியாவின் மின்னியல் தலைநகரம் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

- இந்தியாவில் மின்னியல் தலைநகரம் பெங்களூரு.
- அதிக மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்யவதால் "இந்தியாவின் மின்னியல் தலைநகரம்'' என்று அழைக்கப்படுகிறது.

12. மின்னியல் உற்பத்தி மையங்கள் ஏதேனும் ஆறினைக் குறிப்பிடுக.

ஹைதராபாத், புதுதில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, கான்பூர், பூனா, லக்னோ, ஜெய்ப்பூர் மற்றும் கோயம்புத்தூர் இதர முக்கிய மின்னியல் உற்பத்தி மையங்களாகும்.

13. இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்கள் யாவை?

சென்னை, கோயம்புத்தூர், திருவனந்தபுரம், பெங்களூரு, மைசூரு, ஹைதராபாத், விசாகப்பட்டினம், மும்பை, பூனா, இந்தூர், காந்திநகர், ஜெய்ப்பூர், நொய்டா, மொகாலி மற்றும் ஸ்ரீநகர் இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்களாகும்.

14. இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் யாவை?

- மின் பற்றாக்குறை, சீரற்ற மின் வினியோகம்.
- தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை.
- கடன் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்.

- கடனுக்கான அதிக வட்டி விகிதம்.
- மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
- ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில் முறை பயிற்சிகள் இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

15. வாகனத் தொழிலகங்கள் எங்கு காணப்படுகின்றன?

- வாகனத் தொழிலகங்கள் நான்கு திரள்களாக காணப்படுகின்றன.
- அவை வட இந்தியாவில் டெல்லி குர்கான் மற்றும் மனேசர், மேற்கு இந்தியாவில் போனா நாசிக் ஹலோல் மற்றும் ஔரங்காபாத், தென்னிந்தியாவில் சென்னை, பெங்களூரு மற்றும் ஓசூர், கிழக்கு இந்தியாவில் ஜம்ஷெட்பூர் மற்றும் கொல்கத்தா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

IV. வேறுபடுத்துக

1. இரும்பு எஃகு தொழிற்சாலை மற்றும் மென்பொருள் தொழிற்சாலை

எண்.	இரும்பு எஃகு தொழிற்சாலை	மென்பொருள் தொழிற்சாலை
1.	பெரும்பாலான இரும்பு எஃகு தொழிலாளர்கள் சோட்டநாக்பூர் பீடபூமியில் உள்ளது.	நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின்னியல் பூங்காக்களாக உள்ளது.
2.	இந்தியாவில் 10 ஒருங்கிணைக்கப்பட்ட எஃகு தொழில்களும் 150 சிறிய எஃகு தொழில்கங்களும் உள்ளது	தற்சமயம் 500 மேற்பட்ட மென் பொருள் தொழில்கள் உள்ளது.
3.	நிரந்தரமான மற்றும் நிரந்தரமற்ற வேலை ஆட்கள் வேலையாய் உள்ளது.	நிரந்தரமான சம்பளம் பெறும் வேலை ஆட்கள் வேலையில் உள்ளனர்.

2. காற்று சக்தி மற்றும் அனல்மின் சக்தி

எண்.	காற்று சக்தி	அனல்மின் சக்தி
1.	காற்றின் மூலம் மின்சார உற்பத்தி.	நிலக்கரி, பெட்ரோலியம் இயற்கை எரிவாயு மூலம் மின்சார உற்பத்தி.
2.	மாசு ஏற்படுத்தும்.	மாசு ஏற்படுத்தாது.
3.	சுற்றுச்சூழலை பாதிக்காது.	சுற்றுச்சூழலை பாதிக்கும்.
4.	புதுப்பிக்கும் ஆற்றல்.	புதுப்பிக்க இயலா ஆற்றல்.
5.	உற்பத்தி செலவு குறைவு.	உற்பத்தி செலவு அதிகம்.

6.	உற்பத்தி மையங்கள் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா.	உற்பத்தி மையங்கள் பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான்.

V. விரிவாக விடையளிக்கவும்.

1. இந்தியாவில் பருத்தி நெசவாலைகள் பற்றி விரிவாக எழுதுக.

- நெசவாலைகள் என்பது பருத்தி, சணல், கம்பளி, பட்டு மற்றும் செயற்கை இலை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- இந்தியா இத்துறையில் உலகில் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- பாரம்பரிய தொழில்களான கைத்தறி, கைவினைப் பொருட்கள், சிறிய விசைத்தறிகள் போன்றவை கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் ஆதாரங்களாக உள்ளன.
- தற்போது இந்தியா பருத்தி உற்பத்தியில் உலகில் மூன்றாவது நாடாகவும், தறிகள் நூற்பு கருவிகள் எண்ணிக்கையில் முதன்மையான நாடாகவும் உள்ளது.
- மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தி ஆலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல்மண், ஈரப்பத காலநிலை, மும்பை துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி, சிறந்த போக்குவரத்து வசதி ஆகியன மும்பையில் அதிகளவு பருத்தி நெசவாலைகள் இருப்பதற்கு காரணங்களாக அமைகிறது.
- மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையான பருத்தி நெசவாலைகள் உள்ளன. இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன தமிழகத்தின் பிற முக்கிய நகரங்களாகும்.

2. இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்கள் பற்றி ஒரு தொகுப்பு எழுதுக.

- இரும்பு எஃகு தொழிற்சாலைகள் இதன் உற்பத்தி பொருள்களை மற்ற தொழிலகங்களுக்கு தேவையான மூலப்பொருள்களாக அளிப்பதனால் அடிப்படையான உலோக தொழிற்சாலை என அழைக்கப்படுகிறது.
- ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி இரும்பு எஃகு உற்பத்தியின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.
- டாட்டா இரும்பு எஃகு தொழிற்சாலை 1907 ஆம் ஆண்டு "சாக்சி" என்றழைக்கப்பட்ட ஜாம்ஷெட்பூரில் தொடங்கப்பட்ட முதல் நவீன தொழிற்சாலை ஆகும்.
- ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், ஒடிசா, ஆகிய மாநிலங்களில் செறிந்து காணப்படுகின்றன.

- நிலக்கரி வயல்களும், இரும்புத் தாது சுரங்கங்களும் ஒன்றுக்கொன்று அருகாமையில் அமைந்திருப்பது இதன் காரணமாகும்.
- இத்தொழிற்சாலைக்குத் தேவையான டோலமைட், மாங்கனீஷ் மற்றும் சிலிகான் போன்ற தாது படிவுகள் போதுமான அளவில் கிடைக்கின்றன.

வ. எண்	தொழிலகங்களின் பெயர்கள்	இடம் மற்றும் மாநிலம்	நிறுவப்பட்ட ஆண்டு	உற்பத்தி பொருட்கள்
1.	டாட்டா இரும்பு எஃகு நிறுவனம்	ஜாம்ஷெட்பூர் - ஜார்க்கண்ட்	1911	தேனிரும்பு.
2.	இந்துஸ்தான் எஃகு நிறுவனம், ரஷ்யா தொழில்நுட்ப உதவியுடன்.	பிலாய் - சத்தீஸ்கர்	1957	ரயில்வே மற்றும் கப்பல் கட்டும் உபகரணங்கள்.
3.	இந்துஸ்தான் எஃகு நிறுவனம், ஜெர்மனியின் தொழில் நுட்ப உதவியுடன்.	ரூர்கேலா - ஒடிசா	1965	வெப்ப மற்றும் குளிர்ந்த உருளை தகடுகள், மின்முலாம் பூசப்பட்ட தகடுகள் மற்றும் மின்சாதன தகடுகள்.
4.	இந்துஸ்தான் எஃகு நிறுவனம், ரஷ்யாவின் தொழில் நுட்ப உதவியுடன்.	பொகாரோ - ஜார்க்கண்ட்	1972	உலோக கலவை, கட்டுமான பொருட்கள், இரயில்வே உபகரணங்கள்.
5.	சேலம் எஃகு ஆலை.	சேலம் - தமிழ்நாடு	1982	துருப்பிடிக்காத இரும்பு.

புவியியல்

அலகு 5
இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு _____.
   அ) வரைபடவியல் ஆ) மக்களியல்
   இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல் **விடை: ஆ) மக்களியல்**

2. _____ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
   அ) இரயில்வே ஆ) சாலை
   இ) வான்வழி ஈ) நீர்வழி **விடை: ஆ) சாலை**

3. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
   அ) 5846 கி.மீ ஆ) 5942 கி.மீ
   இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ **விடை: அ) 5846 கி.மீ**

4. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் _____.
   அ) பெங்களூரு ஆ) சென்னை
   இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத் **விடை: ஈ) ஹைதராபாத்**

5. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து
   அ) சாலைப் போக்குவரத்து ஆ) இரயில் போக்குவரத்து
   இ) வான்வழிப் போக்குவரத்து ஈ) நீர்வழிப் போக்குவரத்து
   விடை: இ) வான்வழிப் போக்குவரத்து

6. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தெடர்புடையது?
   அ) ஏர் இந்தியா ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ்
   இ) வாயுதூத் ஈ) பவன்ஹான்ஸ் **விடை: ஈ) பவன்ஹான்ஸ்**

7. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
   அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள்
   இ) தேயிலை ஈ) பெட்ரோலியம் **விடை: ஈ) பெட்ரோலியம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

II. பொருத்துக.

1.	எல்லைபுறச் சாலை	-	அ) செயற்கைகோள் தகவல் தொடர்பு
2.	INSAT (இன்சாட்)	-	ஆ) நகரமயமாக்கலின் தாக்கம்
3.	மேசகான் கப்பல்கட்டும் தளம்	-	இ) 1990
4.	புறநகரப் பரவல்	-	ஈ) மும்பை
5.	கொங்கண் இரயில்வே	-	உ) 1960 ஹைதராபாத்

விடை: 1.உ 2.அ 3.ஈ 4.ஆ 5.இ

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

- இடப்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து செல்வதாகும்.
- இது உள்நாட்டு இடப்பெயர்வு, சர்வதேச இடப்பெயர்வு என இரு வகைப்படும்.

2. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

- இந்திய தரைவழிப் போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாக கருதப்படுகிறது.
- இது மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.
- வணிகம், சுற்றுலா, கல்வி போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது.
- வேளாண் துறையில் எளிதில் அழுகக்வடிய பொருட்களை வர்த்தகம் செய்ய விரைவான போக்குவரத்தை அளித்து உதவி புரிகிறது.

3. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

- குழாய் போக்குவரத்து அமைப்பதற்கு ஆரம்பகால செலவுகள் அதிகம்.
- ஆனால் பின்னர் இதனை பராமரிப்பதற்கான செலவு மிகவும் குறைவு.
- இவற்றை கடினமான நிலப்பகுதிகளிலும் நீருக்கு அடியிலும் அமைக்க இயலும்.

4. இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளைக் குறிப்பிடுக.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 1

இது ஹால்தியா மற்றும் அலகாபாத் இடையே செயல்படுகிறது.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 2

இது பிரம்மபுத்ரா ஆற்றில் துபிரி மற்றும் காடியாவிற்கு இடையே செயல்படுகிறது.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 3

இது நீர்வழி கேரளா மாநிலத்தின் கொல்லம் மற்றும் கோட்டபுரம் இடையே செயல்படுகிறது.

5. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

- தகவல்கள் எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம்.

- தகவல் தொடர்புகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை: தனிமனித தகவல் தொடர்பு, பொதுத் தகவல் தொடர்பு.

6. பன்னாட்டு வணிகம் - வரையறு.

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியன பன்னாட்டு வணிகத்தின் இரு கூறுகள் ஆகும்.

7. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக.

- சாலை வழி குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்கிறது.
- சாலைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பு செய்வது எளிது.
- பண்ணைகள், தொழிற்சாலைகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றிக்கிடையில் எளிதில் தொடர்பை ஏற்படுத்துகிறது.
- இது சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன்படும் மலிவான போக்குவரத்து ஆகும்.

IV. வேறுபடுத்துக.

1. மக்களடர்த்தி மற்றும் மக்கட்தொகை வளர்ச்சி.

எண்	மக்களடர்த்தி	மக்கட்தொகை வளர்ச்சி
1.	இது சராசரியாக ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை குறிப்பிடுகிறது.	மக்கள் தொகை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலிருந்து மற்றொரு காலப் பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதையோ அல்லது குறைவதையோ குறிப்பிடுவதாகும்.

2. தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தகவல் தொடர்பு.

எண்	தனிநபர் தகவல் தொடர்பு	பொதுத் தகவல் தொடர்பு
1.	தனிநபர்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றம் தனிமனித தகவல் தொடர்பு என அழைக்கப்படும்	பொது தகவல் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களை பெறுவதாகும்.
2.	இது அஞ்சல் சேவை, தந்தி, கைப்பேசி, பிரதிகள், தொலைபேசி, குறுந்தகவல், இணையதளம் போன்றவை உள்ளடக்கியது.	இது கல்வி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்கும் சிறந்த வழியாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்.

எண்	அச்சு ஊடகம்	மின்னணு ஊடகம்
1.	செய்தித்தாள் எல்லோராலும் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த அச்சு ஊடகத்தின் கீழ்வரும் ஒரு தகவல் தொடர்பு சாதனமாகும்.	இது கல்வி, செய்தி மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது.
2.	இந்தியாவில் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் செய்திகளை அளிக்கக்கூடிய பல செய்தித்தாள்கள் உள்ளன.	சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற கூட்டத்தொடர் நிகழ்வுகள் மற்றும் சிறப்பு விழாக்கள் தொடர்பான நிகழ்வுகளையும் சிறப்பு செய்திகளாக ஒளிபரப்புகிறது.

4. சாலைவழி போக்குவரத்து மற்றும் இரயில்வழி போக்குவரத்து.

எண்	சாலைவழி போக்குவரத்து	இரயில்வழி போக்குவரத்து
1.	சாலை வழி குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்கிறது.	மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்கிறது.
2.	சாலைகள் அமைப்பதும், அதனை பராமரிப்பதும் எளிது.	இரயில் தடங்களை அமைப்பதும், அதனை பராமரிப்பதும் கடினம்.
3.	அதிக பொருட்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக அனுப்ப முடியாது.	அதிக பொருட்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக அனுப்பலாம்.

5. நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வான்வழிப் போக்குவரத்து.

எண்	நீர்வழிப் போக்குவரத்து	வான்வழிப் போக்குவரத்து
1.	மெதுவான போக்குவரத்து.	விரைவான போக்குவரத்து.
2.	குறைந்த செலவு.	அதிக செலவு.
3.	சுற்றுச்சூழலைப் பாதிக்காது.	சுற்றுச்சூழலைப் பாதிக்கும்.
4.	கனமான பொருளை எடுத்து செல்லும்.	பயணிகள், சரக்குகள் மற்றும் அஞ்சலை எடுத்துச் செல்லும்.

6. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

எண்	உள்நாட்டு வணிகம்	பன்னாட்டு வணிகம்
1.	ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம்.	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்.
2.	உள்நாட்டு வணிகம் எனவும், உள்ளூர் வணிகம் எனவும் அழைக்கப்படுகிறது.	பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் எனவும் அழைக்கப்படுகிறது.
3.	உள்நாட்டு வணிகத்தில் நிலவழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது.	பன்னாட்டு வணிகத்தில் நீர்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது.
4.	இவ் வணிக முறையில் உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது.	இதில் அந்நிய நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது.

V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?

நகரமயமாக்கம்:

கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

நகரமயமாக்கலின் சிக்கல்கள்:

- நகரமயமாக்கலும், மக்கள் தொகை அடர்த்தியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை.
- கிராமத்திலிருந்து நகரங்களுக்கு இடப்பெயர்தல் நகர்ப்பகுதிகளில் மக்கள் தொகை வெடிப்பிற்கு வழிவகுக்கின்றது.

இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள்:

- நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
- குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
- போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
- குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.

2. இந்தியாவில் செயற்கைகோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விளக்குக.

- செயற்கைக்கோளானது தொடர்ச்சியாக மிகப்பெரும் பரப்பிலான பதிமம் மற்றும் தகவல்களை அளிக்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- செயற்கைக்கோள் பதிமங்களைப் பயன்படுத்தி வானிலை ஆய்வு, வானிலை முன் அறிவிப்பு, இயற்கை பேரழிவு கண்காணிப்பு, எல்லை பகுதி கண்காணிப்பு போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு இரண்டு பிரிவுகளைக் கொண்டது. அவை: இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு, இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் அமைப்பு.
- 1983-இல் நிறுவப்பட்ட இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு தொலை தொடர்பு,வானியல் ஆய்வு மற்றும் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு பல்நோக்கு திட்ட அமைப்பாக உள்ளது.
- இன்சாட் வரிசை செயற்கைக்கோள், கைபேசி தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு சமிக்கைகளை அனுப்ப பயன்படுகிறது.
- வானிலையை கண்டறியவும், இராணுவ பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.
- இன்சாட் வரிசை, ஜி-சாட் வரிசை கல்பனா 1, ஹேம்சாட், எஜுசாட் போன்றவை தகவல் தொடர்பிற்காக பயன்படுத்தப்படும் முக்கிய செயற்கைக்கோளாகும்.

3. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

இந்திய சாலைகள்

- தேசிய நெடுஞ்சாலைகள்
- மாநில நெடுஞ்சாலைகள்
- மாவட்ட சாலைகள்
- கிராமப்புறச் சாலைகள்
- எல்லையோர சாலைகள் மற்றும்
- பன்னாட்டு நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய சாலைகளின் வகைகள்:

அ) தேசிய நெடுஞ்சாலைகள்:

- தேசிய நெடுஞ்சாலைகள் வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்காக நாட்டின் எல்லைகளையும், மாநிலங்களின் தலைநகரங்கள், முக்கியத் துறைமுகங்கள், இரயில் நிலையங்கள், முக்கிய சுற்றுலா மையங்கள், தொழில் மையங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.
- இந்தச் சாலைகள் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத் துறை பராமரிக்கிறது.
- இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH 7 ஆகும்.

ஆ) மாநில நெடுஞ்சாலைகள்:

- மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்களை மாநில தலைநகரத்துடனும் தேசிய நெடுஞ்சாலைகளுடனும் அண்டை மாநில நெடுஞ்சாலைகளுடனும் இணைக்கின்றன.
- இந்தச் சாலைகளை மாநில பொதுப்பணித்துறை பராமரிக்கிறது.

இ) மாவட்டச் சாலைகள்:

- மாவட்டச் சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.
- மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப் பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

ஈ) ஊரகப் பகுதி சாலைகள் (கிராமச் சாலைகள்):

- இச்சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.
- இது பல்வேறு கிராமங்களை அதன் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கிறது.
- இவைகளை கிராம பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகின்றன.

உ) எல்லைப்புறச் சாலைகள்:

- எல்லைப்புறச் சாலைகள் நாட்டின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள ஒரு சாலை வகைகளாகும்.
- இவைகள் எல்லைப்புறச் சாலைகள் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஊ) தங்க நாற்கரச் சாலைகள்:

- இது 5,846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது.
- இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி - கொல்கத்தா - சென்னை - மும்பை - புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது.

எ) விரைவுச் சாலைகள்:

நன்கு மேம்படுத்தப்பட்ட தரமான பல்வழிப் பாதைகளைக் கொண்ட அதிவேக போக்குவரத்திற்கான சாலைகள் ஆகும். எ.கா: மும்பை - பூனா விரைவுச் சாலை.

ஏ) பன்னாட்டு நெடுஞ்சாலைகள்:

- இந்தியாவை அண்டை நாடுகளுடன் இணக்கமான உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இச்சாலைகள் பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்கதேசம் மற்றும் மியான்மர் ஆகிய அண்டை நாடுகளை இணைக்கின்றன.

VI. வரைபடப் பணி.

இந்திய புறவளி நிலவரை படத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. தேசிய நெடுஞ்சாலை எண். 44 (NH 44).
2. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள்.
3. இந்தியாவின் முக்கிய பன்னாட்டு விமான நிலையங்கள்.
4. மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலங்கள்.
5. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. இந்திய இரயில்வே மண்டலங்கள் i) புதுடெல்லி (வடக்கு), ii) கொல்கத்தா (கிழக்கு) iii) மும்பை (மத்திய) (மேற்கு), iv) சென்னை (தெற்கு)



கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. உலகின் _____ அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது.
   அ) முதலாவது ஆ) இரண்டாவது
   இ) மூன்றாவது ஈ) நான்காவது **விடை: ஆ) இரண்டாவது**

2. மக்கட்தொகை கணக்கெடுப்பு _____ வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
   அ) பத்து ஆ) ஐந்து
   இ) ஆறு ஈ) ஏழு **விடை: அ) பத்து**

3. இந்திய நாட்டின் மக்கட்தொகை பரவல் _____ காணப்படுகிறது.
அ) சமமாக ஆ) சாதரணமாக
இ) பொதுவாக ஈ) சீரற்று **விடை: ஈ) சீரற்று**

4. இந்தியாவில் அதிக மக்கட்தொகை கொண்ட மாநிலம் _____.
அ) கேரளா ஆ) தமிழ்நாடு
இ) உத்திரப்பிரதேசம் ஈ) மகாராஷ்டிரா **விடை: இ) உத்திரப்பிரதேசம்**

5. இந்தியாவில் முதல் மக்கட்தொகை கணக்கெடுப்பு _____ ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
அ) 1947 ஆ) 1950
இ) 1957 ஈ) 1872 **விடை: ஈ) 1872**

6. இந்தியாவில் மிகக் குறைந்த மக்கட்தொகை கொண்ட மாநிலம் _____.
அ) அஸாம் ஆ) சிக்கிம்
இ) நாகலாந்து ஈ) மணிப்பூர் **விடை: ஆ) சிக்கிம்**

7. மக்கள்தொகை அடர்த்தி சராசரியாக ஒரு _____ பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.
அ) சதுர கிலோ மீட்டர் ஆ) சதுர மீட்டர்
இ) சதுர ஏக்கர் ஈ) சதுர சென்டி மீட்டர்
விடை: அ) சதுர கிலோ மீட்டர்

8. யூனியன் பிரதேசங்களில் _____ குறைந்த மக்களடர்த்தி கொண்டது.
அ) இலட்சத்தீவுகள் ஆ) அந்தமான் நிக்கோபார்
இ) இலங்கை ஈ) பாம்பன் **விடை: ஆ) அந்தமான் நிக்கோபார்**

9. _____ ஆண்டு மக்களியியல் வரலாற்றில் தேக்க நிலை.
அ) 1901-1911 ஆ) 1911-1921
இ) 1901-1921 ஈ) 1950-1960 **விடை: இ) 1901-1921**

10. _____ என்பது ஒரு வருடத்தில் 1000 மக்களின் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும்.
அ) மக்கட்தொகை வளர்ச்சி ஆ) பிறப்பு விகிதம்
இ) இறப்பு விகிதம் ஈ) வளர்ச்சி விகிதம் **விடை: ஆ) பிறப்பு விகிதம்**

11. _____ என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து செல்வதாகும்.
அ) மாற்றம் ஆ) பயணிப்பது
இ) இடப்பெயர்வு ஈ) மாறக்கூடியது **விடை: இ) இடப்பெயர்வு**

12. பாலின விகிதம் என்பது மக்கள் தொகையில் _____ ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையை குறிப்பதாகும்.
அ) 100 ஆ) 1000
இ) 10 ஈ) 10000 **விடை: ஆ) 1000**

13. குறைந்த பாலின விகிதம் உள்ள யூனியன் பிரதேசம் _____.
அ) டெல்லி ஆ) ஹரியானா
இ) டையூடாமன் ஈ) புதுச்சேரி **விடை: இ) டையூ டாமன்**

14. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகையின் எழுத்தறிவு விகிதம் _____ ஆகும்.
அ) 50% ஆ) 74.04%
இ) 25.25% ஈ) 99% **விடை: அ) 74.04%**

15. _____ மாநிலம் எழுத்தறிவில் 93.9% பெற்று இந்தியாவின் முதல் மாநிலமாகும்.
அ) டெல்லி ஆ) தமிழ்நாடு
இ) மேற்குவங்காளம் ஈ) கேரளா **விடை: ஈ) கேரளா**

16. குறைந்த எழுத்தறிவு பெற்ற மாநிலம் _____.
அ) அஸாம் ஆ) அருணாசலப்பிரதேசம்
இ) பீகார் ஈ) இராஜஸ்தான் **விடை: இ) பீகார்**

17. _____ மக்கள்தொகை சதவீதத்தின் அடிப்படையிலேயே நகரமயமாக்கம் அளவிடப் படுகிறது.
அ) கிராமப்புற ஆ) நகர்ப்புற
இ) வெளிநாட்டு ஈ) உள்நாட்டு **விடை: ஆ) நகர்ப்புற**

18. _____ மாநிலம் மிகுந்த நகரமயமாக்கப்பட்ட பகுதியாக உள்ளது.
அ) கோவா ஆ) கேரளா
இ) ஒடிசா ஈ) பஞ்சாப் **விடை: அ) கோவா**

19. _____ மாநிலம் குறைந்த நகரமயமாக்கப்பட்ட பகுதியாகும்.
அ) அஸாம் ஆ) ஹிமாச்சலப்பிரதேசம்
இ) மணிப்பூர் ஈ) மிசோரம் **விடை: ஆ) ஹிமாச்சலப்பிரதேசம்**

20. _____ ஒரு நாட்டின் உயிர்நாடியாக கருதப்படுகிறது.
அ) விவசாயம் ஆ) மின்னியல்
இ) போக்குவரத்து ஈ) பாசனம் **விடை: இ) போக்குவரத்து**

21. _____ தன்னுடைய ஆட்சியை பலப்படுத்தி ஒருங்கிணைக்க அமிர்தரஸிலிருந்து பெஷாவர் வரை சாலை அமைத்து அதற்கு கிரான்ட்ரங் சாலை என பெயரிட்டார்.
அ) அக்பர் ஆ) ஔரங்கசிப்
இ) ஷெர்ஷா சூரி ஈ) அசோகர் **விடை: இ) ஷெர்ஷா சூரி**

22. நீளமான தேசிய நெடுஞ்சாலை _____ உத்திரபிதேசத்திலுள்ள வாரணாசியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி வரை உள்ளது.
அ) NH 44 ஆ) NH 47
இ) NH 10 ஈ) NH 28 **விடை: அ) NH 44**

23. குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH 47A இது எர்ணாக்குளத்திலிருந்து _____ கி.மீ தொலைவை கொண்ட கொச்சின் துறைமுகத்தை இணைக்கிறது.
அ) 10 ஆ) 6
இ) 7 ஈ) 15 **விடை: ஆ) 6**

24. உலகிலேயே உயரமான எல்லைபுற சாலை லடாக்கில் உள்ள லேவிலிருந்து _____ வரை அமைக்கப்பட்டுள்ளது.
அ) டெல்லி ஆ) டார்ஜிலிங்
இ) சண்டிகார் ஈ) அமர்தசரஸ் **விடை: இ) சண்டிகார்**

25. _____ சாலைகள் புதுடெல்லி - கொல்கத்தா - சென்னை - மும்பை ஆகிய பெருநகரங்களை இணைக்கிறது.
அ) தங்க முக்கோண சாலை ஆ) தங்க நாற்கர சாலை
இ) தங்க ட்ரஸ்க் ஈ) கிராண்ட் வைரம் **விடை: ஆ) தங்க நாற்கர சாலை**

26. _____ போக்குவரத்து இந்திய தரைவழி போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாக கருதப்படுகிறது.
அ) சாலைப் ஆ) நீர்வழிப்
இ) இரயில் ஈ) வான்வெளிப் **விடை: இ) இரயில்**

27. இந்திய இரயில் போக்குவரத்து அமைப்பு ஆசியாவில் மிகப் பெரியதும் உலக அளவில் _____ பெரியதும் ஆகும்.
அ) ஐந்தாவது ஆ) இரண்டாவது
இ) முதலாவது ஈ) நான்காவது **விடை: ஆ) இரண்டாவது**

28. இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து _____ இல் 1925 இல் தொடங்கப்பட்டது.
அ) கொல்கத்தா ஆ) சென்னை
இ) புதுடெல்லி ஈ) மும்பை **விடை: ஈ) மும்பை**

29. மெட்ரோ இரயில் சேவை முதன் முதலில் _____ இல் தொடங்கப்பட்டது.
அ) கொல்கத்தா ஆ) சென்னை
இ) புதுடெல்லி ஈ) மும்பை **விடை: அ) கொல்கத்தா**

30. நீர்வழிப் போக்குவரத்து பழமையான மற்றும் _____ போக்குவரத்து முறையாகும்.
அ) அதிக விலை ஆ) வேகமான
இ) மென்மையான ஈ) மலிவான **விடை: ஈ) மலிவான**

31. _____ மாநிலத்தில் இரயில் போக்குவரத்து இல்லை.
அ) மிசோரம் ஆ) மேகலாயா
இ) அஸாம் ஈ) பீகார் **விடை: ஆ) மேகலாயா**

32. இந்தியாவில் _____ பெரிய துறைமுகங்கள் உள்ளன.
அ) 10 ஆ) 12
இ) 13 ஈ) 14 **விடை: இ) 13**

33. முதல் இந்திய விமானப் போக்குவரத்து _____ இல் அலகாபாத்திலிருந்து நைனிக் என்ற இடத்திற்கு தொடங்கப்பட்டது.
அ) 1915 ஆ) 1918
இ) 1921 ஈ) 1925 **விடை: ஆ) 1918**

34. அகில இந்திய வானொலி _____ ஆம் ஆண்டு முதல் "ஆகாசவாணி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
அ) 1957 ஆ) 1955
இ) 1950 ஈ) 1945 **விடை: அ) 1957**

35. _____ ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் ஆரம்பிக்கப்பட்டது.
அ) 1967 ஆ) 1969
இ) 1950 ஈ) 1963 **விடை: ஆ) 1969**

36. வணிகம் இரண்டு நாடுகளுக்கு இடையே நடைபெற்றால் _____ வணிகம்.
அ) ஒரு தரப்பு ஆ) இரு தரப்பு
இ) முத்தரப்பு ஈ) பல தரப்பு **விடை: ஆ) இரு தரப்பு**

37. 1983 ஆம் ஆண்டு ஏவப்பட்ட இன்சாட் IB _____ ற்காக ஏவப்பட்ட முதல் இன்சாட் வரிசை செயற்கைகோள் ஆகும்.
அ) கல்வி ஆ) தகவல் தொடர்பு
இ) விவசாயம் ஈ) தொலைத்தொடர்பு **விடை: ஆ) தகவல் தொடர்பு**

38. இந்தியாவில் அஞ்சல் குறியீட்டு எண் தொடங்கப்பட்ட ஆண்டு _____.
அ) 1952 ஆ) 1962
இ) 1972 ஈ) 1982 **விடை: இ) 1972**

39. _____ இந்திய தரைவழிப் போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாக கருதப்படுகிறது.
அ) சாலை வழி ஆ) இரயில் வழி
இ) நீர் வழி ஈ) வான்வெளி **விடை: ஆ) இரயில் வழி**

II. பொருத்துக.

I
1. உள்நாட்டு வணிகம் - அ) இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்
2. பன்னாட்டு வணிகம் - ஆ) உள்ளூர் வணிகம்
3. இரு தரப்பு வணிகம் - இ) சிமெண்ட் மற்றும் கண்ணாடி
4. ஏற்றுமதி பொருட்கள் - ஈ) பண்டமாற்று முறை
5. இறக்குமதி பொருட்கள் - உ) வெளிநாட்டு வணிகம்
- ஊ) தங்கம் மற்றும் தொலைதொடர்பு சாதனங்கள்

விடை: 1.ஆ 2.உ 3.அ 4.இ 5.ஊ

II

1.	தனிமனித தகவல் தொடர்பு	- அ) செயற்கைக்கோள் தகவல் தொடர்பு
2.	பொது தகவல் தொடர்பு	- ஆ) நகரமயமாதலின் தாக்கங்கள்
3.	GSAT	- இ) பெங்களூரு
4.	பண்டமாற்று முறை	- ஈ) தொலைபேசி
5.	ISRO	- உ) தொலைக்காட்சி
		- ஊ) வணிகம்

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.ஊ 5.இ

III

1.	விசாகப்பட்டினம்	- அ) புதுடெல்லி
2.	கங்கை ஆறு	- ஆ) முக்கிய கப்பல் கட்டும் தளம்
3.	அதிக மக்களை விரைவாக ஏற்றி செல்லும் அமைப்பு	- இ) உள்நாட்டு நீர்வழி
4.	வடக்கு இரயில்வே	- ஈ) சென்னை
5.	தெற்கு இரயில்வே	- உ) கொல்கத்தாவிலுள்ள மெட்ரோ
		- ஊ) ஹைதராபாத்

விடை: 1.ஆ 2.இ 3.உ 4.அ 5.ஈ

IV

1.	NH 7	- அ) சண்டிகார் - லே
2.	ட்ரஸ் சாலை	- ஆ) டெல்லி-கொல்கத்தா-சென்னை-மும்பை
3.	எல்லைப்புற சாலை	- இ) கொல்கத்தா-பெஷாவார்
4.	தங்க நாற்கர சாலை	- ஈ) மும்பை
5.	விரைவு சாலைகள்	- உ) மும்பை-பூனே சாலை
		- ஊ) வாரணாசி-கன்னியாகுமரி

விடை: 1.ஊ 2.இ 3.அ 4.ஆ 5.உ

V

1.	வடக்கு இரயில்வே	- அ) ஹொகாத்தி
2.	வடமேற்கு இரயில்வே	- ஆ) கோரக்பூர்
3.	வடக்கு மத்திய இரயில்வே	- இ) அலகாபாத்
4.	வடகிழக்கு இரயில்வே	- ஈ) ஜெய்ப்பூர்
5.	வடகிழக்கு எல்லைபுற இரயில்வே	- உ) புதுடெல்லி
		- ஊ) மும்பை

விடை: 1.உ 2.ஈ 3.இ 4.ஆ 5.அ

VI

1.	தெற்கு இரயில்வே	- அ) சென்னை
2.	தெற்கு மத்திய இரயில்வே	- ஆ) செகண்ராபாத்
3.	தென்கிழக்கு இரயில்வே	- இ) கொல்கத்தா
4.	தென்மேற்கு இரயில்வே	- ஈ) பிலாஷ்பூர்
5.	தென்கிழக்கு மத்திய இரயில்வே	- உ) ஹீபாலாய்
		- ஊ) ஹைதராபாத்

விடை: 1.அ 2.ஆ 3.இ 4.உ 5-ஈ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. வரையறு: மக்கள் தொகை.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் வகிக்கின்ற மொத்த மக்களின் எண்ணிக்கையே ஒரு நாட்டின் மக்கள் தொகை என்று அழைக்கப்படுகிறது.

2. மக்கள் தொகை கணக்கெடுப்பு என்றால் என்ன?

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதி அல்லது முழு பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள மக்களின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்து மற்றும் பகுப்பாய்வு செய்து மக்களியல் பற்றிய விவரங்களை அளித்தல் ஆகும்.

3. அதிக மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலங்களின் பெயர்களை எழுதுக.

- பஞ்சாப் - 551
- தமிழ்நாடு - 555
- ஹரியானா - 573
- தாதர் நாகர் ஹைவேலி - 700
- உத்திர பிரதேசம் - 829
- கேரளா - 860

4. மிக குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலங்களின் பெயர்களை எழுதுக.

- அருணாச்சலப் பிரதேசம் - 17
- அந்தமான் நிக்கோபார் தீவு - 46
- மிசோரம் - 52
- சிக்கிம் - 86
- மணிப்பூர் - 115
- நாகலாந்து - 119
- இமாச்சலப் பிரதேசம் - 123
- ஜம்மு காஷ்மீர் - 124
- மேகலாயா - 132

5. மிக அதிக அடர்த்தி கொண்ட மாநிலங்களின் பெயர்களை எழுதுக.

- மேற்கு வங்கம் - 1,028
- பீகார் - 1,106
- இலட்சத்தீவுகள் - 2,149
- டாமன் டையூ - 2,191
- புதுச்சேரி - 2,547
- சண்டிகர் - 9,252
- டெல்லி - 11,320

6. இந்திய மக்கள் தொகை வளர்ச்சியின் பல்வேறு நிலைகள் யாவை?

- தேக்க நிலை காலம்: 1901-1921
- நிலையான வளர்ச்சிக் காலம் (இரண்டாம் காலக்கட்டம்): 1921-1951
- நிலையான வளர்ச்சிக் காலம் (மூன்றாம் காலக்கட்டம்): 1951-1981
- அதிக வளர்ச்சியிலிருந்து வளர்ச்சி குன்றல் தென்பட ஆரம்பித்த காலம்: 1981-2011

7. மக்கள் தொகை மாற்றம் குறிப்பு வரைக.

மக்கள் தொகை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலிருந்து மற்றொரு காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதையோ அல்லது குறைவதையோ குறிப்பிடுவதாகும். பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் புலம்பெயர்தல் ஆகியவை மக்கள் தொகை வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது.

8. பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் வரையறு.

பிறப்பு விகிதம்:

பிறப்பு விகிதம் என்பது ஒரு வருடத்தில் 1000 மக்கள் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும்.

இறப்பு விகிதம்:

இறப்பு விகிதம் எனப்படுவது ஓர் ஆண்டில் 1000 மக்கள் தொகையில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.

9. மக்கள் தொகை கலவை பற்றி நீவிர் அறிவதென்ன?

- மக்கள் தொகைக் கலவை என்பது பல்வேறு பண்புகளான வயது, பாலினம், திருமண நிலை, சாதி, மதம், மொழி, கல்வி, தொழில் போன்றவற்றை உள்ளடக்கியது.
- மக்கள் தொகை கலவை பற்றி கற்பது சமூக பொருளாதார மற்றும் மக்கள் தொகையின் அமைப்பை அறிய உதவுகிறது.

10. வயதுக்கலவை பற்றி நீவிர் அறிவதென்ன?

- வயதுக்கலவை என்பது ஒரு நாட்டின் மக்கள் தொகையில் உள்ள பல்வேறு வயது பிரிவினர் எண்ணிக்கையைக் குறிக்கிறது.
- இது மக்கள் தொகை குணாதிசியங்களில் ஓர் அடிப்படை அம்சமாகும்.

11. பாலின விகிதம் வரையறு.

- பாலின விகிதம் என்பது மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்ணின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
- ஒரு குறிப்பிட்டக் காலத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையேயான சமத்துவத்தின் அளவை அளவீடு செய்யும் சமூக குறியீடாக பாலின விகிதம் விளங்குகின்றது.

12. எழுத்தறிவு விகிதம் குறிப்பு தருக.

மக்களின் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களே எழுத்தறிவு பெற்றவர் ஆவார்கள். இது மக்களின் தரத்தை அறியும் முக்கிய அளவுகோலாகும். மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்ற மக்களின் எண்ணிக்கையே எழுத்தறிவு விகிதம் எனப்படும்.

13. தொழிலாளர்கள் என்பவர் யார்? அவர்களின் பிரிவுகள் யாவை?

- மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தகவலின் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கையில் பங்கு பெறுபவர்களை தொழிலாளர்கள் என்கிறோம்.
- தொழிலாளர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை முதன்மை தொழிலாளர்கள், பகுதி நேர தொழிலாளர்கள், தொழிலாளர் அல்லாதோர்.

14. வேலையில் பங்கேற்போர் விகிதம் காண்க.

வேலையில் பங்கேற்போர் விகிதம் மொத்த தொழிலாளர்களின் சதவீதத்தை குறிக்கிறது. அதாவது ஒரு பகுதியின் மக்கள் தொகையில் மொத்த முதன்மைத் தொழிலாளர்கள் மற்றும் பகுதிநேரத் தொழிலாளர்களின் சதவீதத்தைக் குறிக்கிறது.

15. அதிக மக்கள் தொகையில் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

- மக்கள் நெருக்கடி
- வேலைவாய்ப்பின்மை
- திறனுக்கேற்ற வேலைவாய்ப்பின்மை
- குறைந்த வாழ்க்கை தரம்
- ஊட்டச்சத்தின்மை
- இயற்கை
- வேளாண் வளங்களை தவறாக நிர்வகித்தல்
- ஆரோக்கயமற்ற சுற்றுச்சூழல்

16. நகரமயமாக்கம் வரையறு.

- கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.
- நகரமயமாக்கலின் நிலை என்பது நகரம் மற்றும் பெருநகரங்களில் உள்ள மக்கள் தொகை விகிதம் மற்றும் வேளாண் சாரா தொழிலாளர்களின் விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

17. இந்தியாவை நகரமயமாக்குதலால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

- நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
- போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
- நகர்ப்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
- குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
- குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
- வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
- திடக்கழிவு மேலாண்மை சிக்கலாகிறது.
- குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

18. போக்குவரத்து சாதனங்களின் வகைகள் யாவை?

நிலம்:

சாலை வழி, இரயில்வே, குழாய் வழி போக்குவரத்து.

நீர்:

உள்நாட்டு நீர் வழி, கடல் வழி போக்குவரத்து.

வான்வெளி:

உள்நாட்டு வான்வெளி, பன்னாட்டு வான்வெளி போக்குவரத்து.

19. நீர்வழிப் போக்குவரத்து என்றால் என்ன? அதன் வகைகள் யாது?

- நீர்வழிப் போக்குவரத்து இந்தியாவில் பயணிகள் மற்றும் சரக்குகள் போக்குவரத்திற்கு முக்கியமான ஒன்றாகும். இது பழமையான மற்றும் மலிவான ஒரு போக்குவரத்து முறையாகும். கனமான மற்றும் அதிக அளவிலான சரக்குகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்ல மிகவும் ஏற்றது நீர்வழிப் போக்குவரத்தாகும்.
- வகைகள்: உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, கடல் வழிப் போக்குவரத்து.

IV. வேறுபடுத்துக.

1. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

எண்	ஏற்றுமதி	இறக்குமதி
1.	அந்நிய செலவாணியை பெறுகிறோம்.	அந்நிய செலவாணியை இழக்கிறோம்.
2.	7500 விதமான பொருட்களை 190 நாடுகளுக்கு ஏற்றுமதி.	6000 விதமான பொருட்களை 140 நாடுகளிலிருந்து இறக்குமதி.
3.	உபரிப் பொருள்களை சேவைகளை வெளிநாட்டிற்கு விற்பது.	தேவையான பொருள்களை சேவைகளை வெளிநாட்டிலிருந்து வாங்குவது.

2. மாவட்ட சாலைகள் மற்றும் கிராம சாலைகள்

எண்	மாவட்ட சாலைகள்	கிராம சாலைகள்
1.	மாவட்டச் சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.	கிராமப்புறச் சாலைகளின் இணைப்பு கிராமப்புற வளர்ச்சியின் ஒரு முக்கிய கூறாகும்.
2.	மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப் பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.	இச்சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. இது பல்வேறு கிராமங்களை அதன் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கிறது.
3.	2016 இன் படி இந்தியாவில் மாவட்டச் சாலைகளின் நீளம் 5,61,940 கி.மீ (16.81%) ஆகும்.	2016 ஆம் ஆண்டின் படி இந்தியாவில் கிராமப்புற சாலைகளின் மொத்த நீளம் 39,35,337 கி.மீ ஆகும்.

VII. விரிவாக விடையளிக்கவும்.

1. தனிமனித தகவல் தொடர்பு - விவரி.

- தனி நபர்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றம் தனி மனித தகவல் தொடர்பு என அழைக்கப்படுகிறது.
- இது அஞ்சல் சேவை, தந்தி, தொலைபேசி, கைப்பேசி, குறுந்தகவல் பிரதிகள், இணையதளம் மற்றும் மின்அஞ்சல் போன்றவைகளை உள்ளடக்கியது.
- தனி மனித தகவல் தொடர்பு அமைப்பு பயனாளிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- இந்திய அஞ்சல் சேவை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 1857 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- அஞ்சல்களை சேகரித்தல் மற்றும் விநியோகம் செய்வது இந்திய அஞ்சல் துறையின் முக்கிய பணியாகும்.
- இத்துறை விரைவு அஞ்சல் சேவையை 1975 இல் அறிமுகம் செய்தது.
- பண அஞ்சல், மின்னனு பண அஞ்சல், விரைவு தபால், விரைவு சிப்பஅஞ்சல், வணிக அஞ்சல், ஊடக அஞ்சல், செயற்கைக்கோள் வழி அஞ்சல், சில்லறைஅஞ்சல், வாழ்த்து அட்டைகள், தகவல் அஞ்சல், துரித சேவை மற்றும் விரைவான கடவுச்சீட்டு சேவைகளை அஞ்சல் துறை வழங்கி வருகிறது.
- ஆசியாவிலேயே மிகப்பெரிய தொலை தொடர்பு வலைப்பின்னல் அமைப்பை கொண்டுள்ள நாடுகளுள் இந்தியாவும் ஒன்று.
- நகர்ப்புறபகுதிகள் மட்டும் அல்லாமல் கிராமப்புறப் பகுதிகளிலும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.
- STD/ISD மற்றும் உள்நாட்டு அழைப்பு நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது.
- தொலைபேசி என்பது வாய்மொழி தகவல் பரிமாற்ற முறையாகும்.
- வணிகவளர்ச்சிக்கு இது மிகவும் உதவிக்கரமாக உள்ளது.
- கைபேசி, பிரதி அஞ்சல் மற்றும் இணையதளம் போன்றவை நாட்டில் பயன்படுத்தப்படும் மற்ற தனி மனித தகவல் தொடர்பு சாதனங்களாகும்.

2. அதிக மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகளை பட்டியலிடு.

- இந்திய நாட்டில் அதிகரித்து வரும் மக்கள் தொகையானது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் மற்றும் சுற்றுச்சூழலில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன.
- மக்கள் தொகை பிரச்சனையானது இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பால்,

- மக்கள் நெருக்கடி
- வேலைவாய்ப்பின்மை
- திறனுக்கேற்ற வேலை வாய்ப்பின்மை
- குறைந்த வாழ்க்கைதரம்
- ஊட்டச்சத்தின்மை
- இயற்கை மற்றும் வேளாண் வளங்களை தவறாக நிர்வகித்தல்
- ஆரோக்கியமற்ற சுற்றுச்சூழல்

போன்ற பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

புவியியல்

அலகு 6

தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. தமிழ்நாட்டின் அட்சப் பரவல் _____ முதல் _____ வரை உள்ளது.
   அ) 8°4′ வ முதல் 13°35′ வ வரை
   ஆ) 8°5′ தெ முதல் 13°35′ தெ வரை
   இ) 8°0′ வ முதல் 13°05′ வ வரை
   ஈ) 8°0′ தெ முதல் 13°05′ தெ வரை
   விடை: அ) 8°4′ வ முதல் 13°35′ வ வரை

2. தமிழ்நாட்டில் தீர்க்க பரவல் _____ முதல் _____ வரை உள்ளது.
   அ) 76°18′ கி முதல் 80°20′ கி வரை
   ஆ) 76°18′ மே முதல் 80°20′ மே வரை
   இ) 10°20′ கி முதல் 86°18′ கி வரை
   ஈ) 10°20′ மே முதல் 86°18′ மே வரை
   விடை: ஆ) 76°18′ கி முதல் 80°20′ கி வரை

3. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் _____ ஆகும்.
   அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா
   இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்
   விடை: ஆ) தொட்டபெட்டா

4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
   அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை
   இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்
   விடை: இ) போர்காட்

5. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?
   அ) பெரியார் ஆ) காவிரி
   இ) சிற்றார் ஈ) பவானி
   விடை: அ) பெரியார்

6. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
   அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம்
   இ) கடலூர் ஈ) தேனி
   விடை: இ) கடலூர்

சமூக அறிவியல்

7. பின்னடையும் பருவக்காற்று _____லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.
அ) அரபிக்கடல் ஆ) வங்கக்கடல்
இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமூர்க்கடல் **விடை: ஆ) வங்கக்கடல்**

8. கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் _____.
அ) தேனி ஆ) மதுரை
இ) தஞ்சாவூர் ஈ) இராமநாதபுரம் **விடை: அ) தேனி**

9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் _____.
அ) தர்மபுரி ஆ) வேலூர்
இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு **விடை: அ) தருமபுரி**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி _____ ஆகும். **விடை: கோயம்புத்தூர் பீடபூமி**
2. கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் _____ ஆகும். **விடை : சோலைக்கரடு**
3. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் _____ மற்றும் _____ ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது. **விடை: கொள்ளிடம், காவிரி**
4. _____ தமிழ்நாட்டின் மாநில விலங்கு. **விடை: வரையாடு**

III. பொருத்துக.

1. குளிர்காலம்	-	அ) முன் பருவ மழை
2. கோடைக்காலம்	-	ஆ) ஜூன் - செப்டம்பர்
3. தென்மேற்கு பருவக்காற்று	-	இ) மார்ச் - மே
4. வடகிழக்கு பருவக்காற்று	-	ஈ) டிசம்பர் - பிப்ரவரி
5. மாஞ்சாரல்	-	உ) அக்டோபர் - நவம்பர்

விடை: 1.ஈ 2.இ 3.ஆ 4.உ 5.அ

IV. கூற்று வகை வினா.

1. கூற்று : தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.
காரணம் : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

விடை: அ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.

- கிழக்கே வங்காள விரிகுடா கடலும்.
- மேற்கே கேரளா மாநிலம்.
- வடக்கே ஆந்திரப்பிரதேச மாநிலம்.
- வடமேற்கே கர்நாடக மாநிலம்.
- தெற்கே இந்தியப் பெருங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

2. 'தேரி' என்றால் என்ன?

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகளே தேரி என அழைக்கப்படுகிறது.

3. கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?

- கடற்கரைச் சமவெளிகள் தமிழகத்தை பொறுத்தவரை கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் பெரும் அளவில் வண்டலை படிய வைப்பதால் இப்பகுதி உருவாகின்றது.
- சில இடங்களில் இவை 80 கி.மீட்டருக்கும் அதிகமான அகலத்துடன் காணப்படுகின்றது.

4. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.

- பாம்பன் தீவு
- குருசடை தீவு
- முயல்தீவு
- புள்ளிவாசல் தீவு
- நல்ல தண்ணி தீவு
- உப்பு தண்ணித் தீவு
- ஸ்ரீரங்கம்
- விவேகானந்தர் நினைவுப் பாறை

5. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.

- காரையாறு
- சேர்வலாறு
- மணிமுத்தாறு
- கடனா நதி
- பச்சையாறு
- சிற்றாறு
- இராமநதி ஆறு

6. பேரிடர் அபாய நேர்வு - வரையறு.

- உயிர்களுக்கும், உடமைகளுக்கும், இயற்கையினால் ஏற்படும் பேரழிவுதான் பேரிடர் எனப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுபடி, "அபாய குறைப்பு என்பது பேரிடருக்கான காரணங்களை முறையாகக் கண்டறிந்து அதன் தாக்கத்தைக் குறைப்பதாகும்".

7. புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?

- பலத்த காற்று வீசுவதால் மீனவர்களை மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம்.
- கடற்கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். மேகமூட்ட நேரங்களில் ஒளிகளை பாய்ச்சும் விளக்குகள் மூலம் எச்சரிக்கை செய்தல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- புயல் எண் எச்சரிக்கை கூண்டில் எண்கள் வாரியாக கொடிகளை ஏற்றி எச்சரிக்கை செய்தல்.
- தொடர்ந்து வானிலைச் செதிகளை கேட்குமாறு அறிவுறுத்தல்.
- தங்கள் உடைமைகளை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுதல்.

IV. வேறுபடுத்துக.

1. தாமிரபரணி மற்றும் காவேரி

எண்	தாமிரபரணி	காவேரி
1.	இது அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள பாபநாசத்தின் போதிகாய் மலையிலிருந்து உருவாகிறது.	இது தலைக்காவேரியில் கூர்கு மாவட்டத்தில் உள்ள கர்நாடகாவில் உருவாகிறது.
2.	இது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாகப் பாய்கிறது.	இது சேலம், ஈரோடு, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வழியாக பாய்கிறது.
3.	இதன் முக்கிய துணை நதிகள் காரையாறு, சித்தாறு, சேர்வலார், மணிமுத்தாறு, கடனா நதி, பச்சையாறு மற்றும் இராமநாதி.	காவிரி நதியின் முக்கியமான துணை நதிகள் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி.

VII. கீழ்க்கண்டவற்றிக்கு காரணம் கூறுக.

1. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

- இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. மற்றும் பீடபூமிகள் சமவெளியிலிருந்து பிரிக்கின்றன.
- ஆதலால் மேற்குத் தொடர்ச்சி மலையைப் போலன்றி ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாக காட்சியளிக்கின்றது.

2. தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக்குறைந்த மழையைப் பெறுகிறது.

- தென் மேற்குப் பருவக்காற்று காலத்தில் அரபிக்கடலிலிருந்து வீசும் தென் மேற்கு பருவக்காற்றின் மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக் குறைவான மழைப்பொழிவை பெறுகின்றது.
- இப்பருவ காலத்தில் மழைப்பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது.

3. கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்.

- வடகிழக்கு பருவக்காற்று காலங்களில் வங்கக்கடலில் உருவாகும் வெப்பமண்டல சூறாவளிகள் தமிழக கடற்கரையை தாக்குகின்றன.
- அவ்வாறு தாக்கும் போது கடலூர் மாவட்டம் அதிகமாக பாதிக்கப்படுகின்றது.

- அடிக்கடி புயல் தாக்குவதால் மரங்கள், கட்டிடங்கள், மின்கம்பங்கள் சேதம் மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகின்றது.
- வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விவசாயம், கட்டிடங்கள், சாலைகள் சேதம் அடைகின்றன.
- அதனால் கடலூர் பல்வழி பேரழிவு மண்டலமாக காணப்படுகிறது.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டின் பீடபூமி நிலத்தோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்.

- தமிழ்நாட்டில் பீடபூமி மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது.
- முக்கோண வடிவத்தில் சுமார் 60,000 ச.கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பிற பீடபூமிகள்:

பாரமஹால் பீடபூமி:

- தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும்.
- இதன் உயரம் 350 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை.
- இப்பீடபூமியில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

கோயம்புத்தூர் பீடபூமி

- இப்பீடபூமி நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது.
- இதன் உயரம் 150 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை.
- மோயர் ஆறு இப்பீடபூமியை மைசூர் பீடபூமியிலுருந்து பிரிக்கிறது.

மலையிடைப் பீடபூமி:

- நீலகிரிப் பகுதிகளில் பல மலையிடப் பீடபூமிகள் உள்ளன. அவற்றுள் சிகூர் பீடபூமியும் ஒன்றாகும்.
- மேற்கு தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகும் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இப்பீடபூமியில் பல பள்ளத்தாக்குகளை உருவாக்கி உள்ளது.

2. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.

- தஞ்சைத் தரணியின் தாகம் தீர்க்கும் ஆறாக காவிரி விளங்குகிறது.
- இக்காவிரி ஆறு கர்நாடக மாநிலத்தின் பிரம்மகிரி குன்றில் உள்ள தலைக்காவிரி எனும் இடத்தில் உற்பத்தியாகிறது.
- நம் தமிழ்நாட்டில் 416 கி.மீ நீளத்திற்கு பாய்கின்றது.
- தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனேக்கல் என்னும் இடத்தின் நீர் வீழ்ச்சியாக உள்ளே நுழைந்து மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் வந்து சேர்கின்றது.
- இதன் துணையாறுகள் பவானி, அமராவதி, நொய்யல் ஆறுகளாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து கிழக்கு நோக்கி பாய்ந்து சமவெளிப் பகுதிக்குள் நுழைகின்றது.
- கரூர் அருகே இருக்கும் திருமுக்கூடல் என்னும் இடத்தில் வலது கரையில் இதன் துணை ஆறுகள் அமராவதி, நொய்யல் இணைகின்றன.
- இந்த இடம் அகலமாக இருப்பதால் இது அகன்ற காவிரி எனப்படுகிறது.
- திருச்சராப்பள்ளி அருகே இரண்டு கிளைகளாகப் பிரிந்து வடகிளை கொள்ளிடம் என்றும், தென்கிளை காவிரியாக தொடர்கின்றது.
- பின்னர் 16 கி.மீ சென்று இணைந்து ஒரு ஸ்ரீரங்கம் எனும் தீவை உருவாக்குகின்றது.
- அடுத்து இதன் குறுக்கே 'கிராண்ட் அணைக்கட்' என்றழைக்கப்படும் கல்லணை காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
- பின்னர் காவிரி பல கிளைகளாகப் பிரிந்து தஞ்சாவூர் திருவாரூர், நாகை, கடலூர் மாவட்டங்களின் பல டெல்டாக்களை உருவாக்கி நெல் விளையும் பூமியாக உருமாறி 'தென்னிந்தியாவின் தோட்டம்' என்று அழைக்கப்படுகிறது.
- இறுதியாக கடலூருக்கு தெற்கே வங்கக் கடலில் கலக்கிறது.

3. தமிழ்நாட்டின் கோடை மற்றும் குளிர் பருவங்களின் பண்புகளை விவரிக்கவும்.

கோடை காலப் பண்புகள் :

- சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு, மார்ச், ஏப்ரல், மற்றும் மே மாதங்களில் நிகழ்வதால் சூரியனின் செங்குத்து கதிரானது தென்னிந்தியாவில் விழுகின்றது.
- அவ்வாறு விழும்போது பூமத்திய ரேகையிலிருந்து வெப்ப நிலையானது படிப்படியாக அதிகரிக்கின்றது.
- ஆதலால் தமிழகம் கடகரேகைக்கு தென் பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றது.
- இந்த வெப்பநிலை 30° C லிருந்து 40° C வரை மாறுகின்றது.
- இப்பருவ காலத்தில் குறிப்பாக மே மாதம் தமிழகத்தின் தென்பகுதி முன் பருவ மழை மூலமும், வெப்பச்சலனம் மூலமும் மழையைப் பெறுகின்றது.

குளிர் காலப் பண்புகள்:

- ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகரரேகைக்கும் இடையே விழுகிறது.
- இக்காலத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியா முழுவதும் சாய்வான சூரியக்கதிர்களை பெறுகின்றன.
- எனவே இக்காலங்களில் காலநிலை சற்று குளிராகக் காணப்படுகின்றது.
- தமிழக குளிர்கால வெப்பநிலை 15° C முதல் 25° C வரை மாறுபடுகிறது.
- நீலகிரியின் சில பள்ளத்தாக்கில் வெப்பம் 0° C ஆகவும் பதிவாகிறது.
- பொதுவாக இப்பருவத்தில் வறண்ட வானிலையே நிலவுகிறது.

4. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின் பரவல் விளக்குக.

தமிழ்நாட்டில் காணப்படும் மண்வகைகளை அதன் தன்மைகளைக் கொண்டு ஐந்து பிரிவுகளாக பிரிக்கலாம். அவை. 1. வண்டல் மண் 2. கரிசல் மண் 3. செம்மண் 4. சரளை மண் மற்றும் 5. உவர் மண்.

வண்டல் மண்:

- வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றன.
- தமிழ்நாட்டின் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளிலும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் அதிகம் காணப்படுகிறது.
- சில உள் மாவட்டங்களின் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் சிறிய அளவில் இவை காணப்படுகிறது.

கரிசல் மண்:

- தீப்பாறைகள் சிதைவடைவதன்மூலம் கரிசல் மண் உருவாகிறது. இது ரீகர் மண் என்றும் அழைக்கப்படுகிறது.
- இம்மண்ணில் பருத்தி நன்கு வளர்வதால் பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது.
- கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரிசல் மண் பெருமளவில் காணப்படுகிறது.

செம்மண்:

- தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு செம்மண் பரவியுள்ளது.
- மாநிலத்தின் மத்திய மாவட்டங்களிலும், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும் அதிகம் காணப்படுகின்றது.

சரளை மண்:

- சரளை மண்ணானது அதில் கரைந்துள்ள சத்துக்கள் அடித்து செல்லப்படுவதால் உருவாகிறது. இவை ஒரு வளமற்ற மண்ணாகும். ஹ
- காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும், நீலகிரி மலையின் சில பகுதிகளிலும் இம்மண் காணப்படுகிறது.

உவர் மண்:

- தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரை பகுதிகளில் மட்டுமே இம்மண் காணப்படுகிறது.
- வேதாரண்யப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உவர் மண் காணப்படுகிறது.
- டிசம்பர் 26, 2004இல் ஏற்பட்ட சுனாமி அலைகள் அதிக அளவு மணல் படிவுகளை தமிழக கடற்கரைப் பகுதிகளில் படிய வைத்துள்ளன.
- இதனால் கடற்கரையில் சில பகுதிகள் பயிரிட உகந்ததாக இல்லை.

5. புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.

அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்

புயலுக்கு முன்னர்:

- வதந்திகளை நம்பாமல் அமைதியாகவும் பதற்றமடையாமலும் இருத்தல்.
- அலைபேசிகள் மின்னூட்டம் செய்யப்பட்டதை உறுதிசெய்து, குறுஞ்செய்திகளைப் பெறுதல்.
- வானொலி மற்றும் காணொளி பெட்டிகள் மூலம் அவ்வப்போதைய வானிலை நிலைமைகளைக் கேட்டுத் தெரிந்துக்கொள்ளல்.
- குடியிருப்பு பாதுகாப்பாக இருப்பதையும், சரி செய்வதையும் உறுதிசெய்தல்.
- கூர்மையானப் பொருட்கள் வெளிப்பகுதிகளில் இல்லாமல், கால்நடைகள் செல்ல மற்றும் கால்நடை பாதுகாப்பிற்காக அவற்றை அவிழ்த்து விடுதல் வேண்டும்.

புயலுக்குப் பின்னர்

- புயல் நிவாரண மையங்களுக்கு மாற்றப்பட்டால் மறு அறிவுரைகள் வரும் வரை அங்கேயே தங்கி இருத்தல்வேண்டும்.
- புயலுக்குப்பின் மின்சார கம்பிகளைத் தொடுவதையும், மின்சாரத்தை பயன்படுத்துவதையும் அறவே தவிர்த்தல் வேண்டும்.
- புயலுக்குப்பின் பாம்பு, பூச்சிகளிடமிருந்து எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும்.
- கட்டடங்களுக்கு அருகில் உள்ள கழிவுகளையும், விலங்குகளின் இறந்த உடல்களையும், அப்புறப்படுத்த வேண்டும்.
- இழப்பின் உண்மையான மதிப்பினையும், அளவினையும் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டும்.

IX. வரைபடப் பணி.

1. தமிழ்நாட்டில் உள்ள ஆறுகள், மண் பரவல் மற்றும் காடுகளின் வகைகளை வரைபடத்தில் குறிக்கவும்.

பார்க்க: வரைபடப் பயிற்சி புத்தகம் - பக்கம் எண்: 122, 124, 126.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இந்தியாவில் மொழி அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாநிலம் _____.

அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) தமிழ்நாடு

இ) கேரளம் ஈ) கர்நாடகம்

விடை: அ) ஆந்திரப் பிரதேசம்

2. தமிழ்நாட்டின் கிழக்கு அமைவிடம் _____.
அ) வேதாரண்யம் ஆ) பிச்சாவரம்
இ) நாகப்பட்டினம் ஈ) கோடியக்கரை **விடை: ஈ) கோடியக்கரை**

3. இந்தியாவின் _____வது பெரிய மாநிலம் தமிழ்நாடு.
அ) 10 ஆ) 11
இ) 12 ஈ) 13 **விடை: ஆ) 11**

4. தமிழ்நாடு _____ நீளமுடன் இந்தியாவில் இரண்டாவது நீளமான பெரிய கடற்கரையைக் கொண்டுள்ளது.
அ) 1076 கி.மீ. ஆ) 1077 கி.மீ.
இ) 1075 கி.மீ. ஈ) 1078 கி.மீ. **விடை: அ) 1076 கி.மீ.**

5. மேற்குத் தொடர்ச்சி மலையில் மிக முக்கிய கணவாய் _____.
அ) சொஜினா கணவாய் ஆ) அச்சன்கோவில் கணவாய்
இ) நாதுளா கணவாய் ஈ) ஒகனேக்கல் கணவாய்
விடை: ஆ) அச்சன்கோவில் கணவாய்

6. மாநில விலங்கான வரையாடு காணப்படும் மலை _____.
அ) ஜவ்வாது மலை ஆ) நீலகிரி மலை
இ) ஏலக்காய் குன்றுகள் ஈ) மாதேஸ்வரன் மலை **விடை: ஆ) நீலகிரி மலை**

7. மேற்குத் தொடர்ச்சி மலை தெற்கே கன்னியாகுமரி முதல் _____ வரை நீண்டுள்ளது.
அ) வருசநாடு ஆ) மருதமலை
இ) ஜவ்வாது மலை ஈ) கொல்லி மலை **விடை: ஆ) மருதமலை**

8. பழனிமலையின் இரண்டாது பெரிய சிகரம் _____.
அ) பிரம்படி சோலை ஆ) வேம்படி சோலை
இ) கன்னிவாடி சோலை ஈ) சிறுமலை சோலை **விடை: ஆ) வேம்படி சோலை**

9. பழனிமலையின் தென் மத்தியப் பகுதியில் _____ அமைந்துள்ளது.
அ) ஆண்டிப்பட்டி மலை ஆ) வருசநாடு மலை
இ) முல்லைப் பெரியாறு ஈ) கொடைக்கானல் **விடை: ஈ) கொடைக்கானல்**

10. ஏலக்காய் மலையில் பயிரிடப்படும் முக்கிய பயிர்கள் _____.
அ) மிளகு, காபி ஆ) இரப்பர், பலா
இ) கிராம்பு, பட்டை ஈ) மா, பலா **விடை: அ) மிளகு, காபி**

11. _____ மாவட்டத்தில் சாம்பல் நிற அணில் சரணாலயம் அமைந்துள்ளது.
அ) கன்னியாகுமரி ஆ) விருதுநகர்
இ) மதுரை ஈ) தேனி **விடை: ஆ) விருதுநகர்**

12. குரங்கனி மலை வாழிடம் உள்ள மலைக் குன்றுகள் _____, _____.
அ) வருசநாடு, ஆண்டிப்பட்டி ஆ) வால்பாறை, பொள்ளாச்சி
இ) குமுளி, தேக்கடி ஈ) அகத்திய, பொதிகை
விடை: அ) வருசநாடு, ஆண்டிப்பட்டி

சமூக அறிவியல்

13. _____ மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
அ) குற்றாலம் ஆ) செங்கோட்டை
இ) மணிமுத்தாறு ஈ) பொதிகை **விடை: ஈ) பொதிகை**

14. களக்காடு - முண்டந்துறையில் _____ அமைந்துள்ளது.
அ) வரையாடு காப்பகம் ஆ) புலிகள் காப்பகம்
இ) யானைகள் காப்பகம் ஈ) பறவைகள் சரணாலயம் **விடை: ஆ) புலிகள் காப்பகம்**

15. இஸ்ரோவின் செயற்கைக்கோள் ஏவுதளம் _____ அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது.
அ) அகத்திய மலை ஆ) பொதிகை மலை
இ) குற்றால மலை ஈ) மகேந்திரகிரி குன்றுகள்
விடை: ஈ) மகேந்திரகிரி குன்றுகள்

16. _____ மலை கிழக்குத் தொடர்ச்சி மலையின் முக்கிய குன்றுகளாகும்.
அ) வருசநாடு மலை ஆ) ஆனைமலை
இ) ஜவ்வாது மலை ஈ) நீலகிரி மலை **விடை: இ) ஜவ்வாது மலை**

17. ஜவ்வாது மலையின் மிக உயரமான சிகரம் _____.
அ) ஆனைமுடி ஆ) மேல்பட்டு
இ) கீழ்பட்டு ஈ) செஞ்சி **விடை: ஆ) மேல்பட்டு**

18. 1967ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வானியியல் தொலைநோக்கி மையம் _____ல் அமைந்துள்ளது.
அ) காவனூர் ஆ) மூவனூர்
இ) மேலூர் ஈ) பேலூர் **விடை: அ) காவனூர்**

19. _____யில் சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் தொழில் தொடர்ந்து நடைபெறுகின்றது.
அ) அகத்திய மலை ஆ) தேனி மலை
இ) பழனி மலை ஈ) ஜவ்வாது மலை **விடை: ஈ) ஜவ்வாது மலை**

20. கல்வராயன் மலையின் வடபகுதி _____ என்று அழைக்கப்படுகிறது.
அ) பெரிய கல்வராயன் ஆ) சின்ன கல்வராயன்
இ) கரலர் ஈ) சேலம் **விடை: ஆ) சின்ன கல்வராயன்**

21. சேர்வராயன் மலையில் உள்ள உயரமான சிகரம் _____.
அ) ஞானேக்கல் ஆ) சோலைக்கரடு
இ) ஏற்காடு ஈ) ஆற்காடு **விடை: ஆ) சோலைக்கரடு**

22. சேர்வராயன் மலையில் உள்ள மலை வாழிடம் _____.
அ) மேட்டூர் அணை ஆ) மாதேஸ்வரன் ஏரி
இ) தாமரைக்குளம் ஈ) ஏற்காடு **விடை: ஈ) ஏற்காடு**

23. கொல்லி மலையில் உள்ள முக்கியமான புனிதத் தலம் _____.
அ) அரப்பளீஸ்வரர் கோயில் ஆ) அகஸ்தீஸ்வரர் கோயில்
இ) ஆதிகேசவன் கோயில் ஈ) குற்றாளீசுவரர் கோயில்
விடை: அ) அரப்பளீஸ்வரர் கோயில்

24. பசுமை மாறாக் காடுகள், சோலைக் காடுகள் அதிகம் உள்ள மலை _____.
அ) பச்சை மலை ஆ) பவள மலை
இ) கொல்லி மலை ஈ) பர்கூர் மலை **விடை: இ) கொல்லி மலை**

25. பச்சை மலையில் _____ ஒரு குறிப்பிடத்தக்க வேளாண் பருவ விளை பொருளாக உள்ளது.
அ) மாம்பழம் ஆ) பலாப்பழம்
இ) கொய்யாப்பழம் ஈ) பிளம்ஸ் பழம் **விடை: ஆ) பலாப்பழம்**

26. தமிழ்நாட்டில் பீடபூமிகள் ஏறக்குறைய _____ வடிவில் 60,000 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
அ) முக்கோண ஆ) சதுர
இ) செவ்வக ஈ) நீண்ட **விடை: அ) முக்கோண**

27. தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் _____ மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும்.
அ) தக்காணப் பீடபூமி ஆ) தெலுங்கானாப் பீடபூமி
இ) பாரமஹால் பீடபூமி ஈ) சிகூர் பீடபூமி **விடை: இ) பாரமஹால் பீடபூமி**

28. _____ நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது.
அ) பாரமஹால் பீடபூமி ஆ) மைசூர் பீடபூமி
இ) கோயம்புத்தூர் பீடபூமி ஈ) ஈரோடு பீடபூமி **விடை: இ) கோயம்புத்தூர் பீடபூமி**

29. _____ கோயம்புத்தூர் பீடபூமியை மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கிறது.
அ) போயர் ஆறு ஆ) மோயர் ஆறு
இ) காவிரி ஆறு ஈ) பவானி ஆறு **விடை: ஆ) மோயர் ஆறு**

30. நீலகிரிப் பீடபூமியில் உள்ள பல மலையிடப் பீடபூமிகளில் குறிப்பிடத்தக்க பீடபூமி _____.
அ) சிகூர் பீடபூமி ஆ) மைசூர் பீடபூமி
இ) பர்கூர் பீடபூமி ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: அ) சிகூர் பீடபூமி

31. கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் _____ என்று அழைக்கப் படுகிறது.
அ) தேரி ஆ) தெரி
இ) சேரி ஈ) உரி **விடை: ஆ) தெரி**

32. தமிழ்நாட்டில் _____யில் பனைமரங்களும், சவுக்குத் தோப்புகளும் பரவலாக உள்ளன.
அ) மெரினா கடற்கரை ஆ) நாகை கடற்கரை
இ) தங்க கடற்கரை ஈ) இராமேஸ்வரம் கடற்கரை
விடை: இ) தங்க கடற்கரை

33. கோவளம் மற்றும் வெள்ளி கடற்கரைகள் உள்ள பகுதிகள் _____.
அ) கன்னியாகுமரி ஆ) உவரி
இ) தூத்துக்குடி ஈ) சாயல்குடி விடை: அ) கன்னியாகுமரி

34. காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் _____ தலைக்காவிரி உற்பத்தியாகிறது.
அ) பிரம்மகிரி குன்றுகளில் ஆ) தவளகிரி குன்றுகளில்
இ) மங்களூர் குன்றுகளில் ஈ) மாண்டியா குன்றுகளில்
விடை: அ) பிரம்மகிரி குன்றுகளில்

35. காவிரியுடன் _____ என்ற இடத்தில் அமராவதியும் நொய்யலும் இணைகின்றது.
அ) கரூர் ஆ) திருமுக்கூடல்
இ) புகளூர் ஈ) முசிறி விடை: ஆ) திருமுக்கூடல்

36. காவிரி ஆறு _____ மாவட்டத்தில் வடகிளை கொலேருன் என்றும் தென்கிளை காவிரி என்றும் தொடர்கிறது.
அ) கரூர் ஆ) திருச்சிராப்பள்ளி
இ) தஞ்சாவூர் ஈ) ஈரோடு விடை: ஆ) திருச்சிராப்பள்ளி

37. தென்பெண்ணையாறு கெடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக பிரிந்து _____ அணைக்கட்டிற்கு அருகில் பிரிகிறது.
அ) திருநாவனூர் ஆ) மாமல்லபுரம்
இ) திருக்கோவிலூர் ஈ) செய்யாறு விடை: இ) திருக்கோவிலூர்

38. _____ ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி - சாத்தனூர் நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுளது.
அ) பெண்ணையாறு ஆ) பவானியாறு
இ) காவிரியாறு ஈ) வைகையாறு விடை: அ) பெண்ணையாறு

39. வைகையாறு தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள _____ கிழக்கு சரிவில் உற்பத்தியாகிறது.
அ) ஆண்டிப்பட்டி குன்றுகளின்
ஆ) வருஷ நாட்டு குன்றுகளின்
இ) பழனிமலை குன்றுகளின்
ஈ) ஆனைமலை குன்றுகளின் விடை: ஆ) வருஷ நாட்டு குன்றுகளின்

40. வைகையாறு _____ மாவட்டத்திலுள்ள பாக் நீர்ச்சந்திப்பில் கடலில் கலக்கிறது.
அ) இராமநாதபுரம் ஆ) புதுக்கோட்டை
இ) தூத்துக்குடி ஈ) தஞ்சாவூர் **விடை: அ) இராமநாதபுரம்**

41. _____ ஆற்றில் கரைந்திருக்கும் செம்மண் துகள்கள் காரணமாக இந்நதியின் நீரானது செந்நிற தோற்றத்துடன் காணப்படுகிறது.
அ) வைகையாறு ஆ) காவிரி
இ) தாமிரபரணி ஈ) பாலாறு **விடை: இ) தாமிரபரணி**

42. தாமிரபரணி பாபநாசத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் _____ முகடுகளில் தோன்றுகிறது.
அ) மகேந்திரகிரி ஆ) அகத்திய மலை
இ) பொதிகை மலை ஈ) குற்றால மலை **விடை: இ) பொதிகை மலை**

43. மலைவாழிடங்களில் குளிர்கால வெப்பநிலையானது சில நேரங்களில் _____ வரை குறைவாக உள்ளது.
அ) 50 C ஆ) 60 C
இ) 40 C ஈ) 80 C **விடை: அ) 50 C**

44. தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் இடம் _____.
அ) கடலூர் மாவட்டம் ஆ) கன்னியாகுமரி
இ) வால்பாறை சின்னக்கல்லார் ஈ) நீலகிரி **விடை: இ) வால்பாறை சின்னக்கல்லார்**

45. இந்தியாவின் மூன்றாவது அதிக மழை பெறும் பகுதி _____.
அ) மேற்குக் கடற்கரை ஆ) நீலகிரி
இ) நாகப்பட்டினம் ஈ) வால்பாறை - சின்னக்கல்லார்
விடை: ஈ) வால்பாறை - சின்னக்கல்லார்

46. _____ என்பது வானிலை சிதைவு மற்றும் அரிப்பினால் பாறைகள் சிதைந்து உருவாகும் துகள்களாகும்.
அ) களிசல் மண் ஆ) மண்
இ) செம்மண் ஈ) சரளை மண் **விடை: ஆ) மண்**

47. தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் _____ உருவாகிறது.
அ) களிசல் மண் ஆ) வண்டல் மண்
இ) கடற்கரை மண் ஈ) சரளை மண் **விடை: அ) களிசல் மண்**

48. _____ சற்றே பெரிய மண் துகள்களையும் ஈரப்பதத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையையும் பெற்றுள்ளது.
அ) களிசல் மண் ஆ) செம்மண்
இ) கடற்கரை மண் ஈ) உவர் மண் **விடை: ஆ) செம்மண்**

49. தேயிலை மற்றும் காபி பயிரிடுவதற்கு _____ ஏற்றதாக உள்ளது.
அ) செம்மண் ஆ) உவர்மண்
இ) கடற்கரை மண் ஈ) சரளை மண் **விடை: ஈ) சரளை மண்**

50. _____யின் படி புவி பரப்பில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதி காடுகளால் சூழப்பட்டிருக்க வேண்டும்.
அ) 1989 காடுகள் வளர்ச்சி ஆ) 1988 தேசிய வனக்கொள்கை
இ) 1990 காடுகள் பரப்பளவு ஈ) 1991 வனக்கொள்கை
விடை: ஆ) 1988 தேசிய வனக்கொள்கை

51. _____ அதிக மழைபெறும் பகுதிகளில் காணப்படுகின்றன.
அ) வெப்பமண்டலக் காடுகள்
ஆ) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்
இ) மிதவெப்பமண்டலக் காடுகள்
ஈ) இலையுதிர்க் காடுகள் **விடை: ஆ) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்**

52. மிதவெப்பமண்டலக் காடுகள் _____ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) சோலாஸ் ஆ) பசுமை
இ) சுந்தரவனக் காடுகள் ஈ) வறட்சி தாங்கும் காடுகள்
விடை: அ) சோலாஸ்

53. _____ மூங்கில் மரங்கள் அதிகம் காணப்படுகின்றன.
அ) கிர் காடுகள்
ஆ) முட்புதர்க் காடுகள்
இ) வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்
ஈ) சுந்தரவனக் காடுகள் **விடை: இ) வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்**

54. கடல் பாதுகாப்பு மேலாண்மை _____களையும், கடலோர புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கின்றது.
அ) பவளப்பாறை ஆ) மீன்
இ) கடல் வாழ் உயிரினங்கள் ஈ) இறால் **விடை: அ) பவளப்பாறை**

55. _____ சதுப்பு நிலக்காடு கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகில் அமைந்துள்ளது.
அ) கோடியக்கரை ஆ) கீழக்கரை
இ) பிச்சாவரம் ஈ) பழவேற்காடு **விடை: இ) பிச்சாவரம்**

56. பிச்சாவரம் சதுப்புநிலப் பகுதிகளில் _____ மற்றும் துடுப்பு மீன்கள் நிறைந்ததாக உள்ளது.
அ) இறால்கள் ஆ) நண்டுகள்
இ) திருக்கை ஈ) கிளிஞ்சல்கள் **விடை: ஈ) கிளிஞ்சல்கள்**

57. மலைகள் அல்லது குன்றுகளில் ஒரு பகுதியோ அல்லது பாறைகளோ சரிந்து வீழ்தல் _____ எனப்படுகிறது.
அ) பள்ளத்தாக்கு ஆ) பிளவுப் பள்ளம்
இ) நிலச்சரிவு ஈ) விரிசல் **விடை: இ) நிலச்சரிவு**

58. தமிழ்நாட்டில் _____ மலைப்பகுதி நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளாகும்.
அ) வால்பாறை ஆ) அகத்திய
இ) வருசநாடு ஈ) நீலகிரி **விடை: ஈ) நீலகிரி**

59. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவக்காற்று காலங்களில் _____ என்பது பொதுவாக காணப்படும் ஒரு நிகழ்வாகும்.
அ) புயல் ஆ) சூறாவளி
இ) வெள்ளப்பெருக்கு ஈ) நிலச்சரிவு **விடை: இ) வெள்ளப்பெருக்கு**

60. _____ ஆம் ஆண்டின் வெள்ளப்பெருக்கு மிக அதிக சேதத்தை ஏற்படுத்திய இயற்கை பேரிடராகும்.
அ) 2016 ஆ) 2017
இ) 2015 ஈ) 2013 **விடை: இ) 2015**

61. _____ ஒரு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும்.
அ) தமிழ்நாடு ஆ) கேரளம்
இ) கர்நாடகம் ஈ) ஆந்திரம் **விடை: அ) தமிழ்நாடு**

62. 2004 சுனாமி தமிழகக் கடற்கரையைத் தாக்கியதற்கு இந்தோனேசிய _____ தீவில் ஏற்பட்ட புவி அதிர்வே காரணமாகும்.
அ) பாலி ஆ) பிஜி
இ) சுமத்ரா ஈ) சுகர்னோ **விடை: இ) சுமத்ரா**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின்படி _____ அடிப்படையில் மாநிலங்கள் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. **விடை: மொழியியல்**
2. தமிழ்நாட்டின் வடகோடி எல்லை _____. **விடை: பழவேற்காடு**
3. தமிழகத்தின் மொத்த பரப்பளவு _____ சதுர கி.மீட்டர்களாகும். **விடை: 1,30,058**
4. தமிழகத்தில் மேற்கு எல்லையாக அமைந்தது _____. **விடை: ஆனைமலை**
5. தீபகற்ப பீடபூமி 135 மில்லியின் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலம் _____. **விடை: கிரேட்டேசியஸ்**
6. _____ மலையில் 2700 க்கும் அதிகமான பூக்கும் தாவர வகைகள் உள்ளன. **விடை: நீலகிரி**
7. ஆனைமலையில் உள்ள நீர்மின்நிலையம் _____. **விடை: காடம்பாறை**
8. ஆழியாறு மற்றும் திருமூர்த்தி அணைகள் _____ அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளன. **விடை: ஆனை மலை**

9. _____ மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதியாகும்.
விடை : பழனி மலை

10. பழனிமலையின் மிக உயரமான சிகரம் _____. விடை: வந்தராவ் - 2533 மீட்டர்

11. வருசநாடு, ஆண்டிப்பட்டி மலைகளின் உள்ள மிக முக்கிய மலை வாழிடம் _____.
விடை: குரங்கனி

12. வருசநாடு, ஆண்டிப்பட்டி மலையில் உற்பத்தியாகும் ஆறு _____.
விடை: வைகை

13. ஜவ்வாது மலை நீலநிற _____ பாறைகளால் உருவானது.
விடை: சாம்பல் கிரானைட்

14. மருத்துவ மூலிகைகள் மற்றும் சந்தன மரங்கள் காணப்படும் மலை _____.
விடை: ஜவ்வாது மலை

15. சேர்வராயன் மலை உள்ளூர் தெய்வமான _____ என்ற பெயரில் இருந்து வந்தது.
விடை: சேர்வராயன்

16. கொல்லிமலையில் _____ காணப்படுகின்றன. விடை: சவுக்குப் பண்ணைகள்

17. தென்னிந்தியாவில் கிழக்குக் கடற்கரைக்கு இணையாகச் செல்லும் மலை _____.
விடை: கொல்லி மலை

18. கொல்லிமலையில் உள்ள தாவரங்கள் _____ இருப்பதால் இது பச்சை மலை என அழைக்கப்பட்டது. விடை: பசுமையாக

19. தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள பீடபூமி _____.
விடை: பாரமஹால் பீடபூமி

20. வைகை மற்றும் தாமிரபரணி _____ அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது.
விடை: மேற்குத் தொடர்ச்சி மலையின்

21. தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது _____ என அழைக்கப்படுகின்றது.
விடை: சோழ மண்டலச் சமவெளி

22. வங்காள விரிகுடாவை ஒட்டிய _____ அழகான கடற்கரைகளைக் கொண்டுள்ளது.
விடை: சோழ மண்டலக் கடற்கரை

23. தமிழ்நாட்டின் உயிர் நாடியாக விளங்கும் ஆறு _____.
விடை: காவிரி

24. தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆறுகள் _____ உற்பத்தியாகின்றன.
விடை: மேற்குத் தொடர்ச்சி மலையில்

25. மேற்குத் தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றில் _____ என்னுமிடத்தில் காவிரி உற்பத்தியாகிறது. விடை: தலைக்காவிரி

26. காவிரி ஆறு தர்மபுரி மாவட்டத்தில் _____ என்னுமிடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. விடை: ஒகேனக்கல்

27. _____ என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. விடை: ஸ்டான்லி நீர்த்தேக்கம்

28. காவிரி ஆறு பிரிந்து பின் இணைந்து _____ உருவாக்குகின்றன.
விடை: ஸ்ரீரங்கம் தீவை

29. காவிரி ஆறு கல்லணையைக் கடந்த பின் டெல்டா முழுவதும் _____ அமைப்பை உருவாக்குகிறது. விடை: வலைப்பின்னல்

30. காவிரி வலைப்பின்னல் _____ என்று அழைக்கப்படுகிறது.
விடை: தென்னிந்தியாவின் தோட்டம்

31. பாலாறு காஞ்சிபுரம் மாவட்டம் வழியாக பாய்ந்து _____ அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது. விடை: கூவத்தூர்

32. _____ ஆறு கடலுக்கு அருகே கடலில் கலக்கிறது. விடை: கெடிலம்

33. _____ புதுச்சேரிக்கு அருகில் கடலில் கலக்கிறது. விடை: பெண்ணையாறு

34. சாத்தனூர் நீர்த்தேக்கம் அமைந்துள்ள ஆறு _____. விடை: பெண்ணையாறு

35. _____ கோடை வாழிடங்கள் கோடைப் பருவத்தில் ஆயிரக்கணக்கான மக்களை கவர்கின்றது. விடை: ஆனைமலை

36. தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் வட இந்தியப் பகுதிகளில் _____ உருவாகின்றது. விடை: குறைந்த அழுத்தம்

37. வட அரைக்கோளத்தில் வலதுபுறமாகவும், தென் அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும் திசைகளை மாற்றியமைக்கும் விசை _____. விடை: கொரியாலிஸ்

38. இரும்பு ஆக்ஸைடு அதிகம் காணப்படும் மண் _____. விடை: செம்மண்

39. _____ அனைத்து வகை பயிர்களையும் பயிரிடலாம். விடை: செம்மண்ணில்

40. CNL ஏரி பறவைகள் சரணாயலம் உள்ள மாவட்டம் _____.
விடை: விழுப்புரம்

41. தமிழ்நாடு எதிர்கொளும் முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று _____.
விடை: பாலைவனமாதல்

42. தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் பரப்பளவு _____ சதுர கி. மீட்டர்களாகும்.
விடை: 26.281

43. _____ உப அயனமண்டல காலநிலை நிலவும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் காணப்படுகிறது. விடை: வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்

44. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காடுகள் _____.
விடை: வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்

45. ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் காடுகள் _____.
விடை: சதுப்பு நிலக்காடுகள்

46. _____யில் சதுப்பு நிலத்தாவரங்களின் பங்கு மகத்தானது.
விடை: கடல் பாதுகாப்பு மேலாண்மை

47. வங்கக்கடலில் மணல் திட்டுகளால் பிரிக்கப்படும் காடுகள் _____.
விடை: பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகள்

சமூக அறிவியல்

48. _____ வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளை வன விலங்குகள் என்கிறோம்.
விடை: காடுகளில்

49. _____ பல்வேறு வன விலங்குகளும் தாவரங்களும் வாழ்வதற்கேற்ற சிறந்த சூழலைக் கொண்டுள்ளன.
விடை: மலைச்சரிவுகள்

50. வடகிழக்கு பருவக்காற்றுக் காலங்களில் வங்கக் கடலில் உருவாகும் _____ தமிழக கடற்கரையைத் தாக்குகின்றன.
விடை: வெப்பமண்டல சூறாவளிகள்

51. புயல் எச்சரிக்கையின் போது மீனவர்கள் மின்சாதனங்களுடன் ஒரு _____ வைத்திருத்தல் வேண்டும்.
விடை: வானொலி

52. _____ சுனாமி அலையின் தாக்கம் மற்றும் உள்ளூர் தொடர்பு நடவடிக்கை தெரிந்திருத்தல் அவசியம்.
விடை: கடல் பகுதியில் இருந்தால்

53. சில அதிர்வு, எரிமலை, நிலச்சரிவு, சூறாவளி, வறட்சி மற்றும் காட்டுத்தீ ஆகியன _____ ஆகும்.
விடை: இயற்கைப் பேரிடர்கள்

54. தேனி மற்றும் மதுரையில் உள்ள வனவிலங்கு சரணாலயம் _____.
விடை: மேகமலை

55. கோயம்புத்தூரில் உள்ள வனவிலங்கு சரணாலயம் _____.
விடை: இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயம்

56. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் உள்ள மாவட்டம் _____.
விடை: திருநெல்வேலி

57. காரைவெட்டி பறவைகள் சரணாலயம் உள்ள மாவட்டம் _____.
விடை: அரியலூர்

58. கரிக்கிளி பறவைகள் சரணாயலம் உள்ள மாவட்டம் _____.
விடை: காஞ்சிபுரம்

III. பொருத்துக.

I

1.	கிழக்கு கோடி	-	அ) ஆனைமலை
2.	மேற்கு கோடி	-	ஆ) பழவேற்காடு ஏரி
3.	வட கோடி	-	இ) கோடியக்கரை
4.	தென் கோடி	-	ஈ) குமரிமுனை

விடை: 1.இ 2.அ 3.ஆ 4.ஈ

II

1.	தெற்கு கைலாயம்	-	அ) சுவாமி தோப்பில் முடிவு
2.	மேற்குத் தொடர்ச்சி மலை	-	ஆ) பச்சை மலை
3.	சேர்வராயன் மலை	-	இ) தெரி
4.	பலாப்பழம்	-	ஈ) பொதிகை மலை
5.	மணல் குன்றுகள்	-	உ) ஏழைகளின் ஊட்டி

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.ஆ 5.இ

III
1. மோயர் ஆறு - அ) தென்னிந்தியாவின் தோட்டம்
2. தங்க கடற்கரை - ஆ) திருமூர்த்தி
3. காவிரி டெல்டா - இ) சவுக்குத் தோப்புகள்
4. பொதிகை மலை - ஈ) மைசூர் பீடபூமி
5. திருப்பூர் - உ) அகத்திய மலை

விடை: 1.ஈ 2.இ 3.அ 4.உ 5.ஆ

IV
1. ஆகாய தாமரை - அ) திசைகளை மாற்றியமைத்தல்
2. தேனி - ஆ) கோசல்
3. கொரியாலிஸ் - இ) நாமக்கல்
4. கரிசல் மண் - ஈ) அரை வறண்ட காலநிலை
5. மிதவெப்ப மண்டல மலைக்காடுகள் - உ) கும்பக்கரை

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஈ 5.ஆ

V
1. அவிசினியா - அ) தூத்துக்குடி
2. கடல் பாதுகாப்பு மேலாண்மை - ஆ) சுனாமி உருவாக்கம்
3. வளநாடு கருப்பு மான்கள் சரணாலயம் - இ) பிச்சாவரம்
4. சுமத்ரா தீவு - ஈ) சிவகங்கை
5. வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் - உ) சதுப்பு நிலக்காடுகள்

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஆ 5.ஈ

IV. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. கூற்று : தமிழ்நாடு ஒரு நீர்ப்பற்றாக்குறை உள்ள மாநிலமாகும்.
காரணம் : நீர்ப்பற்றாக்குறையைக் கையாளுவதற்கு, மழைநீர் சேகரிப்பு நீர்வள பாதுகாப்பு முறைகள் தீவிர முறையில் பின்பற்ற வேண்டும்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டுமே சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

விடை: அ) கூற்று காரணம் இரண்டும் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.

2. **பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி.**

அ) சுனாமிக்கு தொடர்ந்து வானொலி செய்தி கேட்க வேண்டும்.
ஆ) தீ விபத்திற்குப் பின் வீடு திரும்பும் முன் தீயணைப்பு அதிகாரிகள் உதவியோடு சரி பாரத்து வர வேண்டும்.
இ) நேர்த்தியான நில அமைப்பு மற்றும் காலநிலை நம் மாநிலத்தை இந்தியாவில் தனித்துவம் கொண்டதாக உருவாக்கியுள்ளது.
ஈ) வெள்ளப் பெருக்கின் போது நாம் உயரமான இடங்களுக்கு பாதுகாப்பாக செல்ல வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விடை: இ) நேர்த்தியான நில அமைப்பு மற்றும் காலநிலை நம் மாநிலத்தை இந்தியாவில் தனித்துவம் கொண்டதாக உருவாக்கியுள்ளது.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளாவுடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் மாவட்டங்களைப் பட்டியலிடுக.

- ஆந்திரப்பிரதேசம் : திருவள்ளூர் - வேலூர் - கிருஷ்ணகிரி
- கர்நாடகம் : கிருஷ்ணகிரி - தர்மபுரி - ஈரோடு - நீலகிரி
- கேரளம் : நீலகிரி - கோயம்புத்தூர் - திருப்பூர் - திண்டுக்கல் - தேனி - விருதுநகர் - திருநெல்வேலி - கன்னியாகுமரி

2. பொதிகை மலை பற்றி குறிப்பு வரைக.

- இம்மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் தென் சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
- இம்மலையானது சிவஜோதி, பார்வதி, மற்றும் தெற்கு கைலாயம் என அழைக்கப்படுகிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலையின் உயிரினப்பன்மை செறிந்த பகுதியாக திகழ்கின்றது.

3. மகேந்திர கிரி மலைக் குன்றுகள் - குறிப்பு வரைக.

- மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் கன்னியாகுமரி - திருநெல்வேலி மாவட்ட எல்லைகளில் அமைந்துள்ளது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய செயற்கைக்கோள் ஏவுதளம் இம்மலையின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது.

4. மலைகளின் உயரம் கடல் மட்டத்திலிருந்து அளக்கப்படுவது ஏன்? ஏன் நிலப்பகுதியில் இருந்தது அளவிடப்படவில்லை?

- பூமியானது கோள வடிவத்தில் உள்ளது. இதனால் உயரத்தை அளவிட முடியாது.
- பூமி சுற்றிக் கொண்டே வருகிறது. இதனால் இதன் அழுத்தம் மாறிக் கொண்டே வருகிறது.
- ஆதலால், உயரத்தை அளவிடும்போது இயற்பியல் ஆய்வாளர்கள் கடல் மட்டமே உயரத்தை அளவிடச் சிறந்தது என முடிவு செய்தனர். அதனால் மலைகளின் உயரம், கடல் மட்டத்திலிருந்து அளக்கப்படுகிறது.

5. தமிழகத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மலை வாழிடங்கள் பெயர்களை கூறுக.

மேற்கு தொடர்ச்சி மலை :

- ஊட்டி
- குன்னூர்
- கொடைக்கானல்
- வால்பாறை
- தேக்கடி
- குரங்கனி
- மேகமலை
- வருசநாடு
- பழனிமலை

கிழக்கு தொடர்ச்சி மலை :

- ஏற்காடு
- ஒகேனக்கல்
- சேர்வராயன் மலை

6. நீலகிரி மலை ஏன் நீலமலை என அழைக்கப்படுகிறது?

- நீலகிரி மலையில் பூத்துக் குலுங்கும் குறிஞ்சிச் செடி அல்லது நீலக் குறிஞ்சி மலர்களினால் இம்மலைப் பிரதேசம் நீல நிறத்தில் தோன்றுவதால் இம்மலைத் தொடருக்கு நீல மலை எனப் பெயர் வந்தது.
- நிலக்குறிஞ்சி என்பது இந்தியாவில் மேற்கு மலைத் தொடரில் பரவலாக வளரும் ஒரு பூச்செடியாகும்.

7. தென்னிந்தியாவின் தோட்டம் என அழைக்கப்படுவது எது?

- காவிரியாறு கல்லணையைக் கடந்தவுடன் பல கிளைகளாப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கி உள்ளது.
- இந்த வலைப்பின்னல் அமைப்பு பல கிளையாறுகளால் உண்டானது. இவ்வலைப்பின்னல் அமைப்பு தென்னிந்தியாவின் தோட்டம் 'காவிரி டெல்டா பகுதி' என அழைக்கப்படுகிறது.

8. அக்னி நட்சத்திரம் என்றால் என்ன?

- சித்திரை மாதம் 21 ஆம் தேதி முதல் வைகாசி மாதம் 14 தேதி வரை வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். இதனை அக்னி நட்சத்திரம் என்பர்.
- அஸ்வினி முதல் 27 நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரமும் அக்னி நட்சத்திரம் என்று பெயர் பெற்றிருக்கவில்லை என்றாலும் சித்தரை மாதம் பரணி 3ம் காலில் சூரியன் பிரவேசிக்கும் காலத்தை அக்னி நட்சத்திரம் என்று தமிழ் பஞ்சாங்கம் கூறுகிறது.

9. கொரியாலிஸ் விசை என்பது என்ன?

கொரியாலிஸ் விசை என்பது பூமியின் சுழற்சியின் காரணமாக நகரும் அல்லது இயங்கும் பொருட்களை (உந்தி வீசப்பட்ட பொருட்கள் மற்றும் காற்றோட்டம்) வட அரைக்கோளத்தில் வலதுபுறமாகவும், தென் அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும் திசைகளை மாற்றியமைக்கும் விசை ஆகும்.

10. தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சனைகள் யாது?

- தமிழகம் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சனை பாலைவனமாதலாகும்.
- இந்திய விண்வெளி நிலைய ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த நிலவரைபடத்தின் படி மொத்த நிலப்பரப்பில் 12 சதவிகிதம் பாலைவனம் மற்றும் நிலச் சீரழிவு என்று இரு நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

11. கடல் பாதுகாப்பு மேலாண்மை என்றால் என்ன?

- சதுப்பு நிலத் தாவரங்களின் பங்கானது கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பிலிருந்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கின்றது.
- பவளப் பாறைகளையும், கடலோரப் புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்காமல் இருக்க சதுப்பு நிலத் தாவரங்கள் பயன்படுகின்றது.

12. நீர் சேமிப்பதற்கான வழிமுறைகள் யாது?

- நீர் மாசுபடுதலை தடுத்தல்.
- நீர் மறுசுழற்சி, நிலத்தடி நீர் பயன்பாடு, சிக்கனம்.
- மரபு வழி நீர் வளங்கள் பயன்படுத்துதல்.
- நவீன நீர்ப்பாசன முறைகளைக் கையாளுதல்.
- காடுகளின் பரப்பை அதிகரித்தல்.
- வெள்ளப் பாதுகாப்பு மேலாண்மை.
- புவி வெப்ப நீர்ப் பயன்பாடு.

13. தீ விபத்திற்குப் பின் என்ன செய்ய வேண்டும்?

- குடியிருப்புக்கு திரும்பும் முன் தீயணைப்பு அதிகாரிகள் கொண்டு வீட்டை சரி பார்த்தல்.
- தீ மீண்டும் எரிவதால் போதுமான எச்சரிக்கையுடன் உள்ளே நுழைதல்.
- அறைகளில், கூரை மற்றும் விளிம்பு பகுதியில் தீப்பொறிகள் உள்ளனவா என சோதித்து அறிதல்.

14. இயற்கை பேரிடர்கள் யாவை?

- நில அதிர்வு.
- எரிமலை வெடிப்பு.
- நிலச்சரிவு
- சூறாவளி
- வெள்ளம்
- வறட்சி
- காட்டுத்தீ
- புயல்கள் தாக்கம்

VI. வேறுபடுத்துக.

1. உள்நாட்டுச் சமவெளி - கடற்கரைச் சமவெளி.

எண்	உள்நாட்டுச் சமவெளி	கடற்கரைச் சமவெளி
1.	பாலாறு, பெண்ணையாறு, காவிரி மற்றும் வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகள் உள்நாட்டுச் சமவெளிகளை உள்ளடக்கியது.	கடற்கரைச் சமவெளிகள் கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.
2.	வளமான சமவெளிகளில் ஒன்று.	கடற்கரைச் சமவெளிகள் சோழ மண்டல சமவெளி என்றும் அழைக்கப்படுகின்றது.
3.	இச்சமவெளி சேலம், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களை உள்ளடக்கியது.	இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது.

2. வண்டல் மண் - கரிசல் மண்

எண்	வண்டல் மண்	கரிசல் மண்
1.	வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவானது.	தீப்பாறைகள் சிதைவடைதவன் மூலம் கரிசல் மண் உருவாகின்றது.
2.	தாதுக்கள் அதிகம் நிறைந்துள்ளதால் வளம் மிக்க மண்.	உயிரின சத்துக்கள் குறைவாக உள்ள மண்.
3.	நெல், கரும்பு, வாழை, மஞ்சள் நன்றாக விளையும் மண்.	பருத்தி, கம்பு, சோளம், மல்லி நன்றாக விளையும் மண்.
4.	தமிழக ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் அதிகம் காணப்படும் மண்.	மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் காணப்படும் மண்.

VII. காரணம் கூறுக.

1. தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் செந்நிற தோற்றத்துடன் காணப்படுகிறது. ஏன்?

- தாமிரபரணி என்னும் பெயர் தாமிரம் (காப்பர்) மற்றும் வருணி (சிற்றோடைகள்) என்பதில் இருந்து பெறப்பட்டது.
- இந்த ஆறுகளில் கரைந்திருக்கும் செம்மண் துகள்கள் காரணமாக இந்நதியின் நீரானது செந்நிற தோற்றத்துடன் காட்சியளிக்கும்.

2. பச்சைமலை ஏன் பச்சைமலை என அழைக்கப்படுகிறது?

- தமிழ் மொழியில் 'பச்சை' என்பது பசுமையைக் குறிக்கும்.
- இம்மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்றப் பகுதியை விட பசுமையாகக் காணப்படுவதால் இம்மலை பச்சைமலை என அழைக்கப்படுகிறது.

3. காவிரி ஆறு கரூரை தாண்டியவுடன் அகன்ற காவரியாறு என ஏன் அழைக்கப்படுகிறது?

- காவிரியாறு கரூரை தாண்டியவுடன் திருமுக்கூடல் என்ற இடத்தில் இரண்டு துணை ஆறுகளான நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இணைகின்றன.
- இப்பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதால் இது 'அகன்ற காவிரி' என அழைக்கப்படுகிறது.

VIII. விரிவாக விடையளிக்கவும்.

1. மேற்குத் தொடர்ச்சி மலைகள் பற்றி விவரி.

மேற்குத் தொடர்ச்சி மலைகள் அறிமுகம்:

- தமிழ்நாட்டில் வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி வரை நீண்ட மலைத்தொடர்.

- இம்மலைத் தொடரின் உயரம் 2000 மீட்டர் முதல் 30000 மீட்டர் வரை வேறுபட்டுள்ளது.
- தொடர்ச்சியான இம்மலைத் தொடரில் பல கணவாய்கள் உள்ளன.
- எ.கா: பாலக்காட்டு கணவாய், செங்கோட்டைக் கணவாய், ஆரல்வாய்மொழி கணவாய், அச்சன் கோவில் கணவாய்.

இதில் உள்ள பிற மலைகள் :

- நீலகிரி, ஆனைமலை, பழனி மலை, ஏலக்காய் மலை, வருசநாட்டு மலை, ஆண்டிப்பட்டி மலைகள், அகத்தியர் மலைகள், பொதிகை மலை, மகேந்திரகிரி குன்றுகள்.

நீலகிரி மலை :

- தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- 2000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்ட 24 சிகரங்கள் உள்ளன.
- தொட்டபெட்டா உயரமான சிகரம்.
- ஊட்டி, குன்னூர் முக்கிய மலை வாழிடம்.
- மாநில விலங்கு வரையாடுகள் காணப்படுகின்றன

ஆனைமலை :

- கேரளா எல்லைப் பகுதியில் பாலக்காட்டு கணவாய் தெற்கே அமைந்துள்ளது.
- ஆனைமலை புலிகள் காப்பகம், வால்பாறை மலை வாழிடம், காடம்பாறை நீர்மின் நிலையங்கள் உள்ளன.
- மலையடிவாரத்தில் திருமூர்த்தி அணை உள்ளது.

பழனிமலை :

- மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- இதன் உயரமான சிகரம் வந்தராவ்.
- கொடைக்கானல் சிறந்த மலை வாழிடம்.

ஏலக்காய் மலை :

- தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- ஏலக்காய் பயிரிடப்படுவதால் ஏலக்காய் மலை என அழைக்கப்படுகின்றது.

வருசநாடு -ஆண்டிப்பட்டி மலைகள் :

- மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு நோக்கி உள்ள மலைகள்.
- வைகை அணை, பெரியாறு அணை இப்பகுதியில் அமைந்துள்ளது.
- கும்பக்கரை நீர்வீழ்ச்சி, குரங்கனி மலை வாழிடங்கள் உள்ளன.

பொதிகை மலை :

- கன்னியாகுமரி - திருநெல்வேலி மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ள மலை.
- அகத்திய மலை மற்றும் தெற்கு கைலாசம் என்று அழைக்கப்படுகிறது.
- களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகம் இங்கு அமைந்துள்ளது.

மகேந்திரகிரி குன்றுகள் :

- கன்னியாகுமரி – திருநெல்வேலி மாவட்ட எல்லைகளில் அமைந்துள்ளது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன செயற்கைகோள் ஏவுதளம் இம்மலையின் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது.

2. தமிழ்நாட்டின் வன உயிரினங்கள் பற்றி விளக்குக.

- காடுகளில் வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளை வன விலங்குகள் என்கிறோம்.
- பல்வேறு வகையான வன விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகியன தமிழ்நாட்டில் உள்ளன.
- யானைகள், காட்டு எருமைகள், புலிகள், மான்கள் மற்றும் குரங்குகளுக்கு இக்காடுகள் சிறந்த புகலிடமாக விளங்குகின்றது.
- வன விலங்குகளைப் பாதுகாக்க பல்வேறு வன விலங்குகள் சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் உள்ள மலைச் சரிவுகளில் பல்வேறு வகையான விலங்குகள், தாவரங்கள், வாழ்வதற்கேற்ற சிறந்த சூழலைக் கொண்டுள்ளன.
- தமிழ்நாட்டில் அமைந்துள்ள வனவிலங்கு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்க்கோள பெட்டகங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது:
- நீலகிரி உயிர்க்கோள பெட்டகம்.
- மன்னார் வளைகுடா உயிர்க்கோள பெட்டகம்.
- அகத்தியர் மலை உயிர்க்கோள பெட்டகம்.
- பல்வேறு மாவட்டங்களிலும் பறவைகள் மற்றும் வன விலங்குகள் சரணாலயங்கள் அமைந்துள்ளன.

புவியியல்

அலகு 7

தமிழ்நாடு - மானுடப் புவியியல்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா _____.
   அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
   இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா **விடை: அ) காவிரி டெல்டா**

2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவு பயிர் _____.
   அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள்
   இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல் **விடை: ஆ) சிறுதானியங்கள்**

3. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் _____.
   அ) மேட்டூர் ஆ) பாபநாசம்
   இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா **விடை: அ) மேட்டூர்**

4. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை _____.
   அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16
   இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15 **விடை: அ) 3 மற்றும் 15**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு _____ சதவிகிதத்தை வகிக்கிறது. **விடை: 21**
2. சாத்தனூர் அணை _____ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. **விடை: தென்பெண்ணை**
3. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் _____ ஆகும். **விடை: சென்னை**
4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு _____ என அழைக்கப்படுகிறது. **விடை: வர்த்தக சமநிலை**

III. பொருத்துக.

1.	பாக்சைட்	-	அ) சேலம்
2.	ஜிப்சம்	-	ஆ) சேர்வராயன் மலை
3.	இரும்பு	-	இ) கோயம்புத்தூர்
4.	சுண்ணாம்புக்கல்	-	ஈ) திருச்சிராப்பள்ளி

விடை: 1.ஆ 2.ஈ 3.அ 4.இ

IV. சரியான கூற்றினை கண்டுபிடி.

1. கூற்று : கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
   காரணம் : இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனல் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

விடை: அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

2. கூற்று : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாவட்டம்.
   காரணம் : இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

விடை: ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்களை எழுதுக.**

பருவம்	விதைக்கும் காலம்	அறுவடை காலம்	முக்கிய பயிர்கள்
சொர்ணவாரி (சித்தரைப்பட்டம்)	ஏப்ரல் - மே	ஆகஸ்ட் - செப்டம்பர்	பருத்தி திணை வகைகள்.

சமூக அறிவியல்

சம்பா (ஆடிப் பட்டம்)	ஜூலை - ஆகஸ்ட்	ஜனவரி - பிப்ரவரி	நெல், கரும்பு.
நவரை	நவம்பர் - டிசம்பர்	பிப்ரவரி - மார்ச்	பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி

2. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?

- பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூர் மற்றும் அதன் சுற்றியுள்ள திருப்பூர், பல்லடம், அவினாசி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, போன்ற இடங்களில் பரவி உள்ளன.
- கோயம்புத்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பருத்தி விளைச்சலும் உற்பத்தியும் நெசவாளர்களுக்கு பெரிதும் உதவுகிறது.
- ஆதலால் கோயம்புத்தூர் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது.

3. தமிழ்நாட்டில் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.

- மேட்டூர் அணை
- பவானிசாகர் அணை
- அமராவதி அணை
- கிருஷ்ணகிரி அணை
- சாத்தனூர் அணை
- முல்லைபெரியார் அணை
- வைகை அணை
- மணிமுத்தாறு அணை
- பாபநாசம் அணை
- பரம்பிகுளம் ஆழியாறு திட்டம்

4. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?

- சென்னையில் பறக்கும் தொடருந்துத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
- பறக்கும் இரயில் என்பது நிலத்திலிருந்து உயரே கட்டப்பட்ட பாலத்தின் மேல் செல்லும் புறநகர் தொடருந்து (இரயில்) சேவையைக் குறிக்கும்.
- இதன் உரிமையாளர் தென்னக இரயில்வே இந்தியா.

5. தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.

விமான நிலையங்கள் :

- சென்னை
- திருச்சி
- மதுரை
- கோயம்புத்தூர்
- சேலம்
- தூத்துக்குடி

துறைமுகங்கள் :

- சென்னை
- எண்ணூர்
- தூத்துக்குடி
- பாம்பன்
- கடலூர்
- நாகப்பட்டினம்
- குளச்சல்
- கன்னியாகுமரி
- கூடங்குளம்

IV. வேறுபடுத்துக.

1. கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல்.

எண்	கடல் மீன்பிடித்தல்	உள்நாட்டு மீன்பிடித்தல்
1.	கடற்கரையில் இருந்து சில கி.மீட்டர் தூரம் வரை மீன்பிடித்தல் கடலோர மீன் பிடிப்பு எனப்படுகின்றது.	ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள் மற்றும் சதுப்பு நிலப் பகுதி போன்ற நீர் நிலைகளில் உள்ளநாட்டு மீன் பிடிப்பு நடைபெறுகிறது.
2.	சுறா, பறவை மீன், சங்கு மீன், வெள்ளிவயிறு, திருக்கை, சீலா, மற்றும் நண்டுவகைகள் பிடிக்கப்படுகின்றன.	மீன் வளர்ப்பு, மீன் குஞ்சுகளால் பொறிப்பகம், மீன்குளவு வளர்ப்பகம், அலங்கார மீன் வளர்ப்பு போன்றவைகள் வளர்க்கப்படுகின்றன.
3.	டீசல் படகுகள், கட்டுமரம், மீன் வலைகள் கொண்டு பிடிக்கப்படும்.	பெரிய மின் மோட்டார் பொருத்தப்பட்டு ஆழ்கடலில் மீன்கள் பிடிக்கப்படும்.
4.	மாநில கடல் மீன் உற்பத்தியில் 40% சதவீத பங்களிப்பைத் தருகின்றது.	மாநில பொருளாதாரத்தில் 1.25% சதவீத பங்களிப்பைத் தருகின்றது.

2. உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்.

எண்	உணவுப் பயிர்கள்	உணவல்லாத பயிர்கள்
1.	மக்களின் உணவுத் தேவைக்காக பயிரிடப்படும் பயிர்கள்.	தொழிலகங்கள் மட்டுமன்றி வணிகத் தேவைக்காக பயிரிடப்படும் பயிர்கள்.
2.	நெல் மற்றும் திணை வகைகளான சோளம், கேழ்வரகு, கம்பு போன்றவை.	கரும்பு, எண்ணெய்வித்துக்கள், பருத்தி மற்றும் தோட்டப் பயிர்களான காபி, தேயிலை, ரப்பர் போன்றவை.
3.	உணவுப் பயிர்களில் நெல், பொன்னி, மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தின் பயிரிடப்படும் முக்கிய நெல் வகையாகும்.	கரும்பும், இழைப்பயிரான பருத்தியும், தமிழகத்தின் மிக முக்கியமான உணவல்லாத பயிர்களாகும்.
4.	காவிரி டெல்டா பகுதிகள், மற்றும் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்கள்.	விருதுநகர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர் மாவட்டங்கள்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்.

எண்	மேற்பரப்பு நீர்	நிலத்தடி நீர்
1.	மழைநீர் மூலம் பெறப்படும் ஆற்று வடிநிலப்பகுதி நீர் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்களில், உள்ள நீர் மேற்பரப்பு நீர் எனப்படும்.	மழைநீரானது பூமியின் உள் சென்று தங்கி அதனை கிணறு, மற்றும் ஆழ்துளைக் கிணறு (போர்வெல்) மூலம் பெறப்படும் நீர் நிலத்தடி நீர் எனப்படும்.
2.	மேற்பரப்பு நீர் பருவ மழையை மட்டுமே நம்பி கிடைக்கும் நீர்.	நிலத்தடி நீர் பூமியின் உள்ளே தங்கி நாம் எடுக்கும் நீர்.
3.	மேற்பரப்பில் 95% பயன்பாட்டில் இருந்து வருகிறது.	நிலத்தடி நீரில் 80% த்திற்கும் அதிகமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

VII. கீழ்க்கண்டவற்றிற்குக் காரணம் கூறுக.

1. விவசாயிகள் இரசாயண வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.

- இயற்கை வேளாண்மையில் செயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள், தாவர வளர்ச்சி சீராக்கிகள் (செயற்கை உரங்கள்) கால்நடை தீவனக் கலப்புகள் பயன்படுத்துவதில்லை.
- மாறாக மண்புழு உரங்கள், தாவரக் கழிவுகள், விலங்கு கழிவுகள் கொண்ட உரங்கள், பூச்சிக் கொல்லிக்கு மாற்றாக பஞ்சகவ்யங்கள் பயன்படுத்துவதால் விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறுகின்றனர்.
- குறைவான விவசாயிகளே இதனைப் பயன்படுத்துகின்றனர்.

2. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம்.

- பெருநகரங்களில் வேலை வாய்ப்புகள், சுகாதார வசதிகள், பள்ளி மேற்படிப்புகள், போக்குவரத்து வசதிகள் அதிகம் உள்ளன.
- பல்நோக்கு வேலைவாய்ப்புகள் அதிகம் கிடைக்கின்றன.
- தரமான குடிநீர் கிடைக்கின்றது.
- ஆதலால் கிராம மக்கள் பெருநகரங்களை நோக்கி படையெடுக்கின்றனர்.

3. தமிழ்நாட்டின் 'நெசவாலைத் தலைநகர்' என கரூர் அழைக்கப்படுகிறது.

- கரூர் சுற்று வட்டாரப்பகுதிகளில் கைத்தறி நெசவுகள், விசைத் தறிகள், நிறைய பரவி உள்ளது.
- ஆயத்த ஆடைகள், டையிங் தொழிலகங்கள், கரூரைச் சுற்றி உள்ளன.
- ஆதலால் கரூர் தமிழ்நாட்டில் நெசவுத் தலைநகரம் என்றழைக்கப்படுகிறது.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.

- மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைச்சரிவுகளில் தோட்ட வேளாண்மை பயிரிடப்படுகிறது.
- முக்கிய தோட்டப்பயிர்கள் தேயிலை, காப்பி, ரப்பர், முந்திரி, பாக்கு, மற்றும் சின்கோனா ஆகியன.
- தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்திற்கு அடுத்த இடத்தில் தமிழகம் இருக்கின்றது.
- காபி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்த இடத்தில் தமிழகம் இருக்கின்றது.
- நீலகிரி மலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலையும் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காபியும் பயிரிடப்படுகின்றது.
- இரப்பர் உற்பத்தியில் கன்னியாகுமரி மலைப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றது.
- மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைச் சரிவுகளில் மிளகு பயிரிடப்படுகின்றது.
- கடலூர் மாவட்டத்திலும் முந்திரி பயிரிடப்படுகின்றது.

2. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதவும்.

- மனித குலத்திற்கும் புவியில் வாழும் இலட்சக்கணக்கான உயிரினங்களுக்கும் நீர் ஆதாரங்கள், இயற்கையின் ஒரு விலைமதிப்பற்ற பரிசாகும்.
- தமிழ்நாட்டின் நீர்வளங்களை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்களே பூர்த்தி செய்கின்றன. அவைகள் முறையே:
  - மேட்டூர் அணை
  - பவானிசாகர் அணை
  - அமராவதி அணை
  - கிருஷ்ணகிரி அணை
  - சாத்தனூர் அணை
  - முல்லைப் பெரியார் அணை
  - வைகை அணை
  - மணிமுத்தாறு அணை
  - பாபநாசம் அணை
  - பரம்பிகுளம் ஆழியாறு திட்டம்
- தமிழ்நாட்டில் நீர் ஆதாரங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் முறையே:
  - மேற்பரப்பு நீர்வள ஆதாரங்கள்.
  - நிலத்தடி நீர்வள ஆதாரங்கள்.

மேற்பரப்பு நீர்வள ஆதாரங்கள் :

- தமிழ்நாட்டில் மொத்த மேற்பரப்பு நீரின் அளவு சுமார் 24.864 மில்லியன் கன மில்லியன் மீட்டராகும்.
- தமிழ்நாட்டில் 17 பெரிய ஆற்று வடிநிலப்பகுதிகள், 81 நீர்த்தேக்கங்கள், 41.262 ஏரிகள் உள்ளன.
- பெரும்பகுதி மேற்பரப்பு நீர்ப் பாசனத்திற்கு அதிக அளவில் பயன்படுகின்றன.

நிலத்தடி நீர்வள ஆதாரங்கள் :

- தமிழ்நாட்டில் பயன்படுத்திக் கொள்ள நிலத்தடி நீர் வளம் 22,433 மில்லியன் கன மீட்டராகும்.
- தற்போதைய பயன்பாட்டின் அளவு 13.558 மில்லியன் க.மீட்டராகும்.
- மறுஊட்டல் மூலம் கிடைக்கும் நீர் 60 சதவிகிதமாகும். மீத இருப்பு நீரானது சுமார் 8.875 மில்லியன் கன மீட்டராகும் (சுமார் 40%). நிலத்தடி நீர் குடிநீர் தேவைக்கு அதிகம் பயன்படுகின்றது.

3. தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.

வ.எண்.	கனிம வளங்களின் வகைகள்	கனிம வளங்கள் பரவல்
1.	பழுப்பு நிலக்கரி	கடலூர் - நெய்வேலி.
2.	நிலக்கரி படிமங்கள்	இராமநாதபுரம் பகுதிகள்.
3.	இயற்கை எரிவாயு எண்ணெய்	காவிரி வடிநிலப் பகுதிகள்.
4.	இரும்புத்தாது படிவுகள்	சேலம், கஞ்சமலை, திருவண்ணாமலை, கல்வராயன் மலை.
5.	மேக்னடைட் தாது	சேலம், வேலூர் மாவட்டங்கள்.
6.	பாக்சைட் தாதுக்கள்	சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம், பழனிமலை, கொல்லிமலை.
7.	ஜிப்சம்	திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டம்.
8.	ஹேமனைட் - ருட்டிஸ்	கன்னியாகுமரி கடற்கரை மணல் பகுதிகள்.
9.	சுண்ணாம்புக்கல்	கோயம்புத்தூர், கடலூர், திருநெல்வேலி, கரூர், மதுரை, நாமக்கல், பெரம்பலூர், சேலம், இராமநாதபுரம், திருவள்ளூர்.
10.	பெலட்ஸ்பார்க் படிகக்கல், தாமிரம், காரியம்.	மாநிலத்தின் சில பகுதிகள்.

4. தமிழ்நாட்டில் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகள் மற்றும் அதற்கான காரணங்களை எழுதுக.

நம் நாட்டில் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பு நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும் முக்கியமான காரணியாகும்.

மக்கள் தொகை அதிகம் கொண்ட பகுதிகள்

கோவை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்கள்.

மக்கள் தொகை அதிகரிக்க காரணங்கள் :

- சென்னை மாநில தலைநகர், நகர் விரிவாக்கம், வேலைவாய்ப்பு நிறைய கொண்ட பகுதிகளைக் கொண்டுள்ளது.
- தகவல் தொடர்பு பூங்காக்கள், தொழிலகங்கள், ஆயத்த ஆடைகள், சினிமாத்துறை போன்றவை வேலை வாய்ப்பை வழங்குகின்றன.
- பிற பகுதிகள் வேளாண்மை மற்றும் தொழில் துறையில் சிறந்து விளங்குவதால் மக்கள் தொகை அதிகரிக்க முக்கிய காரணமாகும்.

5. தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.

போக்குவரத்து தமிழ்நாட்டில் பெருளாதார வளர்ச்சி காரணிகளில் பெரும் பங்கு வகிக்கின்றது. அப்போக்குவரத்தானது நான்கு வகைகளாக உள்ளது. அவைகள் முறையே:

- சாலைப் போக்குவரத்து
- இரயில் போக்குவரத்து
- வான்வழி போக்குவரத்து
- நீர்வழி போக்குவரத்து

சாலைப் போக்குவரத்து:

- இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ள போக்குவரத்து. மாநில நெடுஞ்சாலைத்துறை பராமரிக்கின்றது. மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கி.மீட்டராகும்.
- மிக முக்கியமான சாலைகளாக:
  - தேசிய நெடுஞ்சாலைகள்
  - மாநில நெடுஞ்சாலைகள்
  - மாநகராட்சி, நகராட்சி நெடுஞ்சாலைகள்
  - ஊராட்சி ஒன்றிய சாலைகள்
  - கிராமப் பஞ்சாயத்து சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இரயில் போக்குவரத்து :

- தெற்கு இரயில்வேலியின் தலைமையிடம் சென்னை. தமிழ் நாட்டின் மொத்த இருப்பு பாதையின் நீளம் 6,693 கி.மீட்டராகும். சுமார் 690 இரயில்வே நிலையங்கள் உள்ளன.
- சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து பறக்கும் தொடருந்து திட்டம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.
- தற்போது, மெட்ரோ ரயில் திட்டம், விரிவாக்கம் செய்து வருகிறது.

வான்வழிப் போக்குவரத்து :

- தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவைகள் முறையே:
  - சென்னை
  - கோயம்புத்தூர்
  - திருச்சி
  - மதுரை
- சென்னை இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ஆகும்.

- தொழிற்துறை, பயணிகள் போக்குவரத்திற்கு பேரூதவியாக இருந்து வருகிறது.
- சரக்கு போக்குவரத்தில் வான்வழி பெரும் பங்கு வகிக்கின்றது.

நீர்வழிப் போக்குவரத்து:

- இந்தியாவில் 24% சதவிகித பங்குடன் தமிழகம் முன்னணியில் உள்ளது.
- சென்னை, எண்ணூர், தூத்துக்குடி முக்கிய துறைமுகங்களாக உள்ளன.
- கடலூர், குளச்சல், நாகை இதர சிறிய துறைமுகங்களாகும்.
- சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள் 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஆண்டுதோறும் கையாளுகின்றது. சென்னை செயற்கை துறைமுகமாகும்.

6. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.

- சாலைக் குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வு.
- நில், கவனி, செல்.
- வாகனம் நெருங்கி வருகிறதா என்பதை உறுதி செய்தல்.
- சாலைகளில் அதிவிரைவாக வாகனங்கள் செலுத்துவதை தவிர்த்தல்.
- பாதசாரிகளுக்கான இடத்தில் விதிகளைப் பின்பற்றுதல்.
- வாகனம் ஓட்டும் போது கைகளை நீட்டாதிருத்தல்.
- ஒருபோதும் வளைவுகளில் உபகரணங்களை முந்தாமல் நின்று கவனமாகச் செல்தல்.
- மது அருந்தாமல் வண்டி ஓட்டுதல்.
- மொபைல் போன்களை பயன்படுத்தாமல் வண்டி ஓட்டுதல்.

VI. வரைபடப் பணி.

1. முக்கிய பயிர் விளையும் பகுதிகள், தாதுக்கள், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைத் தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.

பார்க்க: வரைபடப் பயிற்சி புத்தகம் - பக்கம் எண்: 128, 132, 136.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. வேளாண்மையை நிர்ணயிக்கும் பெரிய புவியியில் காரணி _____.

அ) காலநிலை ஆ) பொருளியல்
இ) வெப்பநிலை ஈ) கால்வாய் **விடை: ஈ) கால்வாய்**

2. சமவெளிகள் வேளாண் உற்பத்திக்கு ஏற்ற வளமான _____ கொண்டுள்ளதால் சமவெளிப் பகுதிகள் வேளாண் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது.

அ) கரிசல்மண் ஆ) சரளைமண்
இ) மணல் மண் ஈ) வண்டல் மண் **விடை: ஈ) வண்டல் மண்**

3. _____ வேளாண்மையைக் கட்டுப்படுத்தும் முக்கியக் காரணியாகும்.
அ) நீர் ஆ) வேளாண் கருவிகள்
இ) ஏரிகள் ஈ) குளங்கள் **விடை: அ) நீர்**

4. மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைச்சரிவுகள் _____.
அ) கலப்பு வேளாண்மை ஆ) தீவிர வேளாண்மை
இ) தன்னிறைவு வேளாண்மை ஈ) தோட்ட வேளாண்மை
விடை: ஈ) தோட்ட வேளாண்மை

5. வேளாண்மையின் மிக முக்கியமான கூறுகளுள் ஒன்று _____ ஆகும்.
அ) கால்வாய் ஆ) ஏரி
இ) மண் ஈ) ஆறு **விடை: இ) மண்**

6. வறண்ட காலங்களில் _____ பயிரிடப்படுகிறது.
அ) புஞ்சை பயிர்கள் ஆ) நஞ்சை பயிர்கள்
இ) நெல் பயிர்கள் ஈ) மானாவாரி பயிர்கள் **விடை: ஈ) மானாவாரி பயிர்கள்**

7. தஞ்சாவூர் மாவட்டத்தில் _____ என்னுமிடத்தில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது.
அ) பெரம்பூர் ஆ) கும்பகோணம்
இ) ஆடுதுறை ஈ) பாபநாசம் **விடை: இ) ஆடுதுறை**

8. நவரைப்பட்டம் மாதம் _____.
அ) ஏப்ரல் - மே ஆ) ஜூலை - ஆகஸ்டு
இ) நவம்பர்- டிசம்பர் ஈ) ஜனவரி - மார்ச் **விடை: இ) நவம்பர் - டிசம்பர்**

9. பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய _____ வகைகளாகும்.
அ) நெல் ஆ) கம்பு
இ) திணை ஈ) எண்ணெய் வித்து **விடை: அ) நெல்**

10. இந்திய வேளாண்மைக் கழகம் _____ஆம் ஆண்டை சர்வதேச தினைப்பயிர்கள் ஆண்டாக அனுசரிக்க தீர்மானித்துள்ளது.
அ) 2020 ஆ) 2021
இ) 2022 ஈ) 2023 **விடை : ஈ) 2023**

11. கோயம்பத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் _____ பயிரிடப்படுகிறது.
அ) கேழ்வரகு ஆ) கம்பு
இ) சம்பா ஈ) சோளம் **விடை: அ) கேழ்வரகு**

12. _____ மாவட்டம் கொண்டக்கடலை உற்பத்தியில் தமிழ்நாட்டில் முதன்மை இடமாகத் திகழ்கிறது.
அ) ஈரோடு ஆ) கோயம்புத்தூர்
இ) கரூர் ஈ) நாமக்கல் **விடை: ஆ) கோயம்புத்தூர்**

13. தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் _____ அதிகம் பயிரிடப்படுகிறது.
அ) கொள்ளுப் பயிர் ஆ) மொச்சைப் பயிர்
இ) பச்சைப் பயிர் ஈ) தட்டைப் பயிர் **விடை: அ) கொள்ளுப் பயிர்**

14. _____ தமிழ்நாட்டில் முக்கியமான வாணிபப் பயிராகும்.
அ) கம்பு ஆ) சோளம்
இ) கரும்பு ஈ) மல்லி **விடை: இ) கரும்பு**

15. _____ ஓர் இழைப்பயிர் மற்றும் வாணிபப் பயிராகும்.
அ) மல்பெரி ஆ) பருத்தி
இ) கரும்பு ஈ) சோளம் **விடை: ஆ) பருத்தி**

16. தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பளவில் _____ மாநிலத்திற்கு அடுத்து இரண்டாமிடம் வகிக்கின்றது.
அ) மேற்கு வங்காளம் ஆ) கேரளா
இ) அசாம் ஈ) கர்நாடகா **விடை : இ) அசாம்**

17. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் _____ பயிரிடப்படுகின்றது.
அ) காபி ஆ) தேயிலை
இ) மிளகு ஈ) சின்கோனா **விடை: அ) காபி**

18. காபி உற்பத்தியில் _____ மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கின்றது.
அ) கர்நாடகா ஆ) கேரளா
இ) அசாம் ஈ) ஆந்திரா **விடை : அ) கர்நாடகா**

19. கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை சரிவுகளில் மித வெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் _____ விளைகின்றன.
அ) காபி ஆ) தேயிலை
இ) மிளகு ஈ) கிராம்பு **விடை: இ) மிளகு**

20. _____ மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.
அ) கடலூர் ஆ) விழுப்புரம்
இ) புதுக்கோட்டை ஈ) திண்டுக்கல் **விடை: அ) கடலூர்**

21. ஆனைமலையின் உயரமான மலைப்பகுதியில் _____ பயிரிடப்படுகின்றது.
அ) பட்டை ஆ) மிளகு
இ) கிராம்பு ஈ) சின்கோனா **விடை: ஈ) சின்கோனா**

22. மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் _____ பண்ணைகள் காணப்படுகின்றன.
அ) மிளகு ஆ) கொண்டைக்கடலை
இ) ஏலக்காய் ஈ) கிராம்பு **விடை: இ) ஏலக்காய்**

23. _____ வெள்ளாடுகள் 'எழை மக்களின் பசு' என்று அழைக்கப்படுகிறது.
அ) இலங்கையில் ஆ) பாகிஸ்தானில்
இ) இந்தியாவில் ஈ) நேபாளத்தில் **விடை: இ) இந்தியாவில்**

24. தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் _____ கி.மீட்டராகும்.
அ) 1076 ஆ) 1086
இ) 1096 ஈ) 1056 **விடை: அ) 1076**

25. _____ மாவட்டத்தில் பவானி சாகர் அணை அமைந்துள்ளது.
அ) சேலம் ஆ) தர்மபுரி
இ) கிருஷ்ணகிரி ஈ) ஈரோடு **விடை: ஈ) ஈரோடு**

26. _____ திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகே அமைந்துள்ளது.
அ) அமராவதி அணை ஆ) பவானி அணை
இ) திற்பரப்பு ஈ) பேச்சிப்பாறை **விடை: அ) அமராவதி அணை**

27. சாத்தனூர் அணை _____ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
அ) பெருஞ்சாணை ஆ) ஆழியாறு
இ) தென்பெண்ணை ஈ) பவானி **விடை: இ) தென்பெண்ணை**

28. தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள _____ பிரபலமான சுற்றுலாத் தலமாகும்.
அ) முல்லைப் பெரியார் ஆ) வைகை அணை
இ) தேக்கடி ஈ) மணிமுத்தாறு **விடை: அ) வைகை அணை**

29. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள _____ படகு சவாரி, வளைந்து செல்லும் மலைப்பாதை மற்றும் நீர்வீழ்ச்சி, அழகிய பூங்காக்களுக்கு பெயர் பெற்றது.
அ) திற்பரப்பு ஆ) பரம்பிக்குளம்
இ) மணிமுத்தாறு ஈ) ஆழியாறு **விடை: இ) மணிமுத்தாறு அணை**

30. தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட அணை _____.
அ) பரம்பிக்குளம் ஆழியாறு ஆ) பாபநாசம் அணை
இ) வைகை அணை ஈ) முல்லைப் பெரியார்
விடை: அ) பரம்பிக்குளம் ஆழியாறு

31. சேலம் மாவட்டத்தில் உள்ள _____யில் இரும்புத் தாது படிவுகள் காணப்படுகின்றன.
அ) பச்சை மலை ஆ) ஏல மலை
இ) பவள மலை ஈ) கஞ்ச மலை **விடை: ஈ) கஞ்ச மலை**

32. ஹேமனைட் மற்றும் ருட்டில் எந்த கடற்கரை மணல் பரப்புகளில் கிடைக்கிறது?
அ) திருநெல்வேலி ஆ) தூத்துக்குடி
இ) கன்னியாகுமரி ஈ) புதுக்கோட்டை **விடை: இ) கன்னியாகுமரி**

33. _____ தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம் என்றழைக்கப்படுகிறது.
அ) ஈரோடு ஆ) சேலம்
இ) கரூர் ஈ) திருப்பூர் **விடை: இ) கரூர்**

34. _____ சில பகுதிகளில் செயற்கை பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
அ) இராசிபுரம் ஆ) திருபுவனம்
இ) இராமநாதபுரம் ஈ) திண்டுக்கல் **விடை: இ) இராமநாதபுரம்**

35. தமிழ்நாட்டின் TNPL - காகித ஆலை உள்ள இடம் _____.
அ) திண்டுக்கல் ஆ) காகிதபுரம்
இ) இராசிபுரம் ஈ) நாமக்கல் **விடை: ஆ) காகிதபுரம்**

36. தோல் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியில் _____ மாவட்டம் 37% பங்களிப்புடன் முதன்மையிடம் வகிக்கின்றது.
அ) திருவண்ணாமலை ஆ) வேலூர்
இ) விழுப்புரம் ஈ) தர்மபுரி **விடை: ஆ) வேலூர்**

37. புவியியல் சார் குறியீட்டில் பவானி பெற்ற இடம் _____.
அ) லுங்கிகள் ஆ) துண்டுகள்
இ) சால்வைகள் ஈ) போர்வைகள் **விடை: ஈ) போர்வைகள்**

38. புவியியல் சார் குறியீட்டில் சுவாமிமலை _____ பெயர் பெற்றது.
அ) கோயில் நகைகள் ஆ) வீணை
இ) வெண்கலச் சிலைகள் ஈ) குத்துவிளக்கு **விடை: இ) வெண்கலச் சிலைகள்**

39. அரியலூர் மற்றும் ஆலங்குளம் பகுதிகளில் _____ உற்பத்தி ஆலைகள் அதிகம் உள்ளன.
அ) ஜிப்சம் ஆ) பாக்சைட்
இ) சிமெண்ட் ஈ) சுண்ணாம்புக்கல் **விடை: இ) சிமெண்ட்**

40. _____ மாவட்டம், 2011 - மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மிகக் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டம்.
அ) நீலகிரி ஆ) தர்மபுரி
இ) பெரம்பலூர் ஈ) அரியலூர் **விடை: அ) நீலகிரி**

41. இந்தியாவின் மக்களடர்த்தியில் தமிழகம் _____ இடத்தில் உள்ளது.
அ) 10 வது ஆ) 11 வது
இ) 12 வது ஈ) 13 வது **விடை: இ) 12வது**

42. பாலின விகிதம் என்பது _____ ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.
அ) 1000 ஆ) 1100
இ) 900 ஈ) 800 **விடை: அ) 1000**

43. தமிழ்நாட்டின் மொத்த சாலைகளின் நீளம் _____ ஆகும்.
அ) 1,67,000 ஆ) 1,77,000
இ) 1,87,000 ஈ) 1,90,000 **விடை: அ) 1,67,000**

44. தெற்கு இரயில்வேயின் தலைமையகம் _____.

அ) பாலக்காடு ஆ) பெங்களூர்
இ) மங்களூர் ஈ) சென்னை **விடை: ஈ) சென்னை**

45. தமிழ்நாட்டில் _____ முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.

அ) 2 ஆ) 3
இ) 4 ஈ) 5 **விடை: இ) 4**

46. தமிழ்நாட்டில் அனைத்து துறைமுகங்களும் _____ வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு
இ) கடல் சார் ஈ) துறைமுகக் கழகம் **விடை: இ) கடல்சார்**

47. தமிழகத்தின் இடைநிலைத் துறைமுகம் _____.

அ) கல்பாக்கம் ஆ) எண்ணூர்
இ) கடலூர் ஈ) நாகை **விடை: ஆ) எண்ணூர்**

48. இந்தியாவின் இரண்டாவது பெரிய துறைமுகம் _____.

அ) முல்லை ஆ) மங்களூர்
இ) சென்னை ஈ) தூத்துக்குடி **விடை: இ) சென்னை**

49. தமிழகத்தில் அதிக நிலக்கரி மற்றும் தாதுக்களை கையாளும் துறைமுகம் _____.

அ) கல்பாக்கம் ஆ) குளச்சல்
இ) எண்ணூர் ஈ) பாம்பன் **விடை: இ) எண்ணூர்புவியியல்**

50. இயந்திரங்கள் மற்றும் மின்சாதனப் பொருட்களை _____ செய்வதன் மூலம் விபத்துகளை குறைக்கலாம்.

அ) மாற்றுதல் ஆ) விற்பனை
இ) தொடர் பராமரிப்பு ஈ) சுவிட்சு மாற்றுதல் **விடை: இ) தொடர் பராமரிப்பு**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ என்ற சொல் இலத்தீன் வார்த்தைகளான 'அகர்' மற்றும் 'கல்சரா' என்பதிலிருந்து பெறப்பட்டது. **விடை: அக்ரிகல்சர்**
2. பொருள், நிலம், வளர்த்தல், என்பது _____. **விடை: வேளாண்மை**
3. நெல், திணை வகைகள் மற்றும் பருப்பு வகைகள் தமிழகத்தின் முக்கிய _____ ஆகும். **விடை: உணவுப் பயிர்**
4. கரும்பு, பருத்தி, தென்னை, நிலக்கடலை, தேயிலை, காபி, இரப்பர் ஆகியவை முக்கிய _____ ஆகும். **விடை: வணிகப்பயிர்**
5. _____ பூமத்தியரேகைக்கு அருகிலும் வெப்ப மண்டலத்திலும் அமைந்துள்ளதால் வெப்ப மண்டல காலநிலை நிலவுகிறது. **விடை: தமிழ்நாடு**
6. மாநில வேளாண் உற்பத்தியில் _____ முக்கிய பங்கு வகிக்கிறது. **விலை: வண்டல்மண்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தலைமையில் உள்ள இடம் _____.
விடை: கோயம்புத்தூர்

8. சொர்ண வாரிப்பட்டம், அறுவடைக் காலம் _____. விடை: ஆகஸ்ட், செப்டம்பர்

9. நெல் மற்றும் கரும்பு பருவம் _____. விடை: சம்பா (ஆடிப்பட்டம்)

10. 2023 ஆம் ஆண்டை _____ ஆண்டாக அனுசரிக்க வேளாண்மைக் கழகம் முடிவு செய்துள்ளது. விடை: சர்வதேச தினைப்பயிர்கள்

11. _____ பயிருக்கு வெப்பநிலை மற்றும் அதிக மழை அளவு தேவைப்படுகின்றது.
விடை: கரும்பு

12. கோயம்புத்தூர் பீடபூமி, வைகை மற்றும் வைப்பாறு பகுதிகளில் _____ பயிரிடப்படுகிறது. விடை: பருத்தி

13. _____ என்பது ஊரக மக்களின் சமூக பொருளாதாரத்தின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகும். விடை: கால்நடை வளர்ப்பு

14. _____ இந்நிறுவனம் இந்தியாவில் கருப்பு வகை, தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நிறுவனம். விடை: TANTEA (டான்டீ)

15. மிகக் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் ஈட்டப்படுவதால் குறு விவசாயிகள் _____ வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். விலை: வெள்ளாடு

16. நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர் மாவட்டங்கள் தமிழக _____ மையமாக உள்ளது. விடை: கோழிப்பண்னை

17. கடற்கரையில் இருந்து சில கி.மீட்டர் தூரம் வரை மீன்பிடித்தல் _____ எனப்படும்.
விடை: கடலோர மீன்பிடித்தல்

18. கடற்கரையில் இருந்து 20 முதல் 30 மைல்கள் தூரம் ஆழ்கடலில் மீன் பிடிப்பது _____ எனப்படும். விடை: ஆழ்கடல் மீன்பிடிப்பு

19. மேட்டூர் அணை சூழ்ந்துள்ள மலைப்பகுதிகள் ஒரு முக்கிய _____ விளங்குகிறது.
விடை: சுற்றுலாத்தலமாக

20. அமராவதி நீர்த்தேக்கத்தில் _____ காணப்படுகிறது.
விடை: சதுப்பு நில (சிங்கன்னி) முதலைகள்

21. சாத்தனூர் அணையில் _____ அமைந்துள்ளது. விடை: முதலைப்பண்ணை

22. பெரியாரின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை _____.
விடை: முல்லைப் பெரியார் அணை

23. வைகை அணையில் அமைந்துள்ள தோட்டம் _____ என்று அழைக்கப்படுகிறது.
விடை: சிறிய பிருந்தாவனம்

24. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம் அணை _____ என்றும் அழைக்கப்படுகிறது. விடை: காரையார் அணை

25. காவிரி வடிநிலைப் பகுதிகளில் _____ மற்றும் _____ படிவுகள் காணப்படுகின்றன.
விடை: மீத்தேன், எரிவாயு

26. பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் _____ தாதுக்கள் காணப்படுகின்றன.
விடை: பாக்சைட்

27. ஹேமனைட் மற்றும் ருட்டில் _____ கடற்கரை மணல் பரப்புகளில் காணப்படுகின்றது.
விடை: கன்னியாகுமரி

28. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறை _____ முக்கியத் துறைகளாகும்.
விடை: தமிழ்நாட்டின்

29. _____ தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலாகும்.
விடை: பருத்தி நெசவாலைகள்

30. கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் _____ என அழைக்கப்படுகிறது.
விடை: ஜவுளிப் பள்ளத்தாக்கு

31. தோல் மற்றும் காலனி ஏற்றுமதியில் தமிழக முதன்மை மாவட்டம் _____.
விடை: வேலூர்

32. மதுரை _____ சேலைக்கு புகழ் பெற்றது. விடை: சுங்கடி

33. திண்டுக்கல் மாவட்ட சிறுமலை _____ புகழ் பெற்றது. விடை: மலை வாழைக்கு

34. ஈரோடு _____ விளைச்சலுக்கு புகழ் பெற்றது. விடை: மஞ்சள்

35. தஞ்சாவூர் _____ புகழ் பெற்றது. விடை: தலையாட்டி பொம்மைகள்

36. வாகன உற்பத்தி மற்றும் கனரக வாகன உற்பத்தியில் _____ பங்கு மகத்தானது.
விடை: தமிழ்நாடு

37. தமிழக பாலின விகிதம் நம் நாட்டின் பாலின விகிதத்தை விட _____ உள்ளது.
விடை: சாதகமாக

38. தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை _____ ஆகும்.
விடை: NH-44

39. தமிழ்நாட்டில் மிகக் குறைவான தேசிய நெடுஞ்சாலை _____ முதல் _____ வரை செல்கிறது.
விடை: மதுரை - நத்தம்

III. பொருத்துக.

I

1.	பருத்தி-தினை வகைகள்	- அ) கரிம வேளாண்மைத் திட்டம்
2.	இயற்கை வேளாண்மை	- ஆ) சிறிய பிருந்தாவனம்
3.	இரண்டாவது பசுமைப் புரட்சி	- இ) பாபநாசம் அணை
4.	வைகை அணை	- ஈ) சொர்ண வாரிப்பட்டம்
5.	காரையார் அணை	- உ) இயற்கை விவசாயம்

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.ஆ 5.இ

II

1.	பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்	- அ) பாய்
2.	காஞ்சிபுரம்	- ஆ) தேங்காய்
3.	பத்தமடை	- இ) ஏழு ஆறுகள்
4.	நாச்சியார் கோவில்	- ஈ) பட்டு
5.	ஏத்தோ மொழி	- உ) குத்துவிளக்கு

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

III
1. டைடல் பூங்கா - அ) காகித ஆலை
2. TAFE (டாஃபே) - ஆ) கற்கலன் குழாய் அலகு
3. புக்காதுரை - இ) சிறப்பு பொருளாதார மண்டலம்
4. ஆலங்குளம் - ஈ) இழுவை இயந்திரம் (டிராக்டர்)
5. விருத்தாசலம் - உ) கல்நார் சிமெண்ட் அட்டை

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

IV. சரியான கூற்றை தெரிவு செய்க.

1. கூற்று : நீர்வள மேலாண்மை என்பது திட்டமிடல், செயல்படுத்துதல், நீர் வளத்தை பெருக்குதல், விநியோகித்தல் மற்றும் நீர்வளங்களின் உகந்த பயன்பாட்டு நடவடிக்கையைக் குறிக்கும்.

காரணம் : நாட்டு மக்கள் மழை நீர் சேகரிப்பு செய்வது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானது.

அ) கூற்று சரி காரணம் தவறு.
ஆ) கூற்று காரணம் இரண்டுமே தவறு.
இ) கூற்று சரி காரணத்தை சரியாக விளக்குகிறது.
ஈ) கூற்று சரி காரணத்தை சரியாக விளக்கவில்லை.

விடை: இ) கூற்று சரி காரணத்தை சரியாக விளக்குகிறது.

2. **கீழ்க்கண்டவற்றுள் தவறான வாக்கியத்தைக் கண்டுபிடி.**

அ) காஞ்சிபுரம் பட்டு அதன் தனித்தன்மை, தரம், பராம்பரியம் ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது.
ஆ) தமிழ்நாடு கைத்தறி, விசைத்தறிக்கு புகழ் பெற்றது.
இ) மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன ஆய்வகம் (CLRI) வேலூரில் உள்ளது.
ஈ) வேலூர் மாவட்டம் தோல் பொருட்கள் பிரிவில் முதன்மை இடம் வகிக்கிறது.

விடை: இ) மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன ஆய்வகம் (CLRI) வேலூரில் உள்ளது.

V. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **அணைகள் குறிப்பு வரைக.**

அணைகள் என்பது நீரைத் தேக்கி, நீர்தேக்கங்கள் உருவாக்கி அதன் மூலம் நீர்மின்சக்தி, நீர்திறப்பு மற்றும் மீன் வளர்ப்பு பயன்பாடுகளுக்காக ஆற்றின் குறுக்கே கட்டப்படுபவை.

2. **மான்செஸ்டர் குறிப்பு வரைக.**

- இங்கிலாந்தின் மேற்குப்பகுதியில் உள்ள நகரம்.
- பருத்தி மற்றும் லினன் துணிகளால் ஆன விரிப்புகள், தலையனை உறைகள், மேசை விரிப்புகள் ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது.
- நெசவு ஆலைகள் நிறைந்த நகரம்.

3. தமிழ்நாட்டின் வேளாண் முறைகள் - பகுதிகள் யாவை?

- தீவிர தன்னிறைவு வேளாண்மை - தமிழ்நாட்டின் சில பகுதிகள்.
- தோட்ட வேளாண்மை - மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைச்சரிவுகள்.
- கலப்பு வேளாண்மை - காவிரி மற்றும் தென் சென்னை ஆற்றுப் படுகைகள்.

4. எண்ணெள் வித்துக்கள் என்பன யாது?

- நிலக்கடலை - எள்
- ஆமணக்கு - தென்னை
- சூரியகாந்தி - கடுகு

5. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள்.

- டைடல் பூங்கா, அசென்டாஸ் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளுக்காக மகேந்திரா உலக நகரம்.
- சிறப்பு பொருளாதார மண்டலம்: டைடல் பூங்கா - 1, டைடல் பூங்கா - 111.
- கோயம்பத்தூர் சிறப்பு பொருளாதார மண்டலம் - டைடல் பூங்கா.

6. புவியியில் சார் குறியீடு என்பது யாது?

- புவியியல் சார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் தயாரிக்கப்படும் பொருட்களின் மீது பயன்படுத்தப்படும் குறியீடாகும்.
- இது உற்பத்தி செய்யும் உரிமையாளருக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்பை விளக்குகிறது.
- எ.கா: காஞ்சிபுரம் - பட்டு, ஈரோடு - மஞ்சள்.

7. மக்கள் தொகையியல் என்றால் என்ன?

- ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதியில் உயரும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது.
- இந்த மக்கட் தொகை பற்றிய பண்புகள், புள்ளி விபர ஆள்வுகள் மக்கட் தொகையியல் என அழைக்கப்படுகிறது.

8. தகவல் தொடர்பு என்றால் என்ன?

- தகவல் தொடர்பு என்பது இலத்தீன் வார்த்தையான 'கம்யூனிகேர்' என்பதிலிருந்து பெறப்பட்டது. இது 'பகிர்தல்' எனப் பொருள்படும்.
- தகவல்கள், எண்ணங்கள் மற்றும் எண்ணங்களின் பரிமாற்றத்தை தகவல் தொடர்பு என்கிறோம்.

9. வர்த்தக சமநிலை என்றால் என்ன?

ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவை வணிகத்தின் இரு கூறுகளாகும். ஏற்றுமதி, இறக்குமதி மதிப்பிற்கு இடையேயான வேறுபாடு 'வர்த்தக சமநிலை' என அழைக்கப்படுகிறது.

10. இடர் தவித்தல் என்பது யாது?

இடர் தவித்தல் என்பது மனித உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தலை தடுக்க மேற்கொள்ளப்படும் தொடர் நடவடிக்கையாகும்.

VI. வேறுபடுத்துக.

1. பட்டு நெசவு ஆலை மற்றும் காகித தொழிலகம்.

எண்	பட்டு நெசவு ஆலை	காகித ஆலை
1.	நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கின்றது.	உலகளவில் சிறந்த காகித ஆலைகள் தமிழகத்தில் உள்ளன.
2.	காஞ்சிபுரம் பட்டின் தரம், பராமரித்தல் உலகளவில் பெயர் பெற்றது.	கரும்புச் சக்கைகளில் இருந்து பெருமளவு காகித உற்பத்தி நடைபெறுகின்றது.
3.	தமிழ்நாட்டில் ஆண்டு பட்டு உற்பத்தி சுமார் 1,200 மெட்ரிக் டன்.	கரூர் காகிதபுரம் ஆலை ஆண்டுக்கு 2.45 லட்சம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்கின்றது.
4.	ஆரணி, திருபுவனம், இராசிபுரம், கும்பகோணம், சேலம் ஆகியன பிற முக்கிய மையங்கள்.	பவானிசாகர், பரமத்தி, வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, நிலக்கோட்டை, சேரன்மகாதேவி ஆகியன பிற முக்கிய மையங்கள்.

2. இரயில் போக்குவரத்து மற்றும் வான்வழி போக்குவரத்து.

எண்	இரயில் போக்குவரத்து	வான்வழி போக்குவரத்து
1.	தமிழகத்தின் இரயில் போக்குவரத்து சிறந்த வலைப்பின்னல் அமைப்பு கொண்டது.	தமிழகத்தில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.
2.	தெற்கு ரயில்வேயின் தலைமையிடம் சென்னை.	சென்னை இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம்.
3.	தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் போக்குவரத்து.	ஒரு குறிப்பிட்ட வசதி படைத்தவர்கள் பயன்படுத்தும் போக்குவரத்து.
4.	நாட்டின் பல பகுதிகளை இணைக்கிறது.	நாட்டின் பெரு நகரங்களை மட்டுமே இணைக்கிறது.

VII. காரணம் கூறுக.

1. சேலத்தில் மட்டும் இரும்பு எஃகு தொழில்கள் அமைந்துள்ளது. ஏன்?

- சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலை மற்றும் அருகாமையில் உள்ள கல்வராயன் மலை, சேர்வராயன் மலைக்குன்று பகுதிகளில் மட்டுமே இரும்புத் தாது கிடைக்கின்றது.

- இரும்பு படிவுகள் இருக்குமிடத்திற்கும், இரும்பு எஃகு தொழிலகங்களுக்கும் இடையே நீண்ட தூரம் தொலைவு இருக்கக் கூடாது என்பதால் சேலம் மாவட்டத்தில் இரும்பு எஃகு தொழில்கள் அமைந்துள்ளன.

2. கோயம்புத்தூர் மண்டலம் கைத்தறி நெசவிற்கு புகழடையக் காரணம்.

- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கரூர், பவானி, குமாரபாளையம், இராசிபுரம், கோபிசெட்டிபாளையம் போன்ற பகுதிகளை ஆண்டாண்டு காலமாகவே விசைத்தறி, கைத்தறி, நெசவு போன்ற தொழில்கள் நடந்து வருகின்றன.
- கைத்தறி நெசவிற்குரிய வேலை தெரிந்த ஆட்கள் மற்றும் அதற்கான பொருட்களும் செறிந்து காணப்படுகின்றது.

3. தோல் பதனிடும் தொழிலாளர்கள் வேலூரைச் சுற்றியே நடைபெறுகிறது. ஏன்?

- தமிழகத்தில் உள்ள அனைத்து விலங்கு தோல்களைப் பதப்படுத்தி பயன்பாட்டு பொருட்களாக மாற்ற அனைத்து வசதிகளும் வேலூர், ஆம்பூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி போன்ற இடங்களில் அதிகமாக உள்ளது.
- தொழிலாளர்கள் ஏற்றுமதி சார்ந்த நிகழ்வுகள் அதிகம் வேலூரைச் சுற்றியே உள்ளது.

VII. விரிவாக விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டில் தற்போது நீர்வள மேலாண்மை அவசியமா என்பதை விவரி.

- தமிழ்நாடு வெப்ப மண்டல பருவகால நிலையைப் பெற்றுள்ளது. பருவமழை நிகழ்வு அரிதாக உள்ளது.
- மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தனி நபரின் நீர் நுகர்வு அதிகமாக உள்ளது. தொழிலக நீர் தேவை அதிகமாக உள்ளது. வேளாண்மை பயன்பாடு, குடிநீர் தேவை அதிகரித்து வருகிறது. கடுமையான நீர்ப்பற்றாக்குறை வறட்சிக்கு வழி வகுக்கின்றது.

நீர் மேலாண்மை அவசியம் :

- நீரை திட்டமிட்டு பயன்படுத்துதல்.
- நீர் வளத்தைப் பெருக்குதல்.
- சரியான முறையில் விநியோகித்தல்.
- நீர் வளங்களை உரிய முறையில் பாதுகாத்தல்.
- பொது மக்கள் இதனை தீவிரமாக பங்கேற்று நீர் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- மழை நீரைச் சேமித்து நீண்ட நாள் பயன்படுத்துதல்.
- குளங்கள், ஏரிகள், தெப்பக்குளங்கள் போன்றவற்றை மேலாண்மை செய்தல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சமூக அறிவியல்

10

குடிமையியல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

குடிமையியல்

அலகு 1

இந்திய அரசியலமைப்பு

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. கீழ்க்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது? _____

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.

ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.

இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.

ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.

விடை: ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?

அ) ஒரு முறை ஆ) இரு முறை

இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை **விடை: அ) ஒரு முறை**

3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?

அ) வம்சாவளி ஆ) பதிவு

இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்

விடை: இ) இயல்புரிமை

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை

இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

விடை: இ) சொத்துரிமை

5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.

அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்.

ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்.

இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்.

ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்.

விடை: ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்.

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது?
அ) சமய உரிமை
ஆ) சமத்துவ உரிமை
இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
ஈ) சொத்துரிமை **விடை: இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?
அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
ஈ) மேற்கண்ட அனைத்தும்
விடை: இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்

8. நமது அடிப்படை கடமைகளை _____ இடமிருந்து பெற்றோம்.
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு
விடை: இ) ரஷ்யா அரசியலமைப்பு

9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368 **விடை: இ) சட்டப்பிரிவு 360**

10. எந்தக் குழுக்கள்/கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
1) சர்க்காரியா குழு 2) ராஜமன்னார் குழு 3) M.N வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
அ) 1, 2 & 3 ஆ) 1 & 2
இ) 1 & 3 ஈ) 2 & 3 **விடை: ஆ) 1 & 2**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை _____ ல் தோன்றியது.
விடை: அமெரிக்க ஐக்கிய நாடுகளில்

2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக _____ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
விடை: டாக்டர் சச்சிதானந்தா சின்கா

3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு _____.
விடை: 1949, நவம்பர் 26

4. _____ பேராணைகள் சட்டப்பிரிவு 32இல் குறிப்பிடப்படுகின்றன.
விடை: நீதிப்

5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் _____ பிரிவின்கீழ் வழங்கப் பட்டுள்ளன. **விடை : 51A**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

III. பொருத்துக.

1.	குடியுரிமைச் சட்டம்	-	அ) ஜவகர்லால் நேரு
2.	முகவுரை	-	ஆ) 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்
3.	குறு அரசியலமைப்பு	-	இ) 1955
4.	செம்மொழி	-	ஈ) 1962
5.	தேசிய அவசரநிலை	-	உ) தமிழ்

விடை: 1.இ 2.அ 3.ஆ 4.உ 5.ஈ

IV. குறுகிய விடை தருக.

1. அரசியலமைப்பு என்றால் என்ன?

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.
- அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும்.

2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?

- சிட்டிசன் எனும் சொல் சிவில் எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
- இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும்.
- இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.

3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கெதிரான உரிமை
- சமயச் சார்பு உரிமை
- கல்வி, கலச்சார உரிமை
- அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?

- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்யும் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?

- தமிழ் (2004)
- தெலுங்கு (2008)
- சமஸ்கிருதம் (2005)
- மலையாளம் (2013)
- கன்னடம் (2008)
- ஒடியா (2014)

6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?

- போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 352-ன் கீழ் அவசரநிலையை பிறப்பிப்பது தேசிய அவசர நிலை எனப்படும்.
- போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புறஅவசரநிலை' எனப்படுகிறது.
- ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படும்.

7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.

- சட்டமன்ற உறவுகள்
- நிர்வாக உறவுகள்
- நிதி உறவுகள்

V. விரிவான விடை தருக.

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துக்கள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- இது கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- இந்தியாவை ஒரு சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- எந்தவித வேறுபாடுமின்றி 18-வயது நிரம்பியவர்கள் அனைவருக்கும் வாக்குரிமையை வழங்குகிறது.

2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) பிரிவு 12-லிருந்து பிரிவு 35- வரையுள்ள பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகிறது.

1. சமத்துவ உரிமை:

- பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- பிரிவு 15 - மதம், இனம், சாதி, பால் அல்லது பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபாடு கிடையாது.
- பிரிவு 16 - பொது வேலைவாய்ப்புகளில் சமத்துவம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- பிரிவு 17 - தீண்டாமையை ஒழித்தல்.
- பிரிவு 18 - இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

2. சுதந்திர உரிமை:

- பிரிவு 19 - பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- பிரிவு 20 - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21 - வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திறகுப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21A - தொடக்கக்கல்வி பெறும் உரிமை.
- பிரிவு 22 - சில வழக்குகளில் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

3. சுரண்டலுக்கெதிரான உரிமை:

- பிரிவு 23 - கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபரத்தை தடுத்தல்.
- பிரிவு 24 - தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

4. சமயச் சார்பு உரிமை:

- பிரிவு 25 - எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- பிரிவு 26 - சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
- பிரிவு 27 - எந்தவொரு மதத்தையும பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.
- பிரிவு 28 - மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை.

5. கல்வி, கலாச்சார உரிமை:

- பிரிவு 29 - சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.
- பிரிவு 30 - சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

6. அரசியலமைப்பு சட்ட மேல்முறையீட்டு உரிமைகள்:

- பிரிவு 32 - தனிப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையை பெறுதல்.

3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.

- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்யும் ஆணையாகும்.
- உச்சநீதிமன்றம் உயர்நீதி மன்றங்கள் ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிடுகின்றன.

அ) ஆட்கொணர் நீதிப்பேராணை:

சட்டத்திற்கு புறம்பாக மக்கள் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை:

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை:

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

ஈ) ஆவணக் கேட்பு நீதிப்பேராணை:

உயர்நீதி மன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

உ) உரிமை வினவு நீதிப்பேராணை:

இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில், அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

	அடிப்படை உரிமைகள்	அரசு கொள்கைக்கான வழிகாட்டும் நெறிமுறைகள்
1.	இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.	இவை அயர்லாந்து நாட்டின் அரசிலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
2.	அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ நீக்கவோ முடியாது.	இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும்.
3.	இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும்.	எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது.
4.	இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை.	இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5.	இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயத்தை வலுப்படுத்துகிறது.	இந்த கொள்கைகளை செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது.

இந்த அஞ்சல் வில்லைகள் எந்த அடிப்படை உரிமைகள் மீறுதலைக் குறிப்பிடுகின்றன?

பக்கம்: 256

சுரண்டலுக்கெதிரான உரிமை

பிரிவு 23, 24-ன் படி, கொத்தடிமை, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறையை சுட்டிக்காட்டுகிறது.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் இடம் பெற்ற வாசகம் எந்தப்புரட்சிக்கு உரியது _____.

அ) 1857 ஆம் ஆண்டு புரட்சி ஆ) அமெரிக்கப் புரட்சி
இ) சீனப் புரட்சி ஈ) பிரஞ்சுப் புரட்சி

விடை: ஈ) பிரஞ்சுப் புரட்சி

2. "சிட்டிசன்" எனும் ஆங்கிலச் சொல் _____ என்ற வார்த்தையிலிருந்து வந்தது.

அ) கிரீஸ் ஆ) இலத்தீன்
இ) பிரெஞ்சு ஈ) ஆங்கிலம்

விடை: ஆ) இலத்தீன்

3. குடியுரிமைச் சட்டம் ஏற்றப்பட்ட ஆண்டு _____.

அ) 1950 ஆ) 1955
இ) 1960 ஈ) 1965

விடை: ஆ) 1955

4. குடியுரிமைச் சட்டம் 1955யின் படி குடியுரிமையைப் பெற _____ வழிகளைப் பரிந்துரை செய்கிறது.

அ) 5 ஆ) 3
இ) 4 ஈ) 2

விடை: அ) 5

5. இந்திய அரசியலமைப்பின் பாதுகாவலன் _____.

அ) உச்சநீதிமன்றம் ஆ) உயர்நீதிமன்றம்
இ) குடியரசுத் தலைவர் ஈ) பிரதமர்

விடை: அ) உச்சநீதிமன்றம்

6. 44ஆவது அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு _____.
அ) 1978 ஆ) 1976
இ) 1973 ஈ) 1972 **விடை: அ) 1978**

7. குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணம் _____ நாட்டைச் சேர்ந்தது.
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) ரஷ்யா ஈ) சீனா **விடை: அ) இங்கிலாந்து**

8. இந்திய அரசியலமைப்பின் "இதயம்" மற்றும் "ஆன்மா" என குறிப்பிடப்படும் சட்டப்பிரிவு _____.
அ) சட்டப்பிரிவு 23 ஆ) சட்டப்பிரிவு 33
இ) சட்டப்பிரிவு 22 ஈ) சட்டப்பிரிவு 32 **விடை: ஈ) சட்டப்பிரிவு 32**

9. அடிப்படை கடமைகள் எந்த சட்டத்திருத்ததின் படி ஏற்றுக் கொள்ளப்பட்டது _____.
அ) 42 ஆ) 44
இ) 43 ஈ) 45 **விடை: அ) 42**

10. இந்திய அரசியலமைப்பில் அடிப்படை கடமைகள் _____ நாட்டின் ஈர்ப்பால் சேர்க்கப்பட்டது.
அ) இங்கிலாந்து ஆ) சோவியத்
இ) அயர்லாந்து ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு **விடை: ஆ) சோவியத்**

11. இந்திய அரசியலமைப்பின் தந்தை என அறியப்பட்டவர் _____.
அ) H.C முகர்ஜி ஆ) ஜவஹர்லால் நேரு
இ) DR. B.R அம்பேத்கர் ஈ) காந்தியடிகள்
விடை: இ) DR. B.R அம்பேத்கர்

12. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் _____.
அ) 1949 ஜனவரி 26 ஆ) 1949 நவம்பர் 26
இ) 1950 ஜனவரி 26 ஈ) 1950 நவம்பர் 26 **விடை: இ) 1949 நவம்பர் 26**

13. இந்தியக் குடியரசு தினம் _____.
அ) 1949 ஜனவரி 26 ஆ) 1949 நவம்பர் 26
இ) 1950 ஜனவரி 26 ஈ) 1950 நவம்பர் 26 **விடை: இ) 1950 ஜனவரி 26**

14. அரசியல் நிர்ணய சபையின் தலைவர் _____.
அ) DR. சச்சிதானந்த பிரசாத் ஆ) DR. ராஜேந்திர பிரசாத்
இ) H.C முகர்ஜி ஈ) V.T கிருஷ்ண மாச்சாரி
விடை: ஆ) DR. ராஜேந்திர பிரசாத்

15. உலகிலேயே எழுதப்பட்ட மிகவும் நீளமான அரசியலமைப்பு _____ நாட்டுடையது.
அ) இந்திய ஆ) அமெரிக்க
இ) இங்கிலாந்து ஈ) இத்தாலி **விடை: அ) இந்திய**

16. அமெரிக்காவில் காணப்படும் குடியுரிமை _____.
அ) சிறப்பு ஆ) இரட்டை
இ) ஒற்றை ஈ) இவற்றில் ஏதுமில்லை **விடை: ஆ) இரட்டை**

17. _____ இந்திய அரசியலமைப்பின் திறவுகோல் என அழைக்கப்படுகிறது.
அ) முகவுரை ஆ) முடிவுரை
இ) பொருளடக்கம் ஈ) திருத்தம் **விடை: அ) முகவுரை**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நாட்டின் அடிப்படைக் கொள்கைகள் சார்ந்த சட்டம் _____ ஆகும்.
விடை: அரசியலமைப்பு
2. அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்ற மொத்த உறுப்பினர்கள் _____.
விடை: 389
3. அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டம் நடைபெற்ற ஆண்டு _____.
விடை: 1946
4. அரசியல் நிர்ணய கூட்டம் _____ அமர்வுகள் _____ நாட்கள் _____ திருத்தங்களுடன் நடைபெற்றது. **விடை: 11, 166, 2473**
5. இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக்குழுத் தலைவர் _____.
விடை: Dr. B.R. அம்பேத்கர்
6. இந்தியக் குடியரசு தினம் _____. **விடை: ஜனவரி 26, 1950**
7. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியவர் _____.
விடை: பிரேம் பகாரி நரேன் ரைஜ்டா
8. இந்தியாவில் வாக்குரிமை வயது _____. **விடை: 18 வயது**
9. இந்தியாவில் காணப்படும் குடியுரிமை _____. **விடை: ஒற்றை குடியுரிமை**
10. சமய சார்பற்ற நாடு _____. **விடை: இந்தியா**
11. 42ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 3 வார்த்தைகள் _____. **விடை: சமதர்ம, சமய சார்பற்ற, ஒருமைப்பாடு**
12. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்பட்ட சுதந்திரம் _____ சூழ்நிலையில் தாமாகவே நிறுத்தப்படும்.
விடை: குடியரசுத்தலைவரால் அவசரநிலை அறிவிக்கும்
13. அடிப்படை உரிமைகள் குறிப்பிடும் சட்டப்பிரிவு _____.
விடை: பிரிவு 12 லிருந்து 35 வரை
14. நமது அடிப்படை உரிமைகள் _____ நாட்டைச் சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளது.
விடை: அமெரிக்க
15. "சிட்டிசன்" என்பதன் பொருள் _____. **விடை: நகர அரசில் வசிப்பவர்**
16. பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற ஆண்டு _____. **விடை: 1789**
17. பிரெஞ்சுப் புரட்சியின் முக்கிய முழக்கங்கள் _____.
விடை: சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம்

18. அடிப்படைக் கடமைகள் குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்த கமிட்டி _____.

விடை: சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி

19. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இடம் பெற்ற வார்த்தைகள் _____.

விடை: இறையாண்மை மிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற ஜனநாயக குடியரசு

III. பொருத்துக.

I

1. மகாசாசனம்	-	அ) உச்சநீதிமன்றம்
2. இந்திய அரசியலமைப்பின் பாதுகாவலன்	-	ஆ) முகவுரை
3. இந்திய அரசியலமைப்பின் தந்தை	-	இ) இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜான்
4. அரசியலமைப்பின் திறவுகோல்	-	ஈ) நீதிப்பேராணை
5. தடை	-	உ) DR. அம்பேத்கர்

விடை: 1.இ 2.அ 3.உ 4.ஆ 5.ஈ

II

1. பகுதி 3	-	அ) அலுவலக மொழிகள்
2. பகுதி 4	-	ஆ) சொத்துரிமை
3. பகுதி 17	-	இ) அடிப்படை கடைமைகள்
4. பகுதி 4 A	-	ஈ) அடிப்படை உரிமைகள்
5. பகுதி 12	-	உ) அரசு நெறிமுறைப்படுத்தும் கோட்பாடுகள்

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.இ 5.ஆ

III

1. தேசிய அவசர நிலை	-	அ) சட்டப்பிரிவு 360
2. மாநில அவசரநிலை	-	ஆ) சட்டப் பிரிவு 352
3. நிதி சார்ந்த அவசரநிலை	-	இ) சட்டப்பிரிவு 368
4. அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம்	-	ஈ) சட்டப்பிரிவு 51 A
5. அடிப்படை கடமைகள்	-	உ) சட்டப்பிரிவு 356

விடை: 1.ஆ 2.உ 3.அ 4.இ 5.ஈ

IV. குறுகிய விடை தருக.

1. முகவுரை சுருக்கமாக எழுதுக.

- "முகவுரை" என்ற சொல் அரசியல் அமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது.
- இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கிறது.
- மேலும் இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டது. இது பெரும் மதிப்புடன் அரசியலமைப்பின் திறவுகோல் என விவரிக்கப்படுகிறது.

2. குடியுரிமையை இழத்தலுக்கான சூழ்நிலைகள் யாவை?

- குடிமகன் தாமாக தனது குடியுரிமையை இழத்தல்
- வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும் போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.
- இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமைப் பெற்றவர் தவறான பிரதிநிதித்துவம் தந்தவர், உண்மைகளை மறைத்தவர்.
- எதிரி நாட்டுடன் வணிகம் செய்தவர் அல்லது இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை மத்திய அரசு கண்டுபிடித்து (சந்தேகத்திற்கிடமின்றி) அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திபடும் பட்சத்தில் மத்திய அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

3. குடியுரிமை பெறுதலுக்கான வழிமுறைகள் எவை?

குடியுரிமை பெறுதலுக்கான வழிமுறைகள்:

- பிறப்பின் மூலம்
- வம்சாவளி மூலம்
- பதிவின் மூலம்
- இயல்புரிமை மூலம்
- பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்.

4. அரசு நெறிமுறையுறுத்தும் கேட்பாடுகள் யாவை?

- பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெறும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாக செயற்படுத்த முடியாது.
- ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானது.
- ஓர் அரசு சட்டத்தை இயற்றும் போது இந்த கொள்கைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும்.

5. அலுவலக மொழிகள் குறிப்பு வரைக.

- முதல் மொழிக்குழு 1955 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது.
- அது தனது அறிக்கையை 1956 இல் சமர்ப்பித்தது.
- அவ்வறிக்கையின் தொடர்ச்சியாக பாராளுமன்றம் 1963 ஆம் ஆண்டில் அலுவலக மொழி சட்டம் இயற்றியது.
- அரசியலமைப்பும் சில வட்டார மொழிகளை மாநிலங்களுக்கான அலுவலக பரிமாற்ற மொழியாக பயன்படுத்த அனுமதித்தது. தொடக்கத்தில் 14 மொழிகளை அரசியலமைப்பின் 8 வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

6. இந்திய அரசியலமைப்பு பிரிவு 356 விளக்குக.

- ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும் பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 356 இன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.
- இந்த வகையான அவசரநிலையில் சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழக்கின்றன.

7. அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள் யாவை?

- நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதி பெரும்பான்மை மூலம் திருத்தம்,
- நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதி பெரும்பான்மை மூலம் திருத்தம்.
- நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதி பெரும்பான்மை மற்றும் மாநிலங்களில் பாதி மாநில சட்ட மன்ற ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தம்.

8. தற்போது மத்திய, மாநில, பொது பட்டியலில் இடம் பெற்றுள்ள துறைகள் எத்தனை?

- தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறையும்,
- மாநில அரசு பட்டியலில் 61 துறையும் மற்றும்
- இரண்டுக்கும் பொதுவான பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது.

9. மகாசாசனம் குறிப்பு வரைக.

- பெரும் முதலாளிகளிடமிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக கி.பி. 1215 இல் இங்கிலாந்து மன்னர் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட உரிமைகள் பட்டயமே, மகாசாசனம் எனப்படும்.
- இதுவே, குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணமாகும்.

10. சுதந்திர உரிமையை பட்டியலிடுக.

- பிரிவு 19 - பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள் அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- பிரிவு 20 - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21 - வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21ஏ - தொடக்கக்கல்வி பெறும் உரிமை.
- பிரிவு 22 - சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற் கெதிரான பாதுகாப்பு உரிமை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

V. விரிவான விடை தருக.

1. இந்திய அரசியலமைப்பு உருவான வரலாற்றை விவரி.

- 1946 ஆம் ஆண்டு அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.
- இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசின் நியமன உறுப்பினர்கள் பலுசிஸ்தானின் சார்பில் ஒருவர் மற்றும் 3 மாகாண முதன்மை ஆணையர்கள் என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர்.
- அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டம், 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் நாள் நடைபெற்றது.
- இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் Dr. சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்கக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே Dr. சச்சிதானந்த சின்கா இறந்ததைத் தொடர்ந்து, Dr. இராஜேந்திரபிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இக்கூட்டம் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது.
- அக்கூட்டத்தின் கலந்துரையாடல் வாயிலாக, 2473 திருத்தங்கள் முன் வைக்கப்பட்டது. இவற்றுள் சில ஏற்கப்பட்டன.
- அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை செய்தது.
- இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக்குழுத் தலைவர் Dr. B.R அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது.
- எனவே அவர் இந்திய அரசியலமைப்பின் தந்தை என அறியப்படுகிறார்.
- அதன் பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாண சட்ட மன்றங்கள் மற்றும் பலரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் விவாதிக்கப்பட்டு, இறுதியாக முன்னுரை, 2 பாகங்கள், 395 பிரிவுகள், 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது.

2. அடிப்படை கடமைகளை விரிவாக விவரி.

அடிப்படைக் கடமைகளின் பட்டியல்:

- ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமைகளாக பின்வருவனவற்றை பிரிவு 51A வலியுறுத்துகிறது.

- ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் ஷரத்துக்கள், நிறுவனங்கள், தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.
- சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை பேணிப் பாதுகாத்தல்.
- தேசப் பாதுகாப்பிற்காக, தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.
- சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களை தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.
- நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சசாரத்தை மதித்து பாதுகாத்தல்.
- காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுதுதல்.
- அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.
- வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்கான உழைத்தல்.
- 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்பினை வழங்குதல்.

குடிமையியல்

அலகு 2

நடுவண் அரசு

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் _____ ஆவார்.
அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு **விடை: அ) குடியரசுத் தலைவர்**

2. ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.
அ) குடியரசுத் தலைவர்
ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர்
ஈ) லோக் சபாவின் சபாநாயகர் **விடை: ஈ) லோக்சபாவின் சபாநாயகர்**

3. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.
அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை
இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை **விடை: ஆ) மக்களவை**

4. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது _____.
அ) 18 வயது ஆ) 21 வயது
இ) 25 வயது ஈ) 30 வயது **விடை: இ) 25 வயது**

5. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர்/பெற்ற அமைப்பு.
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம் **விடை: ஈ) நாடாளுமன்றம்**

6. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360
இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365 **விடை: ஆ) சட்டப்பிரிவு 360**

7. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.

அ) குடியரசுத் தலைவர்
ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) ஆளுநர்
ஈ) பிரதம அமைச்சர்

விடை: அ) குடியரசுத் தலைவர்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது. **விடை: நிதி**
2. _____ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார். **விடை: பிரதம அமைச்சர்**
3. _____ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார். **விடை: துணைக் குடியரசுத் தலைவர்**
4. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் _____. **விடை: இந்திய அட்டர்னி ஜெனரல்**
5. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது _____. **விடை: 65**
6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் _____ ஆகும். **விடை: உச்சநீதிமன்றம்**
7. தற்சமயம், உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை _____. **விடை: 28**

III. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.
   ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
   iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.
   iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

   அ) i & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை
   இ) i & iv சரியானவை ஈ) i, ii & iii சரியானவை

   விடை: ஈ) i, ii & iii சரியானவை

2. i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.
   ii) நடுவண் அரசின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும்.
   iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.

iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

அ) ii & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை

இ) i & iv சரியானவை ஈ) i & ii சரியானவை

விடை: அ) ii & iv சரியானவை

IV. பொருத்துக.

1. சட்டப்பிரிவு 53 - அ) மாநில நெருக்கடிநிலை
2. சட்டப்பிரிவு 63 - ஆ) உள்நாட்டு நெருக்கடிநிலை
3. சட்டப்பிரிவு 356 - இ) குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்
4. சட்டப்பிரிவு 76 - ஈ) துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்
5. சட்டப்பிரிவு 352 - உ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்.

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

V. குறுகிய விடை தருக.

1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

2. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின் படி எவ்வாறு வகைப்படுத்தப் பட்டுள்ளனர்?

நடுவண் அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- காபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
- இராசாங்க அமைச்சர்கள்
- இணை அமைச்சர்கள்

3. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?

- அவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும்.
- அவர் ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
- அவர் பத்து ஆண்டுகள் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

4. நிதி மசோதா குறிப்பு வரைக.

- நிதி மசோதாவினை திருத்தம் செய்யவோ, அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை.
- மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும்.
- இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும்.
- மாநிலங்களவை 14 நாட்டுகளுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில, ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும்.

5. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.

- இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார்.
- இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு.

VI. விரிவான விடை தருக.

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி.

சட்டமன்ற அதிகாரங்கள்:

- பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
- ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது.
- குடியரசுத் தலைவர்ஆண்டுக்கு இரண்டு முறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன.
- நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ அல்லது ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத் தலைவர் முடிவுக்குக் கொண்டு வரலாம்.
- மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.
- கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார்.
- ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

நீதி அதிகாரங்கள்:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72 வது பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

2. இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிவரையறைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.

நீதித்துறை செயல்பாடுகள்:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும்.

அ) தனக்கேயுரிய நீதி வரையறை

- இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையிலான சிக்கல்கள்
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள்
- அடிப்படை உரிமைகளை நடைமுறைபடுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன உச்சநீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும்.
- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட நீதிப்பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது.

ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை:

- உச்சநீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும்.
- மாநில உயர்நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல் அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்சநீதிமன்றம் விசாரிக்கின்றது.

இ) ஆலோசனை நீதிவரையறை:

பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்சநீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

பிரதம அமைச்சரின் பணிகள், கடமைகள்:

- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றி குறிப்பிடுகிறது.
- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும் அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு செய்வார்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

- அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத்தலைவருடன் விவாதிக்கிறார்.
- குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே பாலமாக பிரதம அமைச்சர் செயல்படுகிறார்.
- பிரதம அமைச்சர் நாட்டின் தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாக பங்கு கொள்கிறார்.

4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றுதல், பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் போன்ற பணிகளைச் செய்கிறது.
- நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமை கணக்காய்வாளர் - தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவிநீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு.

VII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு.

1. மாதிரி நாடாளுமன்றத்தை உன்னுடைய வகுப்பறையில் ஏற்பாடு செய். குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், அமைச்சர்களின் பங்கு பற்றி விவரி.

வகுப்பறை மாணவர் செயல்பாடுகள்.

2. இந்தியக் குடியரசுத் தலைவருக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவருக்கும் இடையேயான ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் வெளிக்கொணர்க.

இந்தியக் குடியரசுத் தலைவர்	அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர்
இந்திய ஜனாதிபதி மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.	அமெரிக்க ஜனாதிபதி நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
இந்திய ஜனாதிபதி மாநிலத் தலைவர் மட்டுமே.	அமெரிக்காவின் ஜனாதிபதி உண்மையான நிர்வாகி.
அமெரிக்க ஜனாதிபதி 4 ஆண்டுகள் பதவியில் இருக்கிறார்.	இந்திய ஜனாதிபதி 5 ஆண்டுகள் பதவியில் இருக்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இந்திய ஜனாதிபதி மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்.	அமெரிக்க ஜனாதிபதி எந்த சட்டமன்றங்களுக்கும் பொறுப்பானவர் அல்ல.
அமெரிக்க ஜனாதிபதியை விட இந்திய ஜனாதிபதிக்கு ஒப்பீட்டளவில் குறைந்த மறுப்பணை அதிகாரம் உள்ளது. இந்திய ஜனாதிபதி மறுபரிசீலனை செய்வதற்கான மசோதாவை ஒரு முறை மட்டுமே அனுப்ப முடியும். பாராளுமன்றத்தில் ஒரு எளிய பெரும்பான்மையால் கூட இந்த மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட்டால், அவர் மசோதாவில் கையெழுத்திட கடமைப்பட்டிருக்கிறார்.	அமெரிக்க ஜனாதிபதிக்கு மறுப்பணை அதிகாரம் உள்ளது.
இந்திய ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க முடியும்.	அமெரிக்க ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்க அதிகாரங்கள் இல்லை.

3. இந்தியக் குடியரசுத் தலைவர்கள் மற்றும் பிரதமர்களின் பட்டியலை தயார் செய்க.

இந்தியக் குடியரசுத் தலைவர்கள்:

- டாக்டர். இராஜேந்திரப் பிரசாத்
- சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்
- ஜாகீர் உசேன்
- வி.வி. கிரி
- முகம்மது இதயத்துல்லா
- பக்ருதின் அலி அகமது
- பசப்பா தனப்பா ஜாட்டி
- நீலம் சஞ்சீவி ரெட்டி
- ஜெயில் சிங்
- ரா. வெங்கட்ராமன்
- சங்கர் தயாள் சர்மா
- கே.ஆர். நாராயணன்
- ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
- பிரதீபா பட்டீல்
- பிரணப் முக்கர்ஜி
- ராம்நாத் கோவிந்த்

இந்தியப் பிரதமர்கள்:

- ஜவஹர்லால் நேரு
- குல்சாரிலால் நந்தா
- லால் பகதூர் சாஸ்திரி
- இந்திரா காந்தி
- மொரார்ஜி தேசாய்
- சரண்சிங்
- ராஜீவ் காந்தி
- விஸ்வநாத் பிரதாப் சிங்
- சந்திரசேகர்
- பி.வி. நரசிம்மராவ்
- அடல் பிகாரி வாஜ்பாய்
- ஹெச்.டி. தேவகவுடா
- இந்தர் குமார் குஜ்ரால்
- மன்மோகன் சிங்
- நரேந்திர மோடி

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. நடுவண் அரசின் தலைமையகம் _____ இல் அமைந்துள்ளது.
   அ) கொல்கத்தா ஆ) புதுதில்லி
   இ) சென்னை ஈ) மும்பை **விடை: ஆ) புதுதில்லி**

2. நடுவண் அரசு _____ அங்கங்களைக் கொண்டது.
   அ) ஒன்று ஆ) இரண்டு
   இ) மூன்று ஈ) நான்கு **விடை: இ) மூன்று**

3. இந்தியாவின் முதல் குடிமகன் _____ ஆவார்.
   அ) பிரதமர் ஆ) ஆளுநர்
   இ) முதலமைச்சர் ஈ) குடியரசுத் தலைவர் **விடை: ஈ) குடியரசுத் தலைவர்**

4. குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் _____ ஆண்டுகளாகும்.
   அ) ஐந்து ஆ) ஆறு
   இ) நான்கு ஈ) இவற்றில் எதுவுமில்லை
   விடை: அ) ஐந்து

5. பிரதம அமைச்சரை நியமிப்பவர் _____.
   அ) உச்சநீதிமன்ற நீதிபதி ஆ) தலைமை தேர்தல் ஆணையம்
   இ) குடியரசுத் தலைவர் ஈ) ஆளுநர் **விடை: இ) குடியரசுத் தலைவர்**

6. மாநிலங்களவை _____ உறுப்பினர்களைக் கொண்டது.
   அ) 250 ஆ) 545
   இ) 239 ஈ) 234 **விடை: அ) 250**

7. மாநிலங்களவைக்கு _____ உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.
   அ) 2 ஆ) 1
   இ) 3 ஈ) 12 **விடை: ஈ) 12**

8. தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை _____.
   அ) 250 ஆ) 18
   இ) 234 ஈ) 239 **விடை: ஆ) 18**

9. மக்களவைக்கு அதிகபட்சமாக தேர்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் _____.
   அ) 510 ஆ) 530
   இ) 552 ஈ) 545 **விடை: இ) 552**

10. மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் _____ ஆண்டுகள்.
    அ) ஐந்து ஆ) ஆறு
    இ) நான்கு ஈ) எதுவுமில்லை **விடை: அ) ஐந்து**

11. மக்களவையை தலைமை ஏற்று நடத்துபவர் _____ ஆவார்.
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
இ) சபாநாயகர் ஈ) துணைக் குடியரசுத் தலைவர்
விடை: இ) சபாநாயகர்

12. _____ஆம் ஆண்டு கட்சித் தாவல் தடைச்சட்டம் இயற்றப்பட்டது.
அ) 2015 ஆ) 1985
இ) 1995 ஈ) 2005 **விடை: ஆ) 1985**

13. உச்சநீதிமன்றம் அமைந்துள்ள இடம் _____.
அ) கொல்கத்தா ஆ) சென்னை
இ) மும்பை ஈ) புதுதில்லி **விடை: ஈ) புதுதில்லி**

14. இந்திய உச்சநீதிமன்றம் _____ ஆம் நாள் துவங்கப்பட்டது.
அ) 1950 ஜனவரி 26 ஆ) 1950 ஆகஸ்ட்
இ) 1950 செப்டம்பர் ஈ) 1950 டிசம்பர் 26 **விடை: அ) 1950 ஜனவரி 26**

15. மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் _____.
அ) சட்டத்துறை ஆ) நிர்வாகத்துறை
இ) நிதித்துறை ஈ) நீதித்துறை **விடை: ஈ) நீதித்துறை**

16. தற்சமயம் உச்சநீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட _____ நீதிபதிகளைக் கொண்டுள்ளது.
அ) 26 ஆ) 28
இ) 25 ஈ) 27 **விடை: ஆ) 28**

17. இந்திய உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதியை _____ நியமிக்கிறார்.
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர்
இ) துணைக் குடியரசுத் தலைவர் ஈ) ஆளுநர் **விடை: அ) குடியரசுத் தலைவர்**

18. மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக _____ திகழ்கிறது.
அ) நாடாளுமன்றம் ஆ) சட்டமன்றம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: அ) நாடாளுமன்றம்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு _____ ஆகும்.
விடை: நடுவண் அரசு

2. நடுவண் சட்டமன்றம் _____ என்றழைக்கப்படுகிறது.
விடை: நாடாளுமன்றம்

3. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் _____. **விடை: DR. ராஜேந்திர பிரசாத்**

4. தற்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் _____. **விடை: ராம்நாத் கோவிந்த்**

5. அதிக குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட மாநிலங்கள் _____.
விடை: கேரளா மற்றும் பஞ்சாப்

6. 1969 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி _____.
விடை: M. ஹிதயதுல்லா

7. இங்கிலாந்தின் நாடாளுமன்றம் _____ அரண்மையில் அமைந்துள்ளது.
விடை: வெஸ்ட் மினிஸ்டர்

8. பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு _____.
விடை: 78

9. மாநிலங்களவை என்பதன் மற்றொரு பெயர் _____. விடை: மேலவை (ராஜ்ய சபா)

10. இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை _____. விடை: மக்களவை

11. மக்களவை உறுப்பினராவதற்கு _____ வயதிற்கு குறைவுடையவராய் இருத்தல் கூடாது.
விடை: 25

12. மக்களவை உறுப்பினர்களைத் தேர்தெடுப்பதில் _____ முறை பின்பற்றப்படுகிறது.
விடை: வயது வந்தோர் வாக்குரிமை

13. இந்தியாவில் வாக்களிக்கும் வயது _____. விடை: 18

14. நாடாளுமன்றம் மழைக் (பருவ) கால கூட்டத் தொடர் நடைபெறும் மாதங்கள் _____ வரை.
விடை: ஜூலை முதல் செப்டம்பர்

15. ஒரு மசோதாவை நீதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர் _____. விடை: சபாநாயகர்

16. நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி _____ ஆவார்.
விடை: இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

17. உச்சநீதிமன்றம் அமைந்துள்ள இடம் _____. விடை: புதுதில்லி

18. மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் _____ ஆகும்.
விடை: நீதித்துறை

19. தற்சமயம் உச்சநீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட _____ நீதிபதிகளைக் கொண்டுள்ளது.
விடை: 28

20. உச்சநீதிமன்றத்தின் நிரந்தர தலைமை இடம் _____ இல் உள்ளது. விடை: புதுதில்லி

III. பொருத்துக.

I

1.	மக்களவை	- அ) புதுடில்லி
2.	மாநிலங்களவை	- ஆ) சிம்லா
3.	இராஷ்டிரபதி பவன்	- இ) 5 ஆண்டுகள்
4.	ரிட்ரீட் கட்டடம்	- ஈ) ஹைதராபாத்
5.	இராஷ்டிரபதி நிலையம்	- உ) நிரந்தர அவை

விடை: 1.இ 2.உ 3.அ 4.ஆ 5.ஈ

II
1. DR. ராஜேந்திர பிரசாத் - அ) முதல் பெண் குடியரசுத் தலைவர்
2. DR. ராதாகிருஷ்ணன் - ஆ) இரண்டாவது பிரதமர்
3. திருமதி. பிரதீபா பாட்டீல் - இ) இரண்டாவது குடியரசுத் தலைவர்
4. திரு. ராம்நாத் கோவிந்த் - ஈ) முதல் குடியரசுத் தலைவர்
5. திரு. லால்பகதூர் சாஸ்திரி - உ) தற்போதைய குடியரசுத் தலைவர்

விடை: 1.ஈ 2.இ 3.அ 4.உ 5.ஆ

III
1. துணைக் குடியரசுத் தலைவர் - அ) 25 வயது
2. சபாநாயகர் - ஆ) 30 வயது
3. மக்களவையின் உறுப்பினர் - இ) மக்களவை
4. மாநிலங்களவையின் உறுப்பினர் - ஈ) 35 வயது
5. குடியரசுத் தலைவர் - உ) இரண்டாவது உயர்ந்த பதவி

விடை: 1.உ 2.இ 3.அ 4.ஆ 5.ஈ

IV. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. i) உச்சநீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறது.
ii) இந்தியாவின் தலைமை நீதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
iii) உயர் நீதிமன்றம் மேல் முறையீட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும்.
iv) உச்சநீதிமன்றதின் தலைமையிடம் புதிடில்லியில் அமைந்துள்ளது.

அ) ii), iv) சரியானது ஆ) iii), iv) சரியானது
இ) i), iv) சரியானது ஈ) i), ii), iii) சரியானது **விடை: இ) i), iv) சரியானது**

2. i) மக்களவையின் தலைவர் குடியரசுத் தலைவர்.
ii) சபாநாயகர் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைக்கு தலைமை வக்கிப்பார்.
iii) சபாநாயகர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
iv) சபாநாயகர் இல்லாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையை வழிநடத்துவார்.

அ) ii), iii) சரி ஆ) iii), iv) சரி
இ) i), iv) சரி ஈ) i), iii) சரி **விடை: அ) ii), iii) சரி**

3. i) இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 76 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரை நியமிக்க வழிவகை செய்கிறது.
ii) இவர் நாட்டின் உயர் சட்ட அதிகாரி ஆவார்.
iii) இவரை பிரதம அமைச்சர் நியமிக்கிறார்.
iv) உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேவையான தகுதிகளை இவரும் கொண்டிருக்க வேண்டும்.

அ) ii), iv) சரி ஆ) i), ii), iv) சரி
இ) i), iv) சரி ஈ) ii), iii) சரி **விடை: ஆ) i), ii), iv) சரி**

V. குறுகிய விடை தருக.

1. குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் என்ன?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலா ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரை குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழுவிலுள்ள பத்து வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

2. குடியரசுத் தலைவரை நீக்கம் செய்வதற்கான வழிமுறைகள் யாவை?

- குடியரசுத் தலைவர் பதவி ஏற்ற நாள் முதல் ஐந்து ஆண்டுகள் அவரது பதவிக்காலம் ஆகும்.
- அவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம்.
- அவர் பிரிவு 61 இன் படி இராஜ துரோக குற்றச்சாட்டு நீரூபிக்கப்படுவதன் மூலம் பணி நீக்கம் செய்யப்படலாம்.
- இவருக்கு எதிரான இராஜதுரோக குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தினர் இரு அவைகளிலும் தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

3. துணைக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- பிரிவு 66 (1) இன் படி துணைக் குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாமல் குடியரசுத் தலைவர் போல மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தின் மூலம் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

4. அரசியலமைப்பு சட்டப் பிரிவு 100 பற்றி விளக்குக.

- மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும் பட்சத்தில் அரசியலமைப்புச் சட்ட பிரிவு 100 இன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம்.
- இது சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது.
- ஆகையால் அவர் இந்த விருப்புரிமை அதிகாரத்தைத சட்ட மசோதாவுக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார்.
- அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. பிரதமர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- மக்களவையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராக குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- மற்ற அமைச்சர்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின் படி குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அவர் அழைத்து அரசு அமைக்கக் கூறலாம்.

6. கேபினெட் அமைச்சர்கள் என்பவர் யார்?

- நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும்.
- காபினெட், அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி. வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.
- குடியரசுத் தலைவர் அவசர நிலைப் பிரகடனம் செய்ய அமைச்சரவை பரிந்துரைக்கிறது.
- அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அமைச்சரவை ஒரு கருவியாக செயல்படுகிறது.
- நிதி மசோதாவானது அமைச்சரவையில் இருந்து தொடங்கும் பின்னர் குடியரசுத் தலைவர் பரிந்துரையுடன் மக்களவையில் அறிமுகப்படுத்தப்படும்.

7. நாடாளுமன்றத்தின் மூன்று பகுதிகள் யாவை?

நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

- குடியரசுத் தலைவர்
- இராஜ்ய சபை (மாநிலங்களவை)
- லோக்சபை (மக்களவை)

8. மாநிலங்களவை உறுப்பினராவதற்குரிய தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திருப்பித்தர முடியாதவராகவோ இருத்தல் சுடாது.
- நாடாளுமன்றத்தால் அவ்வப்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களவையிலோ (அ) எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

9. வயதுவந்தோர் வாக்குரிமை என்றால் என்ன?

- மக்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதில் வயது வந்தோர் வாக்குரிமை பின்பற்றப்படுகிறது.
- வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கத் தகுதியுடையவர் ஆவர்.

10. நாடாளுமன்ற கூட்டத் தொடர் கூட்டப்படுவது எப்போது?

- பட்ஜெட் கூட்டத் தொடர் - பிப்ரவரி முதல் மே வரை.
- மழைக் (பருவக்) காலக் கூட்டத் தொடர் - ஜூலை முதல் செப்டம்பர் வரை.
- குளிர் காலக் கூட்டத் தொடர் - நவம்பர் மற்றும் டிசம்பர்.

VI. விரிவான விடை தருக.

1. துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகள் யாவை?

- மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.
- மாநிலங்களவையின் மரபு ஒழுங்குமுறைகளை தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப் பெரிய பிரச்சனையின் போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்தி வைக்கவும் அல்லது முடிவுக்கு கொண்டு வரவும் செய்கிறார்.
- பல்வேறு குழுக்களுக்கு அதனுடைய செயல்பாடுகள் தொடர்பாக அவர் வழிமுறைகளை வழங்குகிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போது அல்லது நாட்டில் இல்லாத போது துணைக் குடியரசுத் தலைவர், குடியரசு தலைவரின் பணிகளைக் கவனிப்பார்.
- குடியரசுத் தலைவர் பதவியானது, அவரின் பணித்துறப்பு, இறப்பு இராஜதுரோக குற்றச்சாட்டின் மூலம் பணி நீக்கம் ஆகிய காரணங்களால் காலியாகும் பட்சத்தில் துணைக்குடியரசுத் தலைவர் அதிகபட்சமாக ஆறுமாத காலத்திற்கு அவரின் பணிகளைக் கவனிப்பார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

குடிமையியல்

அலகு 3

மாநில அரசு

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **மாநில ஆளுநரை நியமிப்பவர் _____.**
   அ) பிரதமர் ஆ) முதலமைச்சர்
   இ) குடியரசுத் தலைவர் ஈ) தலைமை நீதிபதி **விடை: இ) குடியரசுத் தலைவர்**

2. **மாநில சபாநாயகர் ஒரு _____.**
   அ) மாநிலத் தலைவர்
   ஆ) அரசின் தலைவர்
   இ) குடியரசுத் தலைவரின் முகவர்
   ஈ) மேற்கண்ட எதுவுமில்லை **விடை: ஈ) மேற்கண்ட எதுவுமில்லை**

3. **கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல?**
   அ) சட்டமன்றம் ஆ) நிர்வாகம்
   இ) நீதித்துறை ஈ) தூதரகம் **விடை: ஈ) தூதரகம்**

4. **ஆங்கிலோ-இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?**
   அ) குடியரசுத் தலைவர் ஆ) ஆளுநர்
   இ) முதலமைச்சர் ஈ) சட்டமன்ற சபாநாயகர் **விடை: ஆ) ஆளுநர்**

5. **ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?**
   அ) முதலமைச்சர்
   ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்
   இ) மாநில தலைமை வழக்குரைஞர்
   ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள் **விடை: ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள்**

6. **அமைச்சரவையின் தலைவர்**
   அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர்
   இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர் **விடை: அ) முதலமைச்சர்**

7. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது

அ) 25 வயது ஆ) 21 வயது
இ) 30 வயது ஈ) 35 வயது **விடை: இ) 30 வயது**

8. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?

அ) ஆந்திரப்பிரதேசம் ஆ) தெலுங்கானா
இ) தமிழ்நாடு ஈ) உத்திரப்பிரதேசம் **விடை: இ) தமிழ்நாடு**

9. இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்

அ) கல்கத்தா, பம்பாய், சென்னை
ஆ) டெல்லி மற்றும் கல்கத்தா
இ) டெல்லி, கல்கத்தா, சென்னை
ஈ) கல்கத்தா, சென்னை, டெல்லி **விடை: அ) கல்கத்தா, பம்பாய், சென்னை**

10. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?

அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா
ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத் **விடை: இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை _____ இடம் கொடுக்கிறார்.
விடை: குடியரசுத் தலைவர்
2. சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) _____ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
விடை: மக்கள்
3. _____ மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
விடை: ஆளுநர்
4. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் _____ ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும். **விடை: குடியரசுத் தலைவர்**

III. பொருத்துக.

1.	ஆளுநர்	-	அ) அரசாங்கத்தின் தலைவர்
2.	முதலமைச்சர்	-	ஆ) மாநில அரசின் தலைவர்
3.	அமைச்சரவை	-	இ) தீர்ப்பாயங்கள்
4.	மேலவை உறுப்பினர்	-	ஈ) சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்
5.	ஆயுதப் படையினர்	-	உ) மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது

விடை: 1.ஆ 2.அ 3.ஈ 4.உ 5.இ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

IV. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கூற்று : மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.
   காரணம் : குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.

அ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

விடை: ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

V. குறுகிய விடை தருக.

1. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் யாது?

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர்.
- மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
- பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது

2. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை?

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- அவர் 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- அவர் இலாபந்தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

3. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?

- சென்னை, மும்பை, கல்கத்தா நீதிமன்றங்கள், தங்களுக்கான அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன.
- அதே வேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.
- முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவைப் பெற்றுள்ளன.
- மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையயை பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

4. உயர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீவிர் புரிந்து கொண்டதென்ன?

- உயர்நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.
- நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

VI. விரிவான விடை தருக.

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

அமைச்சரவை தொடர்பானவை:

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

ஆளுநர் தொடர்பானவை:

கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

- மாநில அரசு வழக்குரைஞர்
- மாநில தேர்தல் ஆணையர்
- அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

சட்டமன்றம் தொடர்பானவை:

- சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களளை விவரி.

சட்டமன்ற அதிகாரங்கள்:

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார்.
- ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தை கூட்டவும் சட்டமன்றத்தை கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- தேர்தல் முடிந்து சட்டசபை அமைந்த முதல் கூட்டத் தொடரிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு முதல் கூட்டத்திலும் உரையாற்றுகின்றார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்துஸ்ரீ சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
- ஆங்கிலோ-இந்தியன்வகுப்பினரிலிருந்துஓர்உறுப்பினரைமாநிலசட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும் பொழுது சட்டமன்றத்தை தலைமைஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூகசேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்ட மேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.

3. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆய்க.

- மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப் படுத்துகிறது.
- சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
- நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்காக வரிக் கொள்கையை முடிவு செய்கிறது.
- முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
- மற்ற மாநிலங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
- மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
- ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
- அமைச்சரவையின், ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கிறது.
- ஆண்டு வரவு செலவுத் திட்டம், அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

VII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு.

1. மாநில அரசாங்கத்தின் நிர்வாக முறையை விளக்கும் ஒரு விளக்கப்படம் (Flow Chart) தயார் செய்க.



2. அண்டை மாநிலங்களின் முதலமைச்சர்கள் ஆளுநர்கள் பெயர்ப் பட்டியலோடு தமிழ்நாட்டின் முதலமைச்சர், ஆளுநர், அமைச்சர்களின் பெயரினைப் பட்டியலிடுக.

மாணவர் சுயசெயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் _____ ஆவார்.

அ) முதலமைச்சர் ஆ) பிரதம அமைச்சர்
இ) ஆளுநர் ஈ) குடியரசுத் தலைவர் **விடை: இ) ஆளுநர்**

2. மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறும் அரசியல் அமைப்புப் பிரிவு _____.

அ) 157 ஆ) 163
இ) 169 ஈ) 154 **விடை: ஈ) 154**

3. தமிழ்நாடு சட்ட மேலவை நீக்கப்பட்ட ஆண்டு _____.

அ) 1986 ஆ) 1962
இ) 1956 ஈ) 1996 **விடை: அ)1986**

4. மாநிலத்தின் உண்மையான நிர்வாகி _____.

அ) பிரதமர் ஆ) முதலமைச்சர்
இ) ஆளுநர் ஈ) குடியரசுத் தலைவர் **விடை: இ) ஆளுநர்**

5. ஆளுநராக பதவி ஏற்பவர் _____ வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
அ) 30 ஆ) 45
இ) 35 ஈ) 40 **விடை: இ) 35**

6. அவசர நிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, நேரடியாக ஆட்சி செய்பவர் _____.
அ) ஆளுநர் ஆ) அமைச்சர்
இ) பிரதமர் ஈ) குடியரசுத் தலைவர் **விடை: அ) ஆளுநர்**

7. தற்போது உள்ள உயர்நீதிமன்றங்களின் எண்ணிக்கை _____.
அ) 25 ஆ) 28
இ) 31 ஈ) 33 **விடை: அ) 25**

8. உலகிலேயே இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகம் _____.
அ) மும்பை உயர்நீதிமன்றம் ஆ) சென்னை உயர்நீதிமன்றம்
இ) கொல்கத்தா உயர்நீதிமன்றம் ஈ) லண்டன் உயர்நீதிமன்றம்
விடை: ஆ) சென்னை உயர்நீதிமன்றம்

9. மாநில ஆளுநராக, ஒருவர் _____ வயதை நிறைவு செய்ய வேண்டும்.
அ) 35 ஆ) 30
இ) 25 ஈ) 18 **விடை: அ) 35**

10. _____ சமுதாயத்திலிருந்து மாநிலச் சட்டமன்றத்திற்கு ஒரு உறுப்பினரை ஆளுநர் நியமிப்பார்.
அ) இந்திய ஆ) ஆங்கிலோ-இந்தியன்
இ) வெளிநாட்டு ஈ) கல்வியாளர் **விடை: ஆ) ஆங்கிலோ-இந்தியன்**

11. _____ மாநில அரசின் தலைவர்.
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர்
இ) பிரதமர் ஈ) குடியரசுத் தலைவர் **விடை: அ) முதலமைச்சர்**

12. _____ மாநில சட்டமன்றத்திற்கு கூட்டாகப் பொறுப்பானது.
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர்
இ) அமைச்சரவை ஈ) சபாநாயகர் **விடை: இ) அமைச்சரவை**

13. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை _____ பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது.
அ) பொருளாதாரத்தை ஆ) பகுதியை
இ) மக்கள் தொகை ஈ) கல்வியை **விடை: இ) மக்கள் தொகை**

14. சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் _____ மிகாமல் இருக்க வேண்டும்.
அ) 3 இல் 1 பங்குக்கு ஆ) 2 இல் 1 பங்குக்கு
இ) 4 இல் 3 பங்குக்கு ஈ) 4 இல் 3 பங்குக்கு **விடை: அ) 3 இல் 1 பங்குக்கு**

15. _____ மாநிலங்களின், இரண்டு சட்டமன்றம் உள்ளது.
அ) 13 ஆ) 11
இ) 9 ஈ) 7 விடை: ஈ) 7

16. சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் _____ நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரை பதவி நீக்கம் செய்யலாம்.
அ) 14 ஆ) 30
இ) 7 ஈ) 15 விடை: அ) 14

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையம் _____.
விடை: மாநில சட்டமன்றம்

2. தமிழக சட்டமன்றம் _____ உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
விடை: 234

3. மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் _____.
விடை: 5

4. சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் _____ நியமிக்கப் படுகிறார்.
விடை: முதலமைச்சராக

5. முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையில் _____ விழுக்காட்டைத் தாண்டக் கூடாது.
விடை: 15

6. உலகிலேயே முதல் பெரிய நீதித்துறை வளாகம் _____ உயர்நீதிமன்றம்.
விடை: இலண்டன்

7. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிக பட்சம் _____ மிகாமலும் இருக்க வேண்டும்.
விடை: 500க்கு

8. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சம் _____ க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.
விடை: 60

9. _____ என்ற சிறிய அமைப்பானது அமைச்சரவையின் உட்கரு ஆகும்.
விடை: அமைச்சரவை

10. _____ இல் உயர்நீதிமன்றங்கள் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன.
விடை: 1862

11. மாநிலத்தின் பெயரளவுத் தலைவர் _____.
விடை: ஆளுநர்

12. _____ பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்க முடியும்.
விடை: அமைச்சரவை

13. மாநில நிதிக்குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்பவர் _____.
விடை: ஆளுநர்

14. 2019 இன் படி இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றங்களின் எண்ணிக்கை _____.
விடை: 25

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

15. சட்டமன்றம் நடை பெறாத பொழுது அவசர சட்டத்தை பிறப்பிப்பவர் _____.

விடை: ஆளுநர்

16. ஆண்டு வரவு செலவுத் திட்டம் _____ இறுதி செய்யப்படுகிறது.

விடை: அமைச்சரவையால்

III. பொருத்துக.

I

1.	விதான் பரிஷத்	- அ) சென்னை
2.	விதான் சபா	- ஆ) ஆளுநர்
3.	ராஜ் பவன்	- இ) சட்டமேலவை
4.	உயர் நீதிமன்றம்	- ஈ) சபாநாயகர்
5.	சட்டமன்றத்தை வழிநடத்துபவர்	- உ) சட்ட கீழவை

விடை: 1.இ 2.உ 3.ஆ 4.அ 5.ஈ

II

1.	M.L.A.	- அ) 6ஆண்டுகள்
2.	கர்நாடகம்	- ஆ) 5 ஆண்டுகள்
3.	M.L.C.	- இ) நிர்வாகத்தின் தலைவர்
4.	தமிழ்நாடு	- ஈ) ஈரவை
5.	முதலமைச்சர்	- உ) ஓரவை

விடை: 1.ஆ 2.ஈ 3.அ 4.உ 5.இ

IV. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. i) மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார்.
   ii) மாநில ஆளுநர், பிரதமரால் நியமனம் செய்யப்படுகிறார்.
   iii) பொதுவாக ஒருவர், சொந்த மாநிலத்தில் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார்.
   iv) ஒரு முறை நியமனம் செய்யப்பட்டால், ஆளுநரை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாற்ற முடியாது.

   அ) i), iv) சரி ஆ) iii), iv) சரி
   இ) i), iii) சரி ஈ) i), ii), iii) சரி **விடை: இ) i), iii) சரி**

2. i) ஒருவர் ஆளுநராக அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
   ii) 30வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
   iii) நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.
   iv) அவர் இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

   அ) i), ii), iv) சரி ஆ) i), iii), iv) சரி
   இ) i), iv) சரி ஈ) i), ii), iii) சரி **விடை: ஆ) i), iii), iv) சரி**

V. குறுகிய விடை தருக.

1. ஆளுநரின் சிறப்பு உரிமைகள் என்னென்ன?

- தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டுமென எண்ணுவதிலும், செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
- ஆளுநரின் பதிவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.
- ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றத்திலிருந்தும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.
- மாநில ஆளுநருக்கு எதிராக உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியாது.

2. முதலமைச்சர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் அல்லது பெரும்பான்மை பெற்ற கூட்டணி கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார்.
- ஒரு வேளை எந்த கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெறாத பொழுது அல்லது பெரும்பான்மை பெற்றவர்கள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க தவறும் பொழுது ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி அடுத்ததாக பெரும்பான்மை பெற்ற பெரிய கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பார்.

3. அமைச்சரவை சிறு குறிப்பு வரைக.

- அமைச்சரவை, மாநில சட்டமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பானது அமைச்சரவை குழு அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
- சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்கும் பொழுது, 6 மாதக் காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும்.
- முதலமைச்சரின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும்.
- முதலமைச்சர் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கிறாரே அதுவரை அமைச்சரவை தொடரும்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.

4. ஈரவை சட்டமன்றங்களை கொண்ட மாநிலங்கள் எவை?

- பீகார்
- கர்நாடகா
- மகாராஸ்டிரா
- உத்திரப்பிரதேசம்
- ஆந்திரப்பிரதேசம்
- தெலுங்கானா
- ஜம்மு-காஷ்மீர்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. கீழ் அவை குறிப்பு வரைக.

- மாநில சட்டமன்றம் பிரபலமான ஓர் அவை இதுவே மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையமாகும்.
- இது வயது வந்தவர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தோந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு, மாநிலம் வேறுபடுகிறது.
- இருப்பினும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 500 க்கு மிகாமலும் குறைந்த பட்சம் 60 க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.
- சட்டமன்றத்தின் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் 5 ஆண்டுகள் முடியும் முன்னே சட்டமன்றம் கலைக்கப்படலாம்.

6. சபாநாயகர் தமது பதவியை எப்போது இழப்பார்?

- சபாநாயகர் தனது பதவியை இராஜிநாமா செய்தால் தொடர்ந்து சபாநாயகராக இருக்க முடியாது.
- சபாநாயகர் எந்நேரத்திலும் இராஜிநாமா செய்யலாம்.
- சட்டமன்றத்தின் தீர்மானத்தால் 14 நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரை பதவி நீக்கம் செய்யலாம்.
- அதற்கு முன் சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் அவைக்கு வந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.
- சட்டமன்றம் கலைக்கப்படும் பொழுது சபாநாயகர் தமது பதவியை இழக்க மாட்டார்.

7. சட்ட மேலவையின் தேர்தல் எவ்வாறு நடத்தப்படுகிறது?

- மூன்றில் ஒரு 1 உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றில் 1 பங்கு (1/3) உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- ஆறில் 1 பங்கு (1/6) உறுப்பினர்கள் கலை, இலக்கியம் அறிவியல், சமூக சேவை மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

8. உயர்நீதி மன்றங்கள் குறிப்பு வரைக.

- 1862 இல் உயர்நீதிமன்றங்கள் கல்கத்தாவில் பம்பாய் மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன.

- 1950 க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர்நீதி மன்றங்கள் மற்ற மாநிலங்களுக்கும் உயர்நீதிமன்றமாக விளங்கியது. மாநில அளவில் உயர்நீதி மன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றங்களாகும்.
- 1956 ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர்நீதி மன்றத்தை நிறுவ பாராளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.
- தற்போது 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன.

V. விரிவான விடை தருக.

1. ஆளுநர்க்குரிய தகுதிகள் மற்றும் நியாமனம் பற்றி விவரி.

ஆளுநர்:

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்பு தலைவர் ஆளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
- பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். அரசிலமைப்பு பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது.
- பிரிவு 154(1) ன் படி மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் இருக்க வேண்டும்.

ஆளுநரின் தகுதி:

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- அவர் 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்
- அவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- அவர் இலாபந்தரும் எந்த தொழிலும் ஈடுபடக் கூடாது.

நியமனம்:

- மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும். வழக்கமாக அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம்.
- குடியரசுத் தலைவருக்கு தனது பணித் துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் அந்நேரத்திலும் பதவு விலகலாம்.
- ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர், தான் எந்த மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட உள்ளாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம் ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

குடிமையியல்

அலகு 4

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?**
   அ) பாதுகாப்பு அமைச்சர்
   ஆ) பிரதம அமைச்சர்
   இ) வெளி விவகாரங்கள் அமைச்சர்
   ஈ) உள்துறை அமைச்சர்
   விடை: இ) வெளி விவகாரங்கள் அமைச்சர்

2. **எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?**
   அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
   இ) இந்தியா மற்றும் சீனா ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா
   விடை: இ) இந்தியா மற்றும் சீனா

3. **இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?**
   அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு 51
   இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53
   விடை: ஆ) சட்டப்பிரிவு 51

4. **இன ஒதுக்கல் கொள்கை என்பது**
   அ) ஒரு சர்வதேச சங்கம்
   ஆ) இராஜதந்திரம்
   இ) ஒரு இனப் பாகுபாட்டுக்கொள்கை
   ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை
   விடை: இ) ஒரு இனப் பாகுபாட்டுக்கொள்கை

5. **1954 இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.**
   அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
   இ) கலாச்சார பரிமாற்றங்கள் ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்
   விடை: ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

6. **நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?**

அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி
இ) இனச் சமத்துவம் ஈ) காலனித்துவம் **விடை: ஈ) காலனித்துவம்**

7. **கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?**

அ) யூகோஸ்லாவியா ஆ) இந்தோனேசியா
இ) எகிப்து ஈ) பாகிஸ்தான் **விடை: ஈ) பாகிஸ்தான்**

8. **பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி.**

அ) சமூக நலம் ஆ) சுகாதாரம்
இ) ராஜதந்திரம் ஈ) உள்நாட்டு விவகாரங்கள்

விடை: இ) ராஜதந்திரம்

9. **அணிசேராமை என்பதன் பொருள்**

அ) நடுநிலைமை வகிப்பது
ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
இ) இராணுவமயமின்மை
ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

விடை: ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்

10. **இராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது**

அ) ஆற்றல் பாதுகாப்பு ஆ) நீர் பாதுகாப்பு
இ) தொற்றுநோய்கள் ஈ) இவை அனைத்தும் **விடை: ஈ) இவை அனைத்தும்**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் _____.

விடை: பொக்ரான்

2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான _____ உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது.

விடை: உள் முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில்நுட்பம்

3. _____ என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும். **விடை: இராஜதந்திரம்**

4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை _____. **விடை: அணிசேராக்கொள்கை**

5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் _____ நடைமுறைப்படுத்துவதாகும்.

விடை: படை வலிமை குறைப்பு

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

III. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) பஞ்சசீலம்
(ii) சீனாவின் அணுவெடிப்புச் சோதனை
(iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
(iv) இந்தியாவின் முதல் அணுவெடிப்புச் சோதனை

அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv)
இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv) **விடை: அ) (i), (iii), (iv), (ii)**

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?

(i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப் பட்டது.
(ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளி விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்.
(iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
(iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.

அ) (i) மற்றும் (ii) ஆ) (iii) மற்றும் (iv)
இ) (ii) மட்டும் ஈ) (iv) மட்டும் **விடை: இ) (ii) மட்டும்**

3. கீழ்க்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா / தவறா என எழுதுக.

அ) பனிப்போரின் போது சர்வதேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது. **விடை: சரி**

ஆ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது. **விடை: தவறு**

இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது. **விடை: சரி**

4. கூற்று : 1971 இல் இந்தோ - சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.
காரணம் : இது 1962 இன் பேரழிவுகரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

விடை: இ) கூற்று சரி காரணம் தவறு

5. கூற்று : இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.
காரணம் : உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா ஆகும்.

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

விடை: ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

6. **இந்தியா சுதந்திரத்திற்குப் பின்னர் இராணுவ முகாம்களில் இணைவதைத் தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில், இந்தியா இதனை / இவைகளை மீட்கவேண்டி இருந்தது.**

அ) கடுமையான வறுமை
ஆ) எழுத்தறிவின்மை
இ) குழப்பமான சமூக பொருளாதார நிலைமைகள்
ஈ) மேற்கூறிய அனைத்தும் **விடை: ஈ) மேற்கூறிய அனைத்தும்**

IV. பொருத்துக.

1.	இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது	- அ) 1955
2.	தென் கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம்	- ஆ) 1954
3.	பஞ்சசீலம்	- இ) மாலத்தீவுகள்
4.	ஆப்பிரிக்க - ஆசிய மாநாடு	- ஈ) வெளியுறவுக் கொள்கை
5.	உலக அமைதி	- உ) மியான்மர்

விடை: 1.இ 2.உ 3.ஆ 4.அ 5.ஈ

V. குறுகிய விடை தருக.

1. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?

வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களில் தனது தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இரு தரப்பு மற்றும் பல தரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும்.

2. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.

- நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் படை வலிமைக் குறைப்பை நடைமுறைப்படுத்துவது ஆகும்.
- உலக அளவில் ஆயுதப் பெருக்கத் தடை இந்தியாவின் அணுக் கொள்கையில் மேலோங்கிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது.
- இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது.

இந்தியாவின் அணுக் கொள்கையின் இரண்டு மையக் கருத்துகள்:

- முதலில் பயன்படுத்துவதில்லை.
- குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத்திறன்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. வேறுபடுத்துக: உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை.

எண்	உள்நாட்டுக் கொள்கை	வெளிநாட்டுக் கொள்கை
1.	உள்நாட்டு கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாக கொண்டுள்ள கொள்கையாகும்.	வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானதாகும்.
2.	இது உள்விவகாரங்கள், சமூக நலம், சுகாதாரம், கல்வி, குடியியல் உரிமைகள், பொருளாதார விவகாரங்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது.	வணிகம், அரச தந்திரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு, உளவுத் துறை மற்றும் உலகளாவிய சூழல் ஆகிய வகைகளை கொண்டது வெளிநாட்டுக் கொள்கை.

4. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.

- ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையாண்மையும் மதித்தல்.
- பரஸ்பர ஆக்கரமிப்பின்மை.
- உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.
- அமைதியாக சேர்ந்திருத்தல்.

5. இந்தியா அணிசேராக் கொள்கையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?

- நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவில் புதிதாக தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார்.
- எனவே பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத்ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியை தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க இந்தியா முயன்றது.

6. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.

- ஆப்கானிஸ்தான்
- நேபாளம்
- வங்காளதேசம்
- மாலத்தீவுகள்
- பூடான்
- பாகிஸ்தான்
- இந்தியா
- இலங்கை

7. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?

- இந்தியா - ஜவகர்லால் நேரு
- யூகோஸ்லாவியா - டிட்டோ
- எகிப்து - நாசர்
- இந்தோனேசியா - சுகர்னோ
- கானா - குவாமே நிக்ரூமா

8. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

- உடன்படிக்கைகள்
- நிர்வாக ஒப்பந்தங்கள்
- தூதுவர்களை நியமித்தல்
- வெளிநாட்டு உதவி
- சர்வதேச வணிகம்
- ஆயுதப் படைகள்

VI. விரிவான விடை தருக.

1. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

- 'அணிசேரா இயக்கம்' என்ற சொல் 1953 இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.
- இதன் நோக்கம் ராணுவக் கூட்டணியில் சேராமல் வெளி நாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தை பராமரித்தலாகும்.
- அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும், 17 நாடுகளை பார்வையாளராகவும், 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:

- இந்தியா - ஜவகர்லால் நேரு
- யூகோஸ்லாவியா - டிட்டோ
- எகிப்து - நாசர்
- இந்தோனேசியா - சுகர்னோ
- கானா - குவாமே நிக்ரூமா

2. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?

- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு.
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை.
- இயற்கை வளங்கள்.
- பொருளாதார வளர்ச்சியின் அவசியம்.
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு.
- அமைதிக்கான அவசியம், ஆயுதகுறைப்பு,
- அணு ஆயுதப் பெருக்கத்தடை.
- ராணுவ வலிமை.
- சர்வதேச சூழ்நிலை.

3. அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஏதேனும் இரு கொள்கைகளை விவரி.

- தேசிய நலனைப் பேணுதல்.
- உலக அமைதியை எய்துதல்.
- ஆயுதக்குறைப்பு.
- பிறநாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- அமைதியான வழிகளில் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு.
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்.
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு.

VII. செயல்பாடு.

1. நீங்கள் முடிவு எடுப்பவராக இருந்தால் தக்க வைத்துக்கொள்ள விரும்பும் அல்லது மாற்றம் செய்ய விரும்பும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் ஏதேனும் இரண்டு அம்சங்களை அடையாளம் காணவும்.

ஆசிரியர் - மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. பஞ்சசீலம் (5) கொள்கை என்பது _____ ஆம் ஆண்டு கையெழுத்தானது.

அ) 1954 ஆ) 1964
இ) 1944 ஈ) 1854

விடை: அ) 1954

2. _____ என்பது நாட்டு மக்களின் சிறந்த நலன்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கையைப் பாதுகாக்க முயல்கிறது.

அ) அரச தந்திரம் ஆ) வெளியுறவுக் கொள்கை
இ) படை வலிமை ஈ) உள்நாட்டு கொள்கை

விடை: ஆ) வெளியுறவுக் கொள்கை

3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் _____ இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வரையறுக்கிறது.

அ) சட்டப்பிரிவு 21 ஆ) சட்டப்பிரிவு 51
இ) சட்டப்பிரிவு 48 ஈ) சட்டப்பிரிவு 61

விடை: ஆ) சட்டப்பிரிவு 51

4. வெளியுறவு அமைச்சகம் என்பதன் மறுபெயர் _____ ஆகும்.

அ) இந்திய உள்துறை அமைச்சரவை
ஆ) இந்திய வெளிவிவகார அமைச்சரவை
இ) இந்திய பாதுகாப்பு அமைச்சரவை
ஈ) இவற்றில் எதுவுமில்லை

விடை: ஆ) இந்திய வெளிவிவகார அமைச்சரவை

5. இந்திய வெளிநாட்டு சேவை பயிற்சி நிறுவனம் எப்பொழுது நிறுவப்பட்டது?

அ) 1976 ஆ) 1996
இ) 1986 ஈ) 1886

விடை: இ) 1986

6. _____ அணிசேரா இயக்கம் என்ற வழியை தேர்ந்தெடுத்தார்.
அ) லால் பகதூர் சாஸ்திரி ஆ) இராஜாஜி
இ) காந்தியடிகள் ஈ) ஜவஹர்லால் நேரு **விடை: ஈ) ஜவஹர்லால் நேரு**

7. பஞ்சசீலம் கொள்கைகள் _____ பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
அ) பாண்டுங் ஆ) டாக்கா
இ) இங்கிலாந்து ஈ) கொழும்பு **விடை: அ) பாண்டுங்**

8. சார்க் நாடுகளின் கூட்டமைப்பு என்பது _____ நாடுகளின் பொருளாதார மற்றும் புவி அரசியல் அமைப்பாகும்.
அ) பத்து ஆ) ஐந்து
இ) எட்டு ஈ) ஒன்று **விடை: இ) எட்டு**

9. சார்க் அமைப்பின் தொடர் பேரிடர் மேலாண்மை மையம் _____யில் அமைக்கப்பட்டுள்ளது.
அ) டாக்கா ஆ) புதுடெல்லி
இ) கொழும்பு ஈ) இஸ்லாமாபாத் **விடை: ஆ) புதுடெல்லி**

10. _____ சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள் அல்ல.
அ) இந்தியா ஆ) மியான்மார்
இ) இலங்கை ஈ) பாகிஸ்தான் **விடை: ஆ) மியான்மார்**

11. சார்க் பிராந்தியத்திற்கான _____ சார்க் அமைப்பு செயற்கைக்கோளை செலுத்தியுள்ளது.
அ) கனிமத்திற்காக ஆ) செய்தி தொடர்பு மற்றும் வானிலைக்காக
இ) நிலவிற்காக ஈ) எதுவுமில்லை
விடை: ஆ) செய்தி தொடர்பு மற்றும் வானிலைக்காக

12. அணிசேரா இயக்கமானது _____ உறுப்பு நாடுகளையும், _____ சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.
அ) 120, 8 ஆ) 130, 8
இ) 130, 10 ஈ) 120, 10 **விடை: ஈ) 120, 10**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முகாம்களில் சேர்வது அவசியமாயிற்று. **விடை: ஐக்கிய சோசலிச குடியரசு (USSR)**

2. அணிசேரா இயக்கம் என்ற வழியை தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றவர் _____.
விடை: ஜவகர்லால் நேரு

3. 'அணிசேரா இயக்கம்' என்ற சொல் _____ என்பவரால் உருவாக்கப்பட்டது.
விடை: வி. கிருஷ்ண மேனன்

4. _____ என்பது மிகப்பெரிய அரசியல் குழுவாக விளங்குகிறது.
விடை: அணிசேரா இயக்கம்

5. இந்திய _____ கொள்கையின் முதன்மையான பணி இந்தியாவின் உள்நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும்.
விடை: வெளியுறவுக்

6. 1974 மற்றும் 1998 என்பது _____ சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவையாகும்.
விடை: ஹிணுசோதனைகள்

7. ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் ஒரு நிரந்தர உறுப்பு நாடாக _____ இருக்க விரும்புகிறது.
விடை: இந்தியா

8. _____ இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் (ASEAN) பாலமாக உள்ளது.
விடை: மியான்மர்

9. பொக்ரான் (இராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை _____ ஆம் ஆண்டு நடைபெற்றது.
விடை: 1998

III. பொருத்துக.

1.	பஞ்சசீலம்	-	அ) ஜவஹர்லால் நேரு
2.	இந்திய - அமெரிக்க	-	ஆ) 1961
3.	பன்முகக் கூட்டம்	-	இ) 5 கொள்கை
4.	அணிசேரா இயக்கம்	-	ஈ) 210 உறுப்பு
5.	இந்தியா	-	உ) அணுசக்தி ஒப்பந்தம்

விடை: 1.இ 2.உ 3.ஈ 4.ஆ 5.அ

IV. குறுகிய விடை தருக.

1. வெளியறவு அமைச்சகம் பற்றி குறிப்பு வரைக.

- வெளியறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளை பொறுப்பேற்று நடத்துகிறது.
- 1986 ஆம் ஆண்டு புதுடெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டு சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவு சேவை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது.

2. அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் யாவை?

அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்.

3. நமது வெளியுறவுக் கொள்கையில் முக்கிய நோக்கங்கள் சிலவற்றைக் கூறுக.

- தேசிய பாதுகாப்பு.
- தேசிய வளமை.
- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்.
- பொருளாதார வளர்ச்சி.

4. இராஜதந்திரம் - குறிப்பு வரைக.

இராஜதந்திரம் என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

5. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நிலைப்பாடுகள் பற்றி குறிப்பு வரைக.

- காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆதரவளித்தல்.
- தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறியை கடுமையாக எதிர்த்தல்.
- பாதுகாப்பு, ஆயத்த நிலைமையின் முக்கியத்துவத்தை எதிர்கொள்ளுதல்.

6. இந்திய வெளியுறவு கொள்கையின் புதிய மாற்றங்கள் யாவை?

- சீனாவுடனான நட்புறவு - கிழக்கு நோக்கு கொள்கை (1992).
- பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998).
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு.

V. விரிவான விடை தருக.

1. 1990 மற்றும் இருபதாம் நூற்றாண்டு பற்றிய புதிய மாற்றங்கள் யாவை?

- 1990களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் மேற்கத்திய நாடுகளின் ஆதரவோடு ஒரு புதிய உலகளாவிய பொருளாதார கொள்கை (தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்) எழுச்சி பெற்றது.
- புதிய பொருளாதார ஒழுங்கும் ஒரு துருவ உலகமும் (அமெரிக்க ஐக்கிய நாடுகள் மையமாக) இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களின் வெளியுறவு மற்றும் பொருளாதார கொள்கைகளை மாற்றியமைக்க வலியுறுத்தின.
- இந்தியா உலகப் பொருளாதார மன்றத்துடன் (GATT) ஓர் ஒப்பந்தத்தில் சேர்ந்ததோடு இருதரப்பு, முத்தரப்பு, பலதரப்பு ஒப்பந்தங்களிலும் இணைந்துள்ளது.
- இந்தியாவின் அணு ஆயுத சோதனைகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து அச்சுறுத்தும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தின.

இந்திய வெளியுறவு கொள்கை பின்வரும் பல்வேறு வகைகளில் மாற்றம் கொண்டது.

- சீனாவுடனான நட்புறவு கிழக்கு நொக்கு கொள்கை (1992).
- பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998).
- இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களை கொள்முதல் செய்தலுக்கான உறவு.
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு.
- அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்.
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு.

குடிமையியல்

அலகு 5
இந்தியாவின் சர்வதேச உறவுகள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?

அ) பர்மா - இந்தியா ஆ) இந்தியா - நேபாளம்
இ) இந்தியா - சீனா ஈ) இந்தியா - பூடான் **விடை: இ) இந்தியா - சீனா**

2. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?

1) ஜி 20 2) ஏசியான் (ASEAN)
3) சார்க் (SAARC) 4) பிரிக்ஸ் (BRICS)

அ) 2 மட்டும் ஆ) 2 மற்றும் 4
இ) 2, 4 மற்றும் 1 ஈ) 1, 2 மற்றும் 3 **விடை: அ) 2 மட்டும்**

3. ஒபெக் (OPEC) என்பது

அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம்
ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு
ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

விடை: இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

4. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?

அ) வங்காளதேசம் ஆ) மியான்மர்
இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா **விடை: அ) வங்காளதேசம்**

5. பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

i) சல்மா அணை - 1. வங்காளதேசம்
ii) பராக்கா ஒப்பந்தம் - 2. நேபாளம்
iii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம் - 3. ஆப்கானிஸ்தான்
iv) சாரதா கூட்டு மின்சக்தித் திட்டம் - 4. பூடான்

அ) 3 1 4 2 ஆ) 3 1 2 4
இ) 3 4 1 2 ஈ) 4 3 2 1 **விடை: அ) 3 1 4 2**

6. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) 5 ஆ) 6
இ) 7 ஈ) 8 **விடை: இ) 7**

7. எந்த இரண்டு தீவுநாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும்?
அ) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள்
ஆ) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்
இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு
ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவுகள் **விடை: ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவுகள்**

8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?
அ) அருணாச்சலப் பிரதேசம் ஆ) மேகாலயா
இ) மிசோரம் ஈ) சிக்கிம் **விடை: ஈ) சிக்கிம் ★ அ) மற்றும் ஈ)**

9. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) 5 ஆ) 4
இ) 3 ஈ) 2 **விடை: அ) 5**

10. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்
அ) மவுண்ட்பேட்டன் பிரபு ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்
இ) கிளமன்ட் அட்லி ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை
விடை: ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு _____ ஆகும்.
விடை: பூடான்

2. இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக _____ இருக்கிறது.
விடை: மியான்மர்

3. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்படு நாடு _____ ஆகும்.
விடை: நேபாளம்

4. இந்தியாவிற்குச் சொந்தமான _____ என்ற பகுதி மேற்கு வங்காளம் - வங்காளதேச எல்லையில் அமைந்துள்ளது.
விடை: டீன்பிகா

5. இடி மின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு _____ ஆகும்.
விடை: பூடான்

6. இந்தியாவும் இலங்கையும் _____ ஆல் பிரிக்கப்படுகின்றன.
விடை: பாக்நீர்ச்சந்தி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

III. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின்வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?

1. சாலை
2. ரயில் வழி
3. கப்பல்
4. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) 1, 2 மற்றும் 3 ஆ) 1, 3 மற்றும் 4
இ) 2, 3 மற்றும் 4 ஈ) 1, 2, 3 மற்றும் 4 **விடை: ஆ) 1, 3 மற்றும் 4**

2. கூற்று : இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியைத் (International Solar Alliance) தொடங்கியுள்ளன.

காரணம் : இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.

அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு; காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

விடை: அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

3. பின்வரும் கூற்றுகளில் எது / எவை உண்மையானவை?

1. இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழு, டாக்கா பல்கலைக்கழகத்தில் 'தாகூர் இருக்கை' ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது. **விடை: சரி**
2. மேற்கத்திய நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயில் மியான்மர் ஆகும். **விடை: தவறு**
3. நேபாளம், பூடான் ஆகியவை நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளாகும். **விடை: சரி**
4. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தின் ஒரு பங்குதாரர் நாடு இலங்கையாகும். **விடை: சரி**

அ) 1, 2 மற்றும் 3 ஆ) 2, 3 மற்றும் 4
இ) 1, 3 மற்றும் 4 ஈ) 1, 2 மற்றும் 4 **விடை: இ) 1, 3 மற்றும் 4**

4. கூற்று : இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒபெக் (OPEC) ஆர்வம் காட்டியுள்ளது.

காரணம் : தேவையான எண்ணெய் வளங்கள் இல்லாததால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று தவறு; காரணம் சரி.
இ) கூற்று, காரணம் இரண்டும் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

விடை: கூற்று, காரணம் இரண்டும் சரி.

III. பொருத்துக.

1.	பிராண்டிக்ஸ் (Brandix)	- அ) வியன்னா
2.	தகவல்தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA)	- ஆ) ஜப்பான்
3.	ஷிங்கன்சென்	- இ) ஷாங்காய்
4.	பிரிக்ஸ் (BRICS)	- ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
5.	ஒபெக் (OPEC)	- உ) விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம்

விடை: 1.உ 2.ஈ 3.ஆ 4.இ 5.அ

V. குறுகிய விடை தருக.

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.

- பாகிஸ்தான்
- வங்காள தேசம்
- ஆப்கானிஸ்தான்
- மியான்மர்
- சீனா
- இலங்கை
- நேபாளம்
- மாலத்தீவு
- பூடான்

2. போர்த் திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) பற்றிய சிறு குறிப்பு வரைக.

- இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) மூலம் வலிமை பெற்றுள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தானின் உள் கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லாமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழி கோலுகிறது.

3. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

- பிரேசில்
- ரஷ்யா
- இந்தியா
- சீனா
- தென்னாப்பிரிக்கா

4. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது என்ன?

- கொல்கத்தாவை மியான்மரில் உள்ள சிட்டவேயுடன் இணைப்பதற்காக சாலை நதி துறைமுகம் சரக்கு போக்குவரத்து திட்டமான கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டத்தினை இந்தியா உருவாக்கி வருகிறது.

- தென்கடலில் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்காக கொல்கத்தா நகரை கோசிமின் உடன் இணைக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

5. சாபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

- சாபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இதன்படி சாபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழி தடங்கள் ஏற்படுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- இத்துறைமுகம் பாகிஸ்தானை தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

6. இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களைப் பட்டியலிடுக.

- ஐ.பி.எஸ்.ஏ (IBSA)
- பி.சி.ஐ.எம் (BCIM)
- எம்.ஜி.சி (MGC)
- ஈ.ஏ.எஸ் (EAS)
- பி.பி.ஐ.என் (BBIN)

7. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?

உற்பத்தித் துறையில் உற்பத்தி மற்றும் திறன் இந்தியா திட்டங்களில் பங்களிக்கவும் ஜப்பானிய உற்பத்தித் திறன்களை வழங்கி இந்தியாவின் உற்பத்தித் தொழில்துறை தளத்தை மேம்படுத்தவும் 30,000 இந்திய மக்களுக்கு பயிற்சி வழங்க ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

VI. விரிவான விடை தருக.

1. இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.

- இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும். வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது.
- புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நாடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.
- பல்வேறு சர்வதேச அமைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினராக இந்தியா செயல்படுவதோடு, அவற்றில் சிலவற்றின் நிறுவன உறுப்பினராகவும் இருந்து வருகிறது.
- இந்தியா முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளான ஐ.நா.சபை, அணிசேரா இயக்கம், சார்க், ஜி-20 மற்றும் காமன்வெல்த் போன்றவைகளில் உறுப்பினராக உள்ளது.
- இராணுவ மோதல்களை முடிவுக்கு கொண்டு வருவது மற்றும் நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற ஐ.நா. சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உதவுகிறது.

உலகளாவிய குழுக்களின் பெயர்கள்	உறுப்பினர் நாடுகள்	குறிக்கோள்கள்
ஐ.பி.எஸ்.ஏ (IBSA)	இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா.	வேளாண், கல்வி, ஆற்றல், வர்த்தகம், கலாச்சாரம் மற்றம் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது.
பி.சி.ஐ.எம் (BCIM)	வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர்.	இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல்களை சமாளிக்கவும், வணிக நலன் பாதுகாப்பிற்கும்.
எம்.ஜி.சி (MGC) (மீகாங் - கங்கா ஒத்துழைப்பு)	இந்தியா, கம்போடியா, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு, மியானமர், தாய்லாந்து, வியட்நாம்.	கங்கா-மீகாங் தாழ்நிலத்தில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

2. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.

பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் :

- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்கு போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

பிரிக்ஸின் நோக்கங்கள் :

- பிராந்திய வளர்ச்சியை அடைவது.
- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாகச் செயல்படுவது.
- மனித மேம்பாட்டிற்கு மிகப் பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்.
- அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்.
- வணிக ஒத்துழைப்பை அதிகரிக்க பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொள்ளுதல்.
- உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில் நுட்பங்களை பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.

3. **பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செள்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.**

பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டம்:

- அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்.
- எண்ணெய் சந்தையை நிலை நிறுத்த உதவுதல்.
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.
- எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்கு திறமையான, சிக்கனமான, வழக்கமான, வினியோகத்தை அளித்தல்.
- பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்.

ஒபெக் பிறநாடுகளுக்கு உதவி செய்தல்:

- பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி என்பது குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும்.
- இது சமூக மற்றும் மனிதாபிமான திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.
- புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது.
- இத்தகவல் மையம் பொதுமக்களாலும் பெரும்பாலும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

VII. செயல்பாடுகள்.

1. **உலக நாடுகளுடனான இந்தியாவின் உறவு குறித்துச் செய்தித்தாள்களில் இருந்து தகவல்களைச் சேகரிக்க மாணவர்களிடம் கூறலாம்.**

மாணவர் செயல்பாடு.

2. **இந்தியா அதன் அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள சமீபத்தியத் திட்டங்கள் குறித்து படங்களுடன் ஒரு ஆல்பம் தயாரிக்க குழுத் திட்டமாக மாணவர்களிடம் கொடுக்கலாம்.**

மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இலங்கை, _____ மாலத்தீவு போன்ற இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்துள்ள நாடுகளும் இந்தியப் பெருங்கடலால் பிரிக்கப்பட்டுள்ளன.
   அ) தென்மேற்கில் ஆ) வடகிழக்கில்
   இ) தென்கிழக்கில் ஈ) வடமேற்கில் **விடை: அ) தென்மேற்கில்**

2. வங்காளதேசத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு _____ ஆகும்.
   அ) இலங்கை ஆ) இந்தியா
   இ) நேபாளம் ஈ) பூடான் **விடை: ஆ) இந்தியா**

3. இந்தியாவும் வங்கதேசமும் _____ கி.மீ. நீளம் கொண்ட மிக நீண்ட நிலப்பரப்பை எல்லையாக பகிர்ந்துக் கொள்கின்றன.
   அ) 4056.7 ஆ) 4096.7
   இ) 4066.7 ஈ) 4069.7 **விடை: ஈ) 4069.7**

4. பராக்க ஒப்பந்தம் என்பது _____ நீரை பகிர்ந்து கொள்ள 1977இல் கையெழுத்தான ஒரு வரலாற்று ஒப்பந்தம்.
   அ) கங்கை ஆ) யமுனா
   இ) பிரம்மபுத்திரா ஈ) கோசி **விடை: அ) கங்கை**

5. இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் பொதுவாக உள்ள நதிகள் _____.
   அ) 54 ஆ) 36
   இ) 45 ஈ) 63 **விடை: அ) 54**

6. நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அமைதியை பின்பற்றவதை முன்னரே ஆதரித்தவர் _____ ஆவர்.
   அ) மகாவீரர் ஆ) புத்தர்
   இ) அக்பர் ஈ) இவர்களில் யாருமில்லை **விடை: ஆ) புத்தர்**

7. இந்தியா மற்றும் பூடான் இடையேயான இராஜதந்திர உறவுகள் _____ ஆம் ஆண்டு தொடங்கியது.
   அ) 1957 ஆ) 1968
   இ) 1958 ஈ) 1967 **விடை: ஆ) 1968**

8. பூட்டானில் _____ மேம்பாட்டிற்கு இந்தியா முதன்மை பங்காற்றுகிறது.
   அ) பொருளாதாரம் ஆ) கல்வி
   இ) தொழில் ஈ) கலாச்சார **விடை: அ) பொருளாதாரம்**

9. இந்தியா மற்றும் _____ ஆகிய நாடுகள் கல்வி பரிமாற்ற திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.
அ) இலங்கை ஆ) சீனா
இ) வங்காளதேசம் ஈ) ஆப்கானிஸ்தான் **விடை: ஆ) சீனா**

10. _____ என்பது நமது எரிபொருள் தேவைகளான பெட்ரோலியம் மற்றும் எரிவாயுவிற்கு முக்கியப் பங்கு அளிக்கிறது.
அ) ஈரான் ஆ) மியான்மர்
இ) ஈராக் ஈ) சவுதி அரேபியா **விடை: ஆ) மியான்மர்**

11. இந்தியாவுடன் பாகிஸ்தான் எப்போதும் _____ மனப்பான்மையுடனே இருந்து வருகின்றது.
அ) நட்பு ஆ) விரோத
இ) பரஸ்பர ஈ) எதுவுமில்லை **விடை: ஆ) விரோத**

12. இந்தியாவும் _____யும் மரபுரீதியாக ஒன்றுக்கொன்று நெருங்கிய நிலையில் இருந்து வருகின்றன.
அ) இலங்கை ஆ) ஆப்கானிஸ்தான்
இ) ஈராக் ஈ) சீனா **விடை: அ) இலங்கை**

13. பிரிக்ஸ் அமைப்பில் தலைமையகம் சீனாவின் _____ நெருங்கிய நிலையில் இருந்து வருகின்றன.
அ) பீகிங் ஆ) நான்கிங்
இ) ஷாங்காய் ஈ) காண்டன் **விடை: இ) ஷாங்காய்**

14. _____ என்பது பல துறை வளர்ச்சி வங்கி ஆகும்.
அ) ரிசர்வ் வங்கி ஆ) கனரா வங்கி
இ) பாரத வங்கி ஈ) புதிய மேம்பாட்டு வங்கி (NDB)
விடை: ஈ) புதிய மேம்பாட்டு வங்கி (NDB)

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு _____ சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) மூலம் வலிமைப் பெற்றுள்ளது. **விடை: போர்த்திறம்**
2. பலுசிஸ்தான் பகுதியைச் சார்ந்தவர் இந்திய விடுதலை போராட்ட இயக்கத்தின் தலைவரான _____ ஆவார். **விடை: கான் அப்துல் கபார் கான்**
3. இந்தியாவிற்கும் _____ இடையேயான இரயில் போக்குவரத்து இந்தியா திட்டமிட்டுள்ளது. **விடை: வங்காளதேசத்திற்கும்**
4. ஒரு பத்மசம்பலா எனும் புத்தத் துறவி இந்தியாவிலிருந்து _____ சென்றார். **விடை: பூடானுக்கு**

5. மாலத்தீவு _____ இலட்சத்தீவுகளுக்கு தெற்கில் அமைந்துள்ளது.

விடை: இந்திய பெருங்கடலில்

6. இந்தியா தன் _____ மிக நீளமான எல்லை மியான்மர் நாட்டோடு பகிர்ந்துக் கொண்டுள்ளது.

விடை: இரண்டாவது

7. இந்தியாவே _____ பெரிய முதலீட்டாளராக திகழ்கிறது.

விடை: நேபாளத்தின்

8. இந்திய மற்றும் நேபாள மக்கள் _____ பயணங்களுக்காக இரு நாடுகளுக்கும் சென்று வருகின்றனர்.

விடை: ஆன்மீக

9. இந்திய நேபாள கூட்டு மின்சக்தித் திட்டம் கட்டப்பட்ட இடம் _____.

விடை: சாரதா ஆற்றின் குறுக்கே

10. இந்தியாவின் _____ திட்டத்தில் இலங்கை ஒரு பங்குதார நாடு ஆகும்.

விடை: நாளாந்தா பல்கலைக்கழகத்

11. COMCASA ஒப்பந்தம் _____ காலவரையறை கொண்டதாகும்.

விடை: 10 ஆண்டுகள்

12. சிந்துவெளி மற்றும் மெசபடோமியா நகரங்களுக்கு இடையே _____ ஏற்படுத்தப்பட்டிருந்தது.

விடை: வணிக உறவுகள்

III. பொருத்துக.

1. இந்தியா, ஆப்கானிஸ்தான்	-	அ) இந்தியப் பெருங்கடல்
2. மக்மகான் எல்லைக்கோடு	-	ஆ) ஷாங்காய்
3. மாலத்தீவு	-	இ) SPA (போர்திறன் சார்ந்தவை)
4. ராட்க்ளிஃப் கோடு	-	ஈ) இந்தியா, சீனா மற்றும் பூடான்
5. பிரிக்ஸ்	-	உ) கட்டுப்பாடுக்கோடு

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

IV. குறுகிய விடை தருக.

1. மக்மகான் எல்லைக் கோடு பற்றி குறிப்பு வரைக.

- இந்தியா, சீனா மற்றும் பூட்டானின் கிழக்கு பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும்.
- இது 1914ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
- பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. குரு பத்மசம்பவா பற்றி குறிப்பு வரைக.

- குரு பத்மசம்பவா எனும் புத்ததுறவி இந்தியாவிலிருந்து பூட்டானுக்கு சென்றார்.
- அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

3. கட்டுப்பாடுக்கோடு என்றால் என்ன?

- 1949ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக்கோடு 1972ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுக்கோடு என அழைக்கப்பட்டது.
- இது 1972ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும்.
- இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளிஃப்கோடு (சுயனஊடகைகந டுநேை) என்று அழைக்கப்பட்டது. (ராட்க்ளிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்)
- இக்கோடு தற்போது கட்டுப்பாடுக்கோடு என அழைக்கப்படுகிறது.

4. வளர்ச்சியடைந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் பற்றி விவரி.

- ஒரு வளர்ந்தநாடு என்பது இறையாண்மை கொண்ட நாடாகும்,
- இது மிகவும் வளர்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த தொழில் மயமான தேசத்துடன் ஒப்பிடும் போது மேம்பட்ட தொழில்நுட்ப உள் கட்டமைப்பை கொண்டுள்ளதும் ஆகும்.
- இந்தியா வல்லரசு நாடுகளுடன் மிக கவனத்துடன் தன்னை சம நிலைப்படுத்தி உள் நாட்டு வளர்ச்சிக்கான அதிக பலனைப் பெறுவதற்கு முயன்று வருகிறது.

5. இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் விவரி.

- இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும்.
- வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது.
- புதிதாக தொழில் மயமாக்கப்பட்ட நாடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.

6. பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் யாவை?

- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்கு போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

7. பிரிக்ஸ் நிதி கட்டமைப்பு பற்றி குறிப்பு வரைக.

- புதிய மேம்பாட்டு வங்கி என்பது பல துறை வளர்ச்சி வங்கி ஆகும். அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு கடன் வழங்குவதே இதன் முதன்மைச் செயலாகும்.

- தேசிய அளவில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களான சமூக சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த பொருளாதாரத் திட்டங்களுக்கு பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கு இது முன்னுரிமை வழங்குகிறது.

8. ஒபெக் எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன?

- பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி (ஓஐஎன்) என்பது குறைந்தவட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும்.
- இது சமூக மற்றும் மனிதாபிமான திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.
- புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது.

V. விரிவான விடை தருக.

1. வளர்ச்சியடைந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் பற்றி விவரி.

அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அமெரிக்காவும் இந்தியாவும் புதிய தலைமுறை இராணுவக் கூட்டாண்மைக்கு வழிவகுக்கும் தகவல் தொடர்பு, இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

ஆ. ஐரோப்பிய நாடுகள்

அனைத்து விவகாரங்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்து வருவதோடு குறிப்பாக பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, அணுசக்தி ஆற்றல், விண்வெளி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றம் அதிகரித்து வருகிறது.

இ. ஆஸ்திரேலியா

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் நம்பிக்கைக்குரிய திட்டங்களை பல ஆண்டுகளாக மெதுவாகவும், படிப்படியாகவும் ஏற்படுத்தி வருகின்றன. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒருங்கிணைந்து இந்திய ஆஸ்திரேலிய கடற்படை பயிற்சி (AUSINDEX) ஒத்திகையின் மூலம் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளன.

ஈ. ஜப்பான்

ஜப்பான் நாட்டின் ஷிங்கன்சென் (Shinkansen) முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்த முடிவு செய்தது. இது பாதுகாப்பு மற்றும் துல்லியத் தன்மை கொண்ட உயர்ந்த வகுப்பு அதிவேக ரயில் அமைப்பு ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சமூக அறிவியல்

10

பொருளியல்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

பொருளியல்

அலகு 1
மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. GNP யின் சமம்

அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP
ஆ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

விடை: இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

2. நாட்டு வருமானம் அளவிடுவது

அ) பணத்தின் மொத்த மதிப்பு
ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

விடை: ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது

அ) வேளாண்மை ஆ) தானியங்கள்
இ) வர்த்தகம் ஈ) வங்கி

விடை: அ) வேளாண்மை

4. _____ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

அ) செலவு முறை ஆ) மதிப்பு கூட்டு முறை
இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

விடை: ஆ) மதிப்பு கூட்டு முறை

5. GDP யில் எந்த துறை மூலம அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?

அ) வேளாண் துறை ஆ) தொழில் துறை
இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

விடை: இ) பணிகள் துறை

6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-19 இல் _____ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
அ) 91.06 ஆ) 92.26
இ) 80.07 ஈ) 98.29 **விடை: ஆ) 92.26**

7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா _____ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
அ) 1 வது ஆ) 3 வது
இ) 4 வது ஈ) 2 வது **விடை: ஈ) 2 வது**

8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் _____ ஆண்டுகள் ஆகும்.
அ) 65 ஆ) 60
இ) 70 ஈ) 55 **விடை: அ) 65**

9. கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?
அ) நீர்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை
விடை: ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை

10. இந்திய பொருளாதாரம் என்பது
அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்
ஆ) தோன்றும் பொருளாதாரம்
இ) இணை பொருளாதாரம்
ஈ) அனைத்தும் சரி **விடை: ஈ) அனைத்தும் சரி**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. இந்தியாவில் _____ துறை முதன்மை துறையாகும். **விடை: வேளாண்**
2. _____ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
விடை: தலா வருமானம்
3. இரண்டாம் துறையை வேறுவிதமான _____ துறை என அழைக்கலாம்.
விடை: தொழில்

III. பொருத்துக.

1.	மின்சாரம்/எரிவாயு மற்றும் நீர்	-	அ) நாட்டு வருமானம்/மக்கள் தொகை
2.	விலைக் கொள்கை	-	ஆ) மொத்த நாட்டு உற்பத்தி
3.	GST	-	இ) தொழில் துறை
4.	தலா வருமானம்	-	ஈ) வேளாண்மை
5.	C + I + G + (X – M)	-	உ) பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி

விடை: 1.இ 2.ஈ 3.உ 4.அ 5.ஆ

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

IV. குறுகிய விடை தருக.

1. நாட்டு வருமானம் - வரையறு.

- நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்திசெய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக.

- பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.
- பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.
- வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
- பொதுத் துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகின்றது.
- பொருளாதார திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.

4. தனி நபர் வருமானம் என்றால் என்ன?

- தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.
- தலா வருமானம் = $\frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.

- மதிப்பு கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால், இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சோக்கும்பொழுது பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

மதிப்புக் கூட்டு முறை:

டீத்தூள் + பால் + சர்க்கரை = தேனீர்

இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு

6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.

- வேளாண் கொள்கை
- தொழில் துறை கொள்கை
- புதிய பொருளாதாரக் கொள்கை
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
- உள்நாட்டு வர்த்தகக் கொள்கை
- வேலைவாய்ப்புக் கொள்கை
- நாணய மற்றும் வங்கிக் கொள்கை
- நிதி மற்றும் பணவியல் செய்தது.
- கூலிக் கொள்கை

7. சிறு குறிப்பு வரைக.

1) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)

2) மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)

1) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)

- 'GNH' என்ற வார்த்தையை 1972 இல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ணுக் என்ற பூட்டான் அரசர்.
- உளவியல் நலன், உடல்நலம், நேரப் பயன்பாடு, கல்வி, கலாச்சார பன்முகத்தன்மை, நல்ல ஆட்சித்திறன், சமூகத்தின் உயர்வு, சுற்றுச் சூழல் பன்முகத்தன்மை, வாழ்க்கைத்தரம் ஆகியவை GNH இன் 9 களங்களாகக் கருதப்படுகிறது.

2) மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)

- மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது 1990 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹப்-உல். ஹிக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம் GDP யின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

V. விரிவான விடை தருக.

1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

நாட்டு வருமானத்தை அளவிட தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள்:

1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP):

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.
- வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்)களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

3. நிகர நாட்டு உற்பத்தி (NNP):

- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

4. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP):

- நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) =
  மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

5. தலா வருமானம் (PCI):

- தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.
- தலா வருமானம் = $\frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

6. தனிப்பட்ட வருமானம் (PI):

- நேர்முக வரிவிதிப்பிற்கு தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

7. செலவிடத் தகுதியான வருமானம் (DI):

- தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.
- DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி

(நுகர்வு முறையில் DI = நுகர்வுச் செலவு + சேமிப்பு)

2. GDP கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

1. செலவின முறை:

- இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையேயாகும்.
- $Y = C + I + G + (X–M)$

2. வருமான முறை:

- பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.
- வருமானமுறையில் GDP ஐக் கணக்கிடும்போது
  வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

3. மதிப்பு கூட்டு முறை:

- மதிப்புக் கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும்பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

மதிப்புக் கூட்டு முறை:

டீத்தூள் + பால் + சர்க்கரை = தேனீர்

இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு

3. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.

1. முதன்மைத் துறை (விவசாயத்துறை):

- வேளாண்மைத் துறையை முதன்மைத்துறை எனவும் அழைக்கலாம்.
- இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் காடுகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும்.
- இவை, கால்நடை பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், நிலக்கரி போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறது.

2. இரண்டாம் துறை (தொழில் துறை)

- தொழில்துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். மூலப்பொருட்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம் பெட்ரோலியம், ஆட்டோமொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் ஆகும்.

3. மூன்றாம் துறை (பணிகள் துறை):

பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம். அவைகள் அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்றவைகளாகும்.

4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.

பொருளாதார வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் ஒப்பீடு	பொருளாதார வளர்ச்சி	பொருளாதார முன்னேற்றம்
கருத்து	பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து.	பொருளாதார முன்னேற்றம் ஒரு "பரந்த கருத்து".
அணுகுமுறை இயல்பு	அளவின் இயல்பு.	தரத்தின் இயல்பு.
காலவரம்பு	இயற்கையில் குறுகிய காலத்தை உடையது.	இயற்கையில் நீண்ட காலத்தை உடையது.
பொருந்தும் தன்மை	வளர்ந்த நாடுகள்.	வளர்ந்து வருகின்ற நாடுகள்.
நிகழ்வின் அதிர்வெண்	ஒரு குறிப்பிட்ட காலம்.	தொடர்ச்சியான செயல்முறை.

6. கீழ்க்கண்ட பொருளாதார கொள்கைகளை விவரி.

1) வேளாண் கொள்கை 2) தொழிற் கொள்கை 3) புதிய பொருளாதார கொள்கை

1. வேளாண் கொள்கை:

- உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதி பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும் நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.
- சில பரவலான கருப்பொருள்கள் இடர் மேலாண்மை மற்றும் சரிசெய்தல், பொருளாதார நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்நாட்டு பொருட்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண் கொள்கையில் அடங்கும்.

2. தொழிற்கொள்கை:

- தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அச்சமாகும். இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்ககுவிக்கிறது. இதனால் நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.
- உண்மையில், தொழில்துறை வளர்ச்சி, விவசாயத்துறை மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன.
- இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

3. புதிய பொருளாதார கொள்கை:

- 1990 களின் ஆரம்பத்தில் இந்தியாவின் பொருளாதாரம் கணிசமான கொள்கை மாற்றங்களுக்கு உட்பட்டது.
- இந்த புதிய பொருளாதார சீர்திருத்தம் பொதுவாக LPG அல்லது தாரளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.
- இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஓர் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்கிறது.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை _____ என்னும் பதத்தால் குறிப்பிடலாம்.

அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆ) மொத்த நாட்டு உற்பத்தி
இ) மொத்த நாட்டு வருமானம் ஈ) இவை எதுவும் அல்ல

விடை: அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

2. _____ என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.

அ) தனி மனித வருமானம்
ஆ) நாட்டு வருமானம்
இ) தனி மனித + நாட்டு வருமானம்
ஈ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

விடை: ஆ) நாட்டு வருமானம்

3. நிகர நாட்டு உற்பத்தி எவ்வாறு குறிப்பிடப்படும்?

அ) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி + தேய்மானம்
ஆ) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்
இ) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி / தேய்மானம்
ஈ) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி × தேய்மானம்

விடை: ஆ) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்

4. செலவிட தகுதியான வருமானம் என்பதை கீழ்க்கண்டவற்றுள் எவ்வாறு குறிக்கலாம்?

அ) தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி
ஆ) தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி
இ) தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி
ஈ) தனிப்பட்ட வருமானம் × நேர்முக வரி

விடை: ஆ) தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமான கணக்கீட்டு முறை எது சரியானது?**

அ) வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

ஆ) வருமானம் = கூலி + வாரம் – வட்டி + லாபம்

இ) வருமானம் = கூலி + வாரம் + வட்டி – லாபம்

ஈ) வருமானம் = கூலி + வாரம் – வட்டி – லாபம்

விடை: அ) வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

6. **GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாப்பது எது?**

அ) மத்திய புள்ளியியல் அமைப்பு

ஆ) மத்திய தகவல் தொலைத் தொடர்பு அமைப்பு

இ) மத்திய நிதி நிர்வாக அமைப்பு

ஈ) இவை எதுவும் அல்ல **விடை: அ) மத்திய புள்ளியியல் அமைப்பு**

7. **இந்திய பொருளாதாரத்தின் வேளாண்மைத் துறையை எவ்வாறு அழைக்கலாம்?**

அ) கடைநிலை துறை ஆ) இரண்டாம் துறை

இ) மூன்றாம் துறை ஈ) முதன்மை துறை **விடை: ஈ) முதன்மை துறை**

8. **விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா _____ பெரிய நாடாகும்.**

அ) நான்காவது ஆ) மூன்றாவது

இ) இரண்டாவது ஈ) ஐந்தாவது **விடை: இ) இரண்டாவது**

9. **பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் அம்சமாகும் என்பது யாருடைய கருத்து ஆகும்?**

அ) அமர்த்தியா சென் ஆ) ஆடம் ஸ்மித்

இ) ஜான் வாக்கர் ஈ) இவர்களில் யாருமில்லை

விடை: அ) அமர்த்தியா சென்

10. **இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட _____ குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர்.**

அ) 56% ஆ) 40%

இ) 50% ஈ) 44% **விடை: ஈ) 44%**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தொடக்கூடிய பொருள்களை _____ என்று பொருளியல் அறிஞர்கள் அழைக்கின்றனர்.

விடை: பண்டங்கள்

2. பண்டங்கள் என்பது _____ பொருளும், பணிகள் என்பது _____ முடியாததுமான நடவடிக்கைகள் ஆகும். **விடை: தொடக்கூடிய, தொட்டு உணர**

3. அங்காடியில் விற்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை என்பது _____.

விடை: அங்காடி மதிப்பு

4. நாட்டு வருமானம் _____ அல்லது _____ எனவும் அழைக்கப்படுகிறது.

விடை: மொத்த நாட்டு உற்பத்தி, நாட்டு வருமான ஈவு

5. நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பைக் குறிக்கும் உற்பத்தி _____ ஆகும். விடை: மொத்த நாட்டு உற்பத்தி

6. மொத்த நாட்டு உற்பத்தியையும் தேய்மானத்தையும் கழித்தால் கிடைப்பது _____ ஆகும். விடை: நிகர நாட்டு உற்பத்தி

7. சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு மட்டுமே _____யில் அடங்கும்.

விடை: மொத்த உள்நாட்டு உற்பத்தி

8. தொழில் முறை உற்பத்தி குறியீடு (IIP), நுகர்வோர் விலை குறியீடு (CPI) போன்ற குறியீடுகளை வெளியிடுவது _____. விடை: மத்திய புள்ளியல் அமைப்பு

9. _____ அளவை மட்டும் அளவிடுகிறது தரத்தை அல்ல.

விடை: GDP

10. இந்திய பொருளாதாரம் பரவலாக _____ துறைகளாகப் பிரிக்கப்படுகிறது.

விடை: மூன்று

11, வேளாண்மைத் துறையை _____ எனவும் அழைக்கலாம்.

விடை: முதன்மைத்துறை

12. _____ என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்.

விடை: நிகர உள்நாட்டு உற்பத்தி

13. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவி என்பது _____.

விடை: தலா வருமானம்

14. நாட்டு வருமானத்தையும், மக்கள் தொகையையும் வகுப்பதன் மூலம் _____ கணக்கிடலாம். விடை: தலா வருமானத்தை

15. _____ ஒரு நாட்டின் பொருளாதார நலத்தை பிரதிபலிக்கிறது.

விடை: மொத்த உள்நாட்டு உற்பத்தி

16. _____ இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். விடை: தொழில்துறையை

17. விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா _____ பெரிய நாடாகும்.

விடை: இரண்டாவது

18. இந்தியா தொழில்துறையில் _____ இடத்திலும், பணிகள் துறையில் _____ இடத்திலும் உள்ளது. விடை: எட்டாவது, ஆறாவது

19. மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது _____ இல் உருவாகப்பட்டது.

விடை: 1972

20. GNH – ஐ உருவாக்கியவர் _____. விடை: ஜிகமே சிங்கயே வாங்ஹக்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

III. பொருத்துக.

I

1.	நிகரநாட்டு உற்பத்தி	- அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்
2.	நிகர உள்நாட்டு உற்பத்தி	- ஆ) புதிய பொருளாதாரக் கொள்கை
3.	செலவழிக்கதக்க வருமானம்	- இ) C+I+G+(X–M)+NFIA
4.	மொத்த உள்நாட்டு உற்பத்தி	- ஈ) நாட்டு உற்பத்தி – தேய்மானம்
5.	LPG	- உ) தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.இ 5.ஆ

II

1.	வங்கி	- அ) மனித மேம்பாட்டுக் குறியீடு
2.	மீன் பிடித்தல்	- ஆ) விவசாயக் கொள்கை
3.	சிமெண்ட்	- இ) மூன்றாம் நிலைத் தொழில்
4.	முகஹப்-உல்	- ஈ) இரண்டாம் நிலைத் தொழில்
5.	பாசனக் கொள்கை	- உ) மனித மேம்பாட்டு குறியீடு

விடை: 1.இ 2.உ 3.ஈ 4. அ 5.ஆ

IV. குறுகிய விடை தருக.

1. இந்தியாவில் நிதியாண்டு எவ்வாறு மதிப்பிடப்படுகிறது?

இந்தியாவின் நிதியாண்டை நான்கு காலாண்டுகளாக GDP மதிப்பிடுகிறது.

- முதல் காலாண்டு - Q1 - ஏப்ரல், மே, ஜூன்
- இரண்டாம் காலாண்டு - Q2 - ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்
- மூன்றாம் காலாண்டு - Q3 - அக்டோபர், நவம்பர், டிசம்பர்
- நான்காம் காலாண்டு - Q4 - ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

2. தேய்மானம் வரையறு.

தேய்மானம் என்பது அதிகப் பயன்பாட்டின் காரணமாக பொருட்கள் தேய்மானமடைதல் அல்லது பழமையாதல் போன்றவைகளால் சொத்தின் பண மதிப்பு குறைதல் ஆகும்.

3. தனிப்பட்ட வருமானம் பற்றி நீவிர் அறிவதென்ன?

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனிநபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்தும் பெறப்படுகின்ற மொத்த பண வருமானமே தனிப்பட்ட வருமானம் எனலாம்.

4. இறுதிநிலைப் பண்டங்கள் வரையறு.

'இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகள்' என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும்.

5. இடைநிலைப் பண்டங்கள் குறிப்பு வரைக.

எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்தி செய்யப் பயன்படுகிறதோ மற்றும் மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய ஒரு பகுதியாகிறதோ அது 'இடைநிலைப் பண்டங்கள்' எனலாம்.

V. விரிவான விடை தருக.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைபாடுகளை விவரி. (GDP)

GDP யில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை.

பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் செய்யும் பணிகள் / சேவைகள் மிக முக்கியமானது. ஆனால் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில் அது சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை.

GDP அளவை மட்டும் அளவிடுகிறது தரத்தை அல்ல.

1970களில் பள்ளிகள் மற்றும் வங்கிகளில் பந்துமுனைப் பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. அதன் பின்னர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பந்துமுனைப் பேனாக்களின் தரம் மேம்படுத்தப்பட்டதால் அவற்றின் உற்பத்தியும் குறிப்பிட்ட அளவு அதிகரித்தது. எனவே பண்டத்தின் தரம் என்பது மிக முக்கியமானதாகும்.

GDP யில் நாட்டு வருமானம் பகிர்ந்தளிப்பு பற்றிக் கூறவில்லை.

ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விரைவாக வளரலாம். ஆனால் வருமானம் சமனற்ற நிலையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதனால் சிறிய சதவீத மக்கள் பயனடைகிறார்கள்.

GDP மக்கள் வாழும் வாழ்க்கை முறை பற்றிக் கூறவில்லை.

மிகவும் குறைந்த சுகாதார நிலை, மக்கள் ஜனநாயகமற்ற அரசியலமைப்பு, அதிகமாக மற்றும் உயர் தற்கொலை விகிதம் ஆகியவற்றை கருத்தில்கொள்ளாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்மட்ட தனிநபர் வருமானத்துடன் கைகோர்த்து செல்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

பொருளியல்

அலகு 2

உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?**
அ) அமைச்சரவை
ஆ) தலைமை இயக்குநர்
இ) துணை தலைமை இயக்குநர்
ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: ஆ) தலைமை இயக்குநர்

2. **இந்தியாவில் காலனியாதிக்க வருகை**
அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்
ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு
விடை: அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு

3. **காட்(GATT)-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்**
அ) டோக்கியோ ஆ) உருகுவே
இ) டார்குவே ஈ) ஜெனீவா
விடை: ஈ) ஜெனீவா

4. **இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?**
அ) 1984 ஆ) 1976
இ) 1950 ஈ) 1994
விடை: ஈ) 1994

5. **1632இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?**
அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான்
இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்
விடை: ஆ) கோல்கொண்டா சுல்தான்

6. **வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு**
அ) ஜூன் 1991 ஆ) ஜூலை 1991
இ) ஜூலை-ஆகஸ்ட் 1991 ஈ) ஆகஸ்ட் 1991
விடை: இ) ஜூலை-ஆகஸ்ட் 1991

7. இந்திய அரசாங்கத்தால் 1991இல் _____ ஐ அறிமுகப்படுத்தப்பட்டது.

அ) உலகமயமாக்கல்
ஆ) உலக வர்த்தக அமைப்பு
இ) புதிய பொருளாதார கொள்கை
ஈ) இவற்றில் எதுவுமில்லை

விடை: இ) புதிய பொருளாதார கொள்கை

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நல்ல பொருளாதாரம் _____ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப் படுகிறது.
விடை: மூலதன சந்தையின்

2. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் _____ ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.
விடை: ஜனவரி 1, 1995

3. _____ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
விடை: தியோடோர் லெவிட்

III. பொருத்துக.

1.	இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம்	-	அ) 1947
2.	பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC)	-	ஆ) அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல்
3.	சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT)	-	இ) உற்பத்தி செலவு குறைத்தல்
4.	8வது உருகுவே சுற்று	-	ஈ) இன்ஃபோசிஸ்
5.	உலக வர்த்தக அமைப்பு (WTO)	-	உ) 1986

விடை: 1.ஈ 2.இ 3.அ 4.உ 5.ஆ

IV. குறுகிய விடை தருக.

1. உலகமயமாக்கல் என்றால் என்ன?

- உலகமயமாக்கல் என்பது உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பதாகும்.
- அடிப்படையில் உலகமயமாக்கல், சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயல்முறையை குறிக்கிறது.

2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.

- தொன்மையான உலகமயமாக்கல்
- இடைப்பட்ட உலகமயமாக்கல்
- நவீன உலகமயமாக்கல்

3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும்.

சமூக அறிவியல்

4. உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

- சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
- பொதுத்துறை நிறுவனத்திற்காக துவக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைப்பு.
- இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
- அயல்நாட்டு செலாவணி ஒழுங்குமுறை திருத்தப்பட்டது.

5. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒருசுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும்.

6. ''நியாயமான வர்த்தக நடைமுறைகளின்'' ஏதாவது இரு கோட்பாடுகளை எழுதுக.

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு.
- குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.
- சுற்றுசூழலுக்கு மதிப்பளித்தல்.

7. ''உலக வர்த்தக அமைப்பின்'' முக்கிய நோக்கம் யாது?

உலக வர்த்தக அமைப்பின் குறிக்கோள்கள்:

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

8. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.

- மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
- வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.
- அதிக மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.

V. விரிவான விடை தருக.

1. பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

MNC யின் நன்மைகள்:

- பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாக உற்பத்தி செய்கிறது.
- உலகளவில் நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்தி கொள்ள முடியும்.
- வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள்:

- பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
- சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
- பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
- பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்கநெறிமுறைகளை மீறுவர்.

2. 'உலக வர்த்தக அமைப்பு' பற்றி எழுதுக.

உலக வர்த்தக அமைப்பு:

- 1994ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை அமைப்பதற்கு காட் உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த அமைப்பை அமல்படுத்திட உடன்படிக்கையை ஏற்று 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது.

உலக வர்த்தக அமைப்பின் குறிக்கோள்கள்:

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- வர்த்தகதகராறுகளைக் கையாளுதல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.
- வர்த்தக தாராளமயமாக்கலுடனான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுசூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்.

3. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

- உலகமயமாக்கலின் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
- உலகில் உலகமயமாக்கல் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

VII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு.

1. **ஆசிரியர் மற்றும் மாணவர்கள் உலகமயமாக்கல் பற்றி விவாதித்தல்.**
   மாணவர் செயல்பாடு.
2. **உலகமயமாக்கல் பற்றிய படங்களை மாணவர்கள் சேகரித்து படத் தொகுப்பினை உருவாக்குதல்.**
   (தென்னிந்திய வாத்தகம், வர்த்தகர்கள் படங்கள், பட்டு வழி வரைபடம், நறுமணப்பொருட்கள் வழி வரைபடம் மற்றும் கலிங்க வர்த்தக வரைபடம் முதலியன) வரைபடத்தில் உள்ளது.
3. **மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் படங்கள் மற்றும் விவரங்களை சேகரித்தல்.**
   மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **உலகமயமாக்கல் என்ற சொல் யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?**
   அ) தியோடோர் லெவிட் ஆ) மார்கஸ்
   இ) கார்ல் மார்க்ஸ் ஈ) கிங் பே
   விடை: அ) தியோடோர் லெவிட்
2. **உலகமயமாக்களின் மூன்று நிலைகளில் கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?**
   அ) தொன்மையான உலகமயமாக்கல்
   ஆ) இடைப்பட்ட உலகமயமாக்கல்
   இ) கடைநிலை உலகமயமாக்கல்
   ஈ) நவீன உலகமயமாக்கல்
   விடை: இ) கடைநிலை உலகமயமாக்கல்
3. **இடைப்பட்ட உலகமயமாக்கல் காலம் என்று அழைக்கப்படுவது எது?**
   அ) 16 ஆம் நூற்றாண்டு ஆ) 11 ஆம் நூற்றாண்டு
   இ) 10 ஆம் நூற்றாண்டு ஈ) 19 ஆம் நூற்றாண்டு
   விடை: அ) 16 ஆம் நூற்றாண்டு

4. 1610ஆம் ஆண்டு புலிகாட்டில் தொழிற்சாலையை நிறுவ யாரிடம் அனுமதி கேட்கப்பட்டது?
அ) சந்திரகிரி அரசர் ஆ) ராஜகிரி அரசர்
இ) சங்ககிரி அரசர் ஈ) புதுக்கோட்டை அரசர் **விடை: அ) சந்திரகிரி அரசர்**

5. இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக இருந்தது எது?
அ) கோழிக்கோடு ஆ) கண்ணனூர்
இ) மசூலிப்பட்டினம் ஈ) புலிகாட் **விடை: ஈ) புலிகாட்**

6. பிரெஞ்சுக்காரர்களின் தலைமை இடமாக இருந்தது எது?
அ) மசூலிப்பட்டினம் ஆ) மாஹி
இ) பாண்டிச்சேரி ஈ) புலிகாட் **விடை: இ) பாண்டிச்சேரி**

7. இந்தியாவில் எத்தனை பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளன?
அ) 10 ஆ) 15
இ) 11 ஈ) 17 **விடை: ஆ) 15**

8. GATT என்னும் ஒப்பந்தம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
அ) 1947ஆம் ஆண்டு ஆ) 1946ஆம் ஆண்டு
இ) 1945ஆம் ஆண்டு ஈ) 1948ஆம் ஆண்டு
விடை: அ) 1947ஆம் ஆண்டு

9. டங்கல் வரைவிற்கு எப்போது ஒப்புதல் அளிக்கப்பட்டது?
அ) ஏப்ரல் 14, 1994 ஆ) ஏப்ரல் 15, 1995
இ) ஏப்ரல் 15, 1994 ஈ) ஏப்ரல் 14, 1995 **விடை: இ) ஏப்ரல் 15, 1994**

10. காட்டின் (GATT) எந்த சுற்று இறுதி சுற்று என்று அழைக்கப்பட்டது?
அ) 7வது ஆ) 8வது
இ) 9வது ஈ) 10வது **விடை: ஆ) 8வது**

11. உலக வர்த்தக அமைப்பில் தற்போது உள்ள உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கை என்ன?
அ) 164 நாடுகள் ஆ) 170 நாடுகள்
இ) 175 நாடுகள் ஈ) 180 நாடுகள் **விடை: அ) 164 நாடுகள்**

12. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
அ) சுவிட்சர்லாந்து ஆ) அமெரிக்கா
இ) பிரான்ஸ் ஈ) ஜெர்மனி **விடை: அ) சுவிட்சர்லாந்து**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ என்பது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் எனப்படும். **விடை: LPG**

2. _____ என்பது உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பதாகும்.
விடை: உலகமயமாக்கல்

3. உலகமயமாக்கல் என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் _____ ஆவார்.
விடை: தியோடோர் லெவிட்

4. உலகமயமாக்கல் _____ நிலையைக் கொண்டது. விடை: மூன்று

5. _____ என்பது உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் ஆரம்ப வடிவமாகும். விடை: தொன்மையான உலகமயமாக்கல்

6. உலகமயமாக்கலின் ஒரு முக்கிய ஆரம்ப கட்டமாக _____ இருந்து வந்தது.
விடை: இஸ்லாமிய பொற்காலம்

7. 19 ஆம் நூற்றாண்டின் உலகமயமாக்கலின் வருகை _____ நெருங்கியது.
விடை: நவீன வடிவத்தை

8. இந்திய கலாச்சாரத்தை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வழிகளாக _____ இருந்தன. விடை: வர்த்தகக் குழுக்கள்

9. இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நம்பிக்கைமுனை வழியாக புதிய கடல் பாதையை நிறுவியவர் _____ ஆவார். விடை: வாஸ்கோடகாமா

10. இந்தியாவில் போர்ச்சுக்கீசியர்களின் தலைநகரம் என்பது _____ ஆகும்.
விடை: கொச்சின்

11. _____ அன்று கிழக்கு இந்திய கம்பெனிக்கு நிறுவனம் துவங்குவதற்கு எலிசபெத் ராணியால் பட்டயம் வழங்கப்பட்டது. விடை: டிசம்பர் 31, 1600

12. 1693 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் _____ கைப்பற்றினர்.
விடை: பாண்டிச்சேரியை

13. _____ சர்வதேச நிறுவனங்கள் அல்லது பன்னாட்டு அமைப்பு எனவும் கூறலாம்.
விடை: பன்னாட்டு நிறுவனங்களை

14. அந்நிய செலவாணி கட்டுப்பாட்டுச்சட்டம் என்பது _____ அன்று நடைமுறைக்கு வந்தது. விடை: 1974

15. அந்நிய செலவாணி மேலான்மைச்சட்டம் என்பது பாராளுமன்றத்தால் _____. ஏற்றுக்கொள்ளப்பட்டது. விடை: 1999 இல்

16. பாரத ஸ்டேட் வங்கியின் தலைநகரம் _____. விடை: மும்பை

17. 1947 இல் _____ நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
விடை: 23

18. காட்டின் (GATT) மொத்தம் _____ சுற்றுக்கள். விடை: 8

19. 8 வது மற்றும் இறுதிச்சுற்றை _____ என அழைத்தனர்.
விடை: உருகுவே சுற்று

20. உலக வர்த்தக அமைப்பின் தலைநகரம் _____, _____ ஆகும்.
விடை: ஜெனிவா, சுவிசர்லாந்து

21. TRIPS இல் _____ பகுதிகள் உள்ளடக்கியுள்ளது. விடை: ஏழு

III. பொருத்துக.

I

1.	போர்ச்சுக்கீசியர்கள்	- அ) புலிகாட்
2.	டச்சுக்கார்கள்	- ஆ) டிராங்குபாரை
3.	பிரிட்டிஷ் நிறுவனம்	- இ) கோலிக்கோட்
4.	டேனிஷ் நிறுவனம்	- ஈ) பாண்டிச்சேரி
5.	பிரெஞ்சுக்காரர்	- உ) எலிசபெத் ராணி

விடை: 1.இ 2.அ 3.உ 4.ஆ 5.ஈ

II

1.	பஜாஜ்	- அ) பெங்களூரு
2.	இன்போசிஸ்	- ஆ) மும்பை
3.	டி.வி.எஸ் (TVS)	- இ) புதுடில்லி
4.	பாரத ஸ்டேட் வங்கி	- ஈ) சென்னை
5.	பாரத் ஏர்டெல்	- உ) பூனா

விடை: 1.உ 2.அ 3.ஈ 4.ஆ 5.இ

IV. குறுகிய விடை தருக.

1. உலகமயமாக்கல் சார்ந்த சீர்திருத்தங்களை குறிப்பிடுக.

- சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
- பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
- இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
- வெளிநாட்டு தனியார்துறை நடப்பு கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
- அயல்நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்டரீதியான நீர்மை விகிதம் (SLR) அதிகரிக்கப்பட்டது.

2. இந்தியாவின் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.

2018 இல் இந்தியாவின் மிகப் பெரிய நிறுவனங்கள்:

- சோனி கார்ப்பரேசன்
- ஹவுலக் பேக்கார்டு (HP)
- டாட்டா குழுமம்
- மைக்ரோசாப்ட் கார்ப்பரேசன்
- ஐ.பி.எம்
- நெட்டில்
- பிராக்டர் & கேம்பில்
- சிட்டி குழுமம்
- பெப்சி நிறுவனம்
- கோகோ - கோலா நிறுவனம்

சமூக அறிவியல்

3. பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் யாவை?

- பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது .
- பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

4. உலக வர்த்தக அமைப்பின் மானியங்களைப் பட்டியலிடுக.

WTO ஐந்து வகையான மானியங்களை குறிப்பிடுகிறது.

- பண மானியங்கள் அளித்தல்,
- விதிவிலக்குகள், கடன்கள் அல்லது இடைநிறுத்தல் வரி சலுகைகள் அளித்தல்.
- கடன் உத்தரவாதங்கள் போன்ற அபாயத்தை ஊகித்தல்.
- அரசு முதல் கைகள் சுதந்திர சந்தை விலையை விட அதிகமாக செலுத்துதல்.
- பங்கு முதல் சந்தை பங்குகளை விட ஒரு நிறுவனத்தின் விலை அதிகமாக இருத்தல்.

5. அந்நியச் செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் குறிப்பு வரைக.

- அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச்சட்டம் 1974 (Foreign Exchange Regulation Act).
- இது 1973 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு, ஜனவரி 1, 1974 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்தச் சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாக குறிப்பிடுகிறது.

V. விரிவான விடை தருக.

1. நியாயமான வணிக நடைமுறைகளின் பயனாளிகளை விவரி.

நியாயமான வணிக நடைமுறைகளின் பயனாளிகள்:

1. நுகர்வோர்

- நுகர்வோர், நியாயமான வர்த்தக அமைப்பை ஆதரித்தும் மற்றும் சர்வதேச வர்த்தக விதிகளின் பரந்த சீர்திருத்தத்தை ஒப்பிட்டும், அவர்கள் சிறந்த தயாரிப்புகளை வளர்ந்து வரும் வரம்பிலிருந்து தேர்வு செய்யலாம்.
- நியாயமான வர்த்தக பெயரிட்ட தயாரிப்புகளை நுகர்வோர் வாங்குவதன் மூலம், தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தப் போராடும் தயாரிப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கலாம்.

2. வர்த்தகர் / நிறுவனர்கள்

- 2002 ஆம் ஆண்டு முதல், இது வர்த்தகத்தில் மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டு சமூக மற்றும் முன்னேறிய அடையாளமாக மாறியுள்ளது.

- நியாயமான வர்த்தக நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்திற்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு நம்பகமான வழியை வழங்குகிறது.

3. உற்பத்தியாளர்கள்

- நிலையான விலையில் நிலையான உற்பத்தி செலவுகளை கட்டுப்படுத்தலாம். சந்தை அணுகுதல் என்பது சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்ட உற்பத்தியாளர்களிடம் வர்த்தகம் செய்ய வாங்குபவர்கள் உதவுதலாகும்.
- பங்குதாரர், (உற்பத்தியாளர்கள் தங்கள் எதிர்கால முடிவுகளில் ஈடுபடுதல்) விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

2. பன்னாட்டு நிறுவனங்களின் வளர்சிக்கான காரணங்களை தொகுத்து எழுதுக.

MNC யின் வளர்ச்சிக்கான காரணங்கள்:

1. சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம்

பெரிய அளவிலான நிறுவனங்களின் விரிவாக்கங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ளநாட்டின் புவியியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளை மேலும் விரிவாக்குகிறது.

2. சந்தைப்படுத்தும் மேன்மை:

- ஒரு பன்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது.
- இது சந்தை மதிப்பினைப்பெற்று, அதன் தயாரிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான சிரமங்களை எதிர்கொள்கிறது.
- மேலும் பயனுள்ள விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்கிறது.

3. நிதி மேன்மை:

இதில் நிதி வளங்களும், உயர்நிதி பயன்பாடுகளும் உள்ளன. அதனால், வெளிப்புற மூலதன சந்தைகளை எளிதில் அணுகமுடியும் மற்றும் அதன் சர்வதேச புகழ் காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

4. தொழில்நுட்ப மேன்மை:

பின்தங்கிய நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்க, ஊக்கமளித்ததற்கான முக்கிய காரணம் தேசிய தொழிற்துறைகளுடன் ஒப்பிடுகையில், இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுவதேயாகும்.

5. பண்டங்களின் கண்டுபிடிப்புகள்:

பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உயர்ந்த வடிவமைப்புகளாக உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் ஈடுபட்டுள்ளன.

பொருளியல்

அலகு 3

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.
அ) உணவு கிடைப்பது ஆ) உணவுக்கான அணுகல்
இ) உணவின் முழு ஈடுபாடு ஈ) இவை ஏதுமில்லை
விடை: அ) உணவு கிடைப்பது

2. தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை _____ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.
அ) FCI ஆ) நுகர்வோர் கூட்டுறவு
இ) ICICI ஈ) IFCI **விடை: அ) FCI**

3. எது சரியானது?
i)) HYV - அதிக விளைச்சல் தரும் வகைகள்
ii) MSP - குறைந்தபட்ச ஆதரவு விலை
iii) PDS - பொது விநியோக முறை
iv) FCI - இந்திய உணவுக் கழகம்
அ) i மற்றும் ii சரியானவை ஆ) iii மற்றும் iv சரியானவை
இ) ii மற்றும் iv சரியானவை ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி
விடை: ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி

4. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச்சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு _____.
அ) அமெரிக்கா ஆ) இந்தியா
இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து **விடை: அ) அமெரிக்கா**

5. _____ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி
இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி **விடை: இ) பசுமைப் புரட்சி**

6. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் _____.

அ) கேரளா ஆ) ஆந்திரபிரதேசம்

இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா **விடை: இ) தமிழ்நாடு**

7. _____ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல் முறையாகும்.

அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து

இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு **விடை: ஆ) ஊட்டச்சத்து**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.

விடை: எடை குறைவு

2. _____ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. **விடை: 2013**

3. பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் _____ முக்கியப் பங்கு வகிக்கிறது. **விடை: நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்**

III. பொருத்துக.

1. நுகர்வோர் கூட்டுறவு	-	அ) மானிய விகிதங்கள்
2. பொது விநியோக முறை	-	ஆ) 2013
3. UNDP	-	இ) குறைந்த ஏழ்மை உள்ள பகுதி
4. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்	-	ஈ) தரமான பொருட்களை வழங்குதல்
5. கேரளா	-	உ) ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம்

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.ஆ 5.இ

IV. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கூற்று : விலை குறைந்தால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.

காரணம் : பொருட்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

அ) கூற்று சரியானது, காரணம் தவறானது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது.

இ) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல.

ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

விடை: ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

V. குறுகிய விடை தருக.

1. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.

"எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும்போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவுப் பாதுகாப்பு இருக்கிறது." (FAO, 2009)

2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படை கூறுகள் யாவை?

- கிடைத்தல்,
- அணுகல் மற்றும்
- உறிஞ்சுதல் ஆகும்.

3. பசுமைப் புரட்சியில் இந்திய உணவுக் கழகதத்தின் (FCI) யின் பங்கு என்ன?

- பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை பருவ காலத்தின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்டதானியங்களைஇ ந்திய உணவுக் கழகம் மூலம் அரசு கொள்முதல் செய்கிறது.
- இந்திய உணவுக் கழகம் மிகப் பெரிய சேமிப்புக் கிடங்கினை அமைத்து அறுவடை காலத்தில் உணவு தானியங்களைப் பெற்று இருப்பில் வைத்து அதனை ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

4. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?

- உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
- உயர் ரக விதைகளான அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரித்தது.
- முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது.

5. தமிழ் நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

- புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.
- பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.
- மதிய உணவுத் திட்டம்.

VI. விரிவான விடை தருக.

1. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.

- இந்தியா விடுதலை அடைந்தபோது அதன் உணவு உற்பத்தி மிகக் கவலை தருவதாக இருந்தது. விவசாயிகள் கடன் சுமையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.
- அவர்களின் கைவசம் மிகக் குறைந்த அளவு நிலமே இருந்தது.

- அதிலும் அவர்களின் துண்டு நிலங்களும் ஒரே இடத்தில் இருக்காமல் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.
- புதிய விவசாயக் கருவிகளைப் பற்றி அறிந்திருந்தவர்களிடம் அவற்றை வாங்கிப் பயன்படுத்த போதிய பணம் இல்லை.
- வானம் பார்த்த விவசாயம் வானம் பொய்த்தபோது உணவு உற்பத்தியும் குறைந்தது.
- நிலத்தின் உற்பத்தித் திறனும், விவசாயத் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனும் மிகவும் குறைவாக இருந்தன.
- மக்கள் தொகையில் எழுபது விழுக்காட்டினர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த போதும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது.

2. குறைந்த பட்ச ஆதரவு விலையை விளக்குக.

- குறைந்த பட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஒரு விலை, நிபுணர் குழுவால் நிர்ணயிக்கப்படுகிறது.
- குறைந்த பட்ச ஆதரவு விலை அறிவித்த பின்னர், இந்த பயிர்கள் பரவலாக வளர்க்கப்படும் இடங்களில் அரசு கொள்முதல் மையங்களைத் திறக்கும். எனினும், அந்த விவசாயிகள் தங்கள் பயிர், விளைப்பொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற்றால் திறந்த சந்தையில் விற்க இயலும்.
- மறுபுறம், திறந்தவெளி சந்தையில் விலை, குறைந்த பட்ச ஆதரவு விலையை விடக் குறைவாக இருந்தால், விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு விற்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விலையை (MSP) பெறுவார்கள்.

3. பொது விநியோக முறையை விவரிக்கவும்.

- தமிழ்நாடு 'உலகளாவிய பொது வழங்கல் முறையை' ஏற்றுக் கொண்டது.
- ஆனால், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் 'இலக்கு பொது வழங்கல் முறை' செயல்பாட்டில் இருந்தது.
- உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகிறது.
- ஆனால், இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது, மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருள்களுக்கு மானியம் அளிக்கின்றன.
- மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது.
- தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது.
- இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் என அழைக்கப்படுகின்றன.
- இந்த முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் உணவுப் பொருள்களை பெறும் உரிமை உண்டு.
- தமிழ்நாடு தொடர்ந்து உலகளாவிய பொது வழங்கல் முறையைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

4. வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.

வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள்:

1. அதிக மக்கள் தொகை:

- அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை.
- எனவே சாதாரண விலை நிலை, அதிகமாக இருக்கும். எனவே, இது குறிப்பாக கிராமப்புறமக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

2. அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்தல்:

- அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாக பாதிக்கிறது.

3. பொருட்களுக்கான தேவை:

- பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது.
- அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

4. பொருட்களின் விலை நாணய மதிப்பைப் பாதிக்கிறது:

விலை அதிகரிக்கும் போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது.

5. பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:

பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது. ஆகையால், வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது

6. வறுமை மற்றும் சமத்துவமின்மை:

- இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது.
- 10% இந்தியர்களுக்கு சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது.
- இது சமுதாயத்தில் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் பொதுவாக வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

5. புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய குறிக்கோள்கள் யாவை?

1. உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்:

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரிய வித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

2. ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை:

வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

3. ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

4. விவசாயத் துறையை நவீனமயமாக்குதல்

விவசாயக் கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் உயர்ரக விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

5. சுற்றுச்சூழல் சீரழிவு:

இந்தியாவின் விவசாயக் கொள்கை இந்திய விவசாயத்தின் அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரி செய்யும் மற்றொரு நோக்கத்தையும் கொண்டுள்ளது.

6. அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்:

விவசாயிகளின் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படமுடியும்.

VII. செயல்முறைகள் மற்றும் செயல்பாடு.

1. அருகிலுள்ள "உழவர் சந்தையை" பார்வையிட்டு சந்தை செயல்பாடுகளின் தகவல்களை சேகரிக்கவும்.

மாணவர் செயல்பாடு.

2. உங்கள் இடத்தின் அருகிலுள்ள சுகாதார மையத்தின் செயல்பாடு பற்றி தகவல்கள் சேகரிக்கவும்.

மாணவர் செயல்பாடு.

சமூக அறிவியல்

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டத்தின் மூலம் உடல்நலம் வழங்கும் நோக்கில் _____ ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
அ) 2011 - 2012 ஆ) 2010 - 2011
இ) 2012 - 2013 ஈ) 2009 - 2010 **விடை: அ) 2011 - 2012**

2. மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் _____ முக்கிய பங்கு வகிக்கிறது.
அ) உணவு ஆ) ஊட்டச்சத்து
இ) மருத்துவமனை ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: ஆ) ஊட்டச்சத்து**

3. _____ வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.
அ) 2014 - 2017 ஆ) 2011 - 2017
இ) 2014 - 2015 ஈ) 2011 - 2014 **விடை: அ) 2014 - 2017**

4. கரிம மற்றும் ஏற்றுமதியை கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதை அறிவித்தது _____.
அ) புதிய விவசாயக் கொள்கை ஆ) புதிய சுற்றுசூழல் கொள்கை
இ) புதிய கல்விக் கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: அ) புதிய விவசாயக் கொள்கை

5. உணவு நிலையை சீர்செய்ய ஏறத்தாழ _____ ஆண்டுகள் ஆனது.
அ) 65 ஆ) 70
இ) 55 ஈ) 45 **விடை: அ) 65**

6. _____ நீர்பாசனம் உறுதி செய்யப்பட்ட இடத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.
அ) (HYV) உயர்ரக விளைச்சல் திட்டம்
ஆ) உணவுப் பாதுகாப்புத் திட்டம்
இ) வாங்கும் திறன்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: அ) (HYV) உயர்ரக விளைச்சல் திட்டம்**

7. உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவது _____ ஆகும்.
அ) உணவு கிடைத்தல் ஆ) உணவினை உறிஞ்சுதல்
இ) உணவுக்கான அணுகல் ஈ) இவற்றில் எதுவுமில்லை
விடை: ஆ) உணவினை உறிஞ்சுதல்

8. _____ என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும்.

அ) உணவு கிடைத்தல் ஆ) உணவினை உறிஞ்சுதல்

இ) உணவுக்கான அணுகல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

விடை: இ) உணவுக்கான அணுகல்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு _____.
விடை: 2018
2. மக்களுக்கு பொறுப்பான முறையில் பொருட்களை வழங்குவது _____ ஆகும்.
விடை: நுகர்வோர் கூட்டுறவு சங்கம்
3. உணவு தானியங்களை இந்திய உணவுக் கழகத்தின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்குவதை _____ என்று கூறுவர். **விடை: தாங்கியிருப்பு**
4. சமமற்ற வழங்குதலால் பொதுவாக _____ திறன் பாதிக்கப்படுகிறது.
விடை: வாங்கும்
5. _____ என்பது விவசாயத்துறையில் அனைத்து வளர்ச்சிகளையும் அடைவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. **விடை: விவசாயக் கொள்கை**
6. 2015 - 2026 ஆம் ஆண்டில் மிக ஏழ்மையான மக்கள்தொகை கொண்ட மாநிலம் _____. ஆகும். **விடை: பீகார்**
7. இந்தியாவில் பசி ஒரு அரசியல் முன்னுரிமைக்கு இல்லை என்று கூறியவர் _____ ஆவர். **விடை: நிபுணர் அமர்த்தியா சென்**
8. பசுமைப் புரட்சி நாட்டில் தோன்றியதால் உணவு தானியங்களில் _____ பெற வழி வகுத்தது. **விடை: தன்னிறைவு**

III. பொருத்துக.

1. பி.எல். 480	-	அ) 2013
2. பசுமைப் புரட்சி	-	ஆ) இலவசமாக ஆம்புலன்ஸ்
3. தேசிய உணவுப் பாதுகாப்பு	-	இ) கப்பலுக்கு வாயில்
4. சத்துணவுத் திட்டம்	-	ஈ) முக்கிய தானியப் பயிர்கள்
5. 108	-	உ) புரட்சித் தலைவர்

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

IV. குறுகிய விடை தருக.

1. உணவு கிடைத்தல் என்றால் என்ன?

- உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும்.
- இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியின் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.

2. உணவுக்கான அணுகல் என்றால் என்ன?

- உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே, ஈட்டுதலுக்கான திறன்கள், வேலைவாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.
- திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துக்கள் மற்றும் கல்விக்கான அணுகலுடன் தொடர்புடையது.

3. உணவினை உறிஞ்சுதல் என்றால் என்ன?

- உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.
- ஊட்டச்சத்து, அறிவு, நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் நிலைகள் போன்ற பல காரணிகள் உணவு மற்றும் சுகாதார நிலையை திறம்பட உயிரியல் ரீதியாக முழு ஈடுபாட்டுடன் அனுமதிக்கிறது.

5. தமிழ் நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் பற்றி விவரி.

- இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகள் கழித்து, நவம்பர் 1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ்நாட்டில் துவங்கப்பட்டது.
- அக்டோபர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், சட்டத்தை அமல்படுத்தும் போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

6. தாங்கியிருப்பு என்றால் என்ன?

- தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCI வாங்குகிறது.
- விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது.

7. விவசாயத் துறையை நவீனமயமாக்குதல் என்றால் என்ன?

விவசாய கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

8. சுற்றுச்சூழல் சீரழிவு என்றால் என்ன?

இந்திய விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக் கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

V. விரிவான விடை தருக.

1. உணவின் அடிப்படை கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு பற்றி குறிப்பு வரைக.

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படை கூறுகளை உள்ளடக்குவதற்காக இந்தச் சொல் விரிவுபடுத்தப்பட்டது. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.

உணவு கிடைத்தல்:

- உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும்.
- இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியின் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.

உணவுக்கான அணுகல்:

- உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே, ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.
- திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துக்கள் மற்றும் கல்விக்கான அணுகல்களுடன் தொடர்புடையது.

உணவினை உறிஞ்சுதல்:

- உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.
- ஊட்டச்சத்து, அறிவு, நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் நிலைகள் போன்ற பல காரணிகள் உணவு மற்றும் சுகாதார நிலையை திறம்பட உயிரியல் ரீதியாக முழு ஈடுபாட்டுடன் அனுமதிக்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

பொருளியல்

அலகு 4

அரசாங்கமும் வரிகளும்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்**
   அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி
   ஆ) மைய, மாநில மற்றும் கிராம
   இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து
   ஈ) ஏதுமில்லை
   விடை: அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி

2. **இந்தியாவில் உள்ள வரிகள்**
   அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுக வரிகள்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) ஏதுமில்லை
   விடை: இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)

3. **வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது?**
   அ) பாதுகாப்பு
   ஆ) வெளிநாட்டுக் கொள்கை
   இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல்
   ஈ) மேற்கூறிய அனைத்தும்
   விடை: ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. **இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி**
   அ) சேவை வரி ஆ) கலால் வரி
   இ) விற்பனை வரி ஈ) மத்திய விற்பனை வரி
   விடை: இ) விற்பனைவரி

5. **ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?**
   அ) மதிப்புக் கூட்டு வரி (VAT)
   ஆ) வருமான வரி
   இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
   ஈ) விற்பனை வரி
   விடை: இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

6. இந்தியாவில் வருமான வரிச் சட்டம் முதன் முதலில் _____ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

அ) 1860 ஆ) 1870
இ) 1880 ஈ) 1850 **விடை: அ) 1860**

7. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு _____ வரி விதிக்கப்படுகிறது.

அ) வருமான வரி ஆ) சொத்து வரி
இ) நிறுவன வரி ஈ) கலால் வரி **விடை: ஆ) சொத்து வரி**

8. கருப்புப் பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் யாவை?

அ) பண்டங்களின் பற்றாக்குறை
ஆ) அதிக வரி விகிதம்
இ) கடத்தல்
ஈ) மேற்கூறிய அனைத்தும் **விடை: ஈ) மேற்கூறிய அனைத்தும்**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.
விடை: வரி

2. 'வரி' என்ற வார்த்தை _____ சொல்லிலிருந்து பெறப்பட்டது.
விடை: வரிவிதிப்பு

3. _____ வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
விடை: நேர்முக

4. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி _____ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
விடை: 1 ஜூலை 2017

5. வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் _____ என்று அழைக்கப்படுகிறது.
விடை: கருப்பு பணம்

III. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. GST பற்றி கீழ் கண்ட கூற்றுகளில் எது சரியானது?

i) GST 'ஒரு முனைவரி'.
ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
iii) இது ஜூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (i) (iii) மற்றும் (iv) சரி
இ) (i), (iii) மற்றும் (iv) சரி ஈ) மேற்கூறிய அனைத்தும் சரியானவை
விடை: இ) (i), (iii) மற்றும் (iv) சரி

IV. பொருத்துக.

1.	வருமான வரி	- அ) மதிப்புக் கூட்டு வரி
2.	ஆயத்தீர்வை	- ஆ) ஜூலை 1, 2017
3.	VAT	- இ) கடத்துதல்
4.	GST	- ஈ) நேர்முக வரி
5.	கருப்பு பணம்	- உ) மறைமுக வரி

விடை: 1.ஈ 2.உ 3.அ 4.ஆ 5.இ

V. குறுகிய விடை தருக.

1. வரி வரையறுக்க.

பேராசியர் செலிக்மேன் கருத்துப்படி, 'வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும். அரசிடமிருந்து எந்த வித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி' என வரையறை கூறுகிறார்.

2. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?

- ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகிறது.
- அரசின் வருமானம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளைச் சார்ந்து உள்ளது.
- நேர்முக வரியானது தனி நபரின் வருமானத்திலும், மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள்மீதும் விதிக்கப்படுகின்றன.
- இதன் மூலம் அரசாங்கம் அதன் 'நிதி ஆதாரங்களை' திரட்டுகிறது.

3. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.

வரிகளின் வகைகள் இரண்டு வகைப்படும். அவை: நேர்முக வரிகள், மறைமுக வரிகள்.

நேர்முக வரிகள் :

- வருமான வரி
- நிறுவன வரி
- சொத்து வரி (அ) செல்வ வரி

மறைமுக வரிகள் :

- முத்திரைத்தாள் வரி
- பொழுதுபோக்கு வரி
- சுங்கத் தீர்வை (அல்லது) கலால் வரி

4. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சிறு குறிப்பு வரைக.

- மறைமுக வரிகளில் ஒன்றாகும்.
- இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச் மாதம் 29 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

- ஜூலை 1, 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- இதன் குறிக்கோள் 'ஒரு நாடு! ஒரு அங்காடி! ஒரு வரி' என்பதாகும்.

5. வளர் வீத வரி என்றால் என்ன?

- வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிக்கிறது.
- வருமானம் அதிகரிக்கும் போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறை என்று அழைக்கப்படுகிறது.

6. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

- கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும்.
- வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் 'கருப்பு பணம்' என்று அழைக்கப்படுகிறது.

7. வரி ஏய்ப்பு என்றால் என்ன?

தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும்.

8. வரிக்கும், கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் இரண்டை பட்டியலிடுக.

	வரி (Tax)	கட்டணம் (Payments)
1.	வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்ப்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும்.	கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும்.
2.	வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும்.	கட்டணம் என்பது தன்னார்வக் கட்டணமாகும்.

VI. விரிவான விடை தருக.

1. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.

நேர்முக வரிகள் :

நேர்முக வரி என்பது ஒரு தனி நபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர் மீது மாற்ற முடியாது.

வருமான வரி :

- இவ்வரி தனி நபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.
- இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக் கூடியதாகும்.

நிறுவன வரி :

- இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.
- இந்தவரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது

சொத்து வரி (அ) செல்வ வரி :

- தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.
- இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

மறைமுக வரிகள் :

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச் சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது 'மறைமுக வரி' எனப்படும். வரி விதிக்கப்பட்டவர், வரி வேறு. வரி சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவர்.

முத்திரைத்தாள் வரி :

அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

பொழுதுபோக்கு வரி :

எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக, திரைப்படங்கள் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரி.

2. GST யின் அமைப்பை எழுதுக.

மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): மாநிலத்திற்குள்

மதிப்புக் கூட்டு வரி (VAT) / விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST): மாநிலத்திற்குள்

மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, எதிர்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலை கல்வி வரி)

ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): மாநிலங்களுக்கு இடையே

நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. 5%, 12%, 18% மற்றும் 28% காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

3. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

- கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும்.

- வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் 'கருப்பு பணம்' என்று அழைக்கப்படுகிறது.

கருப்பு பணத்திற்கான காரணங்கள்:

- பண்டங்கள் பற்றாக்குறை
- உரிமம் பெறும் முறை
- தொழில் துறையின் பங்கு
- கடத்தல்
- வரியின் அமைப்பு

VII. செயல்முறைகள் மற்றும் செயல்பாடு.

1. **உள்ளூரில் விதிக்கப்படும் வரிகளைப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும். (குடிநீர், மின்சாரம் மற்றும் வீட்டுவரிகள் போன்றவைகள்)**

   மாணவர் செயல்பாடு.

2. **மாணவர்கள் சில புத்தகங்களை அங்காடிகளில் வாங்கும்படி கூறுதல். ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அப்புத்தகங்களின் அதிகபட்ச சில்லரை விலையையும், வாங்கும் விலை அல்லது GST பற்றி அறிதல்.**

   மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **சில விரும்பத்தகாத பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் _____ பாதுகாக்கப்படுகிறது.**

   அ) வளங்களைத் திரட்டுதல் ஆ) சமூக நலம்
   இ) அந்நியச் செலாவணி ஈ) பணவீக்கம் **விடை: ஆ) சமூக நலம்**

2. **முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமல்படுத்திய நாடு _____ ஆகும்.**

   அ) பிரான்ஸ் ஆ) பிரிட்டன்
   இ) இந்தியா ஈ) அமெரிக்கா **விடை: அ) பிரான்ஸ்**

3. **ஆவணங்கள் மற்றும் சொத்து தொடர்பான விதிக்கப்பட்ட வரி _____ வரி ஆகும்.**

   அ) முத்திரைத் தாள் ஆ) பொழுதுபோக்கு
   இ) சுங்கத் தீர்வை ஈ) செல்வ வரி **விடை: அ) முத்திரைத்தாள்**

4. **சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளர் செலுத்தும் வரி _____ ஆகும்.**

   அ) சொத்து வரி ஆ) நிறுவன வரி
   இ) முத்திரைத்தாள் வரி ஈ) பொழுதுபோக்கு வரி **விடை: அ) சொத்து வரி**

5. இந்தியாவில் கிட்டதட்ட அனைத்து நேரடி வரிகளும் _____ அரசால் சேகரிக்கப் படுகின்றன.
அ) மாநில ஆ) யூனியன்
இ) மத்திய ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: ஆ) யூனியன்**

6. இந்தியாவில் முதன்முதலாக வருமான வரி _____ ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1960 ஆ) 1860
இ) 1866 ஈ) 1850 **விடை: ஆ) 1860**

7. _____ என்பது தனி நபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.
அ) வருமான வரி ஆ) நிறுவன வரி
இ) சொத்து வரி ஈ) வளர்வீத வரி **விடை: அ) வருமான வரி**

8. அரசின் வருமானம் _____ மற்றும் மறைமுக வரிகளைச் சார்ந்து உள்ளது.
அ) நேர்முக ஆ) சட்டம் மற்றும் ஒழுங்கு
இ) பாதுகாப்பு ஈ) இராணுவம் **விடை: அ) நேர்முக**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ தனி நபரின் வருமானத்திலும் மற்றும் _____ பண்டங்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்படுகின்றன. **விடை: நேர்முக வரி, மறைமுக வரி**
2. பாதுகாப்புப் படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் _____ அரசாங்கமே பொறுப்பானதாகும். **விடை: மத்திய**
3. 'வரி' என்ற சொல் _____ என்பதிலிருந்து உருவானது. **விடை: வரிவிதிப்பு**
4. இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் _____ மற்றும் _____ காலத்திலிருந்து பின்பற்றப்பட்டது. **விடை: மனுஸ்மிருதி, அர்த்த சாஸ்திர**
5. _____ முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரி விதிப்பு கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். **விடை: ஆடம் ஸ்மித்**
6. வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறன் _____ என்று கூறப்படுகிறது. **விடை: நிதித்திறன்**
7. அரசாங்கம் மக்களின் நலனிற்கும் போர் சேவைகளுக்கும் _____ பயன்படுத்துகிறது. **விடை: வரிகளை**
8. சொத்துக்களுக்கான வரி _____ அரசாங்கத்தால் வசூலிக்கப்படுகிறது. **விடை: உள்ளூர்**
9. பொழுதுபோக்கு மூலங்களுக்கு அரசால் விதிகப்படும் வரி _____ ஆகும். **விடை: பொழுதுபோக்கு வரி**
10. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது _____ ஒன்றாகும். **விடை: மறைமுக வரிகளில்**

11. ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, _____ எனப்படுகிறது.
விடை: விகித வரி விதிப்பு முறை

12. கருப்புச் சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணம் ஆகியன _____ ஆகும்.
விடை: கருப்புப் பணம்

13. அதிகாரிகளை மீறி விலையுயர்ந்த பொருட்களை கொண்டு வருவது _____.
விடை: கடத்தலாகும்

14. வரி என்பது _____ கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.
விடை: பணவீக்கத்தைக்

III. பொருத்துக.

1.	உறுதி வரி	-	அ) முனை வரி
2.	நிறுவன வரி	-	ஆ) 2016
3.	விநியோக வரி	-	இ) வரி விதிப்புக் கொள்கை
4.	வளர்வீத வரி	-	ஈ) நேர்முக வரி
5.	ரியல் எஸ்டேட் சமம்	-	உ) வரியும் அதிகரிக்கும்

விடை: 1.இ 2.ஈ 3.அ 4.உ 5.ஆ

IV. குறுகிய விடை தருக.

1. பாதுகாப்பு (அ) இராணுவம் என்றால் என்ன?

- எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது.
- பாதுகாப்பு முறைகளில் தரைப்படை, கப்பல் படை மற்றும் விமானப் படை ஆகிய மூன்று சேவைகள் உள்ளது.

2. அயல்நாட்டுக் கொள்கை என்றால் என்ன?

- இன்றைய உலகில், நாம் அனைத்து உலகநாடுகளுடனும் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும்.
- உலக அமைதிக்காக இந்தியா உறுதி ஏற்றுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றும் உழைப்பை பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினைப் பராமரிக்க முடியும்.
- இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழங்குகிறது.

3. சட்டம் மற்றும் ஒழுங்கு என்றால் என்ன?

- மத்திய மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன.
- மத்திய அரசு தேசிய, மாநில மற்றும் கீழ் நிலைகளில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நீதி அமைப்பின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அமைத்துள்ளது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- மேலும், அந்தந்த மாநிலங்களில் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்கின்றன

4. உறுதி விதி - குறிப்பு வரைக.

- ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித் தொகையை அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.
- வேறு வார்த்தைகளில் கூறுவதனால், அரசாங்கம் வரி முறையை அடிக்கடி மாற்றக் கூடாது, மற்றும் வரி அமைப்பில் திடீர் மாற்றங்களை அறிவிக்கக் கூடாது.

5. சிக்கன மற்றும் வசதி விதி - குறிப்பு வரைக.

- இந்த இரண்டு விதிகளும் தொடர்புடையவை. வரி செலுத்துவோர் என்ற வகையில், நமது கணக்குகளைச் செயலாக்குவதற்கும், வரி செலுத்துவதற்கும் ஒரு செலவு செய்யப்படுகிறது, எடுத்துக்காட்டாக கணக்காளர்கள் மற்றும் தணிக்கையாளர்களுக்கு சம்பளம் வழங்குதலாகும்.
- இதே போல், அரசாங்கம், தனக்கு வரி செலுத்துவோருக்கு ஊதியத்தினை வழங்கி, பெரிய நிறுவனங்களையும் நடத்துகிறது.
- வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரி செலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும்.

6. வருமானவரி - குறிப்பு வரைக.

- வருமானவரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரி முறையில் மிக முக்கியமான வரியாகும்.
- இவ்வரி தனி நபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.
- இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

7. நிறுவனவரி - குறிப்பு வரைக.

- இந்தவரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.
- இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும்.

8. முத்திரைத்தாள் வரி - குறிப்பு வரைக.

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

9. கருப்புப் பணத்திற்கான காரணங்கள் யாவை?

- பண்டங்கள் பற்றாக்குறை
- உரிமம் பெறும் முறை
- தொழில் துறையின் பங்கு
- கடத்தல்
- வரியின் அமைப்பு

10. வளங்களைத் திரட்டுதல் என்றால் என்ன?

- வரி விதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது.
- குறிப்பாக நேர்முகவரி முறையான தனிநபர் வருமானவரி, நிறுவனவரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

11. சமூக நலன் என்றால் என்ன?

- வரி விதிப்பு சமூக நலனை உருவாக்குகிறது.
- சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் சமூகநலன் பாதுகாக்கப்படுகிறது.

V. விரிவான விடை தருக.

1. வரிக்கும், கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விரிவாக விவரி.

	வரி (Tax)	கட்டணம் (Payments)
1.	வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்ப்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும்.	கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும்.
2.	பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி மேலோங்கியுள்ளது.	கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும்.
3.	வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும்.	கட்டணம் என்பது தன்னார்வக் கட்டணமாகும்.
4.	ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால் அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவர்.	மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
5.	வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. **எ.கா:** வருமானவரி, அன்பளிப்பு வரி, சொத்துவரி மற்றும் மதிப்புக்கூட்டுவரி (VAT)	கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர். **எ.கா:** முத்திரைவரி, ஓட்டுநர் உரிம கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **வரி விதிப்பு கொள்கையை விவரி.**

சமத்துவ விதி

- வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.
- சமத்துவக் கோட்பாடு கூறுகையில், பணக்காரர்கள் ஏழைகளைவிட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்த வேண்டும், ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது.

உறுதி விதி:

- ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித் தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன்கூட்டியே அறிவிக்கவேண்டும்.

சிக்கன மற்றும் வசதி விதி:

- அரசாங்கம், தனக்கு வரி செலுத்துவோருக்கு ஊதியத்தினை வழங்கி, பெரிய நிறுவனங்களையும் நடத்துகிறது.
- வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரி செலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும்.
- மேலும், ஒரு நபருக்கு வரி செலுத்தபோதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும். இது வசதிக்கான வரி என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு வசதியான வரி, வரி வசூலிக்கும் செலவைக் குறைக்கிறது.

உற்பத்தி திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி:

- அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும்.
- வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிகவரி, அதிக வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.
- மேலும் அவை ஒவ்வொன்றும் ஒரு சிறிய வரி வருவாயைப் பெறுகின்றன. இது உற்பத்தி திறன் வரியாகும்.

பொருளியல்

அலகு 5
தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது _____.
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர்
இ) சென்னை ஈ) மதுரை
விடை: இ) சென்னை

2. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது _____.
அ) சேலம் ஆ) கோயம்புத்தூர்
இ) சென்னை ஈ) தருமபுரி
விடை: ஆ) கோயம்புத்தூர்

3. _____ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.
அ) வேளாண்மை ஆ) தொழில்
இ) இரயில்வே ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
விடை: ஆ) தொழில்

4. திருப்பூர் _____ தொழிலுக்குப் பெயர்பெற்றது.
அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்
இ) பின்னலாடை தயாரித்தல் ஈ) வேளாண் பதப்படுத்துதல்
விடை: இ) பின்னலாடை தயாரித்தல்

5. _____ இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ் நாட்டால் உருவாக்கப்பட்டது.
அ) ஓசூர் ஆ) திண்டுக்கல்
இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி
விடை: அ) ஓசூர்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் _____ மாவட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளன.
விடை: வேலூர்

2. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் _____ ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது.
விடை: ஏப்ரல் 2000

சமூக அறிவியல்

3. _____ என்பவர் புத்தாக்க சிந்தனைகள் மற்றும் வணிக செயல்முறைகளின் புத்தாக்கம் புனைபவர் ஆவார்.
விடை: தொழில் முனைவோர்

III. தவறான ஒன்றினை தேர்வு செய்க.

1. பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?.

அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி
இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி
விடை: ஆ) தர்மபுரி

2. பின்வருவனவற்றில் எது தொழில்துறை வளர்ச்சி நிறுவனம் அல்ல?

அ) TIDCO ஆ) SIDCO
இ) MEPG ஈ) SIPCOT
விடை: இ) MEPG

IV. பொருத்துக.

1. தொழில் முனைவோர் - அ) ஏற்றுமதி செயலாக்க மண்டலம்
2. MEPZ - ஆ) கோயம்புத்தூர்
3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை - இ) அமைப்பாளர்
4. TNPL - ஈ) அரவங்காடு
5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் - உ) கரூர்

விடை: 1.இ 2.அ 3.ஈ 4.உ 5.ஆ

V. குறுகிய விடை தருக.

1. விவசாயத் துறையில் ஊதியங்கள் ஏன் குறைவாக உள்ளன?

- நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறைவதால் வேளாண் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடிவதில்லை.
- பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு விவசாயத்தை நம்பியிருப்பதால் ஊதியம் குறைவாகவே உள்ளது.

2. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?

தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்து கொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்.

3. தொழில் தொகுப்புகள் உருவாவதற்கான வழிகள் யாவை?

ஒரு சில தொழிற் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

- கைத்தறி நெசவுத் தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.
- சில துறைகளில், ஒரு பெரிய நிறுவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனங்கள் தோன்றக்கூடும்.

- ஒரு வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம்.

4. தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களையும் அவற்றின் பங்கினையும் குறிப்பிடுக.

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக்கழகம் (SIPCOT - 1971)
1971 இல் தொழில் முன்னேற்றத்திற்காக தொழிற்தோட்டங்களை அமைத்தது.

தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக்கழகம் (TANSIDCO - 1970)
புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற்நுட்ப உதவிகளை செய்கிறது.

தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம் (TIDCO)
தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் நிறுவனமாகும்.

5. தற்போது தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?

- வேதிப்பொருட்கள், ஜவுளித் துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தை கெடுக்கிறது.
- இந்த திரவக் கழிவுகள் சேரும் நீர்நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிறுவனங்களையும் மாசுபடுத்துகிறது.
- உலகளாவிய அளவில் போட்டி போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலைவாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது.
- பணியாளர்களின் தரமானது, இன்றைய காலகட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்துவதால் குறை ஏற்படுகிறது.

6. தொழில் முனைவோர் என்பவர் யாவர்?

- ஒரு 'தொழில் முனைவோர்' என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார்.
- இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன்கள், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

7. தொழில் முனைவு என்றால் என்ன?

- தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும்.
- இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

VI. விரிவான விடை தருக.

1. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் என்ன?

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- துறை சார்ந்த சிறப்பு கவனம்.
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி.
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்.
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.
- சுய உதவி குழுக்கள் செயல்படுதல்.
- பிராந்திய மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.

2. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.

- இந்தியாவில் மிகப் பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது.
- காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது.
- தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ளன. அவைகள் கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும்.
- நமது நாட்டின் மிகப் பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.
- ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின் தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.
- திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும்.
- இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது.
- மேஜைத் துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்காரப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது.
- பவானி மற்றும் குமாரபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரைவிரிப்புகளை உற்பத்தி செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கிறது.
- பட்டு மற்றும் கைத்தறி புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன.

3. தொழில்மயமாதலுக்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் வகைகள் பற்றி விரிவாக எழுதுக.

கல்வி :

- திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்க கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின், எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அடிப்படை எண்கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது.

- இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களை தருவதிலும் பெயர் பெற்ற இடமாகும்.
- இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையம் நமது மாநிலத்தில்தான் உள்ளது.

உள்கட்டமைப்பு :

- மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது.
- மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும்.
- பொது மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளது.

தொழில்துறை ஊக்குவிப்பு:

- பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கி கருவிகள், உயிரித் தொழில்நுட்பம் மற்றும் செய்தி மற்றும் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- எனவே பெரிய, சிறிய மற்றும் நடுத்தரப் பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள் கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில் துறை மேம்பாடு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

4. தொழில் முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.

- தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்குகிறார்கள்.
- இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
- குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தை செயல்பட வைக்கிறார்கள்.
- தொழில் முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்ப தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள்.
- தொழில் நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
- தொழில்முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர், இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

VII. களஆய்வு.

1. இணைய வழி ஆராய்ச்சியின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஒரு தொழில் தொகுப்பினை தேர்ந்தெடுத்து அதனைப் பற்றிய குறிப்புகளை எழுதுக.

மாணவர் செயல்பாடு.

VII. செயல்முறைகள் மற்றும் செயல்பாடு.

1. உங்கள் கூர்ந்து நோக்குதலின் அடிப்படையில் உங்கள் பள்ளி / வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு தொழில் தொகுப்பினை அல்லது ஒரு நிறுவனத்தைப் பற்றி ஒரு குறிப்பை எழுதுக.

மாணவர் செயல்பாடு.

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. _____ உருவாக்குவது 'தொழில்மயமாதலின்' ஒரு முக்கிய நோக்கமாகும்.

அ) கலாச்சாரத்தை ஆ) சமத்துவத்தை
இ) வேலை வாய்ப்பை ஈ) பொருளாதாரத்தை

விடை: இ) வேலைவாய்ப்பை

2. தொழில்மயமாதல் ஒரு நாட்டின் _____ பாதுகாக்க உதவுகிறது.

அ) கலாச்சாரத்தை ஆ) பொருளாதாரத்தை
இ) சுகாதரத்தை ஈ) எதுவுமில்லை **விடை:ஆ)பொருளாதாரத்தை**

3. சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற பிற தொழில்களுக்கு மூலப்பொருட்களை தயாரிப்பது _____ தொழில்கள் என்றும் அழைக்கப்படும்.

அ) அடிப்படைப் பண்டங்கள் ஆ) ஆடம்பரப் பண்டங்கள்
இ) அவசியமற்றப் பண்டங்கள் ஈ) வசதிப் பண்டங்கள்

விடை: அ) அடிப்படைப் பண்டங்கள்

4. _____களில் ஆவடியில் தொழில் தோட்டங்கள் நிறுவப்பட்டது.

அ) 1960 ஆ) 1850
இ) 1950 ஈ) 1860 **விடை: இ) 1950**

5. தமிழகத்தில் மேற்குப் பகுதியில் உள்ள _____ மற்றும் _____ பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழு வடிவமைப்பு தொழிற்சாலைகளுக்கு பெயர் பெற்ற இடமாகும்.

அ) நாமக்கல், திருச்செங்கோடு ஆ) ஈரோடு, கோவை
இ) சென்னை, காஞ்சிபுரம் ஈ) வேலூர், சேலம்

விடை: அ) நாமக்கல், திருச்செங்கோடு

6. தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது _____இல் தமிழக அரசால் நிறுவப்பட்டது.
அ) 1950 ஆ) 1970
இ) 1870 ஈ) 1850 **விடை: ஆ) 1970**

7. மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் _____ ஆண்டு நிறுவப்பட்டது.
அ) 1984 ஆ) 1970
இ) 1950 ஈ) 1884 **விடை: அ) 1984**

8. மென்பொருள் சேவைகள் மிக அதிகமாக _____யிலேயே குவிந்துள்ளது.
அ) சென்னை ஆ) கோவை
இ) கரூர் ஈ) நாமக்கல் **விடை: அ) சென்னை**

9. ஒரு _____ புதிய சிந்தனைகளுக்கும் வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார்.
அ) வங்கி ஆ) தொழில் முனைவோர்
இ) தொழிற்சாலைகள் ஈ) எதுவுமில்லை **விடை: ஆ) தொழில் முனைவோர்**

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. _____ நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பதப்படுத்தி முத்திரையிடப் படுகிறது. **விடை: உணவுப் பொருட்கள்**
2. வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு _____ தேவைப்படுகிறது. **விடை: உள்ளீடுகள்**
3. வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது _____ ஆகும். **விடை: நுகர்வோர் பண்டங்கள்**
4. 1973ஆம் ஆண்டில் எஃகு உற்பத்தி செய்வதற்காக _____ இரும்பு ஆலை அமைத்தனர். **விடை: சேலத்தில்**
5. இந்தியாவில் நெசவுத் துறைகளுக்கு _____ தாயாக விளங்குகிறது. **விடை: தமிழ்நாடு**
6. தமிழகம் _____ நெசவுத் தொழில் உற்பத்தியில் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. **விடை: பருத்தி**
7. பின்னலாடை தயாரிப்பதில் புகழ்பெற்ற இடம் _____. **விடை: திருப்பூர்**
8. தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய _____ என்று அழைக்கப்படும். **விடை: தெற்கு நாடுகள்**
9. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாவட்டம் _____ ஆகும். **விடை: வேலூர்**
10. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நாணய மதிப்பு ஆகியவை _____ சந்தைகளை திறக்க உதவியது. **விடை: ஏற்றுமதி**

III. பொருத்துக.

1.	1950	-	அ) சிறப்பு பொருளாதார மண்டலம்
2.	1973	-	ஆ) தொழில்துறை மேம்பாட்டு கழகம்
3.	1971	-	இ) தொழில் தோட்டம்
4.	1965	-	ஈ) சேலத்தில் இரும்பு, எஃகு ஆலை
5.	2000	-	உ) அரசு தொழில் முன்னேற்றம்

விடை: 1.இ 2.ஈ 3.உ 4.ஆ 5.அ

IV. குறுகிய விடை தருக.

1. தொழிற்சாலை - குறிப்பு வரைக.

பொதுவாக மூலப் பொருட்களை எளிதில் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையையும் 'தொழிற்சாலை' என்று அழைக்கப்படுகிறது.

2. தொழில்மயமாதல் என்றால் என்ன?

- தொழில்மயமாதல் என்பது நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களால் பண்டங்களை உற்பத்தி செய்ய பெரிய அளவிலான தேவைப்படும் பண்டங்களை நவீன உற்பத்தி தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதற்கான செயல் முறையைக் குறிக்கிறது.

3. தொழில் தொகுப்பு எவ்வாறு தோன்றுகிறது?

- கைத்தறி நெசவுத் தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.
- ஒரு பெரிய நிறுவனம் நிறுவப்படும் போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனங்கள் தோன்றக்கூடும்.
- சில நேரங்களில், ஒரு வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம். இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

4. தானியங்கி தொகுப்புகள் - குறிப்பு வரைக.

- சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில் துறை தளமாக இருப்பதால் 'ஆசியாவின் டெட்ராய்ட்' என்று அழைக்கப்படுகிறது.
- சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது.

5. நெசவுத் தொழில் தொகுப்புகள் என்றால் என்ன?

- இந்தியாவில் மிகப் பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது.
- காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' எனஅழைக்கப்படுகிறது.

- தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள சிறு நகரங்கள் கிராமங்களுக்கு நகர்ந்துள்ளன.

6. உள்கட்டமைப்பு - குறிப்பு வரைக.

- மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது.
- மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர்போனது ஆகும்.
- குறிப்பாக கிராமப்புற சிறு சாலைவசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது.

V. விரிவான விடை தருக.

1. தொழிற்சாலைகளை எவ்வகைகளில் வகைப்படுத்தலாம்? விவரி.

தொழிற்சாலைகளை கீழ்க்கண்ட வகைகளில் வகைப்படுத்தலாம்.

அ. பயனர்கள்:

- வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது 'நுகர்வோர் பண்டங்கள் துறை' என்றும், வெளியீடுகளை மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது 'மூலதன பண்டங்கள் துறை' என்றும் அழைக்கப்படுகிறது.
- சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற பிற தொழில்களுக்கு மூலப்பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.
- இத்தகைய தொழில்களை அடிப்படை பண்டங்கள் தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஆ. பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை:

- 'வேளாண் பதப்படுத்துதல்' ஜவுளித்துறை, ரப்பர் உற்பத்தி, தோல் பொருட்கள் போன்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துகின்றனர்.

இ. நிறுவன உரிமையாளர்கள்:

- தொழிற்சாலைகளானது தனியாருக்குச் சொந்தமான, பொது உரிமையாளர் (மத்திய அல்லது மாநில அரசாங்கத்தால்) தனியார் மற்றும் பொதுத்துறை (கூட்டாக) இரண்டிற்கும் சொந்தமானது அல்லது கூட்டுறவுக்கு (கூட்டுறவுகள்) சொந்தமானதாகவும் உள்ளன.

ஈ. அளவு:

- நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி, விற்பனை, முதலீடு அல்லது வேலைவாய்ப்பு அவற்றின் அளவின் அடிப்படையில் பெரியதாகவோ, சிறியதாகவோ அல்லது நடுத்தரமாக இருக்கலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- ஒரு நிறுவனம் சிறியது, நடுத்தரம் அல்லது பெரியது என்பதை தீர்மானிக்க இந்திய அரசு பொதுவாக முதலீட்டை அளவுகோலாகப் பயன்படுத்துகிறது.
- சிறிய நிறுவனங்களை விட அளவில் சிறியதாக இருக்கும் நுண்ணிய அல்லது மிகச்சிறிய நிறுவனங்களும் உள்ளன.
- இந்த வகைப்பாடு முக்கியமானது, ஏனென்றால் சிறிய நிறுவனங்களுக்கு அவற்றை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதி, உள்கட்டமைப்பு அல்லது மானிய உதவிகளை வழங்குகிறது.

குறிப்புகள்

குறிப்புகள்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

குறிப்புகள்

www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

12th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

11th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	Centum Questions	Creative Questions	
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

10th Standard	Syllabus	Books	Study Materials - EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NTSE	SLAS	

9th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Quarterly Exam	Half Yearly Exam	Annual Exam	RTE		

8th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A	NMMS	Periodical Test

7th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

6th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

1st to 5th Standard	Syllabus	Books	Study Materials	Periodical Test	SLAS	
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A		

Exams	TET	TNPSC	PGTRB	Polytechnic	Police	Computer Instructor
	DEO	BEO	LAB Asst	NMMS	RTE	NTSE

Portal	Matrimony	Mutual Transfer	Job Portal

Volunteers	Centum Team	Creative Team	Key Answer Team

Downloads	LESSON PLAN	Department Exam	Income Tax	Forms & Proposals	Fonts	Downloads
	Proceedings	GO's	Regulation Orders	Pay Orders	Panel	

Padasalai – Official Android App – Download Here

Kindly Send Your Study Materials, Q&A to our Email ID – Padasalai.net@gmail.com